A. Padmavathy

# வானரவீர மதுரைப் புராணம்



வானரவீர மதுரைப் புராணம்

தமிழ்நாடு அரசு கீழ்த்திசைச் சுவடிகள் நூல்நிலையம்

# வானரவீர மதுரைப் புராணம்

தமிழ்நாடு அரசு
கீழ்த்திசை நூலகச்
சுவடி


பதிப்பாசிரியர்
அரங்க. சீனிவாசன்

பொறுப்பாசிரியர்
டாக்டர் இரா. நாகசாமி



வெளியிட்டோர்
தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை
1981.

First Edition 1981
T. N. D. A. Publication No. 79.

© Tamilnadu State Department of Archaeology

# Vanara Vira Madurai Puranam

Editor
**Aranga. Srinivasan**

General Editor
DR. R. NAGASWAMY

Price: Rs. 10-50.

Printed and Published by the State Dept. of Archealogy
On behalf of
Oriental Manuscripts Library, Madras.

**C. ARANGANAAYGAM**
Minister for Education
Government of Tamilnadu

Fort St. George
Madras-600009.
27-12-80

The Government of Tamilnadu, under a special scheme of publication of unpublished Tamil Manuscripts have come forward to undertake the printing and publishing of all the available unpublished Tamil Manuscripts in the State. Necessary funds towards the publication have been provided for the purpose. It is estimated that several hundred unpublished Tamil manuscripts dealing with native medicines, mathematics, music, fine arts, and literary compositions of various nature, are lying unpublished in different Manuscripts Libraries of this State and also in other parts of the country. Various Manuscript Libraries in the State, have been approached to make available their unpublished texts for publication. The authorities of these Manuscripts Libraries have come forward with interest and enthusiasm to afford necessary facilities for the same. Eminent Tamil Scholars, well-versed in the art of editing have been requested to take up the work of editing. Under the scheme the texts will be critically edited with suitable foot-notes and brief introductory analysis both in English and Tamil for the benefit of researchers and scholars. The selection of manuscripts, copying and editing have been entrusted to the Tamilnadu State Department of Archaeology.

So far the texts of 75 manuscripts have been copied and a number of them edited and are made available in printed form in this series. I am thankful to all the institutions and scholars who have come forward to join the Government in this venture. It is only a beginning and I do hope that all the available texts will be in the hands of scholars, educational institutions and public Libraries, so that the contribution of the Tamils through the centuries in different fields will be available for the proper understanding and comprehension of the Tamil Language, Literature and Culture.

C. ARANGANAYAGAM
27-12-80.

செ. அரங்கநாயகம்
கல்வி அமைச்சர், தமிழ்நாடு அரசு

செயின்ட்ஜார்ஜ் கோட்டை,
சென்னை-600009.

தமிழ்நாடு அரசு இதுகாறும் அச்சில் வெளிவராத பழம் ஓலைச்சுவடிகளைப் படி எடுத்து அச்சிட்டுப் பதிப்பிக்க ஒரு திட்டத்தை மேற்கொண்டுள்ளது. அதற்கு உரிய பண ஒதுக்கீடு செய்துள்ளது. தமிழ்நாட்டிலும், மற்றும் நாட்டின் பிற பகுதிகளிலும், பல்வேறு சுவடி நூலகங்களில் தமிழக மருத்துவம், கணக்கு, இசை, நாட்டியம், சிற்றிலக்கியங்கள், பேரிலக்கியங்கள் இன்னபிற நூல்கள் அச்சிடாமல் இருப்பது கணக்கிடப்பட்டுள்ளது. நாட்டில் உள்ள பல்வேறு சுவடி நூலகங்களையும், அந்நிறுவனங்களில் உள்ள அச்சில் வராத நூல்களை அச்சிடும் பணிக்கு உதவுமாறு அரசு கேட்டுள்ளது. பல்வேறு நூலகத்தார்களும் தேவையான வசதிகளை அளிக்க மனமுவந்து முன் வந்துள்ளனர். தமிழ்த் துறையில் வல்லுநர்கள் இந்நூல்களை ஆராய்ச்சிக் குறிப்புடனும், முன்னுரையுடனும் பதிப்பித்துத்தர முன்வந்துள்ளனர். இந்த நூல்கள் ஆங்கிலத்திலும், தமிழிலும் அடிக்குறிப்புக்களுடன் வெளியிடப்படும். ஓலைச்சுவடிகளைத் தேர்ந்தெடுத்துப் படி எடுத்துப் பதிப்பிக்கும் பணியைத் தொல்பொருள் ஆய்வுத்துறை, மேற்கொண்டுள்ளது.

இதுகாறும் 75 நூல்கள் படியெடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் பல அச்சாகி இந்நூல் வரிசையில் வெளி வருகின்றன. அரசின் இந்தப் பணியில் ஒத்துழைக்க முன்வந்துள்ள ஆராய்ச்சி வல்லுநர்களையும், தமிழ்ப் பெரியோர்களையும், சுவடி நூலகங்களையும் நான் வாழ்த்துகின்றேன். இதுபோன்று விரைவில் அச்சில் வராத அனைத்து நூல்களும் ஆராய்ச்சியாளர்களுக்கும் கல்வி நிறுவனங்களுக்கும் மற்றும் பொது நூலகங்களுக்கும் கிடைக்கும் வகையில் வெளிவரும் என்பதில் ஐயம் இல்லை. இதன் பயனாய் காலந்தோறும் தமிழில் தோன்றிய பல்வேறு கருத்துக்களையும் பண்பாட்டையும் முழுமையாக அறிந்து கொள்ள இயலும் என்பதில் ஐயம் இல்லை.

செ. அரங்கநாயகம்
*27-12-1980*

# INTRODUCTION

The present work "*Vānaravīra Mudurai Purāṇam*" is the *Talapurāṇa* (local legend) in Tamil on the Siva temple of Sōmanātha at Manamadurai, in Ramnad District. The text is preserved in a single Manuscript in the Government Oriental Manuscripts Library, Madras. Though the text is in full, orthographical mistakes are numerous in the preserved text.

The work follows the usual *talapurāṇa* model and deals with a number of mythical and legendary devotees who adored, Lord Somanātha of Manamadurai (called in the text as Vānara Vīra Madurai) and attained Salvation. The verse 15 in the text states that this work is a Tamil rendering of the Sthalapurāna in Sanskrit. The same verse gives the name of the author as Subrahmanya, son of Deyvasikhamani of Madurai The work was composed at the instance of Visva Marudu Bhupa, son of Udaiyarvel Marudu, who is said to have built a Gopura and a temple car in the temple of Kānappēr (modern Kāḷaiyār Kōil).

It is evident from the above that the patron of this work is none other than the celebrated Marudu (brothers) who defied the British in the years 1790. The text "Sivagangai Caritra Kummi," published by the Government Oriental Manuscripts Library extols the heroic fight of the Marudu brothers. Their contribution to Kalayarkoil, is too well-known. The construction of the Gopura and a new temple car by the Marudus are cherished even to this day by the people of the region. While their heroism and their religious building activities have received due recognition, their patronage to Tamil literature is known from the work on Kunnakkudi temple. But their

patronage to other works in Tamil is known from this text. Both at the beginning and the end the poet extols the patron, Marudu. The work also states that Marudu was the son of Udaiyarvel, and that he belonged to Yadukula and had the name Visva Marudu.

Regarding the author of the text we learn very little except that he hailed from Madurai and that he was the son of Deivasikhamani. But that he was a great Saiveit is evident from the Siddhānta texts he expounds in the course of the work.

The author enumerates the names of 18 Puranas as;

1. Brahma
2. Padma (parpa)
3. Vishnu (Vainava)
4. Siva
5. Linga
6. Garuda
7. Nārada
8. Bhagiya
9. Agnivata
10. Skanda
11. Paushtika
12. Brahma Vaivarta
13. Mārkandeya
14. Vāmana
15. Varaha
16. Brahmānda
17. Kūrma and
18. Matsya

But the present Sthalapurāna is said to be found in Vāyusamhita, euologising the Saiva cannon. Vāyu is said to have expounded this purāna to Sage Brgu.

The text deals with the Salvation of Candra, Stūla Karna, Varaguna, Ugra Pāndya, Balarāma, Rama, the monkeys, Mānikkavacaka, and one Ananda of Kanchipuram, who worshipped Somanatha of Manamadurai. Though the text is a late work, it has no historical data either about Mānamadurai or its temple and deals with purely legendary devotees. At one stage it refers to one Vira Pāndya but gives nothing about his historicity. The legendary episodes connected with the mythical ancestors of the Pāndyas like Ugra Pāndya, find a mention. Mānikkavācaka is said to have visited Manamadurai and worshipped Lord Somanatha in this text.

The author has utilised the text to give at appropriate places, various tenets of Saiva Siddhānta doctrine and also the customs and manners to be observed by the laymen. It is an interesting text though late.

Thiru Aranga Srinivasan has edited the text with critical notes. I am thankful to him for the same. The summary appearing before each Sarga is the note furnished by the editor Aranga Srinivasan.

R. NAGASWAMY

# உள்ளடக்கம்


1. ஆராய்ச்சி முன்னுரை 1

2. நூல் 33

3. பாடல் முதற்குறிப்பு அகராதி

# ஆராய்ச்சி முன்னுரை

மதுரைக்குக் கிழக்கே இரண்டுகாத தூரத்தில் மானா மதுரை உள்ளது. 'கூடலினுக்கு ஓர் குணபாலா ஆன இரண்டாம் யோசனை எல்லை' என்று இப்புராணம் கூறு கின்றது. வடமொழிப் புராணம் மதுரையினின்றும் மூன்று யோசனை தூரத்தில் உள்ளதாகக் கூறுகின்றது. அதன் புராணப் பெயர் வானரவீர மதுரை அல்லது வானர மதுரை என்பது.

மாவலி வாணாதிராயர் என்பவர் 14 ஆம் நூற்றாண்டில் பாண்டிநாட்டில் சிற்றரசர்களாக வாழ்ந்தார்கள். ஜடாவர்ம பாண்டியன் காலத்தில் மாவலி வாணாதிராயன் ஒருவன் மானாமதுரையைக் கைப்பற்றினான் என்று வரலாறு கூறுகின்றது.

வீரப்பநாயக்கரின் பாட்டனார் விசுவநாத நாயக்கர், தம் நாட்டில் 72 பாளையக்காரர்களை நிறுவினார். அவர்களுள் இவ்வாணாதிராயர்கள் சிலரும் இருந்தனர். அவர்களுள் ஒருவன் மானாமதுரைப் பாளையக்காரன் ஆனான்.

வாணாதிராயர்களின் ஆட்சியில் இருந்தமையால் வாணாதி ராய மதுரை எனப் பெயர் பெற்றிருந்தது. அதுவே 'வாண ராய மதுரை' என்றும், 'வாணர மதுரை' என்றும் ஆகிப் பின்னர் மானாமதுரை என மருவி வழங்குகிறது என்று வரலாறுகளால் அறியமுடிகின்றது.

இந்த வானர வீர மதுரை வையை நதியின் மேற்கரை யிலே உள்ளது. அந்தத் தலத்தில் உள்ள இலிங்க மூர்த்தி சோமேசலிங்கம் எனப்படும். அந்த மூர்த்திக்குப் பண்டைய நாளில் திரிபாகநாதர் என்றும் திரிபதேசுவரர் என்றும் பெயர்கள் வழங்கின. பூர்வகாலத்தில் பாதாள உலகிலிருந்து தோன்றிய ஓர் இலிங்கம் மூன்றாகப் பிரிந்து, ஒரு பகுதி இங்குச் சோமேச லிங்கம் ஆனது. மற்றைய இரு பகுதி களும் தேவதாருவனம் என்னும் காளையார் கோயிலில்

தோன்றிச் சோமேசர், காளீசர் என்று பெயர் பெற்றன. மூன்றில் ஒரு பகுதியானமையால் சோமேசர் திரிபாகநாதர் எனப் பெயர் பெற்றார். திரிபதேசுவரர் என்பதும் அதே பொருளுள்ள பெயரே.

வில்வமரக் காடுகள் அடர்ந்திருந்தமையால் மானாமதுரை வில்வவனம் என்றும் கூவிளவனம் என்றும் அழைக்கப்பட்டது. இந்த வில்வவனத்தலம் சதுர்யுகங்களுக்கு முன்பே தோன்றியது.

கிரேதாயுகத்தில் சந்திரன் பூசித்தமையால் சந்திர பட்டணம் என்றும், திரேதாயுகத்தில் வானரங்கள் பூசித்தமை யால் கீசானமதுரை (வானரமதுரை) என்றும், துவாபரயுகத்தில் ஸ்தூலகர்ணன் என்பான் பூசித்தமையால் ஸ்தூலகர்ணபுரி என்றும் கலியுகத்தில் வில்வவனம் என்றும் இப்பதி பெயர் பெற்றது.

இத்தலத்துக்கு ஈசான திக்கில் காளையார் கோவில் உள்ளது. இங்குக் கஜபுஷ்கரணி என்ற தீர்த்தம் உண்டு.

சோமேசன் குடிகொண்ட வானரவீர மதுரையின் சிறப்பை விளக்கிக் கூறுவது இந்தப் புராணம். இது வடமொழியிலி ருந்து தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது.

## ஆசிரியர்

இப்புராணத்தின் 15 ஆம் பாடல் ஆசிரியர் பெயரைக் குறிக்கின்றது. சுப்பிரமணியம் என்பது இவர் பெயர். இவர் மதுரையைச் சேர்ந்தவர். இவர் தந்தையார் பெயர் தெய்வ சிகாமணி. இவ்வளவே அப்பாடலால் நாம் அறிந்து கொள்ள முடிவது.

இவர் சிறந்த சிவபக்திச் செல்வர். சைவ சித்தாந்த சாத்திரங்களை நன்கு ஆழ்ந்து கற்றவர். திருநீறு, உருத்தி ராக்கம், பஞ்சாட்சரம் முதலியவற்றில் மிக்க ஈடுபாடு கொண் டவர். தமிழ் இலக்கிய இலக்கணப் பயிற்சி மிக்கவர். வட மொழிப் புலமையுடையவர் என்பன போன்ற செய்திகளைப் புராணத்தின் மூலம் அறிய முடிகின்றது.

இலக்கண அமைதி குன்றாமல் பாடல் இயற்ற வேண்டும் என்பது இவர் விருப்பம். இது இந்நூலின் 13, 14 ஆம் பாடல்களால் உறுதியாகின்றது.

இந்த ஆசிரியர் எத்தகைய நுட்பமான கருத்துக்களையும் எளிமையாக்கிக் காட்டும் ஆற்றல் பெற்றவர் என்பது உரோமச முனிவர் ஆனந்தனுக்குக் கூறுவதாக அமைந்த சைவ சித்தாந்த விளக்கத்தால் உணரலாம்.

இவர் சிவனடியார்பால் வைத்துள்ள பேரன்பை வாதவூர் வரலாற்றால் நன்கறியலாம். மேலும் 335 - 341 வரையுள்ள பாடல்களில் தொண்டர் பெருமையை விரிவாகப் பேசியுள்ளார்.

தமிழறிவு பெற்றது போலவே தமிழ்ப் பற்றிலும் சிறந்து விளங்குகின்றார். தமிழ் முனிவனாகிய அகத்தியனைப் பல இடங்களிலும் குறிப்பிடுகின்றார். சந்திரன் அகத்தியரைப் போற்றுவதாக அமைந்த (127 - 129) பாடல்கள் மிக மிக உருக்கமானவை; சந்தநயம் உடையவை; சுவையானவை. "சந்தமலைக்கும் தமிழுக்கும் ஓர் தார்வேந்தே"(127) என்ற தொடர் இன்பம் பயப்பது.

உலகியல்பை நன்கறிந்து அனைவர்க்கும் பொதுவான நீதிகளை ஆங்காங்கே அறிவிக்கின்றார்.

இயற்கை வளங்களைச் சுவைபட வருணிப்பதில் பேராற்றல் பெற்றவர். சொல்லணிகட்கு முதன்மை தராமல் பொருட் சிறப்பைப் போற்றிக் கையாள்கின்றார். பாடல் ஒன்றிலேனும் எதுகை மோனைகட்காக வேண்டாத சொற்களை அடுக்குவதில்லை. சொல்லழகுக்காகத் தலையாகெதுகைகளை விரும்புவதில்லை. பொழிப்பு மோனையை அதிகம் கையாளாமல் மோனையை வந்த வழி அமைத்துக்கொள்வது இவர் இயல்பு. சுருங்கிய சொற்களில் விரிவான பல பொருள்களைக் காட்டி விடுகின்றார். 500 பாடல்களே கொண்ட இந்நூலில் பெருங் காப்பியத்துக்கு உரிய பல இயல்புகளைக் காணமுடிகின்றது.

## பாடுவித்தோர்

இப்புராணத்தின் 15ஆம் பாடல் பாடுவித்தோனையும் அறிமுகப்படுத்துகின்றது. உடையார்வேள் என்பவரின் மகன் விசுவை என்னும் ஊரினர். மருதுபூபன் என்பது அவர் பெயர். அவர் காளையார் கோவிலுக்குத் தேர் செய்து அளித்தவர். கோபுரம் அமைத்தவர் என்ற விவரங்களையும் அதில் காண்கிறோம்.

## காலம்

வடமொழிப் புராணத்தைத் தமிழில் உரைநடையில் சுருக்கமாக எழுதித் திரு. வ. த. சுப்பிரமணிய பிள்ளை என்பவர் சுமார் 80 ஆண்டுகளுக்கு முன்பு வெளியிட்டுள்ளார். அதில் அதற்கு முன் 120 ஆண்டுகளுக்கு முன்பு இந்தத் தமிழ்ப் புராணம் எழுதப்பட்டதாகக் குறித்துள்ளார். ஆகவே 120+80= இருநூறு ஆண்டுகளுக்கு முற்பட்டது இப்புராணம் என்பது தெளிவாகின்றது.

## இவர் கையாண்டுள்ள அரிய உவமைகள்

முருகன் வள்ளியின் விழிக்குத் தன் கையில் உள்ள வேல் ஒப்பாகும் என்று இணைத்துப் பார்க்கின்றார்.(5)

உலகுக்கு உபகாரமாக மேகம் மழை பொழிகின்றது. மழை பெய்யும்போது இடியும் விழுகின்றது. அச் செயல் நல்லவர்க்கும் ஒரு தீக்குணம் நணுகுமாறு போல உள்ளது.(16)

வானர வீர மதுரை நகரின் மதில்கள், காமுகரால் அணுக இயலாத கற்புடைய மடவார் போன்று பகைவரால் அணுக இயலாத உறுதி வாய்ந்தன.(32)

வைகறையில் வண்டுகள் தாமரை மொட்டை மலர்த்துவது, கணவன் வரவை எதிர்பார்த்து முகம் சோர்ந்துள்ள தலைவிக்கு, பாங்கியானவள் தலைவனின் வரவை உணர்த்தி முகம் மலரச் செய்வதை ஒக்கும்.(43)

மேகத்தைக் கண்டவுடன் மயில்கள், பிரிந்த காதலரைக் கண்ட மகளிர்போல் களித்து ஆடுகின்றன. இனம் வாழப்

பொறாத புல்லர் போன்று குயில்கள் முகம் குவிந்து ஒதுங்கு கின்றன.(44)

வில்வ வனத்து மரங்கள் சாமத்து இச்சையோர் மனம் போல் நீண்டு வளர்ந்திருக்கின்றன. அக்காட்சி அந்நாள் அர்ச்சுனனுக்குக் கண்ணன் விசுவரூபம் காட்டியது போல் இருந்தது. (60)

மல்லிகைக் கொடிகள் ஓடி மாமரக்கிளை தோறும் பந்தர் போன்று படர்ந்திருந்தன. அதன்மேல் குயில்கள் பாடுவது விஞ்சையரின் இன்ப இசையைப் போலிருந்தது.(62)

சந்திரன் பிறந்து வளரும்போது கண்டவர்கள் அவனைக் கரும்பிலா மதனோ, வேலிலா முருகனோ என்று மயங்கினர்.(73)

சந்திரன் தனக்கு இருபத்தேழு மனைவியர் இருக்க உரோகிணியிடம் மட்டும் காதல் கொண்டு வாழ்கின்றான். அச்செயல் பல அமைச்சர் இருக்கவும் ஒரே அமைச்சனிடம் மட்டும் உள்ளம் வைக்கும் ஓர் அரசன் செயல் போல் இருந்தது.(81)

சந்திரன் உரோகிணியிடம் மட்டும் காதல் செய்வதைக் கண்டபிற மனைவியர், ஓர் உழவன் ஒரு வயலுக்கு மட்டும் நீர் பாய்ச்சுவதால், நீர் பெறா பிற வயல்கள் போல வாடினர்.(82)

அகத்தியன் முருகன் தந்த ஞானமாகிய விளக்குக்குத் திரி போன்றவன்.(127)

சிவபெருமான் சடையிலே திங்கட் கொழுந்து விளங்கிய தோற்றம் கங்கைப் பெருக்காற்றில் தோணி மிதந்தது போன்றிருந்தது.(260)

வில்வவனத்து ஆலயத்தின் உயரிய தோற்றம் சூரபதுமன் முன்பு முருகன் விசுவரூபம் எடுத்தது போலும். (399)

மணிவாசகர் இறுதியில் கருப்புர விளக்கந் தன்னை ஒத்து உடல் கரையத் தில்லை உமாபதி அடியைச் சேர்ந்தார். (425)

நீரிலே உள்ள உப்பு, நீர்க்கு அன்றிக் கடலுக்கு இல்லை. அதுபோல் உயிரின் மலங்கள் உயிர்க்கே அன்றி ஈசனுக்கு இல்லை.(461)

உக்கிர பாண்டியன் வலிமை அறியாமல் வருணன் மதுரையை வளைத்த செயல் பகைமாண்பு தெரியாச் சிறியோர் செயல் போன்றது.(208)

உக்கிரன் வேல் ஏவியவுடன் கடல் வறந்து ஓடியதற்கு ஏழு உவமைகள் தரப்படுகின்றன. இவ்வாறு ஒரே பொருளுக்கு ஏழு உவமைகள் அடுக்கி வருவது மிகமிக அரிது.(208-9)

## தனித்தன்மை

இந்நூலாசிரியர்பாற் காணப்படும் சில தனித்த இயல்புகள் அறிவுக்கு விருந்தாக உள்ளன. அவற்றுட் சில காண்போம்.

மற்றைய புராணங்களில் நூற்பயன் நூலின் இறுதியில் மட்டுமே இருக்கும். இந் நூலில் ஒவ்வொரு சருக்கத்தின் இறுதியிலும் நூற்பயன் கூறியுள்ளார். பலநூல்களில் சருக்கத்தின் தோற்றுவாய் அந்தந்தச் சருக்கத்தின் முதலில் அமைக்கப்படும். இவர் தோற்றுவாயை முதற்சருக்கத்தின் முடிவில் அமைக்கின்றார். (இது சேக்கிழார் கொண்ட முறை)

நூலின் சுருக்கத்தை நூல் முதலில் தொகுத்துத் தருவது காப்பிய முறை. சிலம்பு, சிந்தாமணி முதலிய பல காப்பியங்களும் இம் முறையையே கையாண்டு அதற்குப் பதிகம் என்று பெயர் தந்துள்ளன. இவர் அந்தப் பதிகத்தை முதலில் அமைக்காமல் நூலின் இறுதியில் அமைத்துள்ளார்.

சைவசித்தாந்தத்தின் அடிப்படைக் கருத்தாகிய பதி, பசு, பாசம் ஆகியவற்றை இவர் விரிவாக விளக்கியுள்ளது போல் பிற புராண ஆசிரியர்கள் விளக்கவில்லை எனலாம்.

சிவபூசையில் மிக்க ஆர்வமுடையவர் இவர். சந்திரன், தூலகன்னன், உக்கிரபாண்டியன், இராமன், வானரங்கள், ஆனந்தன் ஆகியோர் பூசை செய்த முறையை இவர் குறிப்

பிடும் போது, ஒரு படக்காட்சி காண்பது போல் கண்டு களிக்கின்றோம்.

சைவப் புராண ஆசிரியர்கள் பெரும்பாலும் சிவபரத்துவம் மட்டுமே பேசுவர். அதற்காகத் திருமால் முதலிய பிறதெய்வங் களைத் தாழ்த்துப் பேசுவதும் உண்டு. சிவபரத்துவம் பேசுவ தில் இவர் யாருக்கும் பிற்பட்டவர் அல்லர் என்பதற்கு நூல் முழுவதும் சான்று பகர்கின்றது. ஆனால் திருமாலைத் தாழ்த்துப் பேசுவது இவர் பால் காணக் கிடையாத ஒன்று. நூலைத் தொடங்கும் போதே மாமேவு மணிவண்ணன் என்று மங்கலச் சொல்லுடன் காப்புக் கடவுளைக் குறிப்பிடுவதைக் காணலாம்.

தூலகன்னன் யாத்திரை செல்லும் போது வழிபட்டுச் செல்லும் தலங்களில் திருவரங்கமும் ஒன்று என்று காட்டு கின்றார். இவ்வாறு சிவதலங்களுடன் திருமால் தலங்களைச் சேர்ப்பது பிற சிவபுராண ஆசிரியர்கள் கருதிப் பாராத ஒன்று. சீவலமாறன் கதை என அச்சாகாத நூல் ஒன்று உள்ளது. அதில் சீவலனின் யாத்திரைப் பயணத்தில் சிவதலங்களுடன் அரங்கம், செகநாதம், திருவேங்கடம், குருகூர், சோலைமலை, புல்லாணி, திருநகரி, வானமாமலை, ஸ்ரீவில்லிபுத்தூர் முதலிய திருமால் திருப்பதிகளையும் வழிபட்டான் என்று கூறப்பட் டுள்ளது.

அதுமட்டுமன்று. திருமாலைப்பற்றி இவர் குறிப்பிடும் பகுதிகளைத் தொகுத்துப் பார்த்தால், திருமாலிடம் இவர் கொண்டுள்ள பேரன்பு புலனாகும்.

திருமாலை மட்டுமல்ல திருமாலொடு தொடர்புடையார் மாட்டும் இவர் பெருமதிப்பு வைத்துள்ளார்.

''நிறைதரும் அவணர்மாப் படைகள் நேரில்வெஞ்
சிறையினால் புடைத்துமென் சருகில் சிந்தியும்
கறுவறாச் சீற்றம்ஆர் கலுழன்''

என்று கருடாழ்வாரை மனமாரப் பாராட்டுவதிலிருந்து இது புலனாகின்றது.

வில்வவனத்தில் சிவபிரான் உமைக்குச் சிவதருமம் உபதேசித்துக் கொண்டிருக்கையில் திருமால் அங்கு வந்ததாகக் கூறும் வரலாறு இவரின் சமயப் பொதுமைக்குத் தக்க சான்று.

உமாதேவி தியாகவினோதன் என்று பெயர் சூட்ட இறைவனே திருமாலுக்கு ஆலயம் எழுப்புகின்றான் என்பது வியப்புக்குரிய செய்தி. பாண்டியன் இச்செய்தி யறிந்து திருமால் அடியார்களைக் குடியேற்றிப் பெருமாளுக்கு வழிபாடு முட்டின்றி நடக்க வழி வகுத்தான் என்பது வியப்பின் உச்சத்தில் நம்மைச் சேர்க்கின்றது.

பலராமன், 'சூதனைக் கொன்ற பாவம் போகுமாறு உரைசெயும்' என்று முனிவரை வேண்டினான். அதற்கு முனிவர் கூறும் விடை விஷ்ணுவின் பரத்துவத்தையே விளக்குவதாக உள்ளது.

''அல்லல்செய்வினைச் சிமிழ்ப்புஅகன்ற உன்னையும்
ஒல்லைவன் பாவம்வந்து உறுங்கொல்? ஆயிரம்
பல்லுயிர் வருக்கமும் பயின்று கோடற்காய்
குல்லையந் தாரின்நீ கொண்ட தன்மையே.''

என்ற பாடல் இதற்குச் சான்று. நீ முழுமுதற்பொருள் ஆதலால் உன்னை எப்பாவமும் சேரா. ஆயினும் உலகினர்க்குப் பத்தி வழியைக் காட்டுவதற்காகவே நீ இவ்வாறு எம்மை வினவுகின்றாய் என்பது திரண்ட கருத்து.

திருமால் வில்வவனத்திலே அடியார் வினைமாற்றி நற்கதி ஈந்து வயங்கினான் என்கிறார். நற்கதியாகிய வீடுபேறு தருதற்கும் வினைமாற்றுதற்கும் உரியவர் திருமால் என்பதால் விஷ்ணு பரத்துவம் கூறியதாகக் கொள்ளலாம்.

## கற்பனை

இவர் காட்டும் கற்பனைகள் வியத்தற்குரியனவாக உள்ளன. அவற்றுட் சில காண்போம்.

மகளிர் வையை நதியில் நீராட இறங்குவதற்கு முன்பே அந்த நதி வெண்சங்குகளைத் தூவி அம்மகளிரைத் தன்

அலைக்கரத்தால் வணங்கும் என்றால் அவர்களின் காதலர் அவர்களைத் தொழுதல் வியப்பாமோ?(40)

மணிமாடங்கள் தோறும் மகளிர் இயங்குதல் கண்டு அரம்பையரே இவர் எனக்கருதித் தேவர்கள் அணுகுவர். மகளிரின் கண்கள் இமைப்பது கண்டு மானிடர் மகளிரே என உணர்ந்து பெயர்ந்து செல்வர்.(42)

பாண்டிமாதேவி தன் கணவன் மார்புற அணைக்கும்போது, ஈருடல் ஒருடலாக நெருங்கவிடாமல் தடுக்கின்றனவே என்று தன் நகில்களை வெறுப்பாள்.(224)

மணிவாசகர் வையைநதியை அடைந்தார். வையைநதியின் அலைகள் சந்தனம், மலர், சங்கு, முத்து ஆகியவற்றைத் தூவிக் கரையைத் தொட்டு மீளும்காட்சி, எண்ணில்லாத காணிக்கைகளைத்தந்து வருக வருக என்று அழைப்பது போலிருந்தது.(395)

தாமரை மலரிலே அன்னம் வீற்றிருக்கும் காட்சி சந்திர புட்கரணியானது தன்னிடம் வந்த மணிவாசகரை விருந்தாக ஏற்று வள்ளத்தில் அமுதத்தை ஏந்தியதுபோலிருந்தது.(397)

சந்திர புட்கரணியிலே செந்தாமரை மலரும் அதன் அருகே தேங்குவளை மலரும் பூத்துள்ள காட்சி, தீவண்ணச் சிவபிரானும் மைவண்ண உமையம்மையும் உடனாகி விளங்குவது போன்றிருந்தது.(398)

சுந்தரி என்பவளின் அழகில் மயங்கிய மும்மூர்த்திகள் அவளைப் பெற வழி அறிகிலர். ஆயினும் ஆசை அவர்களை விடவில்லை. அவள் அல்குலைப் போலுள்ளது என்று பிரமன் தாமரை மலரை இருப்பிடமாகக் கொண்டான். இவள் வயிற்றைப் போலுள்ளது என்று திருமால் ஆலிலையில் பள்ளி கொண்டான். இவள் நகில்களுக்கு ஒப்பாயுள்ளது என்று சிவன் கைலை மலையில் ஏறினான்.(439)

இதைப் போன்ற எண்ணற்ற கற்பனைகள் ஆங்காங்கே சுவை பயக்கின்றன.

## வளம்

நாட்டுவளம் நகர்வளம் முதலியவற்றைப் புனைந்துரைப்பதில் இவர் கைவந்தவர். இரண்டொரு செய்யுட்களே நாட்டு வளம் பற்றிக் கூறியிருப்பினும் அவை இவர்தம் முழுப்புலமையும் காட்டும் கண்ணாடியாக உள்ளன.

"பாட்டுச் சுரும்பர் முகைஅவிழ்க்கும்
பங்கே ருகத்தின் இடைக்கிடக்கும்
மோட்டுக் கயவாய்ப் புனிற்றெருமை
குளத்திற் கிடந்து மூச்செறியும்
கோட்டுப் பலவின் பழம்சிதற
வரால்கள் குதிக்கும் திருப்பாண்டி
நாட்டின் இயல்பு..."*(30)*

என்ற பாடல் நாட்டுவளத்தை முழுமையாகக் காட்டுகின்றது.

"வேள்வியின் ஓம தூமம்
இக்கின்சாறு அடுதூமத்தோடு
எழிலிமண் டபத்தின் எய்தித்
திக்கெலாம் பரவ நோக்கி
மழைஎனத் திகைப்பர்."

என்பது இவர் காட்டும் நகர் வளம்.

பலா, மா ஆகியவற்றின் கனிச்சாறு, தென்னை கமுகு ஆகியவற்றின் பழங்கள், மகளிர் ஊடலில் வீசிய முத்துக்கள், யானைகளின் மதநீர், இவுளிகளின் வாய்நுரை இவற்றால் வீதியில் செல்வோரின் வேகம் தடைப்படும்.*(36)*

தாமரை மலரில் பிறந்த முத்தும், கரும்பில் விளைந்த முத்தும், சங்குகள் ஈன்ற முத்தும், இப்பியில் உதித்த முத்தும் தங்கள் மக்களுக்கு உழத்தியர் அணிவர்.*(37)*

கமல மலரில் வண்டுகள் இருந்தன. அன்னம் தன் பெடையுடன் வந்து அம்மலரில் புகுந்தது. வண்டுகள் என்ன செய்யும்? அம்மலரை விட்டு அப்பாற்போயின.*(38)*

வேரில் பலாக்கனி பழுத்திருந்தது. அவ்வழியே தன் இளங்கன்றைத் தேடி எருமை ஒன்று வந்தது. அதன் காலால் அப்

பலாப் பழம் நசுங்கியது. அதிலிருந்து பாய்ந்த தேன் வயலில் பாய்ந்தது.(428)

மாமரக் கிளைகளில் மந்திகள் பாய்ந்தன. அதன் பழங்கள் சிந்தின. அதைக்கண்டு வாளைமீன்கள் தாவின. அந்த ஆரவாரத்தால் அஞ்சிய ஆமைகள் சேற்றில் ஒளித்தன.(471)

வையை நதியில் தண்ணீர் ஓடவில்லை. முக்கனிச்சாறுதான் ஒழுகியது.(472)

மகளிர் வையையில் குளித்து எழும்போது, அவர்களின் முகங்களைத் தாமரை மலர்கள் என்று கருதி அன்னங்கள் அருகே வரும்.(473)

வையை நதியின் மணற்கரையிலே அன்னங்கள் இருந்து வெயில்காயும். மகளிர் நீராடும்போது அவர்களின் தனங்களிலிருந்து கரைந்த களபத்தின் மணம்கமழும் சந்திர புட்கரணியின் துறைகளில் முத்துக்கள் ஒளிரும்.(485)

இப்படிப் பற்பல சுவையான பாடல்கள் உண்டு.

## முன்னோர் மொழிகள்

"இணர்எரி தோய்வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று"

என்ற குறள் இவர் வாக்கில்,

"இணர்எரியின் மூழ்குவபோல் தம்பாலின்
நூறுபிழை இயற்றி னாலும்
தணவாத துன்பம்இயற் றாததுவே
இதம் இதுவே தலைமைத் தன்மம்"(100)

என்று மாற்றுருவம் பெறுகின்றது.

சாபம் நீக்கம் பெற்ற சந்திரன் மீண்டுவந்து தன் அனைத்து மனைவியருடனும் ஒத்த அன்பினனாய்ப் பயன்கொள் பொதுமரம்போல் தங்கிச் சுகத்தை வேண்டியாங்கு அளித்து வாழ்ந்தான் என்ற இடத்து.(155)

"பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின்"

என்ற குறளின் சாயல் படிந்துள்ளது.

தூலகன்னன் தன் மகனுக்கு அறிவுரை கூறும்போது,

"குடியும் ஈகையும் சூழ்கல்வி தலையளி அஞ்சாப்
படையும் சீர்அருள் மனத்திட்பம் பண்புடை அமைச்சு
முடிவில் பேரரண் உதவுறு துணையும்மூ தறிவும்
அடையும் ஊக்கமும் முயற்சியும் வளர்த்தியால் ஐயா" (170)

என்கிறான். இப்பாடலில் 'படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண் ஆறும் உடையான் அரசருள் ஏறு' என்ற குறளும், குறட் பொருட்பாலில் உள்ள சில அதிகாரங்களின் நிழலும் படிந் திருப்பதைக் காணலாம்.

"எளியோர் பலருக்கு இடர் இயற்றின்
அவர்கள் வயிற்றின் எரிவுசென்று
விளியா வலியோர்க்கு இடர்செய்யப்
புரிந்தே ஒருவன் வீறழிக்கும்." (262)

என்ற பகுதி, 'அல்லற்பட் டாற்றாது அழுத கண்ணீர் அன்றே செல்வத்தைத் தேய்க்கும் படை' என்ற குறளின் மறு வடிவு தானே!

'உன்னி அருளால் துவரத் துறந்து கான் சென்று தவம் உஞற்றுவோர்' என்ற இடத்து வரும் துவரத் துறத்தல் என்ற சொற்றொடர்

"துப்புர வில்லார் துவரத் துறவாமை
உப்பிற்கும் காடிக்கும் கூற்று"

என்ற குறளில் உள்ளதே.

"அறிவொடு சீலம் காலம்
மூன்றினும் மூப்புற்று அன்பின்
நிறைபவர் தம்மோ டெண்ணி
நெடுநீர்மை மடிமை தூங்கல்
மறவிநான்கு இன்றி நன்மை
மாண்புகழ் பயப்ப தாக

உறுதியின் அரசன் கூறும்
    கருமங்கள் உவப்பச் செய்து'' (373)

என்ற பாடலில் 'நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும் கெடுநீரார் காமக் கலன்' என்ற குறள் அப்படியே பதித்து வைக்கப் பட்டுள்ளது. அறிவொடு சீலம் காலம் மூன்றினும் மூப்புற்று, அன்பின் நிறைபவர் தம்மோடு எண்ணி என்ற தொடர்களும் குறளை நினைவு படுத்துவனவே!

''நிருபர்கோன் விழைப நெஞ்சில்
    தான்விழை யாது நீத்து
அருகுறுங் காலை உற்றும்
    அகலும்போது அகன்று போயும்
மருவிய வேற்றோர் சொற்குப்
    புறங்கொடா வண்ணம் வேட்ட
வருமொழி உரைத்தும் வானும்
    வையமும் மதிக்க உற்றார்.'' (374)

என்ற பாடலில்,

''அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்''

''கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்''

ஆகிய குறள்களின் பொருள் பொதிந்துள்ளமை காணலாம்.

'வேற்றோர் சொற்குப் புறங்கொடா வண்ணம் வேட்ப வருமொழி உரைத்து என்ற பகுதி, 'சொல்லுக சொல்லைப் பிறி தோர்சொல் அச்சொல்லை வெல்லும்சொல் இன்மை அறிந்து,' என்ற குறளை நினைக்கச் செய்கிறது.

''ஊழினிற் பெரிய யாவை
    அஃதுற வேறா ஒன்றற்
சூழினும் முன்னா வந்து
    தோன்றும்''

என்ற தொடர் ''ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று சூழினும்

தான் முந்துறும்'' என்ற குறளின் மறுபதிப்புத் தானே!

''கண்டு கேட்டு உண்டுஉயிர்த்து உற்றுஅறியும்
ஐம்புலனும் ஒண்டொடி, கண்ணே உள''

என்ற குறள் ஐம்புலத்துக்கு ஒருங்கே இன்பம் தருபவர் மங்கையரே என்று கூறுகின்றது.

மங்கையர் மட்டுமன்று மக்களும் நமக்கு ஐம்புலத்துக்கும் இன்பம் தருபவரே என்று புதுவது புனைகின்றரர் இவர்.

''சேயினைக் கண்டும் செவ்வாய்
மழலையந் தீஞ்சொல் கேட்டும்
தூயசெங் கையி னாலே
துழாவிய அமுதம் உண்டும்
நேயமாய் உச்சி மோந்தும்
தழுவியும் நிருபன் ஆங்கே
ஏயபே ருவகை பொங்க
இருந்தனன்,'' (234)

என்பது இவர் காட்டும் இனிய காட்சி.

'செங்கையினாலே துழாவிய அமுதம்' என்ற தொடர் 'அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள் சிறுகை அளாவிய கூழ்' என்ற குறளின் நிழல் அன்றோ!

''ஏனை நெல்லினைப் பண்டியில் இல்லினில் கொடுவந்து
ஆன தேவர்க ளோடு தென்புலத்தவர் விருந்து
மான மார்கிளை யாவர்க்கும் வழங்கிஎஞ் சியதை
ஊனம் இல்லதோர் மனையொடு உண்டுவீற் றிருப்பார்.''

என்ற பாடல் 'தென்புலத்தார் தெய்வம் விருந்துஒக்கல் தான் என்றாங்கு ஐம்புலத்தாறு ஓம்பல் தலை' என்ற குறளிலிருந்து கிளைத்தே!

''நிருபர்கோன் விழைவ நெஞ்சில்
தான்விழை யாது நீத்து'' (374)

என்ற தொடர் 'மன்னர் விழைய விழையாமை மன்னரான் மன்னிய ஆக்கம் தரும்' என்ற குறளை முன் நிறுத்துகின்றது. மேலும் இத்தொடர்,

"இடுகுடைத்தேர் மன்னர் எமக்குஅமையும் என்று
கடிதவர்தாம் காதலிப்ப தாம்காதல் கொண்டு
முடிய எனைத்தும் உணரா முயறல்
கடிய கனைத்து விடல்."

என்ற பழமொழிப் பாடலின் சாரம் என்றும் கொள்ளலாம்.

'உருள்பூந் தண்தார் புரளும் மார்பினன்' என்ற திருமுருகாற்றுப் படைத் தொடர் 'உருள் பூந்தண்டார் முருகன்' என்று கையாளப் பட்டுள்ளமை காணலாம்.

"இறுவிலைக் காலந் தன்னில்
 விலக்குவ தீய நாளில்
பறவையும் தட்பப் போகி
 இரப் பினும் பண்பின் ஈந்து
வறியவர் வறுமை தீர்க்கும்
 மதுரைவாழ் பாண்டி மன்னன்"(370)

என்ற பாடற்பகுதி புறநானூற்றின் கருத்தைக் கொண்டுள்ளது என்பது வெளிப்படை.

'கன்றுகுணிலாக் கனியுகுத்த மாயவன்' என்ற சிலம்பின் குரல் 'கன்றுகுணிலாக் கனியுகுத்த காயாமேனிமால்' என இதில் எதிரொலிக்கிறது.

"கருமுகி லுழைப்பல கமலம் பூத்தெனத்
திருவுரு வெய்திய செம்மல்."

என்ற தொடர்,

"கருமுகில் தாமரைக் காடு பூத்துநீடு
இருசுடர் இருபுறத்து ஏந்தி ஏந்தலர்த்
திருவொடும் பொலியஓர் செம்பொன் குன்றின்மேல்
வருவபோல் கலுழன்மேல் வந்து தோன்றினான்!"

என்ற கம்பன் பாடலின் சாரந்தானே!

"குயிலைப் பொருவும் இன்மொழியை
 நினைத்த நெஞ்சை குறைத்திட்டான்."

என்று இராவண வதத்தை இவர் குறிப்பிடுவது,

"கள்ளிருக்கும் மலர்க் கூந்தல் சானகியை
மனச்சிறையில் கரந்த காதல்
உள்ளிருக்கும் எனக் கருதி உடல்புகுந்து
தடவியதோ ஒருவன் வாளி,"

என்ற கம்பன் பாடலின் சுருக்கந்தானே!

"முருகார் மலரை ஒருகோடி
வண்டு வீழ முடித்திலகும்
மருஆர் கூந்தற் கொம்மைமுலைக்
குறத்தி விழியை வண்கரத்தின்
பருவேல் பொருவும் எனஇணைத்துப்
பார்த்துப் பார்த்துஉள் மகிழ்கூரும்
உருள்பூந் தண்டார் முருகன்."

என்ற பகுதி நைடத்திலுள்ள காப்புச் செய்யுளாகிய

"தழைபடு கடுக்கை மாலைத்
தனிமுதல் தலையிற் சூடும்
குழவிவெண் திங்கள் இற்ற
கோட்டது குறைஎன்று எண்ணி
புழைநெடுங் கரத்தாற் பற்றிப்
பொற்புற இணைத்து நோக்கும்
மழைமதக் களிறு!"

என்பதிலுள்ள கற்பனையின் சாயல்தானே !

'மாரனும் அணங்கு கோல வடிவெடுத்து அணைய எண்ணும் ஆரமார்பு' (233) என்ற பகுதி 'ஆடவர் பெண்மையை அவாவு தோளினாய்' என்ற கம்பர் பாடற் பகுதியையும், 'வடிவு கண்டால் மன்மதனும் மடவார் ஆக ஆதரம் செய்வன்' என்ற பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் வாக்கையும் அடியொற்றியதே.

எடுத்துக்காட்டாக சில இங்கே சுட்டப்பட்டன. இன்னும் பலப்பல இடங்களில் முன்னோர் மொழி பொருளைப் பொன்னே போல் போற்றியுள்ளார் இவர்.

"சாதியின் இழிந்துளோர் ஒழுக்கம் தாழ்ந்துளோர்
ஏதமாம் உறுப்பினர் எனினும் எம்முடைப்

பூதிசீர் தனவழி போற்றி னார்எனின்,
மேதகு தேவரின் வைத்தல் வேண்டுமே,

என்ற பாடல்,

"பாதியாய் அழுகியகால் கையரேனும்
பழிகுலமும் இழிதொழிலும் படைத்தோ ரேனும்
ஆதியாய் அரவணையாய் என்பர் ஆகில்
அவர்அன்றோ யாம்வணங்கும் அடிகள் ஆவார்"

என்ற அட்டப்பிரபந்தப் பாடலின் மறுவடிவமே.

## பழமொழிகள் - உலகியல்பு

காதலன் தன் வாழ்விழந்தால் அந்திப் பிறைநுதலார் ஆர் எனினும் உய்யாரே. (83)

கணவன் வெறுப்ப வரும் இல்வாழ்வில் கானில் போவதுவும் நன்றாம். (86)

விதியினை ஈசன் அல்லால் யாவரே விலக்கற் பாலார். (91)
சிந்தையிற் பெரியோர் சீற உஞற்றிடல்சிறுமைத்தாமே(92)
துன்பம் காந்தன் துணைவர் மைந்தர்கள் செய்தாலும் சினம் கொண்டு செல்லுவர் மின் அன்னார். (98)

கையினிடை வெண்ணெயுற நெய்க்கு அலைவர். (326)
வேலையை வேலைதாவில் விலக்குவார் இல்லை. (212)

அழகுடையோர் முகம் நோக்கின் மின்னார் நெஞ்சு அழலின் இட்ட இழுது என உருகும். இள மைந்தர்க்கும் அனைத்து. (444)

அரிய தவம் செய்து உறும் ஓர் ஆணின் குழவி அழல்கேட்ட உரிய தாய்போல். (416)

## நீதிகள்

ஆடவர் நல்லவர் ஆகின் பல மனைவியரைக் கொள்ள மாட்டார். (76) என்று ஏகதார விரதத்தின் பெருமை பேசப்படு கிறது.

அவ்வாறு ஒருத்திக்கு மேற்பட்ட மாதரை மணக்க நேர்ந்தால், அவர் அனைவரிடமும் ஒத்த அன்பினனாக இருத்தல் வேண்டும். வேறுபாடு கூடாது. (76)

காமநூலைக் கற்ற சில காமுகர் பல பெண்களை மணப்பர். தமக்கு விருப்பமான பெண்ணை மட்டும் சேர்ந்து பிறரைப் புறக்கணிப்பர். (77)

மாதர் எப்பொருளை இழக்கவும் சம்மதிப்பர். தம் கணவனின் அன்பை இழக்க மட்டும் சம்மதியார். (83)

மாதர்க்குக் குழந்தை இல்லை எனினும் பொருள் இல்லை எனினும் அவை பெருத்துன்பம் அல்ல. கணவன் அன்பு இல்லையேல் அதுவே பெருந்துன்பம். கணவன் அன்பு இழந்து வாழ்வதிலும் கானகம் போவது நன்று. (86)

தம்மிடம் யாரேனும் புறங்கூற வந்தால், பெரியோர்கள் இன் சொல்லால் அடக்குவது அறமாகும். (87)

பெற்றோர்க்குத் தம் மகளிரின் துன்பம் காண்பது இயலாத செயலாகும். (89)

சிறியவர் அறியாமல் தீமை செய்வது இயல்பு. தீமை செய்யக் கண்டால் ஒரு முறை இரு முறை அறிவுரை கூறித் திருத்துதல் நன்று. உடனே தண்டிப்பது அறம் அன்று. (90)

பெரியோர் சினம் கூடும்படி செயல் புரிவது சிறுமையே பயக்கும்.

ஆசாரியன் அருளைப் பெற்றவர்க்கு அடையப்படாத பொருள் ஏதும் இல்லை. (478)

கணவனாயினும், உடன் பிறந்தவராயினும், மைந்தராயினும் தமக்குத் துன்பம் செய்தால் மகளிர் பொறுக்க மாட்டார். அவர் மனம் வேகும். சினங்கொண்டு பிரிந்து செல்வர். (98)

சினம் தவிர்தல், இன்மொழி, கணவனே தெய்வம் என்று நினைதல் இவையே மகளிர்க்கு வேண்டிய பண்புகள் - வாய்க்குச்

சுவையாக உண்டிதின்றிகள் சமைக்கத் தெரிந்திருப்பினும் அவர்கள் இனியுர் அல்லர். (119).

ஒப்பனை செய்துகொள்ளல், அன்பு காட்டல், அறவழி நிற்றல், பணிவுடைமை, நாண், மடம், அச்சம், பயிர்ப்பு ஆகிய இவை மகளிர்க்கு நன்மை பயக்கும். அத்தகைய மாதரைச் சேர்ந்த கணவர் புண்ணியவான்கள் .(120).

## அரசர் இயல்பு

அரசர்கள் வைகறையில் துயில் எழுதல்வேண்டும். ஓலக்கம் சென்று அந்தணர்க்கு நிதிதந்து, அமைச்சரோடு உசாவி, வந்த கடிதங்களை வினவி அவற்றிற்கு உடனே விடை எழுதவேண்டும். (165).

கணக்கர் சொல்லும் கணக்கினைக் கேட்டு (166), ஒற்றர் கூறும் செய்தி உணர்ந்து, அதற்கு ஆவன எண்ணி, நீதிநூல் படிக்கக் கேட்டு, பகையரசர் வந்து தரும் திறைப்பொருள் பார்த்து, படைகளின் அணிவகுப்பு மரியாதை ஏற்க வேண்டும். (167)

காவலர், புரோகிதர் முதலியோர்க்கெல்லாம் காட்சிக்கு எளியனாய் அவர்கள் குறை தீர்த்துப் பின்பு மனையகம் சேர்தல் வேண்டும். (168).

வருகின்ற வரவை இரு பங்காக்கி ஒரு பங்கினைக் கொடைக்கும், ஒரு பங்கினைத் தனக்குமாகக் கோடல் வேண்டும். யார்மாட்டும் பொதுவாக அன்பு செய்தல்வேண்டும். காமம், கள், கவறு ஒழித்தல் வேண்டும். வேள்விகள் செய்து வானவர் கடன் தீர்த்தல் வேண்டும் (169).

எதிர்பாராத வகையில் கோள்களின் மாறுபாட்டால் பஞ்சம்வந்தால், அரசர் களஞ்சியத்து நெல்லை அளித்துக் குடிகளைக் காத்தல் வேண்டும். அதுவும் போதாதாயின், பஞ்சம் வந்தால் கொள்ளை விலைக்கு விற்கலாம் என்று பதுக்கி வைத்திருக்கும் பேயரின் நெல்லைக் கவர்ந்து குடிகளுக்கு உதவுதல் வேண்டும். (172)

## அமைச்சர் இயல்பு

கொடையாலும் இன் சொல்லாலும் குடிகளை ஓம்பல் வேண்டும். தானிய விளைவைப் பெருக்கவேண்டும். இயற்கையாலும் பகைவராலும் கேடு உண்டாயின் சாம பேத தான தண்டம் என்னும் நான்கு உபாயங்களால் மக்களைப் பாது காத்தல் வேண்டும். *(372)*

அறிவு சீலம் காலம் ஆகிய மூன்றிலும் மூத்தவரோடு ஆராய்தல் வேண்டும். நெடுநீர்மை, மடிமை, தூங்கல், மறவி ஆகிய நான்கும் நீக்கி, புகழ் பயக்கும்படி அரசன் கூறும் செயல்களைச் செய்தல் வேண்டும். *(373)*.

அரசன் விரும்புவதைத் தான் விரும்புதல் கூடாது. அகலாது அணுகாது தீக்காய்வார்போல் அரசனுடன் பழகுதல் வேண்டும். வேறு ஒரு சொல் அச்சொல்லை வெல்லும்சொல் இன்மை அறிந்து சொல்லுதல் வேண்டும். *(374)*

## அரிய செய்திகள்

மணிவாசகரை ஆட்கொள்ளக் குருவாக வந்த சிவபெருமான் கையில் இருந்த நூல் "சிவஞானபோதம்" *(383)* என்பதால் சிவஞானபோதம் மெய்கண்டாருக்கு முன்பே உள்ளது என்று தெரிகின்றது.

"மீனம்எனப் பார்த்துஆமை எனநினைந்து விறற்கோழி
தான்எனவே அருச்சித்துச் சடத்துவரும் தொடக்ககற்ற
ஞானமது சிவத்தினிடை நண்ணும்வகை அருள்கூர்ந்து"

என்ற பகுதி வியப்புக்கு உரியது. *(387)*

மீன் தன் முட்டைகளை இடையறாது நோக்கும் இயல்புடையது. அதைப்போல் இறைவன் உருவை இடையறாது நோக்குதல் வேண்டும். ஆமை தன் உறுப்புக்களை இயங்காமல் அடக்குவது போல் பொறிகளை இயங்காமல் அடக்கி இறைவனை நினைதல் வேண்டும். கோழி குப்பையைக் கிளறித் தான் எடுத்த இரையைத் தான் உண்ணாமல் குஞ்சுக்கே தந்துவிடுதல் போல, தன் பொருள் முழுவதும் இறைவனுக்கே சமர்ப்பித்து

விடவேண்டும் என்பதைக் காட்டும் இப்பகுதி நெஞ்சுக்கு நல்ல விருந்து.

''ஆய் நாளினில் அறைஉறு நிதியமும் அன்றி
மேய வான்மழை மறுத்திடின் விற்பம்என்று ஈட்டும்
பேயர் தம்மனை நெல்லையும் பெரிதெடுத்து உரிய
தாயை ஒத்துஉணவு அருளுதி உயிர்ப்பயிர் தழைப்ப''
(172)

என்பதில் தற்காலம் நடைபெறும் பதுக்கலையும் பதுக்கல் வேட்டையையும் காணமுடிகின்றது. பதுக்குவோரைப் பேயர் என்று வைத்து ஆசிரியரின் கருணை உள்ளத்தைக் காட்டுகிறது.

பாவங்களை நான்கு வகையாகப் பிரித்துப் பெயரிட்டு, ஒவ்வொன்றையும் விரிவாகக் கூறுவதும் அரிய செய்தியாகும்.

ஆன்மா எது என்ற வினாவை எழுப்பி அதற்கு விடையாகச் சைவ சித்தாந்தக் கருத்துக்களை விளக்குவது மிகமிக அருமை. (451 - 67)

திருநீறு செய்யும் முறையை விரிவாகக் கூறுகின்றார். திருநீறு மூவகைப்படும் என்பது அரிய செய்தியாகும். (சிவதருமம் உரைத்த சருக்கம்).

சந்திரன் சாப நீக்கம் பெற்ற வரலாறு பல புராணங்களிலும் காணப்படும் ஒன்று. சந்திரனது பிறப்பு வளர்ப்பு முதலியன விளக்கமாகக் கூறுவது வேறு புராணங்களில் காண இயலாதது.

சந்திரன் சாபம் பெற்று வருந்திய போது இறைவன் அவன் முன் தோன்றி, அதற்கு முன் சாபம் பெற்றோர் சிலரைக் குறிப்பிட்டு அவர்கள் பெற்ற சாபங்களையும் தொகுத்துத் தருவது வேறு எங்கும் காணாத செய்தி. (145-46)

அழகிய பெண்களை விலைக்கு வாங்கி, அவர்களுக்குப் பயிற்சியளித்து ஆலயங்களில் நடனமாடுவதற்கு வழங்கியவர்கள் அரம்பையர் நலம் துய்த்து இந்திரனாய் வாழ்வார் (330) என்று ஓர் இடத்தில் கூறுகின்றார்.

சிவன் கண்களினின்று முப்பத்தெட்டுத் துளிகள் வந்தன. அவையே போக பூமியில் முளைத்துக் கிளைத்து மரமாயின. அவை காய்த்த விதைகளே உருத்திராக்கமணிகள். ஒரு முகம் முதல் பதினான்கு முகம் வரை அவற்றிற்கு உண்டு. (சிவதருமம் உரைத்த சருக்கம்) என்ற செய்தியும் அரியதே.

## சொல்லணி

இவர் சொல்லணிகளுக்கு முதன்மை தரவில்லை. ஆயினும் சொல்லணிகளைக் கையாளும் வல்லமை உண்டு என்பதை இரண்டோர் இடங்களில் சுட்டிச் செல்கின்றார்.

"முனிவர்கள் ஆங்ஙனம் முயல்வர் மோனமே
வனமல ரிடைச்செயும் வண்டு பானமே
அனநடைச் சூர்கள்வந் தகல்வர் வானமே
நனிஇல்லோர்க்கு உள்ளவர் நவில்வர் ஞானமே" (63)

என்ற இப்பாடலின் அடிதோறும் இறுதிச் சீர் அனைத்தும் இயைபு என்னும் தொடை பெற்றுள்ளது.

'போகிமலர் கைக்கொண்டு போகி அரிச்சிக்கும் நல்ல போகி போல'(185) என்ற இடத்து போகி என்ற சொல் மும்முறை வந்து வேறு வேறு பொருள்படுபவதைக் காண லாம். இவ்வாறு வருவது மடக்கணி (யமகம்) என்பர். (போகி - சென்று. போகி - இந்திரன். போகி - பாம்பு.)

அறு தொழிலோர் அறு தொழிலோர் ஆகாமல் (12)
மதிஎனும் மதிஇல் பித்தன் (96)
எள்ளிட வெள்ளிடம் இன்றி (7)
வேலையை வேலை தாவில் (212)

என்ற இடங்கள் சொல்லணிக்குரிய எடுத்துக்காட்டுக்கள்.

## சோதிடக் கலை

இவர் சோதிடக் கலையை நன்கு அறிந்தவர் ஆதலால் சோதிடக் கருத்துக்களை ஆங்காங்கே சுட்டிச் செல்கின்றார்.

இரவி முன் குசன் பின்வெள்ளி நடக்கினும் இடபம்
பரிய சிங்கம்மீன் தேள்சனி உறினும்மா பாவர்

மருஷ இராசி ஒன்று அடையினும் பானுமத் தியமும்
குருவுக்கு ஏழ்ஒன்றில் பாவர்ஆ யினும்மழை குன்றும்(171)

மட்ங்கல் இராசியில் பொன்னோன் வரும்பருவம்
மாசி மதி மகங்கள்

என்ற பகுதிகள் இதற்கு எடுத்துக்காட்டு.

## சிவபிரான் திருப்பெயர்கள்

இவர் குறிப்பிடும் சிவபிரான் திருநாமங்கள் இவரது சிவ பக்தியை வெளிப்படுத்தும். அவற்றைத் தொகுத்துப் பார்ப்போம்.

அங்கணன் 347, அங்கயற்கண்ணி பங்கன் 1, அச்சுதனாம் சிவன் 487, அடியார்க்கு எளியவன் 264, அண்ணல் 71, அத்தன் 216, அந்திப்பிறை கொன்றை அணிந்திடும் அண்ணல் 289, அரன் 72,215, அருணை மாமலை அமலன் 179, அருள் வாரிதி 190, அலங்கிலைச் சூலத்து அண்ணல் 261, அலங்கிலைச் சூலம் ஏந்திய தடக்கை அமலன் 72, அல்அமர் கண்டன் 126, அல்லைப் பொருவும் களத்து அண்ணல் 189, அன்பருக்கு நலமே செய்யும் கோமான் 1, இலிங்க மூர்த்தி 251-346, ஈசனார் 221, ஈசன் 125, உமையம்மை காண நடனம் செய் சாமி 488, எந்தை 365-380, எம்மனைக்கோர் பங்களித்த எந்தை 140, எம்மான் 68, எம்மோர்களைகண் 414, ஏழை பங்காளன் 380, ஐயன் 390, ஐவகைய கருத்தா 3, கங்கை அணி அமலன் 191, கங்கையான் 466, கங்கைப் பெருக்காற்றினில் தோணி மணந்ததென்னக் கதிர்விரிக்கும் திங்கட் கொழுந்து புனைமோலிச் சிவன் 266, கங்கையும் பாந்தளும் சடைக்கணி பரமன் 66, கங்கை வேய்ந்தவன் 22, கடவுள் 447, கடுக்கைச் சடையுடை வானோன் 75, கடுத்திகழ் மிடற்றின் எந்தை 365, கண்ணுதல் முதல்வன் 71, கண்ணுதற்சாமி 365, கயிலை மலைப் பெம்மான் 200, கயிலைவாழ் ஈசன் 380, கருணைக்கு ஒரு கொள்கலம் 414, கருணை வாரிதி 179, கறைதோயும் மணிகண்டன் 279, கனி மொழி பாகன் 215, கன்னற் குதலை மொழி பங்கன் 156, காளம் உண்டு அமரரைக் காத்த கண்ணுதல் 355, குமரி வண்டு அறைதரும் கொன்றை சூடிய அமலன் 343, குமுறி அளி பலகோடி கூட்டுண்ண நறவுயிர்க்கும்

கொன்றைப் பைந்தார் உமையவள் நாயகன் 8, குழகன் 187, குழவித் திங்கள்வேணி அண்ணல் 379, கூனல் அம் பிறைசேர் சென்னிக் கூத்தன் 377, கொன்றை மலர் நதி அறுகு புனைந் தான் 140, கொன்றை முடித்தவன் 392, கொன்றையஞ் சடை யோன் 70, கொன்றையந்தார் வரதன் 149, கோமான் 1, சங்கரன் 55, சம்பு 489, சிதம்பரநாதன் 250, சுடுபொன் அனைய நறுந்தோட்டுக் கொன்றை அணியும் சோமேசன் 264, சூல மழுவாள் கரத்தன் 140, செஞ்சடை அத்தன் 122, செல்வன் 142, சென்னியின் அறுகும் தும்பையும் பிறையும் கொன்றையும் செருகிய சிவன் 28, சோமசுந்தரலிங்கம் 67, சோமசுந்தரன் 468 சோமநாதன் 3, சோமபுரிச்சிவன் 498, சோமலிங்கம் 46, சோமனை அணிந்த நம்பன் 382, தம் பெருமாள் 391, தாணு 451, தில்லை உமாபதி 425, துண்ட மதி அணிந்தோன் 245, தென்பால் உறையும் பெருமான் 154, தேமேவு கொன்றையணி செஞ்சடையோன் 1, தேன் அமர் கொன்றையஞ் செல்வன் 393, தோகை பாகன் 411, நக்கன் 199, நம்பன் 489, நளிமதிச் சடையோன் 215, நனைபிலிற்றிய கொன்றை சூடிய நாதனார் 422, நாதன் 190, நித்தன் 493, படர்சடைமேல் துண்டமதி அணிந்தோன் 245, பண்டைமறைகளும் இன்னம் காணரிய சிவலிங்கப்படிவம் 131, பண்ணமை மகதியாழைப் பழிக்கும் அந் தீந்சொற் செவ்வாய்ப் பெண் ஒரு பாகன் 284, பரமன் 424, பவளவார் சடையுடைப் பரமன் 254, பாச இயல் கெட முருக்கும் மூர்த்தி 380, பாலலோசனன் 212, பிறைசேர் சென்னிக் கூத்தன் 222, புனித மூர்த்தி 1, புனை தரு கங்கை வேணிப் புனிதன் 426, பூத நாயகன் 407, பைய அரவம் புனைந்தாடும் பரமன் 271, பையுடைப் பாம்பணி பரமன் 398, பொது நடம் புரிகின்றோன் 220, பொன்விழுது விட்டனைய சடையான் 140, மதவேள் மாய முன்னம் எயில் மூன்றும் இளநகை செய்து எரித்த பெம்மான் 290, மதி ஒண்கண்ணிச் சடைத் தலைப் பெம்மான் 285, மருதப்பன் 183, மழவிடையோன் 2, மழு வலான் 421, மன்றற் கடுக்கை துயல் வருதோள் வரன் 480, மன்றினில் உறைகுவான் 403, மாமறையின் முடிவினிலே பேர றிவே வடிவாகி மன்னினான் 3, மாறன் உரு எய்து செல்வன் 489, மான் அமர் கரன் 210, மான் கன்று ஒன்று மலர்க்கரத்துக் கண்ணுதல் 163, முக்கணான் 123, முதல்வன் 132, முதிராமுலை

பங்கினன் 415, முதுகுன்ற வில்லான் 139, முத்திக்கு ஒரு வித்தாகி உறை முதல்வன் 208, முன்னவன் 132, மூன்றாம் திதிப் பிறை அணிந்தான் 366, மைக் கூருங் களத்தன் 474, வள்ளல் 490, வானவன் 446, விடங் கொள் மணிமிடற்று இறைவன் 239, விடையின் அண்ணல் 420, விமலன் 53, வில்வம் சூடும் வரதர் 222, வேடர்தம்பிரான் மென்ற ஊன் மிசைந்து வீடருளும் நீடு காளத்தி நிருமலன் 178.

## உமையம்மை திருப்பெயர்கள்

உமையம்மையைக் குறிப்பிடும் சொற்றொடர்கள் இவரது புலமைக்கும் பக்திக்கும் எடுத்துக்காட்டாவன. அவற்றைச் சிறிது நோக்குவோம்.

அங்கயற்கண்ணி, 1 அஞ்சன உண்கண்ணினாள் 125, அழகு பெறும் இரண்டுகயல் இகலி மலைந்தால் அன்ன அருட் கண்ணாள் 2, அன்பருக்கு அருள் செய் குணத்தினாள் 4, ஆனந்தவல்லி 68, ஆனந்தவல்லி அம்மை 4, உமையவள் 8-2, உலகம் ஈன்றும் கன்னி என உற்ற உமை 272, கடவுள் மாக் கற்புடைக் கவுரி 341, கண்ணுதல் இடம் உறும் உமை 354, கனிமொழி 215, கன்னலின் பாகினில் அமுதம் தேன்பால் கண்டு கலந்தனைய அம்தீஞ்சொல் கன்னி 290, கன்னல் மொழியாள் 491, கன்னற்குதலை மொழி 156, கோநந்தன் மனை வளர்ந்தோன் தங்கை 4, சக்தி 456, சிவை 138, சுக வல்லி 491, தொலைவிலாத கற்பு ஓர் உருக்கொண்டெனத் தோன்றும் மலைமகள் 409, தோகை 411, பங்கய மலரினைப் பழிக்கும் வாள்முகக் கொங்குலாம் மலர்க்குழற் கவுரி 357, பண்அமை மகதி யாழைப் பழிக்கும் அந்தீஞ்சொற் செவ்வாய்ப் பெண் 284, பரமன் பங்குறை தையல் 398, பரை 291, பழமறையின் முடியினும் அப்பத்தர் மனத்தினும் வைகும் பதத்தினாள் 2, மழவிடையோன் பங்கிலுறை உமையவள் 2, மாவடு நேர்ந்து அருள் சுரக்கும் மைத்த விழியாள் 321, முதிராமுலை 415, முழுமதியம் ஒரு கோடி ஒளிதருவதென ஒளிரும் முகத்தினாள் 2, வண்டிமிர் பூங்குழலாள் 291, விமலை 343.

## திருமால் திருப்பெயர்கள்

சிவபெருமான், உமையம்மை திருப்பெயர்களைப் பக்திச் சுவையுடன் தொடுத்த இவர், திருமால் திருப்பெயர்களையும் சிறப்புறத் தொடுத்துத் தம் சமயப் பொதுமையைக் காட்டுகின்றார்.

அருட்கடல் 386, ஆழிமாயவன் 343, ஆளரி ஆகியே கனகன் ஆருயிர் மாளவே பிறந்தவன் 355, இந்திரை குயாசலம் பொருததோட் கொண்டல் 356, ஏற்ற மாற்றலர் எல்லையில் ஆவியைக் கூற்றுக்கு ஈயும் பரிதிகொள் கொண்டல் 362, கருணை ஓர் உருவு கொண்டெனத் தோன்றும் இராமன் 259, கருமுகிலுழைப் பல கமலம் பூத்தெனத் திருவுரு வெய்திய செம்மல் 344, கன்று குணிலாக் கனியுகுத்த காயாமேனிமால் 480, கோநந்தன் மனை வளர்ந்தோன் 4, சகம் அளித்தவன் 360, சங்கு சக்கரம் வில் வாள் தண்டம் தாங்கிய பங்கயச் செங்கணான் 347, சீதரன் 241, திருவின் காதலன் 184, திருவொடு கவுத்துவம் திகழும் மார்பன் 352, நிறைதரும் அவுணர்மாப் படைகள் நேரில் வெஞ்சிறையினால் புடைத்து மென் சருகின் சிந்தியும் கனுவறாச் சீற்றம்ஆர் கலுழப்பாகன் 358, பணமிருக்கும் பாந்தள் மிசைத் துயில்வோன் 187, பாசடைத் துளவம் புனை பண்ணவன் 361, பால் நந்து திகழ்கரத்தான் 4, பாவிள வெங்களியானைக் கோடு கொண்ட பண்ணவன் 321, புவனி பொதி தாளான் 54, புனை துழாய்முகில் 359, பைத்த பாம்பினில் அறிதுயில்செய் பண்ணவன் 353, மஞ்சனைய மணிவண்ணன் 322, மயில் எருத்து உறழும் மேனி மாயவன் 380, மாமேவு மணிவண்ணன் 1, மாயவன் 288, வாசமார் நறவு கொப்புளிக்கும் வண்துழாய் ஈசன் 346.

## யாப்பு வகை

இந்நூல் 500 பாடல்களே உடைய சிறுநூல் ஆயினும் இதனுள் பதினெட்டு வகை யாப்புக்களைப் பயன் படுத்தியுள்ளார். சந்த விருத்தங்கள் மட்டும் ஏழு வகைகள் உள்ளன.

திருஞானசம்பந்தர் பாடிய கோளறு பதிகத்திலுள்ள 'வேயுறு தோளிபங்கன்' என்ற சந்தம் வேறு யாருமே இதுகாறும் கையாண்டதாகத் தெரியவில்லை. இவர் அந்தச் சந்தத்தில் மூன்று பாடல்கள் மிகச் செழுமையாக ஆக்கியுள்ளார்.

பாடுவது அரிது எனக் கருதப்படும் காப்பியக் கலித் துறையை மிக எளிதாகக் கையாண்டுள்ளார்.

வில்லிபாரதத்தில் முதற்பாடல் ‘நீடாழி உலகத்து’ எனத் தொடங்குவது. அது சந்தப்பாடல் வகை. அந்த யாப்பில் பாடுவது மிகக் கடினம். ஆதலால் பலர் அதைக் கையாள் வதே இல்லை. இவர் அந்த யாப்பில் சில பாடல்களைச் செம்மையாக யாத்துள்ளார்.

இரண்டே சீர்கள் உடைய வஞ்சி விருத்தம் ஒன்றும் நூற் பயனாக அமைந்துள்ளது கண்டு இன்புறலாம்.

இவர் பயன்படுத்திய யாப்பு வகைகள்:-

காய் காய்! காய் காய்! மாதேமா - மாமாகாய் மாமாகாய்- விளமாதேமா விளமாதேமா என்ற வாய்பாடுகளில் அமைந்த அறு சீர் விருத்தங்கள், விளமா விளமா விளம் விளம்மா என்ற வாய்பாடு கொண்ட எழுசீர் விருத்தங்கள், காய் காய் மாதேமா காய் காய் மா தேமா என்ற வாய்பாடு கொண்ட எண்சீர் விருத் தங்கள்.

ஐஞ்சீர் கொண்ட கலி நிலைத்துறை காப்பியக் கலித்துறை கள் நான்குசீர் கொண்ட கொச்சகக் கலிப்பா, கட்டளைக் கலி விருத்தம், கலிவிருத்தம் ஆகியவைகள், இரண்டுசீர் கொண்ட வஞ்சி விருத்தம்,

தானன தான தானன தான தனதான, தானதன
தானதன தானதன தான, தானன தானன தானன தான,
தன தனன தான தனன தான தனதான, தனன தானன
தனன தானன தனன தானன தானனா,
தனதன தானதந் த தனதானதந்த தனதானதந்த தனன,
தானான தானான தானான தானான தனதானன
ஆகிய குறிப்புக்கள் அமைந்த சந்த (ப் போலிப்)ப் பாடல்

வகைகள் ஆகியவை இவர் கையாண்டுள்ள யாப்பு வகைகள்.

## வடமொழிப் புராணம்

வடமொழி வானர வீர மதுரைப் புராணத்தை மானா மதுரை கோர்ட்டு அமீனா குருசாமி சாஸ்திரியார் மொழி

பெயர்த்துக்கூற, திரு வ. த. சுப்பிரமணியபிள்ளை அவர்கள் தமிழில் உரை நடையாக்கி 1901ஆம் ஆண்டு சிறுநூலாக வெளியிட்டுள்ளார்கள்.

திரு பிள்ளையவர்கள் தமிழ்ப் புராணத்தின் ஏட்டுச் சுவடியும் பார்த்து அதிலிருந்து சில செய்யுட்களையும் அந் நூலில் இணைத்துள்ளார்கள். அப்பாடல்களுள் ஒன்று.

ஒருகொம்பன் இருசெவியன் மூக்கண்ணன்
நால்வாயான் ஒளிரும் பூவின்
மருவுகரம் ஐந்துடையன் சண்முகன் தாய்
தந்தைமுனம் வந்து தோன்றும்
பெருமையன்செஞ் சடையணிந்தோன் அடியவர்கள்
பிறவிஎனும் பிணியை நீக்க
அருள்உதவும் கற்பகப்பேர்க் கணபதிதாள்
அன்பினொடும் அகத்துள் வைப்பாம்

என்னும் கணபதி காப்புச் செய்யுள்.

ஆனால் தற்போது கிடைத்துள்ள ஏட்டில் இப்பாடல் இடம் பெறவில்லை. ஒரு நூலுக்குக் கணபதி காப்பு இன்றி யமையாதது எனக் கருதி யாரோ ஒருவர் இப்பாடலைப் புராண ஏட்டில் இணைத்திருக்கலாம்.

வடமொழிப் புராணத்துக்கும் தமிழ்ப் புராணத்துக்கும் சிற்சில இடங்களில் சிறு சிறு வேறுபாடுகள் உள்ளன. அவற்றைச் சிறிது காண்போம்.

காளையார் கோவில் சிவலிங்கங்களுக்குச் சோமேசர், காளீசர் எனப்பெயர் என்பதும், அங்குள்ள தீர்த்தம் கஜபுஷ்கரணி எனப்படும் என்பதும் தமிழ்ப் புராணம் கூறவில்லை.

வில்வவனத்துக்கு யுகந்தோறும் வேறு வேறு பெயர்கள் உண்டு என்பதும் தமிழ்ப் புராணம் கூறாத ஒன்று.

உக்கிர பாண்டியன் தேரால் வில்வக் கன்றுகள் அழிந்தன என்னும் செய்தி 'வில்வத்து ஓர்இலை சாய்ந்து மாய்ந்தது' என்று தமிழில் மாற்றம் பெறுகிறது.

திருநீற்றின் வகைகள் கல்பம், அனுகல்பம், உபகல்பம், அகல்பம் என நாலு வகை என்கிறது வடமொழிப் புராணம். உத்தமம், மத்திமம், அதமம் என மூன்று வகை என்கிறது தமிழ்நூல்.

பசுக்களில் நந்தையின் நிறம் கோரோசனை நிறம் என்றும் சுசீலையின் நிறம் கருப்பும் சிவப்பும் என்றும் வடமொழி நூல் கூற, அவை முறையே பொன்நிறம் புகைநிறம் என்கிறது தமிழ்நூல்.

விபூதியைப் புதுப்பாண்டத்தில் வைத்து அதனுடன் கற்பூரம், விளாமிச்சைவேர், தாழம்பூ, சண்பகப்பூ, மல்லிகை, நாவல்லி, பாதிரிப்பூ, தாமரைப்பூ, பலாசப்பூ, துளசி, நாயுருவி, தர்ப்பையின் நுனி, ஜாதிபுஷ்பம் ஆகியவை கலந்து வைக்க வேண்டும் என்று வடமொழி கூறும் குறிப்புத் தமிழில் இல்லை.

திருநீறு உத்தூளனம் செய்யும் இடங்கள் சிரசு, நெற்றி மார்புஆகிய மூன்று என்பது வடமொழி நூல். தலை, நெற்றி என இரண்டிடமே சுட்டுகிறது தமிழ்நூல். தரிக்கும் இடம் 32, 8, 5, என்கிறது வடபுராணம். 16, 8, 5 என்பது தமிழ்ப் புராணம்.

சிவன் வில்வவனம் அடைந்து உமையை விரைந்து நடக்கச் செய்து தான் பின்னே நடந்து செல்லும் போது திருமால் இலட்சுமியுடன் வந்து தியாகவினோதன் ஆனான் என்று வடமொழிப் புராணம் கூறுகின்றது.

சிவன் வில்வவனத்தில் உமைக்குச் சிவதருமம் உபதேசிக்கும் போது திருமால் (இலட்சுமியில்லாமல்) இமையவரோடு வந்து தியாகவினோதன் ஆனான் என்பது தமிழ்ப் புராணம்.

இராமன் எதிரில் சிவபிரான் 16 வயது இளைஞனாக வந்தான் என்கின்றது வடமொழிப் புராணம். இலிங்கத்தினின்றும் தோன்றி விடைமேல் வந்தான் என்பது தமிழ்ப் புராணம்.

விரதநாளில் சுந்தரி விரகமுற்று வலியச்சென்று ஆனந்தனைக் கலந்தாள் என்பது வடமொழிப் புராணம். ஆனந்தனே முதலில் விரகமுற்றுச் சுந்தரியை அணுக அவள் அறம் அன்று

என்று மறுத்தாள். ஆனந்தன் விடாமல் அவளை முன்கை பற்றி மிகத் துயரமுற்றமையால் அவள் உருக நேர்ந்தது என்று கூறி, ''தாம் உறு காமத்தன்மை தாங்களே உரைப்பதென்பது ஆம் எனல் ஆவதன்றால் அருங்குல மகளிர்க்கு'' என்ற கம்பன் வாக்கிற்கியையப் பெண்மைக்குப் பெருமை சேர்க்கின்றார் தமிழ்ப் புராண ஆசிரியர்.

மதுரையிலிருந்து வானரவீர மதுரை மூன்று யோசனை தூரம் என்கிறது வடமொழிப் புராணம். தமிழ்ப்புராண ஆசிரியர் இரண்டு யோசனை என்று உறுதியாகக் கூறுகின்றார். காரணம் விளங்கவில்லை.

## இந்தப் பதிப்பைப் பற்றி

இந்தப் புராணத்தின் ஒரே ஏட்டுச் சுவடிப் பிரதி கீழ்த்திசை ஏட்டுச் சுவடி நூலகத்தில் உள்ளது. அது முழுமையாக இருப்பினும் மிகமிகப் பிழைபட எழுதப்பட்டுள்ள பிரதி. பல இடங்களில் உண்மை வடிவங்களை அறிந்துகொள்வது மிகமிகக் கடினமாக இருந்தது. எடுத்துக் காட்டாக,

> 'ஒறுமையைந் தின்ப புறத்துற்றிடுமாதி தத்துவந்தன்னை
> யறிந்ததிலேதமின்றி யிரண்டற நின்றிடும் வாதவூரிறைவன்
> பாதமனங் கொள்வாம்'

என்ற பகுதியைக் காட்டலாம். இதில் 'ஒறுமையைந் தின்ப புறத்துற் றிடும்' என்பது முற்றும் பிழைபட்ட வடிவம். இதன் உண்மை வடிவம் ஆழ்ந்து ஆய்ந்தபிறகே தெளிவானது. ஓதும் ஐயைந்தின் அப்புறத்துற்றிடும் என்பதே அந்த வடிவம். பின்னாலுள்ள பகுதியையும் யாப்பிலக்கணத்தையும் பொருத்திப் பார்த்து, எதுகைநோக்கி அதன் உண்மை வடிவைக் காண முடிந்தது. இவ்வாறே பாடல்தோறும் பல இடர்ப்பாடுகள் ஒப்பிட்டுப் பார்த்துத் திருத்தம் செய்துகொள்வதற்கு வேறு பிரதி எங்கும் கிடைக்கவில்லை.

திரு. பி. கே. நம்பியாரும், கே. சி. நாராயண குருப்பும் 1969-ஆம் ஆண்டில் வெளியிட்ட சென்னை அரசின் மதுரை இராமநாதபுர மாவட்டக் கோயில்கள் என்ற ஆங்கில நூலில், மானாமதுரையைப் பற்றிச் சிறிய குறிப்பு உள்ளது. மானா

மதுரையில் மூன்று கோயில்கள் உள்ளன என்று அந்நூல் கூறுகின்றது.

1. நிர்த்தலமுடைய ஐயனார் கோயில், வரலாறு தெரியவில்லை. சான்றுகள் ஏதும் இல்லை. கோயிலின் நிலப்பரப்பு 0·15 ஏக்கர். மூலவர் ஸ்ரீ ஐயனார். மானாமதுரை ஜங்ஷனிலிருந்து 1 பர்லாங் தூரத்தில் உள்ளது. ஆண்டு வருமானம் 1961-இல் 334 ரூபாய். ஜங்கம சொத்து 2 கணிடகள். பூசை நாள் ஒன்றுக்கு ஒருவேளை. பூசாரி பரம்பரையாக வரும் வேளார்.

2. ஸ்ரீ சங்கு விநாயகர் கோயில். வரலாறு தெரியவில்லை. சான்றுகள் இல்லை. கோயிலின் நிலப்பரப்பு 1·5 ஏக்கர். மூலவர் ஸ்ரீ சங்குவிநாயகர். ரயிலடியிலிருந்து 1·5 மைல் தூரம். ஆண்டு வருமானம் 1961-இல் ரூ. 693. நகை 200 ரூபாய் பெறுமானம். வாகனம்-கேடயம் (Kedavam) வாரம் 2 முறை பூசை. பூசாரி பரம்பரை பிள்ளை. ஆண்டு விழா வைகாசி மாதம்.

3. ஸ்ரீ தியாகவினோதப் பெருமாள் கோயில் வரலாறு தெரியவில்லை. சான்றுகள் இல்லை. நிலப்பரப்பு 0.3 ஏக்கர். மூலவர் தியாக வினோதப் பெருமாள். ஜங்ஷனிலிருந்து ½ மைல் தூரத்தில் உள்ளது. ஆண்டு வருமானம் 1961-இல் 288 ரூபாய். நன்செய் நிலம் 1·75 ஏக்கர் உண்டு. நகை விலை மதிப்பிடப் படவில்லை. வாகனம் கருடன். ஒருநாளைக்கு ஒருமுறை பூஜை. பரம்பரைப் பட்டர் பூசாரி.

இந்த மூன்று கோயில்களின் விவரம் மட்டுமே மேற்படி நூலில் உள்ளது. இப்புராணம் குறிப்பிடும் சோமேசர் கோயில் பற்றிய செய்தியே அங்கு இல்லை. இறுதியில் குறிப்பிட்டுள்ள ஸ்ரீதியாகவினோதப் பெருமாள் கோயிலின் வரலாற்றை இப்புராணம் குறிப்பிடுகின்றது.

பொருள் உணர்ந்து படிப்பதற்கு வசதியாகப் பெரும்பாலும் சந்திகள் பிரிக்கப்பட்டுள்ளன. ஆங்காங்கே பொருள் விளக்கத்தின் பொருட்டுத் துணைத் தலைப்புக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாடலுக்கும் குறிப்புரையும் அருஞ்

சொற்பொருளும் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு சருக்கத்தின் சுருக்கமும் அந்தந்தச் சருக்கத்தின் முன் தரப் பட்டுள்ளது.

# சருக்கச் சுருக்கம்

**பாயிரம்**

இப்பகுதியில் முதன் முதலாகச் சோமேசருக்கு வணக்கம் கூறப்படுகின்றது. அதன் பின்னர் உமையவள், சோமநாதன், ஆனந்தவல்லி, முருகன், சாத்தன், வீரவாகு, வயிரவன், நந்தி, மாகாளன், மணிமான், சண்டன், சிவகணங்கள், மூவர்முதலிகள், மணிவாசகர், தண்டீசர், வாதராயணர் (வியாசர்), கும்பமுனி, பிருகு, வாயு, முனிகணங்கள், வாணி ஆகியோருக்கு விரிவாக வணக்கம் கூறிவிட்டு இறுதியில் வாழ்த்துக் கூறப்படுகின்றது.

அதன்பின் ஒரு நூலுக்கு வேண்டிய இன்றியமையாத இலக்கணங்கள் அனைத்தும் சுருக்கமாகக் கூறி, அத்தகைய நூலுக்கு முன் என் நூல், தாமரை மலருடன் கொட்டி மலர்ந்தது போலும் என்று அவையடக்கம் கூறப்பட்டுள்ளது.

ஆக்குவித்தோன் பெயர், அவன் செய்த திருப்பணிகள், தந்தை பெயர், ஊர்ப்பெயர் ஆகியவற்றுடன் சுட்டப் படுகின்றது. தந்தை பெயருடன் நூலாசிரியர் பெயர் தரப் படுகின்றது.

*ஹரிஓம் நன்றாக!*

## பாயிரம்

**சோமேசர்**

மாமேவும் மணிவண்ணன் உலகமெலாம்
காத்திடவும் வனச வாசப்
பூமேவும் நான்முகத்தோன் படைத்திடவும்
சக்திவைத்த புனித மூர்த்தி
தேமேவு கொன்றையணி செஞ்சடையோன்
அன்பருக்கு நலமே செய்யும்
கோமான்அங் கயற்கண்ணி பங்கனிரு
பதம்தலைமேல் கொள்ளு வாமே! 1

---

1. மாமேவு மணிவண்ணன் - திருமால். நான்முகத்தோன் - பிரமன். மா - திருமகள். சக்திவைத்த - ஆற்றலைத்தந்த. அங்கயற்கண்ணி பங்கன் - மீனாட்சியம்மையை இடப்பாகம் கொண்ட சோமேசன்.

**உமையவள்**

முழுமதியம் ஒருகோடி ஒளிதருவ
தெனஒளிரும் முகத்தி னாளை
அழகுபெறும் இரண்டுகயல் இகலிமலைந்
தாலன்ன அருட்கண் ணாளைப்
பழமறையின் முடியினும்அப் பத்தர்மனத்
தினும்வைகும் பதத்தி னாளை
மழவிடையோன் பங்கில்உறை உமையவளை
நிதம்போற்றி வணங்கல் செய்வாம். 2

**சோமநாதன்**

மாமறையின் முடிமீதில் பேரறிவே
வடிவாகி மன்னி னானை
நாமகள்கா தலன்முதலா ஐவகைய
கருத்தாவாய் நண்ணி னானை
தாமரையும் கயிரவமும் சுங்கினமும்
அன்னமும்சேர் தடங்கள் சூழும்
சோமபுரி யதனில்உறை சோமநா
தனைநிதமும் தொழுதல் செய்வாம். 3

**ஆனந்தவல்லி**

பால்நந்து திகழ்கரத்தான் வசுதேவன்
தேவகிதன் பால்வந்து ஆயர்

---

படைத்தல், காத்தல் என வரிசைப்படுத்துவது மரபு. இங்குக் காத்தல், படைத்தல் என மாற்றப்பட்டுள்ளது. காப்புக்கடவுள் திருமால்; இந்நூல் இனிது காக்கப் பெறுதல் வேண்டும் என்னும் குறிப்பு வெளிப்படும்படி திருமாலையும், காத்தல் தொழிலையும் முன்னர்க் கூறினார். நூல் மங்கலச் சொல்லுடன் தொ ங்கப் பெறுதல் வேண்டும். மா (திருமகள்) என்பது மங்கலச் சொல்.

2. முழுமதியம் - பூரண சந்திரன். கயல்-கயல் மீன்கள். இகலி-பகைத்து. மலைந்தால் அன்ன - போரிடுவது போன்ற. பழமறை-பழமையான வேதங்கள். வைகும் - வாழ்கின்ற. மழவிடையோன் - சிவபெருமான்.

போரிடுகின்ற கயல் மீன்கள் கண்களுக்கு உவமை.

3. மன்னினான் - நிலையாக இருப்பவன். நாமகள் காதலன் - பிரமன். முதலா - முதலாகவுள்ள. ஐவகைய கருத்தா - படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழிலும் செய்பவன். கயிரவம் - அல்லி மலர். தடங்கள் - நிர்நிலைகள். சோமபுரி-வானரவீர மதுரை.

கோன்நந்தன் மனைவளர்ந்தோன் தங்கையைஅன்
பருக்குஅருள்செய் குணத்தி னாளை
வான்அந்தி மதிமுடித்த சோமேசன்
வரிப்பமனம் மகிழ்ந்து வைகும்
ஆனந்த வல்லிஅம்மை தன்னையெமது
உளக்கமலம் அதனுள் வைப்பாம். 4

## முருகப்பெருமான்

முருகார் மலரை ஒருகோடி
வண்டு வீழ முடித்திலகும்
மருவார் கூந்தற் கொம்மைமுலைக்
குறத்தி விழியை வண்கரத்தின்
பருவேல் பொருவும் எனஇணைத்துப்
பார்த்துப் பார்த்துள் மகிழ்கூரும்
உருள்பூந் தண்தார் முருகனடி
உள்ளத் தமைத்து வணங்குவாம். 5

## புட்கலை கேள்வன் - வீரபத்திரர் - வயிரவன்

பூரணைபுட் கலைகேள்வன் திருப்பாதம்
வணங்கிஅரற் பொருந்தாது ஆற்றும்
சீருடைய சிறுவிதியாம் தக்கன்உயர்
வேள்வியினைச் சிதைத்த கொற்ற
வீரனது சரணமலர் உள்ளத்தும்
சிரத்தினிலும் மேவச் சேர்த்தி,
மாரனும்ஏக் கறும்எழில்சேர் வயிரவன்தன்
மலர்ப்பதமும் வணங்கல் செய்வாம். 6

---

4. பால்நந்து-வெண்சங்கு. திகழ்கரத்தான்-திருமால். தேவகிதன் பால்-தேவகியிடத்து. வான்அந்திமதி-வானத்து வருகின்ற அந்திக்காலத்துச் சந்திரன். வரிப்ப - திருமணம் செய்து கொண்டமையால்.

5. முருகுஆர் - தேன்நிரம்பிய. மருஆர்-மணம் நிறைந்த. கொம்மைமுலை-வட்டமானநகில். பொருவும்என - ஒப்பாகும் என்று, குறத்தி(வள்ளி)யின் கண்கள் தன் கைவேலுக்கு ஒப்பாகும் என்று அக்கண்களை அவ்வேலுடன் இணைத்துப் பார்த்து மகிழ்வான் முருகன் என்றபடி. உருள்பூந்தண்தார்-உருண்ட கடப்பம் பூவாலாகிய குளிர்ந்த மாலை.

6. பூரணை புட்கலைகேள்வன் - ஐயனார்; சாத்தன். அரன் பொருந்தாது - சிவபெருமானைச் சேராமல், சிறுவிதி - தக்கனின்வேறு பெயர். கொற்றவீரன் -

**நந்திதேவர், மாகாளன், மணிமான், சண்டன் முதலியோர்**

எள்ளிடவெள் ளிடம்இன்றி நான்முகத்தோன்
முதலமரர் கணங்கள் ஈண்டும்
வெள்ளிமலை தனைக்காக்கும் நந்திஇரு
சரணமலர் விரும்பிப் போற்றித்,
தள்ளரிய பெருந்திறல்சேர் மாகாளன்
உயர்மணிமான் சண்டன் பாதம்
உள்ளமிசைக் குடியிருத்தி ஏனையநற்
கணங்களையும் உன்னல் செய்வாம். 7

**மூவர் முதலிகள்**

சமணர்களைக் கழுவேற்றி அடர்சமய
கோளரிதன் தாள்கள் போற்றி,
அமலனதுஅஞ் செழுத்துஓதிக் கல்புணையால்
கடல்கடந்த அப்பர்ப் போற்றிக்
குமுறிஅளி பலகோடி கூட்டுண்ண
நறவுயிர்க்கும் கொன்றைப் பைந்தார்
உமையவள்நா யகன்தடுத்தாட் கொளவருசுந்
தரர்பதமும் உளத்து வைப்பாம். 8

**மணிவாசகர்**

ஓதும் ஐயைந்தின் அப்புறத்து உற்றிடும்
ஆதி தத்துவந் தன்னை அறிந்து,அதில்
ஏதம் இன்றி இரண்டுஅற நின்றிடும்
வாதவூர்இறை பாதம் மனம்கொள்வாம். 9

---

வீரவாகுத்தேவர். மாரனும் ஏக்கறும் எழில் - மன்மதனும் தோற்று ஏக்கம் அடைகின்ற அழகு. சரணமலர் - பாதமலர்.

7. எள்ளிட வெள்ளிடம் இன்றி - எள்ளிடவும் வெற்றிடமில்லாமல் நெருக்கமாக, கணங்கள் ஈண்டும் - கூட்டம் நெருங்குகின்ற. வெள்ளிமலை - கயிலையங்கிரி. நந்தி - நந்திதேவர். ஏனையநற் கணங்கள் - மற்றைய சிவகணங்கள்.

8. அடர் - கொல்லுகின்ற. சமய கோளரி - திருஞான சம்பந்தர். அமலன் - இறைவன். அஞ்செழுத்து - பஞ்சாட்சரம். கல்புணை - கல்லாகிய தெப்பம். அளிகுமுறி - வண்டுகள் ஆரவாரம் செய்து. கூட்டுண்ண - கூடியிருந்து உண்ணும்படி. நறவு உயிர்க்கும் - தேனைச் சுரக்கின்ற.

9. ஐயைந்து - இருபத்தைந்து தத்துவங்கள், பூதம் 5, பொறி 5, புலன் 5, கருமேந்திரியம் 5, மனம், புத்தி, சித்தம், அகங்காரம், ஆன்மா என்பன அவை.

**தண்டீசர், வாதராயணன், கும்பமுனி, பிருகு, வாயு முதலியோர்**

நீதிபுரி தண்டீசன் முதலான
 தொண்டர்பதம் நினைந்து போற்றி,
வேதம்நான் காய்வகுத்த வாதரா
 யணன்பாதம் விரும்பிப் போற்றி,
ஏதமிலாக் கும்பமுனி பிருகுவா
 யுவின்பாதம் இறைஞ்சிப் போற்றி,
மாதவத்தின் துறைமேய முனிகணங்கள்
 திருப்பதமும் வழுத்து வோமே. 10

**நாமகள்**

வண்டு சூழ்ந்து முரன்றணவி
 வாசம் துதைந்து விரைநறவம்
உண்டு களிகூர் வாலிதழ்த்தா
 மரைமேல் இருக்கும் ஒண்டொடியை
அண்டர் முதலோர் அனைவருக்கும்
 தாயாய் உறையும் ஆயிழையைத்
தொண்டர் அகத்தும் நாமீதும்
 உறைபா ரதியைத் தொழுதிடுவாம். 11

**வாழ்த்து**

அறுதொழிலோர் அறுதொழிலோர் ஆகாமல்
 நிதம்வாழ்க ! ஆன்கள் வாழ்க !
மறுவறுகண் டிகைமாலை நீறுபுனை
 சிவன்அடியார் வாழ்க ! மேகம்
நிறையமழை பெய்துஉலகு செழித்திடுக !
 வேந்தர்செங்கோல் நீடு வாழ்க !

---

அப்புறத்து உற்றிடும் ஆதிதத்துவம் - இருபத்தைந்துக்கும் அப்பாற்பட்டு உள்ள முதல் தத்துவம் ; ஈசுவரதத்துவம். ஏதம் - குற்றம். இரண்டு அற – சிவம்வேறு தான்வேறு என்னாமல் ஒரு தன்மையாக. வாதவூர் இறை - மாணிக்கவாசகர்.

10, வாதராயணன் - வியாசமுனி. கும்பமுனி - அகத்தியன். பிருகு - ஒருமுனிவன். வாயு - மாருதக் கடவுள். மேய - விரும்பிய.

11. முரன்று அணவி - ஒலியெழுப்பி நெருங்கி. வாசம் துதைந்து - மணம் பொருந்தி. விரைநறவம் - மணமுடையதேன். வாலிதழ்த் தாமரை - வெள்ளை இதழ்களையுடைய தாமரை மலர். ஒண்டொடி, ஆயிழை, பாரதி – சரசுவதி.

அறையும்இந்நூல் கற்பாந்தம் இருககஅவை
வரும்செல்வத்து அமர்க மாதோ! 12

அவையடக்கம்

குலம்பெரியோர்; எவ்வனத்தோர்;
உறுப்பனைத்தும் குறைவில்லோர்;
சலஞ்சலம்ஓர் முத்துயிர்த்த
தன்மையென விளங்கிடுவோர்;
நலம்திகழ்பல் லோர்பல்நாள்
நல்லஇலக் கணம்நவின்றே
இலங்குதசப் பொருத்தம்அழகு
ஏழ்மதம்எண் ணான்குஉத்தி 13

படலஉறுப் போடுஅணியிற்
பகர்ந்தகுறை ஒரீஇ,உற்ற
தொடைநலமும் திணைதுறையும்
தழுவிஒரு துகளும்இன்றி
இடமுறுநாற் பொருள்பயக்க
இசைத்திடும்நூல் முன்,என்நூல்
அடைதல்கஞ்சத் துடன்கொட்டி
அலர்ந்திடுதல் மானுமே. 14

---

12. அறு தொழிலோர் - அந்தணர். ஆன்கள்-பசுக்கள். கண்டிகை-உருத்திராக்கம். நீறு - திருநீறு. கற்பாந்தம் - ஊழிக்காலம் வரை.

13. தசப் பொருத்தம், (பத்து அழகு), ஏழு மதம், எண்ணான்கு (32) உத்தி ஆகியவற்றின் விளக்கம் நன்னூற் பாயிரத்தில் காணலாம். இப் பாடல் குளகம். அடுத்த பாடலுடன் முடியும்.

14. படலம்-காவியத்தின் உட்பிரிவு. அணி-அலங்காரம். தொடை-பாவின் உறுப்பு. திணை-அகத்திணை,புறத்திணைகள். துகள்-குற்றம். நாற்பொருள் - அறம், பொருள், இன்பம், வீடுகள். பயக்க - தரும்படி. கஞ்சத்துடன் - தாமரையுடன். கொட்டி-குளத்தில் மலரும் ஒருவகை மலர். பூவெனப் படுவது தாமரைப் பூவே எனச் சிறப்புப் படைத்தது தாமரை மலர். கொட்டி மலர் ஒன்றுக்கும் பயன்படாதது; மணம் இல்லாதது. சான்றோர் கவிதை தாமரைக்கும், என் கவிதை கொட்டிக்கும் ஒப்பாகும்.

நலம் திகழ்பல்லோர் நாற் பொருள் பயக்க இசைத்திடு நூல் முன் என்று முன் பாடல் தொடருடன் கூட்டிப் பொருள் காணுதல் வேண்டும்.

**ஆக்குவித்தோன்—ஆக்கியோன்**

அடையலர்கே சரிசெல்வம் கல்வி யுள்ளோன்;
அருட்கானை தனில்தேர்கோ புரங்கள் செய்தோன்;
உடையார்வேள் சுதன்;விசுவை மருது பூபன்
உவப்பொடுவா னரவீர மதுரைத் தொன்னூல்
வடமொழியைத் தென்மொழியால் வழங்கு கென்ன
மதுரைநகர்த் தெய்வசிகா மணிதான் ஈன்ற
குடமுனியை நிகரான கல்வி கேள்வி
குலவியசுப் பிரமணியன் கூறி னானே. 15

சருக்கச் சுருக்கம்

**நாட்டுச் சருக்கம்**

மேகங்கள் மலையில் மழை பொழிந்தன. மழைநீர் நால்வகை நிலங்களின் வழியே போய்க் கடலில் கலக்கும். இடையிலே நதிகளாகி ஏரியிலே நிரம்பும். வயல்களில் உழவர் உழவுத் தொழிலை மேற்கொள்வர். செந்நெற்பயிர் கரும்புபோல் ஓங்கிவளரும். அவற்றை அறுத்து வண்டியில் கொணர்ந்து களத்தில் அடித்து வறியோர் முதலியோர்க்குத் தானம் வழங்கியது போக மிஞ்சியதை வீட்டிற் சேர்ப்பர், தென்புலத்தார் தெய்வம் முதலியோர்க்கு வழங்கித் தாம் உண்பர்.

அந்நாட்டுப் பெண்கள் கற்பிற் சிறந்தவர். எல்லா இலக்கணங்களும் வாய்க்கப் பெற்றவர். ஆடவர் அறிவு முதலிய பண்புகள் ஒருங்கே பெற்றவர்.

வயல் எங்கும் நெல். வரப்பெங்கும் மஞ்சளும் இஞ்சியும். புன்செய் எங்கும் பயறுகள். வீடெங்கும் செல்வக் குவியல். நீர்நிலை எங்கும் மலர்கள். சோலை எங்கும் குயில்களும் மயில்களும். நீர் எங்கும் சங்கும் கயல்மீன்களும். பசுக்கள் அனைத்தும் பால் தருவன.

---

15. அடையலர் கேசரி-பகைவர்க்குச் சிங்கம் போன்றவன். கானைதனில் - காளையர் கோவிலில். கானப்பேர் என்பது காளையார் கோவிலின் பெயர். அது கானை என மருவியது. குடமுனி-அகத்தியன்,

எங்கும் சிவாலயங்கள். எங்கும் வேத ஒலி. எங்கும் மங்கல வாழ்த்து.

அந்நாடு பாண்டிய நாடு. அதன் மன்னன் பாண்டியன். அவன் தலைநகரம் மதுரை. அந்நகருக்கு உயிர் சிவபெருமான். அந்த மதுரைக்கு வானவர் உலகமும் ஒப்பு ஆகாது.

**மழை**

மல்லல் வெண்முகில் குழாங்கொடு வாரிவாய் மடுத்து
மெல்ல எய்தியே விசும்பெலாம் பரந்துகால் ஊன்றி
நல்ல வர்க்குஒரு தீக்குணம் நணுகுமாப் போலத்
தொல்லை மின்இடி காட்டியே வரையில்நீர் சொரிந்த. 16

**மழைநீர்**

கரிம ருப்பொடு முத்தமும் கழையினம் ஈனும்
பொருவில் முத்தமும் பொன்னும்நன் மணிகளும் வரன்றிப்,
பரவி வைப்பினில் குறிஞ்சிவன் பாலைநல் முல்லை
மருதம் நெய்தலைச் சாடியே வாரியின் மன்னும். 17

**உழுதொழில்**

இடைய றாதுசெல் இனையநன் னதியின்ஈர்ம் புனல்கள்
புடையின் வைகிய வயலினுள் ஏரிவாய்ப் புகுதக்
கடைய ரால்எங்கும் கலப்பைகொண்டு உழுதுவித்துஇட்டுப்
படர்கள் இன்றிவே ளாளர்கள் பார்த்தனர் வளர்ப்பார். 18

---

16. மல்லல் - வளமையான; முகில் -மேகங்கள்; குழாம் கொடு - கூட்டமாக. வாரி வாய் மடுத்து-கடல் நீரைக் குடித்து. தொல்லை – பழமையான; துன்பம் தருகின்ற. வரையில்-மலையிலே. சொரிந்த பெய்தன.

17. கரிமருப்பு-யானைத் தந்தம். கழையினம் ஈனும் முத்தம்-மூங்கிற் கூட்டம் தருகின்ற முத்தம். மூங்கிலில் முத்துப் பிறக்கும் என்பது இலக்கிய மரபு.

பொருவில்-ஒப்பில்லாத. வரன்றி-வாரிக் கொண்டு. வைப்பினில் - ஐவகை நிலத்திலே. வாரியின்–கடலில். மன்னும்-சேரும்.

18. இனைய-இத்தகைய. ஈர்ம்புனல்கள் - குளிர்ந்த தண்ணீர். புடையின் வைகிய–பக்கத்திலே உள்ள. ஏரிவாய்-ஏரியின் மதகு வழியாக. கடையர்-உழவர். படர்கள்-துன்பங்கள்,

**நெல்விளைதல்**

கரும்பூழி தாம்என‌க் கண்டவர் மருளுற வளர்ந்து
வரம்பு போர்த்திட நெற்குலை விளைதலும் மகிழா,
அரிந்து வண்டியிற் கொடுவந்து களத்தில்வைத் தடித்து
விரும்பும் ஆதுலர் ஆதியர் பெறுகென வீசி, 19

**உழவர் இயல்பு**

ஏனை நெல்லினைப் பண்டியில் இல்லினிற் கொடுவந்து,
ஆன தேவர்க ளோடுதென் புலத்தவர் விருந்து
மான மார்கிளை யார்வர்க்கும் வழங்கிஎஞ் சியதை
ஊனம் இல்லதொர் மனையொடும் உண்டுவீற் றிருப்பார். 20

**மகளிர் மாண்பு**

அன்ன நாட்டினில் மகளிர்கள் கற்பினில் அகலார்;
கல்ந வின்றதோட் கணவரே தெய்வம்என்று இருப்பார்;
சொன்ன நூற்படி இலக்கணம் அனைத்தையும் தோய்ந்தோர்;
பன்னும் நற்குணம் உடையவர்; நன்மொழி பகர்வார். 21

**ஆடவர் மாண்பு**

அங்கண் ஆடவர் அறிவருள் அறம்திரு ஆற்றல்
கங்கை வேய்ந்தவன் மேற்பக்தி கல்விநற் கேள்வி
தங்கும் மானம்அன்பு எழில்கொடை தவமொடு பொறுமை
பொங்கும் நல்லொழுக்கு உள்ளவர்; நடுநிலை பூண்பார். 22

இனிய மாற்றமல் லால்அறி கிலர்;எவ ரிடத்தும்
நனிவி ருப்பமுற் றருளிமெய் யன்புசெய்ந் நலத்தோர்;
புனித மார்பெரி யோர்களைத் துணைக்கொள்வோர்; புகழோர்;
அனகர்; செய்ந்நன்றி அறிபவர்; அடைக்கலம் காப்போர். 23

---

19. மருளுற-வியக்கும்படி. வரம்பு போர்த்திட-வரப்பை மூடும்படி. மகிழா-மகிழ்ந்து. ஆதுலர்-இரவலர். வீசி-கொடுத்து.

20. மானம் ஆர் - பெருமைமிக்க: எஞ்சியது - மீதமானது. ஊனம் - குற்றம். வீற்றிருப்பார் - பெருமிதத்துடன் வாழ்வார்கள்.

21. கற்பினில் அகலார் - கற்பிலிருந்து வழுவமாட்டார். கல்நவின்றதோள் - கல்லைப் போல் வலிமை பயின்ற தோள்களையுடைய. சொன்னநூல் - சாமுத்திரிகா லட்சணம் கூறும்நூல்.

22. அங்கண் - அந்நாட்டில் உள்ள. கங்கை வேய்ந்தவன் - சிவபிரான். நல்லொழுக்கு - நல்ல ஒழுக்கம்.

23. இனிய மாற்றம் - இன்சொல். அனகர் - அகங்காரம் இல்லாதவர்.

கடிய வெவ்வுரை கொலைகள்ளல் சூதுநோய் மறப்பு
நடலை கோபம்வெம் பகைபிறர் மனைநயப்பில்லார்;
கொடுமை வெஃகுதல் புறம்சொலல் பொறாமைஉட் கொள்ளார்
படியில் வான்மழை மறுக்கினும் பண்புகுன் றாதார். 24

**எங்கும் வளம்**

வயலெலாம் செந்நெல், கன்னல்.
வரப்பெலாம் மஞ்சள், இஞ்சி.
அயலெலாம் புன்செய்ப் பைங்கூழ்.
அகமெலாம் பொருளின் குப்பை.
கயமெலாம் கழுநீர், கஞ்சம்.
காவெலாம் குயில்;மா மஞ்ஞை.
பயமெலாம் சங்கும் சேலும்.
பசுவெலாம் இனிய பால. 25

எங்கணும் சிவன்தன் கோயில்.
எங்கணும் வேத கோடம்.
எங்கணும் வேள்வி ஓமம்.
எங்கணும் தருமச் சாலை.
எங்கணும் தொன்னூல் ஓதல்.
எங்கணும் மழலைத் தீஞ்சொல்.
எங்கணும் சிறந்த பொய்தல்.
எங்கணும் மணத்தின் வாழ்த்தே. 26

**பாண்டியன் அரசு**

பொருவரு மருவார் மணிமுடி உரிஞ்சும்
பூங்கழல் புலியின்போத்து அன்னான்,
உரியவேந்து அலைக்கும் கொல்குறும்பு அகழ்ந்தோன்,
யாவர்க்கும் உதவியே புரிவோன்,

---

24, கள்ளல் - திருட்டு. நடலை - வஞ்சனை. வெஃகுதல் - பிறர் பொருள் விரும்புதல். படியில் - உலகில்.

25. கன்னல் - கரும்பு. அயல் - வயலுக்கு அருகே. புன்செய்ப் பைங்கூழ் - புன்செய்ப் பயிர்கள். அகம் - வீடு. கயம் - நீர்நிலை. கழுநீர் - அல்லி. கஞ்சம்- தாமரை. கா - சோலை. மஞ்ஞை - மயில். பயம் - தண்ணீர். சேல்-ஒருவகை மீன். பால - பாலை உடையன.

26. வேத கோடம் - வேதஓசை. தொன்னூல் - புராணங்கள், பொய்தல்- மகளிர் விளையாட்டு.

வருமினம் தெரியும் அமைச்சரும் படையும்
நிதியுமும் மறனும்வாய்த் துள்ளோன்;
அரசர்ஏறு அனையான்; பொதுக்கடிந்து ஆளும்
பாண்டியன் அனையநாட்டு அரசன். 27

**மதுரை நகரம்**

அன்னவன் இருக்கை, அம்பரத்து அகன்ற
அரிமதர் மழைக்கண்பூ மாது
தன்எழில் முகமே அதுஎன விளங்கும்
தரியலர்க்கு அணுகொணா வலத்த
மன்எயில் உடுத்த மதுரைமா நகரம்.
அந்நகர்க்கு உயிர்என மருவும்
சென்னியின் அறுகும் தும்பையும் பிறையும்
கொன்றையும் செருகிய சிவனே. 28

அனையவன் எண்ணெண் ஆடல்செய் தமர்ந்தான்.
இன்னும்என் செய்யுமோ அறியேம்!
கனியும்அன் பினர்க்குக் கருதியது அளிப்பான்.
ஆங்கவன் களைகணாக் காக்கும்

---

27. பொருவரு - ஒப்பில்லாத. மருவார்-பகைவர். உரிஞ்சும்-தேய்க்கின்ற. போரில் தோற்ற பகையரசர் வந்து வணங்குவதால், அவர்கள் முடியைப் பாண்டியனது பூங்கழல்கள் தேய்க்கின்றன. பூங்கழல் - அழகிய வீரகண்டாமணி. புலியின் போத்து அன்னான் - ஆண்புலி போன்றவன். வேந்து அலைக்கும் கொல்குறும்பு- அரசுக்குத் தொல்லை தருகின்ற குறும்பர். "அளவு வந்தால் வேந்தலின அலைக்கும் கொலைவினைக் குறும்பர்" என்பது பரிமேலழகர் இத்தொடருக்குத் தரும் விளக்கம். அகழ்ந்தோன் - வேரோடு அழித்தவன். மறன்-வலிமை. அரசர்ஏறு- அரசருள் ஆண்சிங்கம் போன்றவன். பொதுக்கடிந்து - உலகம் பல அரசர்க்கும் பொதுவானது என்ற சொல்லை நீக்கி, இவன் ஒருவனுக்கே உரியது என்னும் புகழ் படைத்தல். அனையநாடு - அந்தநாடு.

28. அன்னவன் - அந்தப் பாண்டியன். இருக்கை - தலைநகரம். இருக்கை மதுரை மாநகரம் என்று கூட்டிக் கொள்க. அம்பரத்து அகன்ற - கடலினும் அகலமான. அரிமதர் மழைக்கண் - செவ்வரி படர்ந்த மதர்த்த குளிர்ந்த கண்களையுடைய. விளங்கும் மதுரை மாநகரம் என்று இயையும். தரியலர்க்கு - பகைவர்க்கு.

அணுக ஒணா - அடைவதற்கு இயலாத. வலத்த - வலிமையுடைய. மன் எயில் - நிலைபெற்ற மதில்கள். உடுத்த - வளைந்த. மருவும் - மருவுவான். சிவன் மருவும் என்று இயையும். சென்னியின் - தலையில். செருகிய - அணிந்த.

இனையநல் வளம்கூர் பாண்டிநன் னாட்டுக்கு;
அசுரரால் கரிந்துபின் இயற்றும்
தனிவிய னுலகம் இணைகொலோ! காவல்
அளகையும் மானுறும் தகைத்தே! 29

### தோற்றுவாய்

பாட்டுச் சுரும்பர் முகைஅவிழ்க்கும்
பங்கே ருகத்தி னிடைக்கிடக்கும்.
மோட்டுக் கயவாய்ப் புனிற்றெருமை
குளத்திற் கிடந்து மூச்செறியும்.
கோட்டுப் பலவின் பழம்சிதற
வரால்கள் குதிக்கும் திருப்பாண்டி
நாட்டின் இயல்பு வகுத்துரைத்தாம்.
நகரச் சிறப்பு நவில்கிற்பாம். 30

## சருக்கச் சுருக்கம்

### நகரச் சருக்கம்

மதுரைக்குக் கிழக்கே இரண்டு யோசனை தூரத்தில் உள்ளது வானர வீரமதுரை.

அது பகைவரால் அணுக முடியாத மதில்களையுடையது. நால்வகை வருணத்தாரும் வாழ்கின்ற வீதிகள் அங்குண்டு. எப்போதும் ஆலயமணி ஒலித்துக் கொண்டிருக்கும். மறையொலியும் முரசொலியும் மழையொலியும் மாறாது ஒலிக்கும். பலவித வேள்விகள் நடைபெறும்.

---

29. அனையவன் - சிவபெருமாள். எண்ணெண் ஆடல் - அறுபத்து நான்கு திருவிளையாடல். அளிப்பான்-அளிக்கும் பொருட்டு. களைகணா - புகலிடமாக. அசுரரால் கரிந்து பின் இயற்றும் தனிவியனுலகு - அசுரரால் எரிக்கப்பட்டுப் பின்னர் புதிதாகப் படைக்கப்பட்ட தேவர் உலகம். இணைகொலோ - ஒப்பாகுமோ? அளகையும் மானுறும் தகைத்தே - குபேரபுரியும் ஒப்பாகும் தகைமையதோ? இல்லை.

30. பாட்டுச் சுரும்பர்-பாட்டுப் பாடுகின்ற வண்டுகள். முகை அவிழ்க்கும்-மொட்டு விரிக்கின்ற. பங்கேருகத்தினிடை - தாமரை மலரினிடத்தே. கிடக்கும்-தேனுண்டு மயங்கிக் கிடக்கும். மோட்டு எருமை - பருத்த எருமை. கயவாய் எருமை - அகன்ற வாயையுடைய எருமை. புனிற்று எருமை - அண்மையில் கன்றுபோட்ட எருமை. கோட்டுப் பலவு - கிளைகளையுடைய பலாமரம்.

முக்கனிச்சாறு, தெங்கு, கமுகின் பழங்கள், பெண்கள் சிந்திய முத்தம் முதலியவற்றால் தெருவில் செல்வோர் விரைந்து செல்ல இயலாது.

அந்நாட்டு உழத்தியர்கள் தம் மக்களுக்கு விலையுயர்ந்த முத்துக்களை அணிவார்கள். அங்கு வறியவரே இல்லை. காதலர் சோலைகளுக்குப்போய் மலர்பறித்து விளையாடி நீராடி மகிழ்வர். இதுவே அவ்வூராரின் பொழுதுபோக்கு.

அவ்வூருக்கு அருகே வையை நதி கிழக்கு நோக்கி ஓடும். ஊருக்குத் தென்புறமாக ஓடும் அந்நதி வானர வீரமதுரையில் எழுந்தருளியிருக்கும் சோமேசுரை வணங்கிச் செல்வதுபோலத் தோன்றும்.

சோலைகள், மாடங்கள், கோயில்கள், அறங்கள் முதலியன நிறைந்துள்ள இந்நகருக்கு நிகராகக் குபேரன் நகரை அன்றி வேறு எதைச் சொல்ல இயலும்?

## நகரச் சருக்கம்

### வானரவீர மதுரை

கூனல்வன் மாறன் கூடலி னுக்கோர் குணபாலா
ஆனஇ ரண்டாம் யோசனை எல்லை அகத்தாங்குத்
தேன்இமிர் பூம்பொழில் பூந்தட வாரி சிறந்தோங்கும்
வானர வீரப் பெயருடை மதுரைப் பதிவைகும். 31

### மதிளின் சிறப்பு

மேல்இவர்ந்து அணுகற் கொண்ணா
விறற்படைப் பொறியும் கீழிற்
சூலல்செய்து அணுகற் காகாச்
சுற்றுறு கிடங்கும் முற்றும்

31. கூனல் வன் மாறன் - கூன்பாண்டியன். கூடலினுக்கு - மதுரைக்கு. குணபாலா - கிழக்குப் பக்கமாக. இரண்டாம் யோசனை எல்லை அகத்து - இரண்டு யோசனை தூரத்தில். தேன் இமிர் - வண்டுகள் பாடுகின்ற. பூந்தட வாரி - பூக்கள் மலரும் குளத்து நீர்.

மாலினோர் அணுகற் கொண்ணாக்
கற்புடை மடவார் போலச்—
சாலநீண்டு அகன்று வைகும்
தமனிய இஞ்சி மாதோ. 32

**நால்வருணத்தார்**

அந்தணர் அகரம் ஓர்பால்.
அடையலர்க்கு இடியேறு அன்ன
கந்தடு களிநல் யானைக்
காவலர் கோயில் ஓர்பால்.
நந்தல்இல் வணிக மாக்கள்
நவமணி மாடம் ஓர்பால்.
பிந்திய வேளாண் மாந்தர்
பெருமனை ஓர்பால் வைகும். 33

**பல்வகை ஒலிகள்**

அரனது சினக ரத்தின்
அதிரும்பல் லியத்தின் ஆர்ப்பும்
பொருவரு மறையோர் வேதம்
புகன்றிடும் ஒலியும் பொற்புஆர்
மருமலி பூந்தார் மன்னர்
முரசத்தின் ஆர்ப்பும் மற்றைக்
கரிபரி ஒலியும் சூல்கொள்
கார்ஒலி மாற்றும் அன்றே. 34

---

32. மேல் இவர்ந்து-ஆகாயத்தில் ஏறி. படைப் பொறி-ஆயுத எந்திரங்கள். கீழில் சூலல் செய்து - பூமியின் கீழ்த் தோண்டி. கிடங்கு – அகழி. மாலினோர் - காமுகர். மடவார்-பெண்கள். சாலநீண்டு-மிக நீண்டு. வைகும்-இருக்கும். தமனிய இஞ்சி–பொன்னால் ஆகிய மதில்.

பகைவர் அணுக இயலாத மதிலுக்கு, காமுகர் அணுக இயலாத மடவார் உவமை.

33. அகரம்–அக்கிரகாரம். அடையலர்க்கு–பகைவர்க்கு. இடியேறு அன்ன காவலர்-கொடிய இடியைப் போன்ற அரசர். கந்துஅடு யானை - கட்டுத்தறியை முறிக்கின்ற யானை. களி யானை - மத யானை. நல் யானை - நல்ல இலக்கணமுடைய யானை. யானைக் காவலர் - யானைகளையுடைய அரசர். கோயில் - அரண்மனை. நந்தல் இல்-அழிதல் இல்லாத.

34. அரன்-சிவபிரான். சினகரம்-கோயில். பல்லியம் - பல வாத்தியங்கள். பொற்பு ஆர்-அழகு நிரம்பிய. மருமலி-மணம் நிரம்பிய. கரி பரி-யானை, குதிரை.

### பலவகைக் வேள்விகள்

அக்கினிட் டோமம் வாச
பேயம்மா பவுண்ட ரீகம்
மிக்கவாம் புரவி மேத
வேள்வியின் ஓம தூமம்
இக்கின்சாறு அடுதூ மத்தோடு
எழிலிமண் டலத்தின் எய்தித்
திக்கெலாம் பரவ நோக்கி
மழைஎனத் திகைப்பர் மன்னோ! 35

### வீதிவளம்

பலவு மாவின் கனிச்சாறு
தெங்கு கமுகின் பழங்கள்ஒளிர்
சிலைபோல் நுதலார் பரிந்தமுத்தம்
திரள்வெண் கோட்ட களிறுஅடிய
இலகும் களிற்றின் மும்மதநீர்
இவுளி வாய்நீர் இவை எல்லாம்
அலகில் திருவீ தியிற்பொலிந்து
செல்வோர் விரைவை அடக்குமால். 36

### கடைசியர் பெருமிதம்

நனையார் கமல முகைவெடித்த
முத்தும் கன்னல் நகைமுத்தும்
பனிவெண் டிங்கள் எனத்தவழும்
குடவாய்ச் சங்கப் பருமுத்தும்

---

சூல் கொள் கார் ஒலி மாற்றும்-சூல் கொண்ட பருவ மேகங்களின் ஓசையை அடக்கும்.

35. அக்கினிட் டோமம் - சோம யாகம். பவுண்டரீகம் - ஒருவகை யாகம். புரவி மேதம்-அசுவமேதயாகம். இக்கின் சாறு - கரும்புச் சாறு. அடுதூமம் - காய்ச்சுகின்ற புகை. எழிலி மண்டலம்-மேக மண்டலம். மழை என-மேகம் என்று.

36. பலவுமாவின் கனிச்சாறு - பலாக்கனி, மாங்கனிகளின் சாறு. தெங்கு - தென்னை. கமுகு-பாக்கு மரம். சிலைபோல் நுதலார்-மகளிர். பரிந்த முத்தம் - கணவருடன் ஊடிய ஊடலால் அறுத்து எறிந்த முத்துக்கள். வெண் கோட்ட களிறு-வெண் தந்தங்களையுடைய யானை. இவுளி-குதிரை. வாய் நீர்-வாய் நுரை. அலகு இல்லாத-அளவில்லாத; பலப் பலவாகிய. விரைவு-மேகம்.

குனியும் திரைய தென்கடலில்
　　தோன்றும் குளிர்இப் பியின்முத்தும்
கனிவாய் மழலைக் கடைசியர்கள்
　　மக்கட்கு அணிவார் கவினுறவே. 37

## நீர்வளம்

வள்ளக் கமலந் தனிற்சுரும்பும்
　　வண்டும் இனிது வீற்றிருப்பப்
பிள்ளைப் பெடையோடு அனம்வந்திங்
　　கதனிற் புகுத, அப்பிரசம்
மெள்ளத் தவழ்ந்து புடைபெயரும்.
　　வெந்துப்பு உடைய பெருவேந்தர்
தள்ளிச் சிறியோர் இடம்பிடித்தால்,
　　அகலாது எவரே சார்வாரே? 38

## மக்கள் பொழுதுபோக்கு

உருவம் மிகுந்த மகளிரோடும்
　　கொழுநர் உயர்கா வகம்படர்ந்து
மருவார் மலர்கள் பறித்தணிந்து
　　வாவிப் புடையோர் மாதவிவாய்
இருகை விரித்துப் புற்றிடினும்
　　அடங்கா முலைமார்பு உறஅணைத்தாங்கு

---

37. நனைஆர் கமலம்-தேன் நிரம்பிய தாமரை. முகை வெடித்த-மொட்டு விரிந்து சிதறிய. கன்னல் நகை முத்து-கரும்பின் சிரிப்புப் போன்ற முத்து. குடவாய்ச்சங்கம்-குடம் போன்ற வாயையுடைய சங்கு. குனியும் திரைய-வளைகின்ற அலைகளையுடைய. இப்பி - முத்துச் சிப்பி. கடைசியர்கள்-உழத்தியர். மக்கட்கு - தம் குழந்தைகளுக்கு, கவினுற - அழகுண்டாகும்படி.

38. வள்ளக்கமலம் - வள்ளம் போல் வட்ட வடிவமான தாமரை மலர். சுரும்பு, வண்டு - வண்டின் வகை. பெடை - பெண் அன்னம். அனம் - ஆண் அன்னம். அதனிற் புகுத - அந்தக் கமல மலரில் புகுதலால். அப்பிரசம் - அந்தச் சுரும்பும் வண்டும். புடை பெயரும்-அவ்விடம் விட்டு அப்பாற் போய்விடும். வெந்துப்பு - வெவ்விய ஆற்றல். சிறியோர் இடம் தள்ளிப் பிடித்தால் - ஆற்றல் இல்லாத எளியோரின் இடத்தைத் தள்ளிப் பிடித்துக் கொண்டால், எவரே அகலாது சார்வார் - யார்தாம் நீங்காமல் இருப்பார்கள்?

சுரும்பு வண்டுகளுக்குச் சிறியோரும், ஆண் அன்னத்துக்குத் துப்புடைய பெருவேந்தரும் உவமை.

அரிய கரண வகைகற்று
நீராட்டு அயர்ந்து மனைக்குஅணைவார். 39

குணபால் ஒழுகும் வையையினும்
குடிஞை நன்னீர் குடைந்தாடித்
துணைவான் முலையில் துகில்இறுக்கி
அணிபொன் மகளிர் துவன்றுமுனம்
மணமா மலர்வெள் வளைதூவித்
திரைமென் கரத்தால் வணங்குமென்றால்,
தணியாக் காதல் கொளும்அன்பர்
அவர்தாள் தொழுதல் புதுமைத்தோ ? 40

**வையை நதி**

பவளக் கிளையும் தாமரையும்
பாசிக் கொத்தும் உற்பலமும்
தவளச் சங்கும் வராலும்முத்தும்
தாங்கிப் பண்ணின் இசைபாடி
எவரும் உவப்ப உத்தரதெக்
கணமாய்க் குணபால் ஏகும்வையை
கவலை தவிர்க்கும் சோமேசர்த்
தொழுது போதல் கடுக்குமால். 41

39. உருவம் - அழகு. கொழுநர் - கணவன்மார். காவகம் படர்ந்து. சோலைக்குப் போய். மருஆர் - மணம் நிரம்பிய. வாவிப்புடை-பொய்கையின் அருகில். மாதவிவாய் - மல்லிகைப் பந்தரிடத்து. அரிய கரண வகை - கலவி முறை. நீராட்டு அயர்ந்து - நீர் விளையாட்டுச் செய்து. மனைக்கு-வீட்டுக்கு.

40. குணபால் ஒழுகும் - கிழக்கே ஓடுகின்ற. குடிஞை-ஆறு. துவன்று முனம் - நெருங்கி வரும் முன்பே. வெள்வளை - வெண்சங்கு, திரை மென்கரத்தால் - அலையாகிய மெல்லிய கைகளால். மகளிரைக் கண்டு வையை நதி மலரும் சங்கும் தூவி வணங்குமாயின், அவர்கள் கணவன்மார் அம்மகளிரை வணங்குவது புதுமை அன்று என்பது கருத்து.

41, பாசிக்கொத்து - நெட்டிப் பூண்டின் கொத்து. உற்பலம் - கருநெய்தல் மலர். தவளச் சங்கு - வெண் சங்கு. உத்தரதெக்கணமாய் - வடக்கு தெற்காக. குணபால் - கிழக்கே. சோமேசர்த்தொழுது - சோமேசனைத் தொழுது. கடுக்கும் - போலும்.

### தேவர் வியப்பு

எண்ணி லாமணி மாடங்கள் இடந்தொறும் ஏகிப்
பெண்ணின் நல்லவர் பெயர்தல்கண்டு அரம்பையர் இனமென்று
அண்மி நோக்கலும் கண்ணிமைத் திடுதல்கண்டு அகன்று
மண்ணு ளார்என வானிடைப் பெயர்குவர் மாதோ. 42

### வண்டின் செயல்

அலரிவா னவன்தான் மேற்றிசை மறைந்தே
இந்திரன் திசைவயின் அணுகும்
புலரியில் சுரும்பர் முளரிவான் முகைமேல்
போந்தன புரிமுறுக் கவிழ்த்தல்
கலகவேற் கொழுநன் வரவுபார்த் திருக்கும்
காதலிக்கு, அணுகினன் என்னா
நலனுறு பாங்கி குவிமுகம் மலர்த்தும்
நன்றென விளங்கியது அன்றே. 43

### மயிலும் குயிலும்

விண்தொட நிவந்து பணைத்துநால் திசையும்
வியன்கிளை போக்கியே குழைத்த
தண்டலை தோறுங் கொண்டல்கண் படுப்பக்
கணவரைக் கண்டதை யலர்போல்

---

42. பெண்ணின் நல்லவர் - இந்நகரத்துப் பெண்கள். பெயர்தல் கண்டு- நடப்பது நோக்கி. அரம்பையர் - தேவலோக மாதர். இனம்என்று - தம்இனம் என்று கருதி. அண்மி - நெருங்கி.

தேவ லோகத்துப் பெண்கள் இந்நகரப் பெண்களைக் கண்டு தம் இனமென்று கருதி அருகில் வருவர். இந்நகரப் பெண்களின் கண்கள் இமைப்பதைக் கண்டு, இவர்கள் அரம்பையர் அல்ல; மண்ணுலகப் பெண்டிரே என்று தெளிந்து வானத்துப் போவர் என்பது கருத்து.

43. அலரி வானவன் - சூரியன். இந்திரன் திசை - கிழக்கு. புலரியில் - விடியற்காலையில். சுரும்பர் - வண்டு. முளரிவான் முகைமேல் - தாமரையின் சிறந்த மொட்டின்கண். போந்தன புரிமுறுக்கு அவிழ்த்தல் - போய் அம்மொட்டினது முறுக்கினை அவிழ்ப்பது (மலர்த்துவது). பாங்கி - தோழி. நன்றுஎன - நற்செயல் போல.

வண்டு தாமரை மொட்டை மலர்த்துவது, தோழி தலைவின் முகத்தை மலரச் செய்வது போலும் என்பது கருத்து. வண்டு தோழிக்கும் தாமரை மொட்டு தலைவியின் முகத்துக்கும் உவமைகள்.

கண்டுகண் களித்து மயில்கள்ஆட் டயரக்
கதிரெதிர் குவளையே போன்றும்
உண்டுஇனம் வாழப் பொறாதவர் போன்றும்
முகம்குவிந்து ஒதுங்கும்மாங் குயிலே. 44

**ஒப்பில்லா நகர்**

மழவிடை அனைய் மாக்கள்,
மனங்கவர் வடிவின் மாதர்;
ஒழிவிலா விளையுள் சோலை,
ஓங்கிய மாடம் கோயில்,
பழுதறு தருமம் ஆதி
எய்தும்இப் பதிக்கு நேரா
எழில்பெறும் அளகை அன்றி
யாதினை இசைக்கல் ஆமே! 45

**தோற்றுவாய்**

இன்ன நகரின் இனிதுறையும்
எம்மான் சோம லிங்கத்தின்
மன்னும் விளையாட் டினிற்சிறிது
மறைதேர் சவுன காதியர்க்கு

---

44. விண் தொட - ஆகாயத்தைத் தொடும்படி. நிவந்து - மேல் நோக்கி வளர்ந்து. பணைத்து - பருத்து. கிளை போக்கி - கிளைகளைப் பரப்பி. குழைத்த - குழைந்து தோன்றிய. தண்டலை - சோலை. கொண்டல் கண் படுப்ப - மேகங்கள் கண்ணுறங்கலால்; மேகங்கள் தங்குதலால். ஆட்டு அயர - விளையாட, கதிர் எதிர் குவளையே போன்றும்-சூரியன் எதிரிலே குவளை மலர் முகம் குவிவதைப் போலவும். இனம் உண்டு வாழப் பெறாதவர் போன்றும் - தம் இனத்தார் வயிறார உண்டு வாழ்வதைக் கண்டு பொறாமை கொள்பவர் போலவும்.

மயில்கள் ஆடும்போது, குயில்கள் ஒதுங்கும் என்க. ஒதுங்குவதற்கு இரண்டு உவமைகள் கூறப்பட்டுள்ளன. மயில்கள் ஆடுவதற்குக் கணவரைக் கண்ட தையலர் உவமை.

45. மழவிடை அனைய மாக்கள் - இளங்காளை போன்ற இளைஞர்கள். பதிக்கு - நகரத்துக்கு. நேரா - ஒப்பாக. அளகை - குபேரன் ஊர்.

இந்நகருக்கு அளகாபுரியே இணையாகும். வேறு எந்த நகரும் இணை யாகாது என்றபடி.

முன்னம் சூதன் வடநூலால்
மொழிந்தான். அதனைத் தமிழ்யாப்பில்
பன்னும் விருத்தத் தால்யார்க்கும்
எளிதில் தெரியப் பகர்கிறப்பாம் : 46

சருக்கச் சுருக்கம்

**புராண வரலாற்றுச் சருக்கம்**

நைம்மிச வனத்தில் சவுனகர் முதலிய முனிவர்கள் பன்னிரண்டு ஆண்டுகள் செய்யப்படும் சத்திரவேள்வி என்ற யாகம் தொடங்கினார்கள்.

அப்போது வியாத முனிவரின் சீடராகிய சூதமுனிவர் அங்கு வந்தார். முனிவர்கள் சூதமுனிவரை வணங்கி ஆசனம் தந்து உபசரித்தனர். 'சிவ சரிதத் தேன் பருகும் ஆவலால் நீ என்று வருவாய் என்று காத்திருந்தோம். இப்போது வந்து விட்டாய்! சிவகதை அமுதம் வழங்குக' என்று வேண்டினர்.

சூதமுனிவர் மகிழ்ந்து பதினெண் புராணங்களுள் வாயு சங்கிதையில் பிருகு முனிவருக்கு வாயுதேவன் கூறிய வரலாற்றைக் கூறத் தொடங்கினார்.

புராண வரலாற்றுச் சருக்கம்

**முனிவர் சத்திரவேள்வி செய்தல்**

மருநி றைந்திடும் நைம்மிச வனத்தின்மே னாளில்
பெரிய மாதவச் சவுனகர் முதலினோர், பெட்பால்
பருவம் ஆறிரண்டு எய்தின்முற் றுறும்எனப் பகரும்
அருமை சான்றிடும் சத்திர வேள்விஆற் றினரால். 47

---

46. சவுனகாதியர் - சவுனகர் முதலிய முனிவர். சூதன் - புராணங்கள் கூறும் ஒரு முனிவன். தமிழ்யாப்பில் - தமிழ்ப்பாடல்களில். பகர்கிற்பாம் - சொல்லுவோம்.

47. மரு - மணம். மேனாளில் - முற்காலத்தில். பெட்பால் - விருப்பத்துடன். பருவம் ஆறிரண்டு - பன்னிரண்டு ஆண்டுகள். எய்தின் - கடந்தால். முற்றுறும் - முடிவு பெறும்.

### வியாதமுனிவன்

நீறுகண் டிகையும் பொருள்எனத் தரித்த
நிருமலன்; முப்பகை முடித்தோன்;
ஆறுஅணிந் தவன்நல் லன்பின்முன் எண்ண
அமைந்தவன்; குண்டிகை தரித்தோன்;
ஈறில்பே ரறிவன் நிலம்,மலை, அலர்,கோல்
இயல்பு நல் லருள்வலி இயைந்து
தேறியே விழைவு வெகுளிவிட்டு அருநூல்
தெருட்டுறு வியாதன்பால் சென்று. 48

### முனிவர் வேண்டுகோள்

குணத்தினுக்கு இசைந்து வழிபடல் புரிந்து
கோதறு புராணநூல் கற்றுத்
தணப்பருந் தலைமைச் சீடன்என் றுறையும்
தகைமையன் சூதன்ஆங் குறலும்,
மணத்தநீ ரதனால் அருக்கிய முதல
வழங்கிநல் தவிசிடை இருத்தி,
'இணைப்பிலா முனிவ சிவபக்தி மிகுந்தோம்
எம்மனோர் களைகணே!' என்னா. 49

பரவினர் இசைப்பார் சிவகதைத் தேறல்
பருகயாம் என்றும்இங் கிருந்து
தரவிருந் தாய்நீ எனினும்வெவ் வினைதான்
தள்ளுற வருதல்முன் அகன்றாய்!

---

48. நீறுகண்டிகை - திருநீறும் உருத்திராக்கமும். ஆறு அணிந்தவன் - சிவபெருமான். குண்டிகை - கரகம். ஈறில் - முடிவில்லாத. நிலம் மலை அலர் கோல் இயல்பு - நிலம் போன்ற பொறுமையையும், மலை போன்ற உயர்வும், அலர் (மலர்) போன்ற முகமலர்ச்சியும், துலாக்கோல்போன்ற சமநிலையும். விழைவு வெகுளி - விருப்பு வெறுப்பு. தெருட்டுறு - தெளிய வைக்கின்ற. இப்பாடல்முதல் மேல் ஐந்து பாடல்களும் குளகம்.

49. தணப்ப அரும் - நீங்குதற்கு அரிய; நீங்காத மணத்தநீர் - மணமுடைய நீர்; வாசநீர். அருக்கியம் முதல் - உபசார வகைகள். தவிசிடை - ஆசனத்தில். இணைப்பிலா - ஒப்பில்லாத. களைகணே - புகலிடமானவனே. என்னா - என்று கூறி.

வருதிநீ விரைவின் எனஇருந் தேமுக்கு
அவ்வணம் வந்தனை! ஐயா!
தெரிதர அளித்தி சிவகதை அமுதம்
என்றலும் சிறப்புடன் வியவா. 50

### 18 புராணங்கள்

பிரமம்நற் பாற்பம் வைணவம் சைவம்
பேசிய இலிங்கம்கா ருடநூல்
அருமைசேர் நார தீயம்பா கவதம்
ஆக்கினே யம்புகழ்க் காந்தம்
வருபவு டீகம் பிரமகை வருத்தம்
மார்க்கண்டம் வாமனம் வராகம்
தெரிபிர மாண்டம் கூர்மம்மாண் மச்சம்
எனப்புரா ணம்பதி னெட்டே. 51

### வாயுசங்கிதை

நன்றிசேர் அனைய புராணம்மூ வாறில்
நறியசை வத்துறை மொழிந்த
குன்றல்இல் வாயு சங்கிதை யதனில்,
கூவிள வனத்துறை குழகன்
மன்றுசூழ் புகழ்மை உறைந்தது முன்னம்
வாயுவா னவன்பிரு குவின்நெஞ்சு
ஒன்றிட மொழிந்த அவ்வணம் நுமக்குஈங்
குரைப்பென்என்று அருந்தவன் உரைப்பான். 52

---

50. யாம் என்றும் இங்கிருந்து சிவகதைத் தேறல் பருகத் தர இருந்தாய்! என்று கூட்டிப் பொருள் காண்க. பருக - பருகும்படி. தள்ளுற - எம்மை விலக்கியதால். வருதல்முன் அகன்றாய் - நாம் வரும்முன்னே சென்று விட்டாய்.

சிவகதை அமுதம் தெரிதர அளித்தி என்று கூட்டுக. வியவா - வியந்து.

51. இப்பாடலில் பதினெண்புராணங்களும் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

52. நன்றி - நன்மை. மூவாறு - பதினெட்டு. நறிய - நல்ல. குன்றல் இல் - குறைவுபடாத. கூவிள வனத்துறை குழகன்-சிவபிரான். மன்று சூழ் புகழ்மை உறைந்தது - ஆடுகின்ற அம்பலம் சூழ்ந்த புகழ் குடிகொண்டது. வாயுவானவன்-வாயு பகவான். பிருகு-ஒரு முனிவர். நெஞ்சு ஒன்றிட-மனம் பொருந்தும்படி.

## சருக்கச் சுருக்கம்

**வில்வவனச் சிறப்புரைத்த சருக்கம்**

ஒரு காலத்தில் பிருகு முனிவர், வாயு தேவனிடம் 'நாட்டினுள் நல்ல நாடு எது? நல்ல தலம் எது? நல்ல சிவலிங்கம் எது ?' என்று வினாவினார்.

'வையை நதி பாயும் வள நாடாகிய பாண்டி நாடே நல்ல நாடு. அங்கு வையை நதிக்கரையில் உள்ள வில்வ வனமே (வானர வீர மதுரையே) நல்ல தலமாம். அத்தலத்திலே உள்ள சோமலிங்கமே சிறந்த இலிங்கமாம்' என்று வாயு தேவன் விடை அளித்தான்.

'அப்படியாயின் அந்த வில்வவனச் சிறப்பும் சோமேசன் மகிமையும் உரைத்தருள வேண்டும்' என்றார் பிருகு.

'வில்வ வனத்தில் வில்வ மரங்கள் வானம் போர்ப்ப உயர்ந்து கிளைகள் பரப்பி வளர்ந்திருக்கும். மாமரம், இலுப்பை முதலிய பல மரங்களும் உண்டு. முனிவர்கள் அங்கு மவுன விரதம் பூண்டு தவம் செய்வர். அரம்பையர் அத்தலத்தின் அழகு காண வந்து மீளுவர். ஞானிகள், அனைவருக்கும் நல்லறவுரை வழங்குவர். பிற தலங்களில் பதினாறு வகைத் தானம் செய்கின்ற பலனும் இங்கு அந்தணர்க்கு ஒருவேளை உணவூட்டுவதால் கிடைக்கும். பிறதலத்தில் சாந்திராயண விரதம் இருக்கும் பலன் இங்கு மாசி விரதம் இருப்போர் பெறுவர். பிரமகத்தி முதலிய பாவங்களும் தீரும். பல வேள்விகள் செய்யும் பலனை இங்கு வாழ்பவர் அடைவர்.

## வில்வவனச் சிறப்புரைத்த சருக்கம்

**பிருகுமுனி வாயுவின்பால் ஏகுதல்**

வெள்ளைவெண்ணீறு அக்கமணி வடம்தரித்தோன்;
விமலன்உயர் கமல பாதம்
உள்ளமிசை ஒளிர்வித்துத் தியானிப்போன்;
எழுத்துஅஞ்சும் ஓதும் நாவான்;
தெள்ளறிவன்; செஞ்சடையன்; முழுதுணர்ந்தோன்;
மலர்அயன்தன் செல்வன் ஆனோன்;

53. எழுத்து அஞ்சு-பஞ்சாட்சரம். மலர் அயன்தன் செல்வன் - பிரமனுக்கு மகன்.

எள்ளரிய பெருந்தவத்துப் பிருகுமுனி
வாயுவின்பால் எய்தி னானே. 53

### வாயுவின் வரவேற்பு

தவமுனிவன் வரநோக்கி எழுந்துபூ
சனைசெய்து தவிசின் ஏற்றிப்,
'புவனிபொதி தாளானை ஒருபத்துப்
பிறவியுறப் புகன்ற மேலோய்!
உவமையிலா வெங்கூற்றை மகன்பொருட்டால்
சினந்துஉரைக்கும் உரவோய்! யான்செய்
பவம்அகன்றேன். நீவருதல் நல்வரவு'என்று
அன்பினொடும் பரவிச் சொல்வான் : 54

### பிருகுவின் உரை

'எம்குடிலில் புகுந்ததுஎவன் உரைத்திஎன
முனிபுகல்வான் : 'இகலி முன்னாள்
துங்கஅராப் படம்புதைத்த மேருமுடி
துணிபடுத்தும் தோன்றால்! மிக்க
சங்கரன்கண் பொறிதரித்தோய்! சிவவடிவம்
எட்டில்ஒன்றாய் உயிரைத் தாங்கும்
அங்கண!நின் புகழ்ப்பெருமைக்கு அளவுண்டே!
நின்னைஎவர் அடையார்!' என்னா. 55

### நற்றேயம்

'நல்தேயம் நல்தலம்நற் சிவலிங்கம்
யாண்டுளது? நவில்தி' என்று
சொற்றான்அங் கதுகேட்டு வாயுவா
னவன்மவுலி துளக்கிச் சொல்வான் :
கற்றாவின் உயிர்க்குஅருள்செய் கண்ணுதல்மீ
னவன்ஆகிக் காவல் பூண்ட

---

54. தவமுனிவன் - பிருகுமுனி. தவிசு-ஆசனம். புவனிபொதிதாளானை - மூவடியால் அளக்கும் போது, உலகத்தை ஓரடியுள் அடக்கிய திருமாலை. புவனி-உலகம். பொதி-அடக்கிய. தாளானை - பாதம் உடையவனை. பவம் - பாவம்; பிறவி. பரவி-வழிபட்டு.

55. புகுந்தது எவன் - வந்தது யாது காரணமோ. உரைத்தி - சொல்லுக. இகலி-மாறுபட்டு. துங்க-உயர்ச்சியுடைய. அராப்படம் புதைத்த - ஆதிசேடன் பணங்களால் மூடிக்கொண்ட. துணி படுத்தும் - துண்டாக்கிய. தோன்றால் - தோன்றலே! சங்கரன்கண் பொறி - சிவபெருமான் கண்ணின் தீப்பொறி. இது

வற்றாத புனல்வைவயை வளநாடே
நல்தேயம் ஆகும் மாதோ. 56

**நற்றலம் நல்லிலங்கம்**

தாரணிக்கு முகம்எனும்அந் நாட்டினில்கண்
போல்வையைக் கரையின் சண்ணே
சார்தருவில் வாரணியம் நல்தலமாம்.
கண்ணின்மணி என்ன வந்த
சீர்பெறும்அவ் வனத்தினிடை மூவுலகும்
தொழுதேத்தச் சிறந்து நாளும்
ஏர்பெருக வளர்சோம இலிங்கமே
நல்இலிங்கம் என்பர் மாதோ. 57

**வில்வவனச் சிறப்பும் சோமேசர் மகிமையும்**

வடிவுளஅவ் வனச்சிறப்பும் ஆங்குறையும்
சோமேசன் மகிமை தானும்
முடிவுபெற உரைத்தருள வேண்டும்எனக்
கூறலும்அம் முக்கண் ணன்தாள்
துடியிடையாள் ஆனந்த வல்லியுடன்
உளத்துஇருத்தித் தொழுதுஓர் கன்னல்
ஒடிவறவே தியானித்துக் கண்விழித்து
முனிவனைப்பார்த்து உரைப்ப தானான். 58

**வில்வ வனம்**

வில்லுவ வனத்தின் தன்மை
விழுத்தவ முனிவ கேட்டி !
சொல்லுவென் விண்ணம் போர்ப்பச்
சூழுறப் பணைகள் போக்கிப்,

---

முருகன் அவதாரச் செய்தி. அந்தப் பொறியைத் தாங்கும் ஆற்றல் யார்க்கும் இன்மையின் வாயுவே தாங்கிச் சென்று சரவணப் பொய்கையில் சேர்த்தான் என்பது வரலாறு. எட்டில்-அட்ட மூர்த்தங்களில். அளவுண்டே-அளவு உண்டோ.

56. யாண்டுளது - எங்கே உள்ளது. நவில்தி - சொல்லுக. சொற்றான் - சொன்னான். மவுலிதுளக்கி - முடிஅசைத்து. கற்றாவின் - கன்றையுடைய பசுவைப் போல. கண்ணுதல் - சிவபெருமான். மீனவன் ஆகி-சுந்தரபாண்டியன் ஆகி. காவல்பூண்ட - ஆட்சி செய்த.

57. வில்வாரணியம் - வானரவீர மதுரை. கண் வில்வாரணியத்துக்கும், சோமலிங்கம் கண்ணின் மணிக்கும் உவமைகள்.

58. வடிவுள - அழகுடைய. அவ்வனம் - வில்லவனம். ஓர்கன்னல்-ஒருகால அளவு. ஒடிவுஅற - இடைவிடாமல்,

பல்லவம் செறிந்து நீண்டு,
பச்சொளி பரப்பி, வாசம்
புல்லியே, மாசுஒன் றின்றிப்
பொற்புறப் பொலிந்து வைகும். 59

பச்சொளி திகழக் கோடு
பற்பல போக்கிக் காமத்து
இச்சையோர் மனம்போல் நீண்டுஅங்கு
அலங்கின நின்ற தோற்றம்
அச்சுதன் விசயன் அன்றி
அனைவரும் காணார் என்னா
விச்சுவ உருவம் காட்டி
நின்றென விளங்கும் அன்றே. 60

பல்வகை மரங்கள்

மாமரம், இருப்பை, தெங்கு,
செண்பகம், வருக்கை, பூகம்,
தேமலர், அசோகம், நாகம்,
அம்பை,செவ் வந்தி, மட்சி,
காமர்மல் லிகை,மென் முல்லை,
கடுக்கை,மந் தாரம், நந்தி,
ஏமுறு கரவீ ரங்கள்
இவைஉடன் இயைந்து வைகும். 61

மல்லிகைப் பந்தர்

மல்லிகைக் கொடிகள் ஓடி
மாமரக் கோடு தோறும்

---

59. விண்ணம் போர்ப்ப - வானத்தை மறைக்கும்படி. பணைகள் போக்கி- கிளைகளைப் பரப்பி. பல்லவம் - தழைகள். வாசம் புல்லி - மணம் பொருந்தி. பொற்புற - அழகாக.

60. கோடு போக்கி - கிளைகள் பரப்பி. அலங்கின நின்ற தோற்றம் - அசைந்து நின்ற காட்சி. அச்சுதன் - கண்ணன். விச்சுவ உருவம் - விசுவரூபம். காமத்து இச்சையோர் மனம் வனத்தின் நீட்சிக்கு உவமை. அச்சுதன் விசுவரூபம் காட்டியது அவ்வனத்தின் நின்ற தோற்றத்துக்கு உவமை.

61. பல மரப்பெயர்கள் இப்பாடலில் வந்துள்ளன. காமர் - அழகிய; ஏமுறு - இன்பம் தருகின்ற.

மெல்லவே படர்ந்து பந்தர்
போலுவ. அவற்றின் மீது
நல்லிசைக் குயில்கள் கூவல்,
அவற்றின்கீழ் நண்ணிப் பாடும்
வல்லவிஞ் சையர்கள் இன்ப
இசையினை மாற்றும் அன்றே. 62

### பலவகைச் சிறப்பு

முனிவர்கள் ஆங்ஙனம் முயல்வர் மோனமே
வனமல ரிடைச்செயும் வண்டு பானமே
அனநடைச் சூர்கள்வந்து அகல்வர் வானமே
நனிஇல்லோர்க்கு உள்ளவர் நவில்வர் ஞானமே. 63

### தேன் பாயும் நதி

ஒலிகிளர்ந்து ஒழுகிய வையை ஒண்புனல்
அலையெடுத் தெறிதலால், பலவொடு ஆம்பிர
பலம்உடைந்து இழிந்துதேன் பாய்த லால்,குளிர்ந்து
இலகும்அவ் வனத்தினுக்கு யாது நேர்வதே? 64

### வில்வவனத்தின் மேன்மை

ஏனைய தலத்தினில் ஈரெட்டு என்னும்மா
தானம தியற்றுதல் தன்னில், இத்தலத்து
ஆனமா மறையவர்க்கு அடிசில் ஊட்டிடல்
மேல்நிலை பயக்கும்என்று இசைப்பர் மேலையோர். 65

---

62. கோடு - கிளைகள். பந்தர் போலுவ - பந்தலைப் போன்றிருக்கும். கூவல் - பாடுதல். இசையினை மாற்றும் - இசையை வெல்லும்.

63. ஆங்ஙனம் - அந்த இடத்தில். வண்டு பானம் செய்யும் என்க, அன நடை - அன்னம் போன்ற நடையுடைய. சூர்கள் - தெய்வப் பெண்கள். வானம் அகல்வர் - இந்த வனத்தின் அழகில் சொக்கி இங்கேயே தங்கித் தங்கள் இருப்பிட, மாகிய வானுலகைத் துறந்து விடுவர். இல்லோர்க்கு - ஞானம் இல்லாதவர்க்கு. உள்ளவர் - ஞானிகள்.

64. ஒலி கிளர்ந்து-ஓசையெழுப்பி. பலவொடு-பலாப்பழத்தோடு. ஆம்பிர பலம் - மாம்பழம்.

பலா, மா இவற்றின் பழங்கள் உடைந்து அதன் சாறாகிய தேன்பாய் தலால் அந்த வனம் குளிர்ந்து இலகும் என்க.

65. ஈரெட்டு என்னும்மாதானம் - பதினாறு தானங்கள். இயற்றுதல் தன்னில் - செய்வதைக் காட்டிலும். அடிசில் ஊட்டிடல் - சோறு ஊட்டுவது. மேல் நிலை - வீடுபேறு. பயக்கும் - தரும். இசைப்பர் - சொல்லுவர். மேலையோர் - சான்றோர்,

சாந்திரா யணம்பிற தலத்தில் சார்ந்துசெய்து
ஏய்ந்திடும் பலத்தினை, ஈண்டுக் கங்கையும்
பாந்தளும் சடைக்குஅணி பரமன் திங்களின்
மாந்திடாது உறைகுவோர் மருவு வார்அரோ. 66

வெருவரு பிரம கத்தி
    முதலிய பவங்கள் வீட்டும்
பரிமகம் முதல மற்றைத்
    தலத்தினில் பண்ணும் பேறு,
துரியம தாகும் சோம
    சுந்தர இலிங்கம் போற்றிப்
பெரியஇத் தலத்தில் என்றும்
    வதிபவர் பெறுவர் மன்னோ. 67

தோற்றுவாய்

இன்னமா தலத்தில் எம்மை
    ஈன்றருள் கடவுட் கற்பு
மன்னும்ஆனந்த வல்லி
    யுடன்எம்மான் வதிதல் செய்தான்.
அன்னவன் தனைஅர்ச் சித்துப்
    பேற்றினை அடைந்தோர் தம்மைப்
பன்னுவென் கேள்!நீ, என்று
    மகிழ்வுடன் பகர லுற்றான். 68

முதலாவது வில்வவனச் சிறப்பு உரைத்த சருக்கம் முற்றும்

சருக்கச் சுருக்கம்

**சந்திரன் கயம் தீர்த்த சருக்கம்**

சிவத்தினின்று முறையே சத்தி, நாதம், விந்து, சதாசிவம், மகேசுவரன், உருத்திரன், திருமால், பிரமன் ஆகியோர் தோன்றினர். பிரமனிலிருந்து மரீசி முதலிய முனிவர் வந்தனர்.

---

66. சாந்திராயணம் – ஒரு மாதம் அளவும் மேற்கொள்ளும் விரதம். ஏய்ந்திடும் பலம் - அடையும் பயன். ஈண்டு - இவ்விடத்து. பாந்தள் - பாம்பு. பரமன் திங்களின் - சிவபெருமானுக்கு உரிய மாசி மாதத்தில். மாந்திடாது உறைகுவோர் - உண்ணாமல் விரதம் இருப்பவர். மருவுவார் - அடைகுவார்.

67. வெருவரு - அச்சம் வருகின்ற. பவங்கள் வீட்டும் - பாவங்களை அழிக்கின்ற. பரிமகம் முதல - அசுவமேத யாகம் முதலியவற்றை. வதிபவர் - வாழ்பவர்.

68, வதிதல் செய்தான் - வாழ்கின்றான். பன்னுவென் - சொல்வேன்.

அம் முனிவர்களுள் அத்திரி என்பவன் மிகச் சிறந்தவன். அவன் பிள்ளைப் பேறு வேண்டித் தவம்செய்து சிவனருளால் சந்திரனைப் பெற்றான்.

தக்கன் பெற்ற இருபத்தேழு புதல்வியரைச் சந்திரன் மணந்தான். அவர்களுள் உரோகிணி என்பவளிடம் மட்டும் தீராக் காதல்கொண்டு மற்றைய மனைவியரைப் புறக்கணித்தான். இதனால் வெறுப்படைந்த அப்பெண்கள் தம் தந்தையிடம் முறையிட்டனர். 'கயநோய் கொண்டு தேய்க' என்று தக்கன் சந்திரனுக்குச் சாபம் இட்டான்.

சந்திரன் அகத்தியரை அடைந்து அவர் கூறிய அறிவுரைப்படி பாண்டி நாட்டு வில்வவனம் அடைந்தான். அங்குச் சிவலிங்கத்தைக் கண்டு, மணிமாடம் கோபுரம் ஆலயம் முதலியன இயற்றிச் சிவபூசை செய்தான். சிவபெருமான் நேரில் தோன்றி, அவன் சாபம் தீர வரம் கொடுத்தார்.

'யான் பூசை செய்தமையால் சோமலிங்கம் என்ற பெயரும். என் சாபம் தீர்ந்து ஆனந்தம் அடைந்தமையால் தேவி ஆனந்தவல்லி என்ற பெயரும் பெறவேண்டும்' என்று வேண்டினான். அப்படியே யாகுக என்று சிவன் வரம் தந்து மறைந்தான்.

## சந்திரன் கயம் தீர்த்த சருக்கம்

**தக்கன் முன்னோர்**

சிவந்தனில் சக்தி. சத்தியில் நாதம்.
நாதத்தில் திகழும்விந்து உதித்தது.
உவந்தவிந் துவினில் சதாசிவன். அவனில்
மகேசுரன். உருத்திரன் அவனில்.
நிவந்திடும் அவனில் மாலவன். அவனில்.
நிகழ்த்திடும் பங்கயன் பிறந்தான்.
தவம்தழை அவன்தான் மரீசியே முதல
தவத்தினர் பதின்மரை உயிர்த்தான். 69

---

69. உயிர்த்தான் - பெற்றான்.

அத்திரியின் தவம்

அனைவரிற் சிறந்த அத்திரி முனிவன்
அம்சிலம்பு ஒலிடக் குறுகி
மனம்உவப் புறவே மழலையந் தீஞ்சொல்
செவிவழி அமுதென வாக்கும்
தனயரைப் பெறுவான் எற்படு பெருங்கான்
சார்ந்தனன்; தவமது புரிந்தான்.
நனைஉறை பிலிற்றும் கொன்றையஞ் சடையோன்
அம்முனி முனம்நணு குற்றான். 70

கண்ணுதல் வரம்

கண்ணுதல் முதல்வன் மலர்ப்பதம் தொழுது
கண்ணின்நீர் சொரிதரப் பரசி
எண்ணிலாப் பொருட்கும் மேம்படு பொருளாம்
மகப்பெறல் வேண்டும்என்று இசைப்ப
அண்ணலும் மகவுஉண் டாகஎன் றருளிக்
கயிலைமால் வரையினில் அடைந்தான்.
பண்அமை கிளியிற் பகரும்அந் தீம்சொல்
பன்னிசேர் மனைஇவன் படர்ந்தான். 71

சந்திரன் பிறப்பு

மலம்கெடுத்து உயிர்க்கு முத்திவீடு அருளச்
சகளமாம் வடிவெடுத்து உறையும்
அலங்குஇலைச் சூலம் ஏந்திய தடக்கை
அமலனது அருளினால், முனிவன்
இலங்குநூல் மருங்குல் ஆர்அந சூயை
பொருந்தெழில் ஆலிலை வயிற்றில்
துலங்குறு மதிவந் துதித்தனன். அமரர்
தொன்முறை ஆசிகள் சொற்றார். 72

---

70. கான் - வனம். நனைஉறை பிலிற்றும் - தேன்துளி சொரிகின்ற. அம்முனி - அத்திரி முனிவன். நணுகுற்றான் - அடைந்தான்.

71. கண்ணுதல் முதல்வன் - சிவபெருமான். பரசி - வழிபட்டு. மகப்பெறல் – பிள்ளை பெறுவது; பன்னி - மனைவி.

72. மலம் - ஆணவம் முதலியன. சகளமாம் வடிவு - இலிங்கவடிவம். அமலன் - சிவபெருமான். முனிவன் - முனிவனது. அநசூயை - அத்திரியின் மனைவி. மதி - சந்திரன். சொற்றார் – சொன்னார்.

**சந்திரன் வளர்தல்**

கரும்பிலா மதனோ! வேலிலா முருகோ!
இவன்என்று கண்டவர் மருளத்,
திருந்துறக் குப்புற்று அணிமுகம் அசைத்தும்
செய்யமென் தாளினை உதைத்தும்
விரும்புறக் கரத்தால் சொட்டியும் முத்தம்
விழைந்தவர் இன்புறக் கொடுத்தும்
முருந்துஉறழ் முறுவல் அன்னைகைந் நீட்டி
வருகென முன்னர்வந் துற்றும், 73

**சந்திரன் திருமணம்**

ஏனவும் புரிந்து முப்புரி நூல்இட்டு
இருங்கலை தெளிந்தனன் வளர்நாள்
தேன்இமிர் தண்தார்த் தக்கனுக்கு அறுபான்
சிறுமியர் உதித்தனர். அவருள்
பானல்அம் கருங்கண் கொம்பனார் மூவொன்
பதின்மரை அளித்திட வேட்டு
வேனில்வேள் பகழி பூட்டும்நாள் உறலும்
விழைவொடும் கலவியில் கழித்தான். 74

**சந்திரன் தவமும் வரமும்**

அணிகிளர் இராச சூயம்ஒன்று ஆற்றி,
அஞ்சன உண்கண்மா மகளிர்
பணைமுலை நிகராய்த் தெங்கிளம் காய்க்கும்
காசியில் தவம்பல பண்ணி

---

73. முருகோ - முருகனோ. குப்புற்று - குப்புற விழுந்து. முருந்துஉறழ் முறுவல் - மயிலிறகின் அடிப்பகுதிபோன்ற வெள்ளிய முறுவல். பிள்ளைத் தமிழின் சில பருவங்கள் இப்பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளன.

74. ஏனவும் - பிள்ளைத் தமிழின் பிறபருவங்களும். நூல் இட்டு - பூணூல் அணிந்து. கலை தெளிந்தனன் - கல்வி பயின்றான். தேன் இமிர் - வண்டுகள் ஒலிக்கின்ற. அறுபான் - அறுபது. பானல் அம் கருங்கண் கொம்பனார்-குவளை மலர் போன்ற கரிய கண்களையுடைய பெண்கள். மூவொன்பதின்மர்-இருபத்தெழுவர். வேட்டு - மணந்து. வேனில்வேள் பகழி பூட்டும்நாள் - வாலிபப் பருவம்.

மணமுறு கடுக்கைச் சடையுடை வானோன்
அளித்திட வரம்பல வாங்கிக்
கணம்அனைத் தினுக்கும் தலைமையாய் உலகத்து
இரவெலாம் கடிந்துவீற் றிருந்தான். 75

### தக்கன் இட்ட சாபம்

இன்னணம் இருக்கும் நாளில்,
தக்கனார் சாபம் எய்திற்று.
அன்னது மொழியக் கேட்டி !
ஆடவர் நல்லோர் ஆகின்,
பன்னியர் பலரைக் கொள்ளார்.
கொள்வரேல், பரிவின் நேர்வர்.
மன்னுற ஒருவர்ப் பேணி
மற்றவர்த் துறந்தி டாரே. 76

காமநூல் கற்ற தூர்த்தர்
கன்னியர் பலரைக் கொண்டு,
தோம்உறும் உச்சம் நீசம்
சண்டமே துரங்க லின்றி
ஏமுறச் சமமாம் வாரம்
இயைந்துநன் னயத்தைச் செய்யும்
தாமஓ தியரைச் சேர்ந்து
தழுவுவர்; பிறரை நாடார். 77

---

75. அணிகிளர்-அழகுகிளர்கின்ற. இராசசூயம்-ஒரு வேள்வி. தெங்கினம்-தென்னை வகை. தென்னையின் குரும்பைகளுக்கு மகளிர் பணைமுலை ஒப்பு. பணை-பருத்த. கடுக்கைச் சடையுடைய வானோன்-சிவபெருமான். கணம்-விண்மீன் கூட்டம். கடிந்து-நீக்கி.

76. கேட்டி-கேட்பாயாக. பன்னியர்-மனைவியர். பரிவின் நேர்வர் - ஒத்த அன்பு காட்டுவர். ஒருவர்ப் பேணி-ஒருத்தியை மட்டும் விரும்பி. மற்றவர்த் துறந்திடார்-பிற மனைவியரை நீங்கமாட்டார்.

77. தோம் உறும்-குற்றமுடைய. உச்சம், நீசம், சண்டம், துரங்கல் என்பன காம நூலில் உள்ளன போலும். வாரம் இயைந்து-அன்பு பொருந்தி. தாமஓதியர்-மகளிர்.

### உரோகிணியின் அழகு

இங்கிவர் தம்மில் சோமன்
　　காமநூல் இசைத்த நீரான்
மங்கையர் தமில்உ ரோணி
　　மருமலர்க் குழலாள் விற்போல்
அம்கலுழ் நுதலாள் மன்றல்
　　விரிஅலர் முகத்தாள் செம்பொற்
பங்கயம் அதனை வென்று
　　மானைநேர் பார்வை உள்ளாள். 78

துவர்இதழ் ஆம்பல் வாயாள்
　　பண்படு கிளிமென் சொல்லாள்
நவிலும்வள் ளையைநேர் காதாள்
　　எள்ளின்பூ நாசி யுள்ளாள்
தவல்இல்கூ விளத்தை நேரும்
　　தனத்தினாள் நுசுப்பு நூலாள்
குவிதள முளரி போலும்
　　மனம்கவர் அல்கு லாளே. 79

சண்பக மலர்போல் கையாள்
　　தளிர்அடி அசோகு போல்வாள்
பண்படு வாசம் உள்ளாள்
　　பரமன்மேல் அன்பு கூர்வாள்
கொண்கனுக்கு உள்ளம் செல்லும்
　　குறிப்பறிந்து இனிய செய்யும்
நண்பினாள் சமத்தை யாதி
　　நண்ணிய சிறப்பி னாளே. 80

---

78. இவர் தம்மில்-இருபத்தெழுவரிடையே. சோமன் - சந்திரன். காம நூல் இசைத்த நீரால்-காம சாத்திரம் சொன்ன தன்மையினால். அம்கலுழ்-அழகொழுகுகின்ற. அலர்-மலர். பங்கயம்-தாமரை.

79. துவர் இதழ்-பவளம் போன்ற செவ்விய உதடுகள். வள்ளை-வள்ளைக் கொடி. அதைக் காதுக்கு உவமை சொல்வது மரபு. எள்ளின் பூ நாசி - எள்ளின் மலர் போன்ற மூக்கு. தவல் இல்-அழிவில்லாத. கூவிளம்-வில்வக் காய். நுசுப்பு நூலாள்-நூல் போன்ற இடையுடையவள். முளரி-தாமரை மலர்.

80. கைக்குச் சண்பக மலரும், அடிக்கு அசோக மலரும் உவமை. பரமன் - சிவபெருமான். கொண்கன்-சந்திரன்.

### சந்திரனின் ஒருதலைக் காதல்

ஆதலால் அவள்மேல் அன்பாய்
அகத்தைவிட்டு அகலான் ஆகிக்
காதலில் கனிந்து நாளும்
கலவியில் திளைத்தல் செய்தான்
ஓதுறும் அமைச்சர் பல்லோர்
இருக்கவும் ஒருவன் மேலே
பேதுகொண்டு உள்ளம் வைக்கும்
அரசர்தம் பெற்றி போன்றே. 81

### பிற மனைவியரின் துன்பம்

இசைத்திடும் ஏனோர் ஆறு
தலையிட்ட இருபான் பேரும்
பசப்புற உடலின் மீது
படர்உறு மனத்தர் ஆகி
நசைத்துஒரு வன்தன் செய்க்கே
நளிர்புனல் விடக்கண்டு, எங்கும்
விசைப்புனல் அதனை நம்பி
வெம்பிய பிறசெய் போன்றார். 82

எந்தப் பெருளை இழந்திடினும் உய்ந்திருப்பர்
தந்தத் தமளிமிசை தம்கையி லேஅணைக்கும்
கந்தர்ப்பன் அன்னஒரு காதலன்தன் வாழ்விழந்தால்,
அந்திப் பிறைநுதலார் ஆர்எனினும் உய்யாரே! 83

---

81. அவள்மேல் - உரோகிணிமேல். அகத்தை - வீட்டை. பேதுகொண்டு - பேதைமைகொண்டு. பெற்றி - தன்மை. பல மனைவியரை விட்டு ஒருத்தி பால் அன்பு வைத்த சந்திரனுக்கு, பல அமைச்சரை விட்டு ஓர் அமைச்சனிடத்தே அன்பு வைக்கும் அரசன் உவமை.

82. ஏனோர் - மற்றையோர். ஆறு தலையிட்ட இருபான் பேர் - இருபத்து அறுவர். உடலின் மீது பசப்புற என்று கூட்டுக. படர் - துன்பம். நசைத்து - விரும்பி. செய்க்கு - வயலுக்கு. புனல் - நீர். செய் - வயல் வெம்பிய - காய்ந்து போன.

83. உய்ந்திருப்பர் - உயிர் தரிப்பர். தந்தத்து அமளி - தந்தத்தால் செய்யப்பட்ட கட்டில். கந்தர்ப்பன் அன்ன - மன்மதன் போன்ற. காதலன் வாழ்வு - காதலன் தருகின்ற வாழ்வு. பிறைநுதலார் - மகளிர். உய்யார் - உயிர் தரிக்க மாட்டார்.

பிற மனைவியரின் அவலம்

காவலவன் ஆகிஎம்மைக் கைப்பிடித்த நாள்முதலா
நாவின் நயம் பேசாது, ஒருவாறு நண்ணிஎமை
மேவினைசின் னாள்அதுவும் வெம்பாவி தீர்த்தனளால்.
ஆவல்எல்லாம் தீர அணைந்திடுவது எந்நாளோ! 84

வன்னெஞ்சப் பெண்அவட்கே வாய்ந்தநலம் ஈந்திடினும்
புன்னெஞ்சு கொண்டே புலம்பித் தவிக்கும்எமக்கு
அன்னம் செலஇளகி அன்பொடும்சற்று ஏய்தல்உறாக்
கல்நெஞ்சு கொண்டால் அதுவும்அவள் கற்பாமோ! 85

பிள்ளையுடன் மேலோர் பெரும்பொருள்ஒன்று அற்றிடினும்
கொள்ளும் கணவன்அன்பு கொண்டுறையின் நன்குறைவார்.
விள்ளும் அவனும் வெறுப்பவரும் இவ்வாழ்வில்
பொள்என்று உயர்கானில் போவதுவும் நன்றாமே! 86

தந்தைபால் அடைதல்

என்றே புலம்பி அனைவோரும், ஈன்றெடுத்த
பொன்றாத சீர்த்திச் சிறுவிதிமுன் போயினரால்.
குன்றாப் பெரியரிடைக் கோள்உரைக்கப் போமவரை
அன்றேஇன் சொல்லால் அடக்கல் அறமாமே! 87

தக்கன் வினா

தந்தைதாய் சரணம் தாழ்ந்தார்
மின்அனார் சார்ந்த தன்மை

84. காவலவன் - கணவன். வெம்பாவி-உரோகிணி. தீர்த்தனள்-இல்லாமல் செய்துவிட்டாள்.

85. வன்நெஞ்சப் பெண் - வலிய நெஞ்சு கொண்ட உரோகிணி. அன்னம் செல இளகி - ஆகாரம் உள்ளே செல்லும்படி மனம் இரங்கி. ஏய்தல் உறா- பொருந்துதல் இல்லாத. அவள் கற்பு ஆமோ - அந்த உரோகிணி கற்றுத் தந்தது தானோ ?

அவளுக்கே நலம் எல்லாம் தருக. எமக்கும் இளகிச் சற்று அருளலாமே! அதுவும் செய்யாமல் கல்நெஞ்சு கொள்ளும்படி அவள் கற்றுத் தந்து விட்டாளோ என்று புலம்புகின்றனர்.

86. அவனும் - கணவனும். பொள் என்று - விரைந்து.

87. அனைவோரும் - இருபத்தறுவரும். சிறுவிதி - தக்கன். கோள்உரைக்க- புறம்கூற.

முந்தவே வாட்டம் உற்ற
முகங்களே மொழிய ஓர்ந்து,
கந்தம்ஆர் கூந்தல் நல்லீர்!
நும்பெருங் கணவற்கு ஆங்கு
வந்ததிங்கு உளதோ? நும்மை
முனிவரர் வைதார் உண்டோ? 88

**தக்கன் சினம்**

மொழிமின்நீர் எனப்பைப் பைய
முகம்கவிழ்ந்து இரங்கி யாவும்
ஒழிவிலாது உரைப்பக் கேட்டான்.
உடல்எலாம் வெயர்ப்புத் தோன்ற
விழிகளும் சேப்ப உள்ளம்
வெம்பிவெய் துயிர்த்தான். ஈன்றோர்க்கு
அழகுடை மகளிர் துன்பம்
காண்குவது அரிது மாதோ. 89

**தக்கன் சாபம் இடல்**

சிறியவர் அறியார் தீமை
செய்குவர். இருகால் ஓர்கால்
அறிவுறுத் திடுதல் நன்றாம்.
தண்டித்தல் அறனோ என்னும்
முறைமையை உணர்ந்தும் சீறி
மொழியும்அச் சாபம் பின்னர்
இறையும்நெஞ் சுருக மீளாது
என்பதும் சிறிதும் தேரான். 90

---

88. சரணம் தாழ்ந்தார் - பாதங்களில் வணங்கினர். மின்அனார்-மகளிர். ஓர்ந்து - அறிந்து. கந்தம் ஆர் - மணம் நிரம்பிய. கணவற்கு - சந்திரனுக்கு,

89. பைப்பைய - பையப்பைய. ஒழிவிலாது - முழுமையாக. சேப்ப - சினத்தால் சிவப்பேற. காண்குவது அரிது - காணப்பொறுக்காது.

90. இறையும் - சிறிதும். நெஞ்சுருக - மனம் வருந்தினால். மீளாது- திரும்பமாட்டாது. நெஞ்சுருக இறையும் மீளாது என்று கூட்டுக.

'மதிகொலாம் இதனைச் செய்வான் !
மதிக்கிலாது எனைஇ கழ்ந்த
புதுவலி நன்றால்' என்று
புகலுவான்: 'கயநோய் கொண்டு
கதிஇழந்து அயர்க' என்னாக்
கதழ்வொடு வைதான். அந்த
விதியினை ஈசன் அல்லால்,
யாவரே விலக்கற் பாலார். 91

**சந்திரன் உடல் தேய்தல்**

வெந்தழற் சாப வெந்நோய்
மேவலும், சோம வேந்தன்
சுந்தர உடலம் தேய்ந்து
வலிகளும் தொலைந்து போய.
அந்தநாள் உற்ற சீரும்
வரங்களும் அனைய தானான்.
சிந்தையிற் பெரியோர் சீறீ
உஞற்றிடல் சிறுமைத்து ஆமே. 92

**சந்திரன் புலம்பல்**

உடலுறு தேய்வு நோக்கும்
ஒள்ளொளி மழுங்கல் நேர்க்கும்
மிடலது குறைதல் நோக்கும்
மேவிய பழியை நோக்கும்
'படவர வனைய அல்குற்
பாவையர் கொடியார்' என்னும்
'திடமுடை எனக்கோ ஈது
சேருவது ! அந்தோ !' என்னும். 93

---

91. மதிகொலாம்-சந்திரனோ. நன்றால் - நல்லது (இகழ்ச்சிக் குறிப்பு). அயர்க - வருந்துக. கதழ்வொடு - சினத்துடன். வைதான் - சாபமிட்டான்.

92. சாப வெந்நோய் - சாபமாகிய வெவ்விய நோய். சோம வேந்தன் - சந்திரன். வலிகள் - வலிமைகள். தொலைந்துபோய - தொலைந்து போயின அனையதானான் - அவ்வாறே தொலைந்து போயினான். சீற - சினங்கொள்ளும் படி. உஞற்றுதல் - காரியம் செய்வது. சிறுமைத்து - சிறுமையுடைய செயல்.

93. மிடல் - வலிமை. பாவையர் - இருபத்து அறுவர்.

பெண்களும் காதல் கொள்ளும்
பேரெழில் மருவுஉ ரோணி
கண்கவர் முகத்தை நோக்கிக்
'காதல்தீர் ந் திலையே' என்னும்.
'கொண்கன்என் றிருந்தும் வன்னோய்
கூரலின், இனிமேல் இன்னோன்
நண்பினில் பயன்யாது என்று
நாரியர் அறிந்தார்' என்னும். 94

**உரோகிணிக்கு ஆறுதல் கூறி அகத்தியன்பால் ஏகல்**

இத்திறம் புலம்பி ஏங்கி
இழைநுழை நுசுப்பின் வேய்த்தோட்
கத்திமைக் கண்மென் கூந்தற்
காரிகை உரோணி தன்னை
அத்தலை இருத்தி, 'யான்இவ்
ஆகுலம் தீரும் வண்ணம்
முத்தமிழ் முனிபால் செல்வென்
அழல்'என மொழிந்து போனான். 95

**அகத்தியனிடம் நடந்தவை கூறல்**

ஈசனும் உமையும் போலப்
பன்னியோடு இலங்கி வைகும்
தேசுகொள் சிறிய மேனிப்
பொதிமுனி இருக்கை சேர்ந்து,
வாசமா மலர்கள் தூவிப்
பன்முறை வணங்கி வாழ்த்திப்
பேசினன் நிகழ்ந்த எல்லாம்
மதிஎனும் மதியில் பித்தன். 96

---

94. கொண்கன் - கணவன். நோய் கூரலின் - நோய்மிகுதலின். இன்னோன் - இவனது. நண்பினில்-நட்பினால். நாரியர் - பெண்கள்; மனைவியர்.

95. இழைநுழை நுசுப்பு - நூல்போன்ற இடை. வேய்த்தோள் - மூங்கில் போன்ற பசிய தோள். கத்தி மைக்கண் - வாள் போன்ற கரிய கண்கள். அத்தலை இருத்தி - அங்கே இருக்கச் செய்து. ஆகுலம் - துன்பம். முத்தமிழ் முனி - அகத்தியன். அழல் - அழாதே.

96. பன்னியோடு - உலோபா முத்திரை என்னும் மனைவியோடு. தேசு- ஒளி. பொதிமுனி - பொதியமுனி அகத்தியன். நிகழ்ந்த - நிகழ்ந்த செய்திகள்,

**அகத்தியன் உரை**

அருந்தவ முனிவன் கேளா
‘ஆற்றலும் எழிலும் தேய்ந்து
வருந்தினை சால’ என்னா
மலர்க்கரம் முதுகு நீவிப்,
‘பெருந்திறல் தக்கன் சாபம்
பெயர்க்குமாறு இல்லை யேனும்,
இருந்ததை ஒன்று சொல்வேன்.
கேண்மதி’ என்று கூறும்: 97

‘தாமரை முருக்குஎள் முல்லை
என்னும்நீள் முகைத்தண் பூவும்
மாமதி ஒன்றிற் பூத்த
எனமுகம் வயங்கிற் றேனும்,
தோம்உறு துன்பம் காந்தன்
துணைவர்மைந் தர்கள்செய் தாலும்,
வேம்மனம் சினம்மீக் கொண்டு
செல்லுவர் மின்அன் னாரே. 98

‘அனையவர் இதனைச் செய்வது
அரிதுகொல். அதனால் குற்றம்
நினையலை. அறநூல் எல்லாம்
நெறியினால் வந்த திந்த
வினையது தீரும் வண்ணம்
விழைவுடன் கேள்நீ’ என்று

---

மதி எனும் - சந்திரன் என்கின்ற. மதியில் பித்தன் - அறிவினால் பித்தன். மதி இல் பித்தன் - அறிவு இல்லாத பித்தன் என்றும் கொள்ளலாம்.

97. அருந்தவ முனிவன்-அகத்தியன். கேளா - கேட்டு. சாலவருந்தினை என்னா - மிகவும் வருந்தினாய் என்று. பெயர்க்குமாறு - நீக்குவதற்கு உபாயம். கேண்மதி - கேட்பாயாக. கேள்மதி என்பதை மதி கேள் எனக்கூட்டி மதியே நீ கேள் என்றும் பொருள் கொள்ளலாம்.

98. தாமரை, முருக்கு, எள், முல்லை ஆகிய மலர்கள் ஒரு சந்திரனிலே பூத்தாற் போன்று, கண், இதழ், நாசி, பல் ஆகியவை முகத்திலே தோன்றும் என்க. தாமரை, முருக்கு, எள், முல்லை ஆகியவை முறையே கண் இதழ் நாசி பல் ஆகியவற்றுக்கு உவமைகள். முகம் அழகாயிருப்பினும் பெண்கள் மனம் பிழைகண்டால் சினம் கொண்டு வேகும் என்பது திரண்ட பொருள்.

முனிவரன் அருளி னோடும்
மொழிகுவான் தொடங்கி னானே : 99

சிவதருமம்

இணர்எரியின் மூழ்குவபோல் தம்பாலின்
நூறுபிழை இயற்றி னாலும்
தணவாத துன்பம்இயற் றாததுவே
இதம்இதுவே தலைமைத் தன்மம்
குணமாய்எத் துணைஎனினும் இரப்போர்தம்
குறைதீரக் கொடுத்தல் தானே
துணையான சிவதரும மூலம்என
ஆகமங்கள் சொல்லும் அன்றே. 100

இரவிமதி நீக்ககிலா மாயைஎனும்
கனையிருளை இரிக்கும் சோதி
அரனைஅருச் சனைசெய்தல் போற்றிடுதல்
பணிபுரிதல் அவற்குத் தம்கைப்
பொருள்அளித்தல் வன்றொண்டர் யாவைவிழை
யினும்தருதல் ஆர ணங்கள்
தெரிதரவே வாசித்தல் ஆதிசிவ
தருமம்எனச் செப்பும் நூலே. 101

மெய்ம்மொழியே புகன்றிடுதல் சாந்திரா
யணம்முதல விரதம் நோற்றல்
மையில்திரி பதகைமுத லாம்நதியில்
நீராடல் மகங்கள் செய்தல்
மொய்கொள்சமை தமைபுரிதல் இவைமுதலாம்
பலஅறங்கள் மொழியிற் பல்கும்.

---

99. அனையவர்-மேற்பாட்டில் சொன்ன இயல்புடைய மகளிர். இதனைச் செய்வது அரிதுகொல் - உனக்குச் சாபம் வரும்படி செய்வது அரியதன்று. குற்றம் நினையலை-அவர்கள் மீது பிழைகூறக் கருதாதே. அறநூல் எல்லாம்நெறியினால் வந்தது - தரும சாத்திரங்களில் உன் சாபம் தீர வழியில்லை. அந்த அறநூல்கள் முறைப்படி வினை செய்தவன் அனுபவித்தே தீரவேண்டும் என்று கூறுவன. வினை-சாபம்.

100. இணர் எரி - பலசுடரை உடைத்தாகிய பெரு நெருப்பு. "இணர்எரி தோய்வன்ன இன்னா செயினும் புணரின் வெகுளாமை நன்று" என்பது குறள்.

101. இரவிமதி - சூரிய சந்திரர். நீக்ககிலா - நீக்க முடியாத. இரிக்கும் - நீக்குகின்ற.

செய்யுறுபா தகங்கள்பல வற்றினையும்
சிலசுருக்கிச் செப்பு கின்றோம். 102

**நால்வகைப் பாவங்கள்**

அதிபாவம் மாபாவம் உப்பாவம்
பலபாவம் ஆக நான்காம்
விதிமேவு பாதகங்கள். ஆங்கவற்றின்
அதிபாவம் வேத நூலை
மதியாமல் இகழ்ந்திடுதல், அதற்குஉயர்வுஒப்பு
உளஎன்ன வழங்கல், மிக்க
கதிமேவ அந்நூலைக் கற்றுஉரைக்கும்
குருவைநிந்தை கழறல் மன்னோ. 103

அரன்பொருளைக் குருதனத்தைப் புத்தகத்தைக்
கவர்ந்திடுதல் ஆகும் என்ப.
பரன்அருளும் ஆகமங்கள் பயிலாமை,
சிவன்பொருளை வவ்வும் பாவ
உருவினனைக் கொல்கஅது கூடாதேல்
கைப்பொருளை உதவி யேனும்
தெரிதரவே ஒறுத்திடுக இன்றேல்அவ்
ஊர்விடல்இன் னனசெய் யாமை. 104

இனையவும்மா பாதகத்துக்கு இணையாகும்.
அப்பாவம் இசைப்பக் கேட்டி!
வினையறுவே தியர்ச்செகுத்தல், கள்அருந்தல்,
பொன்னதனை விரும்பிக் கள்ளல்,
நனைஅவிழும் மலர்ஓதி ஈர்க்கும்இடை
போகாத நளினக் கொங்கை
அனைநிகரும் குருமனையை அணைதல்இவை
செய்தோர்நட்பு ஆதல் ஐந்தே. 105

---

102. மகங்கள் - யாகங்கள். சமை, தமை - யோகமுறையிற் சில. அவை சமம், தமம் எனப்படும். மைஇல் - குற்றமில்லாத. மெய்கொள் – அற்றல் மிக்க.

103. அதற்கு - வேதநூலுக்கு. உயர்வு ஒப்பு உள என்ன வழங்கல் - வேதத்திலும் உயர்வான நூலும் ஒப்பான நூலும் உள்ளன என்று கூறுதல். வழங்கல் - கூறுதல். கழறல் - கூறுதல்.

105. வினையறு - இருவினைகள் அறுக்கின்ற. செகுத்தல் - கொல்லுதல். கள்ளல் - திருடுதல். நனை அவிழும் மலர் ஓதி - மொட்டு விரிந்த மலர்க்கூந்தல், அனை - தாய். குருமனை - ஆசான் மனைவி,

மறையவரை முனிந்துரைத்தல், முன்தருவேம்
    என்றுபின்பு மறுத்தல், சால
அறிவுடையர் எனத்தம்மை மதித்திடுதல்,
    குரவனொடு பகைமை ஆதல்,
பிறர்குறையை வேந்தனொடு பேசிடுதல்
    பிரமகத்திக்கு இணையாம். பெற்ற
பொறையுடைய தாய்தந்தை சொல்மறுத்தல்,
    வையகத்துப் பொய்ச்சான்று ஓதல், 106

சிவன்அடியார்க்கு இடர்செய்யச் செப்பிடுதல்,
    விலங்கினொடு பறவை செற்றல்,
கவலைஉற மனைகள்தொறும் தீவைத்தல்,
    கள்உண்டல் கடுக்கும். சாந்தம்
விவிதஅணி துகில்முதல கள்ளுதல்பொன்
    களவினொடு மேவும். வாய்த்த
உவவுமதி போல்முகத்துப் புதல்விமுதல்
    புலைச்சிவரை உவந்து சேர்தல். 107

குலம்கல்வி திருஅழகு நேர்ந்துமண
    மன்றல்மகன் குறுகக் கண்டும்
கலம்பெறுதம் கன்னியரை உதவாமை,
    கற்பிகந்து நாணம் தீர்ந்து
நிலம்பழிப்ப அயல்புணர நோக்கியும்அம்
    மனைவிதனை நீக்குறாமை
இலங்குகுரு பன்னிதன்னைக் கைப்பிடித்த
    பெரும்பாவம் இயையும் மன்னோ. 108

ஓதுவம்கேள் உப்பாவம் பெரியவர்கள்
    நிதிவவ்வல், தனியே உண்டல்,
வேதியருக்கு என்றுவைத்த பொருள்கவர்தல்,
    போகத்தில் விஞ்சல், வஞ்சம்

---

106. குரவன்-ஆசிரியன். பொய்ச்சான்று-பொய்ச்சாட்சி.

107. செற்றல் - கொல்லுதல். கடுக்கும் - ஒப்பாகும். விவிதஅணி - பலவகை அணிகலன்கள். கள்ளுதல் - திருடுதல், மேவும் - ஒப்பாகும். உவவுமதி - பூரணசந்திரன்.

108. மகன் மன்றல் குறுக - மகன் திருமணம் முடிக்க. கன்னியரை உதவாமை-புதல்வியரை மணமுடித்துத் தாராமை. கற்பு இருந்து - கற்பை நீங்கி. நீக்குறாமை - நீக்காமை. பன்னி - மனைவி. இயையும் - ஒக்கும்.

தீதுமயக்கு உறுவயிரம் உறல், இடுக்கண்
களைந்தோர்மேல் சிந்தை தீர்தல்,
ஏதம்அறு தன்மனையை மக்களைத்தா
ருவைக்குளத்தைப் பொருளுக்கு ஈதல். 109

கற்புடைய பிறர்மனையை எளியள் இவள்
எனத்தழுவக் கருதல், கண்ணால்
அற்குழலார் புணர்ச்சியுறல், தனக்கென்றே
மரம்வெட்டல், அலரைக் கொய்தல்,
தற்கமதை வறிதுஇயற்றல், வசியமுத
லனபுரிந்து தனத்தைக் கொள்ளல்,
பொற்புடைய சிவனைஅருச் சனைசெய்தும்
அப்பலத்தைப் பொருட்குப் போக்கல் 110

இல்லவளைப் பகல்தோய்தல், முதல்உள்ளோன்
தனைக்கெடுத்தல், ஈசன் வீடு
நல்லஅறம் பாவம்ஒன்றும் இல்லைஎனல்,
கடன்கொண்டு நல்கிடாமை,
எல்லவரும் பழித்துரைப்பக் கற்புடையார்
தமக்குஈனம் இழைத்தல், சுற்றம்
கல்விஇகழ்ந் திடல், மனுவைக் கடவுளரைப்
போற்றாமை பிறவும் ஆமே. 111

தலமீதில் ஈன்றோர் பசிநோவுறத் தான்பு சித்தல்,
'தொலைவாம் கிருமிக் குலம்'என்றுஉளத்து அன்புதோன்றி
நிலமீது மெல்ல நடவாமை,உள் நேயம் விட்டுப்
பலர்போம் வழியைத் தடைசெய்துமுள் வேலி கோலல், 112

---

109. வவ்வல் - கவருதல். போகத்தில் - காமத்தில். விஞ்சல் - அதிகமாக ஈடுபடுதல். வஞ்சம் தீது மயக்கு உறுவயிரம் உறல் - வஞ்சனையும், தீங்கும், மயக்கமும் மிக்க சினமும் உறுதல், இடுக்கண் களைந்தோர் - தன் துன்பம் தீர்த்தவர். சிந்தை தீர்தல் - நன்றி மறத்தல். தாருவை - மரத்தை. மனைவி, மக்கள், மரம், குளம் இவற்றை விற்பது பாவம் என்று இங்குக் கூறப்பட்டுள்ளது.

110. கண்ணால் அற்குழலார் புணர்ச்சியுறல் - அயலான் மனைவியைக் கண்ணால் கண்டு விரும்புதல். தனக்கென்றே அலரைக் கொய்தல் என்றும் கூட்டுக. அலர் - மலர். வறிது தற்கமதை இயற்றல் - வீணாக வாதிடுதல்.

111. இல்லவள் - மனைவி. சுற்றம் கல்வி இகழ்ந்திடல் - உறவினரை அழியச்செய்து இகழுதல். மனுவை - மனிதர்களை; மனு நெறியை என்றும் கொள்ளலாம்.

112. கிருமிக்குலம் தொலைவாம் என்று - புழுக் கூட்டம் அழியும் என்று. வேலிகோலல்-வேலி போடுவது.

ஆவாழிடமே வழிப்பாதை குளங்கள் ஆறு
தேவா லயம்மா தவர்சேரிடம் தேர்செல் வீதி
காவே புறங்காடு உயர்செய்யில் மலம்க ழித்தல்,
ஓவாப் பகையைக் கரந்தேகொலை தான்உ ஞற்றல், 113

மடவார்கள் ஆதி மறையோர்பசு ஞாதி யானோர்க்கு
இடையூறு செய்தல், தொழும்பர்க்கொலல், கன்னம் வைத்தல்,
'விடையோன்கொள் பூசைக் கெனவேநறுங் கொன்றை வில்வத்
தொடையாதி ஈந்தோம் இலை'என்று துயர்உ றாமை. 114

இறையோன் உவக்கப் பலவேள்வி இயற்றி டாமை,
முறையேஎண் ணாமல் பிறர்செல்வம் முயன்று மேலும்
பெறல்'வே றொருவன் மனையாளைஓர் பேதை கொள்ள
அறியா அவனைப் பிடித்துஉய்ப்ப அவற்கொ லாமை. 115

பாவங்களின் பலன்

கயம்மேவும் அந்தா மரைமென்முகிழ் அன்ன கோடாக்
குயம்ஆர் மனையார் பலர்தம்மில்ஓர் தோகை கொங்கை
வயமாகி மற்றோர் தமைநீக்குதல் மற்றும் என்ப.
பயன்யாது எனின்மேல் உலகின்றுஅவை பண்ணினார்க்கே. 116

காலன் சினந்தே செயுங்கன்ம பலன்கள் துய்க்க
ஆலம் பொருவும் அவர்தன்மை நரகின் ஆக்கி
மேல்விஞ் சியதுய்த் திடப்பாரின் விடுப்ப மீண்டு
தாலந் தனிலே முதற்கீட உருவு சார்ந்து. 117

---

113. கா-சோலை. புறங்காடு-மயானம். செய்-வயல். கரந்து-மறைத்திருந்து. கொலை உஞற்றல்-கொல்லுதல்.

114. ஞாதியானோர் - உறவினர். தொழும்பர்க்கொலல் - அடிமைகளைக் கொல்லுதல். விடையோன்-சிவபிரான்.

115. பிடித்து உய்ப்ப - பிடித்துக் கொடுக்கையில். அவற் கொல்லாமை - அவனைக் கொல்லாமல் விடுவது.

116. கயம்-நீர் நிலை. முகிழ் அன்ன-மொட்டுப் போன்ற. கோடா-சாயாத. குயம்- முலை. வயமாகி-வசப்பட்டு. மற்றோர் தமை - பிற மனைவியரை. மேல் உலகின்று-வீடுபேறு கிடையாது.

117. ஆலம் பொருவும்-விஷம் போன்ற. நரகின் ஆக்கி - நரகத்தில் புகுத்தி. மேல் விஞ்சிய துய்த்திட-நரகத்தில் அனுபவித்தது போக மேலே மிஞ்சிய பாவங்களின் பலனை அனுபவிப்பதற்காக. பாரின் விடுப்ப - உலகிலே பிறப்புண்டாக்க, தாலந்தனில்-உலகத்தில். கீட உருவு-புழு வடிவம்.

சிறையுற்ற புள்மாப் பசுவாய்நர ராய்ச்செ றிந்த
அறிவுற் றவராய்ப் பிறப்பார்பிறந்து அண்ணல் பால்செல்
நெறியுற் றிடுவர் மதியோர்சிவன் பாலின் நேயம்
பிறிவுற்ற அன்புஇல் லவர்சேற்றினில் வீழ்வர் பின்னும். 118

**மகளிர் இலக்கணம்**

மனையவர் இலக்கணம் வகுப்பின் முந்துறச்
சினம்அறல் இன்மொழி கொழுநர் தெய்வம்என்று
உனல்இவை வேண்டும்பின் உண்டி தின்றிகள்
இனியன ஆக்கினும் இனியர் அல்லரே. 119

அணிபெறப் புனைகுதல் அன்பு நல்லறம்
பணிவுஎழில் நாண்மடம் பயம்ப யிர்ப்பினை
நணுகல்நன்று என்பஅந் நாரி மார்தமைப்
புணர்வுறு கொழுநர்நற் புண்ணி யத்தரே. 120

**சந்திரன் சாபம் தீரும் வழி.**

நிறைமலர் முகத்தியர் பலரை வேட்டுநீ
சிறையினிற் கிடத்தினை ! சீர்இஃ தன்றுஇனி
அறைவதில் பயன்இலை. அஃது நிற்கஅக்
குறையது சிவனிடம் குறுகில் தீருமே. 121

பத்தியின் அருச்சனை பண்ணிப் போற்றியே
சுத்திசெய்து உளத்தினில் துலங்கும் செஞ்சடை
அத்தனை வைத்தனை நினைப்பின் அல்லது
வித்தகன் எய்துறான் வேறு யார்க்குமே. 122

---

118. சிறையுள்ளபுள் - சிறகுடைய பறவை. மாப்பசு - விலங்காகிய பசு. நரராய் - மனிதராக. அண்ணல் பால்செல் நெறி - சிவன்பால் சேரும் வழி.

119. சினம் அறல் - கோபம் விடுதல். பின் - அத்தகைய பண்பு இல்லாதவிடத்து. ஆக்கினும் - சமைத்தாலும்.

120. அணி - அழகு. பயம் - அச்சம். நணுகல் - அடைவது. நாரியர் - மடவார்.

121. வேட்டு - மணம் செய்து. அறைவதில் - சொல்வதால். குறுகில்- அணுகினால்.

122. சுத்தி செய்து - உள்ளத்தைத் தூய்மையாக்கி. அத்தனை வைத்தனை நினைப்பின் அல்லது-சிவனை மனத்தில் வைத்து நினைத்தால் அன்றி. வித்தகன்- சிவபிரான். எய்துறான் - கிட்டமாட்டான்.

மலர்தலை உலகினில் பசுக்கள் வான்பயன்
முலையிடைத் தோன்றல்போல் முக்கண் ணானைநல்
தலமதில் வழிபடின் சாரும் பார்மிசை
அலகிலாத் தலமுள அவற்றுள் ஒன்றுகேள் ! 123

**வில்வவனத் சிறப்பு**

ஒருதலம் எய்ப்பில்வைப்பு என்ன உள்ளது
மருவினோர் பிறவிவன் பிணியும் மாற்றுவது
அருமருந் தாகிஎன் அகத்தில் நிற்பது
பெருமையை எங்ஙன்யான் பேசு கிற்பதே ! 124

பஞ்சவன் வாழ்வுறு தென்மது ரைக்கொரு கீழ்ப்பாங்கின்
வஞ்சமில் அந்தக னைப்பெறு தென்திசை மருவுற்றது
எஞ்சல்இல் வில்வ பூசையில் மனதில் ஏமாப்புற்று
அஞ்சன உண்கணி னாளொடும் ஈசன் அமர்ந்தானால். 125

ஒல்லையில் ஏகி அருச்சனை செய்திடின் உன்முன்னே
அல்அமர் கண்டன் எதிர்ந்திடும் அல்லல் பறந்தேகும்
செல்லுதி என்னச் செந்தமிழ் தந்த முனிநாதன்
சொல்ல வினாவிய சோமன் மகிழ்ந்திது சொல்கின்றான் : 126

**சந்திரன் உரை**

விந்தம்அ டக்குகைம் மாதவ! வில்வலன் வாதாவி
அந்தக ! வாரிகு டங்கையில் ஏந்தி அயின்றோனே !
சந்தம லைக்கும்அ ருந்தமி ழுக்கும்ஓர் தார்வேந்தே !
உய்ந்திட வேள்தரு ஞானஒ ளிக்குஒரு திரிஒப்பாய் ! 127

---

123. வான்பயன் - பால். தலமதில் - உலகினில். சாரும் - பயன் கிட்டும். அலகிலா-அளவில்லாத; பலவாகிய. தலம் - கோயில்கள்.

124. எய்ப்பில் வைப்பு என்ன - தளர்ந்த காலத்துச் சேமநிதி போல. அகத்தில் - மனத்தில்.

125. பஞ்சவன் - பாண்டியன். கீழ்ப்பாங்கின் - கிழக்குப் பக்கத்தில். எஞ்சலில் - குறைவு படாத. ஏமாப்புற்று - விருப்பமுற்று. அஞ்சன உண்கணினாள் - ஆனந்தவல்லி அம்மை.

126. ஒல்லையில் - விரைந்து. அல்அமர்கண்டன் - சிவபெருமான். அல்லல்-துன்பம். செல்லுதி - போவாயாக. வினாவிய – கேட்ட. சோமன் - சந்திரன்.

127. விந்தம் - விந்தமலை. அடக்கு கை - அடக்கிய கையையுடைய. வில்வலன் வாதாவி - இரண்டு அரக்கர். வாரி - தடையாகிய கடல். குடங்கை - உள்ளங்கை. அயின்றோன் - உண்டவன். சந்தமலை - பொதிய

பொன்னிமுன் நண்ணிவி யந்துகு றும்புசெய் புலன்வென்றே
தன்நிகர் இல்லவன் என்றுமொ ழிந்திடு தகவுள்ளோய்!
உன்னைஓர் தட்டிலும் ஏனைமு னிக்கணம் மற்றொன்றில்
மன்னஇ ருத்தினர் தூக்கநி லம்புகும் வலிமிக்கோய்! 128

தாருகன் வாழ்மலை மாயைமு னிந்தவ! சார்ங்கக்கை
நாரண னைச்சிவன் ஆக்கிய மேலவ! நாகக்கோன்
ஆர்வமொடு ஆயிர நாவினும் ஏத்தின்அ டங்காநின்
சீரைஎவ் வாறுஒரு நாவினில் யான்துதி செய்கேனே! 129

### சந்திரன் வில்வவனம் சேறல்

என்றுவ ணங்கிஎ ழுந்துபு னிற்றின்இ ளஞ்சேதா
கன்றுபி ரிந்தென நீங்கினன் மானம் கடிதேறிச்
சென்றனன் முன்பு பிரிந்திடு கன்றுஉயர் ஆவின்பால்
துன்றுவ போன்றனன் யாங்ஙனம் என்றுஅது சூழ்வுற்றே. 130

---

மலை, வேந்தே - தலைவனே. உய்ந்திட் - உலகு வாழும் பொருட்டு. வேள்- முருகன். ஒளி-விளக்கு.

விந்தமலை அடக்கியது, வில்வலன் வாதாவியை உண்டது, கடல் பருகியது ஆகியன அகத்தியரின் செயற்கருஞ் செயல்கள். பொதிய மலையிலிருந்து தமிழ் இலக்கணம் செய்தமையால் பொதியமலைக்கும் தமிழுக்கும் தலைவன் ஆகின்றார். முருகனிடம் அகத்தியர் ஞான உபதேசம் பெற்றார் என்பது புராண வரலாறு. முருகன் அருளிய ஞானமாகிய விளக்குக்கு அகத்தியர் திரிபோன்றார். அதாவது அந்த ஞானம் பயன்படுவதற்குக் காரணமாக இருந்தார் எனக்கொள்க.

128. பொன்னி முன் நண்ண - நீ காவிரி யாற்றுக்கு முன்னே சென்றபோது. வியந்து - அந்த நதி வியப்படைந்து. தன் நிகர் இல்லவன் என்று மொழிந்திடு தகவுள்ளோய் - தனக்கு நிகர் இல்லாதவன் நீயே என்று அக் காவிரியாறு புகழ்ந்த பெருமையுடையவனே! அகத்தியரை ஒரு தட்டிலும் பிற முனிவர் அனைவரையும் ஒரு தட்டிலும் வைத்து நிறுக்கினும் அகத்தியர் உள்ள தட்டே கீழே செல்லும். அவ்வளவு பெருமையுடையவர் என்பது கீழ் இரண்டடிகளின் கருத்து. காவிரி நதியைத் தமிழ் நாட்டிற்குக் கொணர்ந்தவர் அகத்தியர் என்பது வரலாறு.

129. தாருகன் வாழ்மலை கிரவுஞ்சமலை. கிரவுஞ்சமலையையும் மாயையையும் சினந்து வென்றவர் அகத்தியர் என்பது வரலாறு. ஒருக்கால் நாராயணனைச் சிவபெருமான் வடிவாக்கிக் காட்டினார் என்பதும் வரலாறு. சார்ங்கக்கை - வில்லை அணிந்த கையையுடைய. நாகக்கோன் - ஆதிசேடன். ஏத்தின் - புகழ்ந்தாலும். சீரை - கீர்த்தியை.

130. புனிற்றின் இளம் சேதா - அண்மையில் கன்று போட்ட செவ்விய பசு பிரிந்தென-பிரிந்தாற் போல. மானம் - விமானம். கடிது ஏறி - விரைந்து ஏறி. ஆவின்பால்-பசுவினிடத்து. துன்றுவ போன்றனன்-சென்று சேர்வது போன்றான். அது - அகத்தியன் சொன்ன திருப்பதி. யாங்ஙனம் என்று சூழ்வுற்று-வில்வவனம் எவ்விடத்து உள்ளது என்று ஆராய்ந்து. சூழ்வுற்றுச் சென்றனன் என்று கூட்டுக.

### சந்திரன் சிவலிங்கம் காண்டல்

கண்டனனே தன்மானத் தினின்இழிந்து
நண்ணியநோய் கழிந்தான் போன்று
முண்டகமென் முகம்மலர அகமகிழ்ந்துஅவ்
வனத்தினையே முழுதும் தேர்வான்
மண்டியபே ராசைபுறந் தள்ளஅகம்
புகுந்துஉலவி வரலும் நாப்பண்
பண்டைமறை களும்இன்னம் காணரிய
சிவலிங்கப் படிவம் கண்டான். 131

### சந்திரன் வணங்குதல்

அந்நிலையே அன்புதலை மீக்கொள்ளப்
புளகம்உடல் அரும்பக் கைகள்
சென்னிமிசை குவிந்திடவாய் சீர்பாட
விழிபொழிநீர் மார்பிற் சிந்த
முன்னவன்முன் பணிந்தெழுந்தான் முடிதுளக்கி
ஆடினான் 'முதல்வா ! அச்சோ !
மன்னினையோ ஒருதனியாய் ஈன்றோர்இல்
லாதசிறு மகன்போல் எந்தாய்!' 132

### சந்திரன் கோயில் அமைத்தல்

எனவருந்திப் புடைபெயர்ந்து விண்ணுலகில்
தச்சனைக்கூய் எம்மாற்கு இங்ஙன்
சினகரம்தந் திடுகஎன மணிமாடம்
மண்டபங்கள் சிகரி சூழ்போம்
கனகமதில் பீடம்உமை கோயில்கண
பதிவேலன் காரி நந்தி

---

131. கண்டனன் - வில்வவனத்தைக் கண்டான். மானத்தினின் இழிந்து - விமானத்திலிருந்து இறங்கி. நண்ணிய நோய்-கய ரோகம். முண்டகமென்முகம் - தாமரை மலர் போன்ற முகம். தேர்வான் - தேடும் பொருட்டு. அகம்-அந்த வனத்தினுள். நாப்பண் - அந்த வனத்தின் நடுவில். படிவம் -உருவம்.

132. தலைமீக்கொள்ள - தலையெடுக்க. சென்னி - தலை. முடி துளக்கி- தலையசைந்து. ஈன்றோர் இல்லாத சிறுமகன் போல் ஒரு தனியாய் மன்னினையோ என்று கூட்டுக. மன்னினையோ - இருக்கின்றாயோ.

புனைதருநா யகர்மவுனன் சண்டன்அமர்
தளிபிறவும் புரிந்து போனான். 133

**சந்திரன் தீர்த்தம் சமைத்தல்**

உழையரைக்கூய்ப் 'பூசனைக்கு வேண்டுவன
தம்மின்' என ஒல்லை வான்போய்
எழில்பெறுகங் கையின்நன்னீர் அமுதம்ஆன்
ஐந்துதுகில் இழைதேன் ஆதி
பழுதறவே கொணர்ந்துதரப், பரிந்துபடிந்
தவர்பாவப் பற்று நீக்கும்
விழுமியதோர் தடம்ஒன்று தன்பெயரால்
கண்டு,அதனில் விதியின்ஆடி 134

**சந்திரன் செய்த பூசை**

திரைமுழங்கு வையையினும் படிந்தெழுந்து
வெண்பட்டு மருங்கில் சேர்த்திப்
பொருவில்திரு நீறுஅக்க மணிதரித்து,ஓர்
அஞ்செழுத்தும் புகன்று நல்ல
தருமுதல்நால் வகைமலரும் வில்வம்முத
லவும்பறித்துக் கையில் தாங்கி
உருகும்உளத் தொடும்கோயில் உட்புகுந்துஐங்
கரக்கடவுள் திருமுன் உற்றே. 135

முந்துபூ சனைஇயற்றி முளைத்தெழுந்த
சிவக்கொழுந்தின் முன்போய் நேர்நின்று

---

133. புடை பெயர்ந்து - அருகே சென்று. விண்ணுலகில் தச்சன் - மயன். எம்மாற்கு - சிவபெருமானுக்கு. இங்ஙன் - இவ்விடம். சினகரம் - கோயில். கனகமதில் பீடம் - தங்கத்தாலாகிய பீடங்கள்.

134. உழையர் - பணியாளர். தம்மின் - தாருங்கள். ஒல்லை - விரைந்து. ஆன் ஐந்து - கோமயம், சோசலம், தயிர், பால், நெய் ஆகிய பசுத்தரும் ஐந்து பொருள்கள். இவை பஞ்ச கவ்வியம் எனப்படும். படிந்தவர் - குளித்தவர். விழுமியது - சிறந்தது. தடம் - தீர்த்தக்குளம். கண்டு - அமைத்து. விதியின் - முறைப்படி. ஆடி - குளித்து.

135. திரை - அலைகள். படிந்தெழுந்து - நீராடி, மருங்கில் - இடையில். பொருவில் - ஒப்பில்லாத. அக்கமணி - உருத்திராக்கமணி. தருமுதல் நால் வகை மலர் - கோட்டுப்பூ, நீர்ப்பூ. நிலப்பூ, கொடிப்பூ ஆகியவை. தரு - மரம். ஐங்கரக் கடவுள் - கணபதி.

ஐந்துசுத்தி செய்துகைசெய் ஆயிரத்துஎண்
பொன்தசும்பின் அறல்பெய்து ஆன்ற
சுந்தரவே தியர்களொடு நான்மறையிற்
சிவமனுவைச் சொல்லி ஆட்டிக்
கந்தமலி எண்ணெய்நல்மா மஞ்சள்நெல்லி
ஐந்தமுதக் கவியம் நெய்பால் 136

துலங்குதயிர் தேன்கன்னற் கரும்புஇளநீர்
சந்தனத்தின் தோயல் தோயம்
வலம்புரிநீர் இனையவற்றால் மாஅபிடே
கம்புரிந்து வால்வெண் தூசால்
நலம்பெறநீ வியபின்னர் கடைந்தெடுத்த
தெள்ளமுதம் நன்கின் ஆட்ட
இலங்கியபால் எனவெள்க இறும்பூதுற்று
ஆடை அணி எடுத்துச் சாத்தி, 137

மாற்றுயர்ந்த அபரஞ்சிப் பொற்குவளை
சந்தனம்பூ மாலை சாத்தி.
ஏற்றசுவை அமுதுஅடைக்காய் நல்கிமணி
தூபமொடு விளக்கம் மீநம்
வேற்றுஒருதன் தோற்றம்செய் கண்ணடிமற்
றவும்காட்டி விரும்பும் பல்பேர்
சாற்றிஅருச் சனைபுரிந்தே சிவையையும்பூ
சனைபுரிந்து துதிப்ப தானான். 138

---

136. கைசெய் - கையால் அழகு செய்த. ஆயிரத்து எண் பொன் தசும்பு - ஆயிரத்து எட்டுத் தங்கக் குடங்கள். அறல் பெய்து - தண்ணீர் நிரப்பி. நான் மறையில் சிவமனு - வேதத்தில் ஒரு பகுதியாகிய உருத்திர மந்திரம். ஆட்டி - நீராட்டி. கந்தமலி - வாசனை நிறைந்த. ஐந்து அமுதக் கவியம்-பஞ்ச கவ்வியம்.

137. கன்னற் கரும்பு - இருபெயர் ஒட்டு. தோயல்-குழம்பு. சந்தனத்தின் தோயல் தோயம் - சந்தனக் கலவை கலந்தநீர். வலம்புரிநீர் - வலம்புரிச் சங்கில் எடுத்தநீர். இனையவற்றால்-முதலிய நீர்களால். அபிடேகம் செய்தல்-நீராட்டுதல். வால்வெண் தூசு - மிக வெள்ளையாகிய துகில். நீவிய பின்னர் - நீரை ஒற்றியெடுத்த பின்பு. தெள்ளமுதம் - பசும்பால். வெள்க - வெண்ணிறம் அடைய. சந்திரன் அபிடேகம் செய்தவுடன் சிவலிங்கம் வெண்மை நிறம் அடைந்தது என்க.

138. அமுது - நிவேதனம். அடைக்காய்-வெற்றிலை பாக்கு. வேற்று ஒருதன் தோற்றம் செய் கண்ணடி - வேறாக ஒப்பற்ற தன் தோற்றத்தைக் காட்டுகின்ற கண்ணாடி. சிவையையும் - ஆனந்தவல்லி அம்மையையும்.

**சந்திரன் செய்த துதி**

எண்ணிறந்த பலகோடி புவனம் எல்லாம்
நின்உழையில் ஓர்பாலில் இருந்த தென்னில்
கண்ணுதலே! அவற்றினில்ஓர் அண்டத்து உற்றோர்
காண்குவர்யார் உன்பெருமை! கண்ணன் வேதன்
உள்நெகிழ்ந்து துதித்ததும்தம் அறிவின் மட்டாம்.
ஓங்குமுது குன்றவில்லோய்! உலவா நேயம்
நண்ணவுங்கில் லேன்உன்னையே துதிப்ப தானேன்.
நயந்துஅளித்தல் செய்திஎன நவின்று கூறும். 139

பொன்விழுது விட்டனைய சடையாய் போற்றி!
போற்றுமவர் களின்குறைகள் தீர்ப்பாய் போற்றி!
கன்னலுடைப் பலகரமாக் குழூக்கொண் டென்னக்
கவின்நிலவு பரந்திடும்முக் கண்ணா போற்றி!
கொல்நுனைய சூல்மழுமான் கரத்தாய் போற்றி!
கொன்றைமலர் நதிஅறுகு புனைந்தாய் போற்றி!
என்னையும்ஆட் கொள்ளஇங்ஙன் இருந்தாய் போற்றி!
எம்அனைக்குஓர் பங்களித்த எந்தாய் போற்றி! 140

அருவாகி உருவாகி இரண்டும் ஆகி
அப்பாலாய்க் கரணத்தின் அசைவு காணும்
கரியாகி அனைத்துயிர்க்கும் உணர்வ தாகிக்
கழறவொணா ஆனந்தக் கடல தாகி
நிருமலமாய் நிராமயமாய் அசலம் ஆகி
நித்தியமாய்ப் பேரொளியாய் அடியார்க் கெல்லாம்
விரவுகதி யாகிநின்ற சிவனே போற்றி!
வில்வவனத்து இனிதமர்ந்த விமலா போற்றி! 141

---

139. நின் உழையில் - நின்னிடத்து. அண்டத்து உற்றோர் - உலகினர். முதுகுன்றம் - மேருமலை. உலவா நேயம் - அழியாத அன்பு. நண்ணவுங்கில் லேன் - அடைய மாட்டேன். அளித்தல் செய்தி - காப்பாற்று.

140. சிவன் சடைக்குப் பொன் (ஆல) விழுது உவமை. கொல் நுனைய - கொலைத் தொழிலையுடைய கூர்மையான. சூல் - சூலம். அறுகு - அறுகம்புல். எம் அமைக்கு - எங்கள் அம்மனைக்கு ; ஆனந்தவல்லி அம்மைக்கு.

141. கரணத்தின் அசைவு காணும் கரி - உடற்கரணங்கள் அசைவதற்கு உரிய சாட்சியாகிய உணர்வு. கழறவொணா - சொல்ல இயலாத. நிருமலம் - குற்றமே இல்லாதது. நிராமயம் - நோய் இல்லாதது. அசலம் - அசையாதது.

புறச்சமயத் தவர்வீற்று வீற்றாய் ஓதும்
புகலிடமாய் அவர்வேண்டும் போகம் ஈவாய்!
சிறப்பில்அஃ றிணையான முகவெஞ் சூரன்
சிலந்திஎலிக்கு அரசுஉதவும் செல்வா போற்றி!
மறப்புஇல்உனை மதியாத பிரமன் காலன்
மாரன்இரா வணன்செருக்கை அடர்த்தாய் போற்றி!
விறற்புலியூ ரினில்ஒளிரும் விளக்கே போற்றி!
வில்வவனத்து இனிதமர்ந்த விமலா போற்றி! 142

இறைவன் வெளிப்படல்

என்று துதிப்பத் திருச்செவியில்
ஏற்றி, இலிங்க உருவில்நின்றும்
கொன்றைச் சடையும் மலர்முகமும்
குளிர்முக் கண்ணும் குழைக்காதும்
வென்றிப் புயமும் திருப்பதமும்
விளங்க உமையா ளொடும்விடைமேல்—
கன்றுக்கு இரங்கும் நல்ஆன்போல்—
கருணைக் கடல்வந்து எதிர்நின்றான். 143

சந்திரன் வேண்டுகோள்

மூக்கின் நுதியில் கண்கிடத்தி
உள்ளம் அடங்க மூச்சைஅவித்து
ஊக்கத்து அரிய தவம்புரிவோர்க்கு
எட்டாத் துரிய ஒளி,மதியை
நோக்கி 'வேண்டும் கருமம்எவன்?
நுவல்தி!' எனலும், 'சாபவெந்நோய்

142. வீற்று வீற்றாய் - வேறு வேறாக. போகம் - வீடுபேறு. சிறப்புஇல்- சிறப்பு இல்லாத. சிலந்திக்கும் எலிக்கும் அரசு தந்தது புராண வரலாறுகள். புலியூர் - சிதம்பரம்.

பிரமனைத் தலையை அறுத்தும், காலனை மார்பில் உதைத்தும், மாரனைக் கண்ணால் எரித்தும், இராவணனைக் கால் நகத்தால் அழுத்தியும் செருக்கை அழித்தான் என்பது வரலாறு.

143. விடைமேல்-நந்தி வாகனத்தின் மேல். ஆன்-பசு. கருணைக் கடல் - இறைவன்.

போக்கிப் புரத்தல் வேண்டும்'எனப்
புகன்றான். சிவன்அங் கிவைபுகலும். 144

சாபம் பெற்றோர் வரலாறு

சாபப் பிணியால் வருந்துகின்றோர்
மணலிற் பலராம். சாற்றில்உமை
கோபத் தினில்விண் ணவர்கள் மக
வற்றார். பிருகு கூறியதால்,
சாபப் புருவ அங்கயற்கண்
கமல முகத்துத் தாக்கணங்கின்
கோபத்து அடைந்தான் பிறவி.அங்கி,
வரையாது எவையும் கொள்கின்றான். 145

'நிலையம் நம்மால் அயன்இழந்தான்-
நெருங்கி இறுகி அண்ணாந்து
மலையை நிகரும் பொம்மல்முலை
மதர்வேல் உண்கண் புருமஅல்குல்
கலவ மயிலின் அம்சாயல்
சசிகா தலன்தான், கவுதமனால்
அலகில் யோனி உடல்பெற்றான்.
புழுக்கால் ஆனான் யமன்அனையால். 146

---

144. நுதியில்-நுனியில். கண்கிடத்தி-கண் பார்வையை வைத்து, ஊக்கத்து-முயற்சியுடன். துரிய ஒளி-சிவபெருமான். மதியை-சந்திரனை. வேண்டும் கருமம் எவன்-நீ வேண்டிய காரியம் யாது. புரத்தல் வேண்டும்-காத்தல் வேண்டும்.

145. சாபப் பிணி-பிணி போன்ற சாபம். உமை-உமாதேவி. விண்ணவர்கள்-தேவர்கள். மகவு அற்றார்-பிள்ளைப்பேறு இழந்தார்கள். பிருகு-பிருகுமுனி, சாபப் புருவம்-வில்லைப் போன்ற புருவம். தாக்கணங்கின் கோ-திருமகள் தலைவனாகிய திருமால். பிறவி பத்து அடைந்தான் என்று கூட்டுக. அங்கி - அக்கினி தேவன். வரையாது-நீக்காது. எவையும் கொள்கின்றான் - நல்லன கெட்டன அனைத்தையும் ஏற்கின்றான்.

இப் பாடலில் மூன்று சாப நிகழ்ச்சிகள் கூறப்பட்டுள்ளன. உமை சாபம் - தேவர்களுக்குப் பிள்ளைப்பேறு இல்லாமல் செய்தது. பிருகு சாபம்-திருமாலுக்குப் பத்துப் பிறவிகளைத் தந்தது. அக்கினி எதையும் ஏற்பதற்குரிய சாபம் யாரிட்டது என்று புரியவில்லை.

146. நம்மால் - சிவபெருமானால். அயன் நிலையம் இழந்தான் - பிரமன் கோயிலும் வழிபாடும் இழந்தான். சசிகாதலன்-இந்திரன். அலகில் யோனி உடல் பெற்றான்-கணக்கற்ற பெண் குறிகளை உடம்பிலே பெற்றான். அனையால்-பெற்ற தாயினால். யமன் புழுக்கால் ஆனான் - எமதருமன் கால் புழுத்துப்

### கண்ணுதல் சந்திரன் சாபம் மாற்றுதல்

இன்னும் பலரால் சாபத்தால்
இளைத்தோர் நீயும் சிறுவிதியால்
அன்னர் போன்றாய்! வருந்தல்எமது
அருளால் நின்நோய் நாம்காப்பம்.
மின்னும் கலைகள் வளர்ந்திடுக!
உலாவின் நிறையின் விதிமகன்சொல்
பின்னர் உறுக! மதிதொறும்இப்
பெற்றித்து ஆக! எனஉரைத்து. 147

### சந்திரன் மேலும் ஒரு வரம் கேட்டல்

வான்தோய் சோமற்கு அப்பொழுதே
கலைகள் வளர்த்தி நிறைத்து அவற்றின்
மூன்றாம் பிறையை வாங்கிநதி
முடிமேல் ஏற்ற, விண்ணவர்கள்
தேன்தாழ் மலர்கள் பொழிந்துஆர்த்தார்.
உவகைக் கடலில் திளைத்துஎன்னை
ஈன்றாய்! இன்னும் ஒருவரம்நீ
தருதி என்னா மதிஇயம்பும். 148

பூசை செயும்யான் விளங்கஉனைச்
சோம இலிங்கம் எனப்புகல

---

போனது. இப் பாடலிலும் மூன்று சாப நிகழ்ச்சிகள் கூறப்பட்டுள்ளன. மதர் வேல் முதல் அம்சாயல் வரையுள்ள தொடர்கள் சசிதேவிக்கு அடை மொழிகள். மதர் வேல் உண்கண்-மதர்த்த (செருக்கிய) வேல் போன்ற கண்; மையுண்ட கண். பரும அல்குல்-மேகலை அணிந்த இடை. கலவ மயிலின் அஞ்சாயல்-தோகை விரித்த மயில் போன்ற அழகிய சாயல்.

147. சிறு விதியால் - தக்கனால். அன்னர் போன்றாய் - சாபம் பெற்ற (விண்ணவர் முதலிய) அவர்களைப் போன்றாய்!

வருந்தல் - வருந்தாதே. நின்நோய் - நின் சாபம். காப்பம் - தடுத்துக் காப்போம். உலாவின் நிறையின் - பௌர்ணமியன்று முழுமையாக நிறைவு பெற்ற பின்பு. விதிமகன் - தக்கன்! சொல் - சாபம். மதிதொறும் - மாதந் தோறும். இப்பெற்றித்து ஆக - இவ்வண்ணமே நடக்கட்டும்.

148. வான்தோய் சோமற்கு - விண்ணில் வாழும் சந்திரனுக்கு. வளர்த்தி நிறைத்து - வளர்த்து நிரம்பச் செய்து, அவற்றின் - அவ்வாறு நிரம்பச் செய்த கலைகளுள்ளே. நதிமுடிமேல் ஏற்ற - கங்கை தங்கிய தலைமேல் வைத்த அளவிலே, தருதி - தருவாயாக. மதி - சந்திரன்,

நேசம் உளத்தில் காண்போழ்தின்
நிரம்பிற்று. அதனால் உமையவள்பேர்
தேசு நிகழும் ஆனந்த
வல்லி எனச்செப் புகஉலகம்.
வாச மலியும் கொன்றையந்தார்
வரதா! என்ன அதற்குஇசைந்தான். 149

**திரிபாக நாதர்**

நல்லோர் உன்பேர் திரிபாக
நாதன் எனவே மொழிவதுஎவன்?
சொல்லாய் என்னச் சிவன்உரைக்கும்:
தொல்லை உருவம் எமக்குஉரைப்பின் -
மல்லார் தோளாய்! - நீர்அங்கி
ஞான வானாய் வயங்குறுமால்.
எல்லா உயிரும் கண்டுபணிந்து
ஏத்தி மலம்தீர்ந்து இளைப்புஅறவே. 150

ஓர்ஏழ் உலகும் உருவஇருப்பார்
முளைப்போம். அவற்றில் உன்வடிவம்
சீராய் எழலும் உமக்கவராய்ச்
செனித்தது, இரண்டும் திருக்கானப்
பேரூர் தன்னில் முளைத்தனநின்
பெயர்கொள் உருவம் இவண்முளைத்தது
ஓரார் யாரும் உனக்கு உரைத்தோம்
மறையாய் உறுக எனஓதி. 151

இடப மதியில் விழாநடப்பப்
புணர்தம் சோதி எழில்முறத்தில்
கொடிதேர் நீர்ஏ றிடஉகைப்பக்
கொடுப்பச் செய்து நின்பெயரால்

149. புகல - சொல்ல. காண்போழ்தின் - கண்டபோது. உளத்தில் நேசம் நிரம்பிற்று அதனால் என்று கூட்டுக. உலகம் செப்புக என்று மாற்றுக. இசைந்தான் - சிவபெருமான் ஒப்பினான்.

150. மொழிவது எவன் - சொல்லுவது ஏன்? தொல்லை உருவம் - பழமையான வடிவங்கள். நீர் அங்கி வானாய் வயங்குறும் - நீர், நெருப்பு, வான் என்று மூன்றாக விளங்கும். மலம் - ஆணவமலம் முதலியன.

151. திருக்கானப்பேர்-காளையார் கோவில். நின் பெயர் கொள் உருவம்- சோம இலிங்கம். மறையாய் உறுக - இரகசியமாக இருக்கட்டும்.

தடமா நகரம் ஈங்குஅமைத்து,ஒன்
　　றரையோ சனைஈ சானதிக்கில்
பொடியார் மேனிக் கானைநகர்ப்
　　புத்தே ளிரைஅன் பொடுபோற்றி 152

### இறைவன் மறைதல்

நினது பதத்தின் அடைகஎன
　　நிகழ்த்தி நிமலன் விடைகொடுத்தே
அனக இலிங்கத் திடைமறைந்தான்
　　அந்தோ! சென்றாய் எனைஅகன்றே!
இனம்யான் காணும் நாள்ஒருநாள்
　　உளதோ எம்மான் எனஇரங்கி
மனது தேறி அண்ணல்அருட்
　　படியே ஒருபட் டினம்வகுத்து, 153

### சந்திரன் விழாவெடுத்து, கானைநகர் அடைதல்

தன்பேர் நிறுவி விடைமதியின்
　　உலகம் உவப்பச் சாறுஅயர்ந்து
நன்கா னையிற்போய்ச் சிவலிங்க
　　மூர்த்தி தனையும் நயந்துஅருச்சித்து
என்பால் கருணை செய்திர்என
　　இறைஞ்சி ஏத்தி இருவருள்ளும்
தென்பால் உறையும் பெருமாற்குச்
　　சோம இலிங்கம் எனச்செப்பி. 154

---

152. இடபமதி-வைகாசி மாதம். நின் பெயரால்-சோமபுரி என்ற பெயரால் ஈசானதிக்கில் -வடகீழ்த்திசையில். கானைநகர்-காளையார் கோவில். புத்தேளிர்-கடவுளர்.

153. நினது பதம் - சந்திரப் பதவி. நிகழ்த்தி - சொல்லி. அனக - குற்ற மற்ற. பட்டினம் - ஊர்,

154. தன்பேர் - சோமபுரி; விடைமதி – வைகாசி மாதம்; சாறு - திருவிழா; அயர்ந்து - நடத்தி; நன் கானையில் - நல்ல காளையார் கோவிலில்; இருவர் உள்ளும் – காளையார் கோவிலில் உள்ள இரு சிவலிங்க மூர்த்திகளுள்; தென் பால் உறையும் பெருமாற்கு - தெற்கே உள்ள சிவலிங்கமூர்த்திக்கு; சோமலிங்கம் எனச் செப்பி - சோமலிங்கம் எனப் பெயரிட்டு.

### சந்திரன் தன் மனைவியோடு வாழ்தல்

அங்கண் அகன்று தன் உலகத்து
அடைந்து, மாமன் அகம்புகுந்து,
மங்குல் துயிலும் மலர்க்கோதை
மனையார் தமைத்தூதினில்அழைத்துக்,
கொங்குஆர் மேனி உரோணியுடன்
கூடிப், பயன்கொள் பொதுமரம்போல்
தங்கிச் சுகத்தை வேண்டியாங்கு
அளித்து' வாழ்ந்தான் சந்திரனே. 155

### பலஸ்ருதி.

இன்ன கதையைப் படித்தோர்கள்
கேட்டோர் வியந்தோர் எழுதினோர்
முன்னம் செய்த நல்லறம்இன்று
எனினும் இந்தப் பூதலத்தே
பொன்னங் கழற்கால் வேந்துஆகிப்
புவிமேல் திருவில் திளைத்ததன்பின்,
கன்னற் குதலை மொழிபங்கன்
கயிலைக் கிரியின் வாழ்குவரால். 156

### தோற்றுவாய்

என்றுஅறிவின் மேதகைய சேடனைமுன் இகலி
வென்றவன்இ யம்ப,முனி புங்கவன் வியந்து
நன்றுதவ இன்னும்அவன் ஆடல்நவில் கென்ன
மன்றல்கமழ் தார்முடிது ளக்கினன்வ ழங்கும். 157

இரண்டாவது சந்திரன் கயம்தீர்த்த சருக்கம் முற்றும்.

---

155. அங்கண்–அவ்விடத்தினின்று. மாமன் அகம்-தக்கன் விடு. மங்குல் துயிலும்-மேகம் போன்ற. மலர்க் கோதை–மலர்க்கூந்தலையுடைய. மனையார் - மனைவியர். கொங்குஆர் - மணம் நிரம்பிய. மனைவியர் இருபத்து எழுவருக்கும் பொதுவாகச் சுகம் தந்தமையால் பொதுமரம் சந்திரனுக்கு உவமையாயிற்று.

156. இன்று எனினும்-இல்லையாயினும்; வேந்து-அரசர்; திருவில் திளைத்த தன்பின் - செல்வம் அனுபவித்த பிறகு: கன்னற்குதலை மொழி – ஆனந்தவல்லி அம்மை.

157. அறிவின் மேதகைய-அறிவால் மேம்பட்ட; சேடனை-ஆதி சேடனை; இகலி-சினந்து; வென்றவன்-வாயு பகவான்; முனிபுங்கவன்-பிருகு: அவன் ஆடல்-சிவபெருமான் திருவிளையால்; நவில் சென்ன-சொல்லுக என்று; மன்றல்-மணம்; தார்முடி-தலைமாலை அணிந்த தலை; வழங்கும்-சொல்வான்.

## சருக்கச் சுருக்கம்.

### தூலகன்னன் சாயுச்சியம் பெற்ற சருக்கம்

பாஞ்சால நாட்டில் கன்யாகுச்சம் என்ற நகரைத் தலை நகராகக் கொண்டு தூலகன்னன் என்பவன் ஆட்சி செய்தான். அறம் நிரம்பி அவன் உள்ளம் விளக்கம் பெற்றமையால் முத்தியில் விருப்பமுற்றான். தன் மகனை அழைத்து, அவனுக்கு முடிசூட்டி, அரசியல் நீதிகளை விரிவாகக் கூறிவிட்டுப் புறப்பட்டான். அவன் மனைவி இச்செயல் கண்டு அழுதாள். அவளுக்கு வேண்டிய உறுதிமொழிகள் கூறிவிட்டுக் கேதாரம் முதலிய பல தலங்களைத் தரிசித்துக்கொண்டு வில்வவனம் அடைந்தான்.

இறைவன் அசரீரியாக 'கிரேதா யுகத்தில் சந்திரன் அமைத்த ஆலயம் பிரளயத்தால் அழிந்தது. அதை மீண்டும் கட்டுக' என்று ஆணையிட்டான்.

அக்கோயிலை முன்போல் புதுக்கி, நகருண்டாக்கி அதற்குத் தூலகன்ன பட்டினம் என்று பெயரிட்டான் தூலகன்னன்.

இறைவன் நேரில் தோன்றி, உனக்கு யாது வேண்டும்? என்றான். 'எனக்கு உலக இன்பங்கள் வேண்டா. உன் பாதம் தரும் பேரின்பமே வேண்டும்' என்றான் தூலகன்னன். இறைவன் 'அப்படியே ஆகுக! என்று திருவாய் மலர்ந்து மறைந்தான்.

தூலகன்னன் அங்கேயே தவம் செய்து வீடுபேறு பெற்றான்.

## தூலகன்னன் சாயுச்சியம் பெற்ற சருக்கம்

### தூலகன்னன் வரலாறு

ஏடவிழும் மலர்ச்சோலை எங்கும்உள பாஞ்சால
நாடுபுரந் திடுவேந்தன் தூலகன்னன் எனநவில்வோன்

மாடமலி கன்னியாக் குச்சம்எனும் வளம்பதியோன்
ஆடெழுவை அனையபுயன் பொதுநீக்கி அரசாள்வோன். 158

நித்தியகன் மம்வழுவாது இயற்றியதால் அறம்நிறைந்து
மொய்த்தபவம் தொலைத்துளத்தை முக்குறும்பு மறஎறிந்தோர்
சித்தம்என விளக்குதலும் நிலைநிலையாப் பொருள்தேர்ந்து
முத்தியினில் விருப்புஎய்தி ஒருநாளின் அவன்முன்னும். 159

**தூலகன்னன் சிந்தனை**

மாலவன்உந் தியின்உதித்தோன் மாய்ந்திடினும் மாயாத
காலமதின் நம்ஆயுள் கணமும்இலை. ஆங்கதற்கும்
சாலவும்ஊறு உளதுஇளமை சாற்றில்ஒரு பதினாறாம்.
மேல்ஒருபன் னாறுஆண்டாம் மகளிர்எழில் நலம்விரும்பல். 160

விலக்கியநாள் பிணிபிறவால் மெலியும்நாள் இவைநீக்கிக்
கலத்தலுறல் இதிற்சிலநாள். கன்னியர்க்கு மங்கையராய்ச்
சொலப்படுவது ஒருபருவம். செந்திருவும் தொலைவின்றி
நலத்தகவே ஒருவனிடை எந்நாளும் நண்ணாதே. 161

---

158. ஏடு அவழும் மலர்-இதழ் விரிந்த பூக்கள்; புரந்திடு–காக்கின்ற; கன்னியரக் குச்சம்–தலைநகரம்; ஆடு எழுவை அனைய புயன் - வெற்றியுடைய தூணை ஒத்த தோள்களையுடையவன்; பொது நீக்கி-உலகம் பல அரசர்க்கும் பொதுவில் உரியது என்னும் சொல்லை நீக்கித் தனக்கே உரியதாகக் கொண்டு. அதாவது உலகம் முழுவதும் தான் ஒருவனே அரசாள்பவன் ஆகி.

159. நித்திய கன்மம் - அன்றாடக் கடமைகள்; வழுவாது - தவறாமல்; மொய்த்தபவம்-திரண்ட பாவங்கள்; பிறவி என்றும் கொள்ளலாம்; முக்குறும்பும் அறஎறிந்தோர் சித்தம் என-ஞானிகள் மனம் போல; உளத்தை விளக்குதலும் – தன் மனத்தை விளக்கமுறச் செய்தலால்; நிலைநிலையாப் பொருள் தேர்ந்து - உலகப் பொருள்களின் நிலையாமையை உணர்ந்து; முன்னும்-எண்ணத் தொடங்கினான்.

160. மாலவன் - திருமால்; உந்தியில் உதித்தோன்; பிரமன்; மாய்ந்திடினும் மாயாத காலம் - பிரமன் இறந்தாலும் இறக்காத காலம். அதாவது காலம் தொடர்ந்து இருக்கும் என்பது கருத்து. நம் ஆயுள் கணமும் இலை - அக்காலத்தோடு ஒப்பிடும்போது நம் ஆயுள் ஒரு கண நேரத்துக்கும் ஒப்பு ஆகாது; ஆங்கதற்கும் சாலவும் ஊறு உள - அத்தக் கண நேர ஆயுளுக்கும் மிகுதியான கேடுகள் உண்டு; பன்னாறு - பதினாறு; எழில் நலம் - அழகு.

161. (கன்னியர்க்கு) விலக்கியநாள் - தீட்டான நாளும்; பிணி பிறவால் மெலியும் நாள்-பிணி முதலிய பிறவற்றால் மெலியும் நாளும்; இவை நீக்கி - இந்த நாள்களை நீக்கி விட்டு; கலத்தலுறல் இதிற் சிலநாள்-அக்கன்னியரைக் கலப்பது பதினாறாண்டில் சில நாள்களே; செந்திருவும்-செல்வமும்; தொலைவின்றி–நீங்கிப்

தந்தைதாய் மனைவிமக்கள் தாயத்தார் எவரும்முனம்
வந்தபிறப் பினில்யார்க்கும் மன்னினரோ? மேலும்அற்றே.
புந்தியுற நிலையில்லா இவ்வாழ்விற் பொருந்திமிக
நொந்தனென்இந் நாள்வரையும் இன்னும்இதில்நுழைவேனோ?

என்றென்று நினைந்து, இனியான் இவ்உடல்வீழ்ந் திடுமுன்னே
கன்றுஒன்று மலர்க்கரத்துக் கண்ணுதல்வா னவன்உறையும்
மன்றம்முதல் தலங்கள்எலாம் வணங்கிவீடு உறுவென்எனக்,
குன்றுஅனைய பெருநிதியுட் சிலவெறுக்கை கைக்கொண்டான்

மகனுக்கு முடிசூட்டல்

பக்தி தங்கிய மகன்உறின் குடும்பமா பாரம்
வைத்து நீள்புயத்து அளிக்கெனத் துறவுறல் வழக்காம்
அத்த னார்க்குஎனும் விதிப்படி மைந்தனை அழைத்தே,
இத்த ரைத்தலம் புரக்கென முடிகவித்து இயம்பும்: 164

மகனுக்குக் கூறிய அறிவுரை

இரவி வேலையின் எழும்முனம் எழீஇக்கடன் இறுத்தே,
அரசி ருக்கைசென்று அந்தணர்க்கு இருநிதி அருளி,
உரிய நன்மதி அமைச்சரோடு உசாவி,ஆங் காங்கு
வரும்மு டங்கலை வினவியே, உடன்விடை வழங்கி, 165

---

போகாமல்; ஒருவனிடை - ஒரே மனிதனிடத்து: நண்ணாதே - நிலையாகத் தங்காது. கன்னியர்க்கு மங்கையராய்ச் சொல்லப் படுவதாகிய ஒரு பருவத்தில் விலக்கிப நாள், மெலியும் நாளீ நீக்கிக் கலத்தல் சில நாளே என்று கூட்டிப் பொருள் காண்க.

162. மேலும் அற்றே - மேல் வரும் பிறவிகளிலும் அவ்வாறே உறவிரைாகத் தந்தை தாய் முதலியோர் வரமாட்டார். புந்தி - மனம்; இதில் நுழைவேனோ - இந்த அற்ப வாழ்வில் மனம் வைப்பேனோ? மாட்டேன்.

163. மான் கன்று ஒன்று கரதலத்துக் கண்ணுதல் - மான் கன்று கையில் தரித்த சிவபெருமான்; மன்றம் - சிதம்பரம்; வீடு உறுவென் - முத்தி பெறுவேன்; குன்று அனைய - மலை போன்ற; பெருநிதியுட் சில வெறுக்கை - பெருஞ் செல்வத்திலிருந்து சிறிதளவு பொருளை; வெறுக்கை - செல்வம்.

164. மகன் உறின் - மகன் இருப்பான் ஆயின்; நின்புயத்து வைத்து அளிக்க என - உன் புயத்தில் வைத்துக் காப்பாற்று என்று கூறி; துறவுறல் வழக்கு ஆம் அத்தனார்க்கு - துறவு பூணுதல் தந்தைக்கு மரபாகும்; அத்தனார் - தந்தை; புரக்க என - காப்பாற்று என்று; முடிகவித்து - பட்டம் சூட்டி; இயம்பும் - சொல்லத் தொடங்கினான்.

165. இரவி-சூரியன்; வேலையின் எழும் முனம் - கடலினின்று உதயம் செய்வதற்கு முன்பு; எழீஇ-எழுந்து; கடன் இறுத்து - காலைக்கடன்களை முடித்து;

ஆறில் ஒன்றினில் இம்மியும் விடாதுஅல காக்கிக்
கூறும் வல்லவர்; சித்திர குத்தனை அனையார்;
ஈறி லாப்பொருள் எய்தும்வாய் உரைத்திடும் கணக்கர்
தேறு பல்வகைக் கணக்கையும் செப்பஉட் கொண்டு, 165

ஒற்றர் பாசுரம் உணர்ந்துஅதற்கு ஆம்செயல் உன்னிக்,
குற்றம் நீக்கிடும் நீதிநூல் கழறஉட் கொண்டு,
பற்ற லார்கள்வந்து இடுதிறை அளிப்பது பார்த்துக்
கொற்ற முப்படை அனிகங்கள் கும்பிடக் கண்டு, 167

களம்இல் காவலர், புரோகிதர், கற்றவை மொழிவோர்,
எளியர், தூதுவர், வீணையர், நாடகர் எவர்க்கும்
அளியன் ஆகியே குறைதவிர்த்து, ஆயிடை அகன்று
தெளியும் விண்தொடு .மணியணி மனையகம் சேறி! 198

சேமம் போன்றுஉயர் கொடைஒன்று நின்செலவு இரண்டாய்
ஏமம் செய்குதி! பொதுக்கடிந்து உயிர்புரந் திடுதி!
காமம் மிக்குறேல்! கள்கவறு ஒழிதி!வா னவர்க்குத்
தூம ஆரழல் வேள்விசெய்து அவர்கடன் தொலைத்தி! 169

---

அரசிருக்கை-ஓலக்க மண்டபம்; உசாவி-ஆராய்ந்து; முடங்கலை வினவி - கடிதங்களைப் படிக்கக் கேட்டு; உடன்விடை வழங்கி - உடனே அவற்றிற்குப் பதில் கொடுத்து.

166. இப்பாடலில் கணக்கர் இயல்பு கூறப்படுகிறது. அலகு ஆக்கி - அளவு படுத்தி; சித்திர குத்தனை அனையார் – தவறாமல் கணக்கு எழுதுவதில் சித்திர குப்தனை ஒப்பவர்கள்; சித்திரகுப்தன்-யமபுரத்துக் கணக்கன்; ஈறிலாப் பொருள் எய்தும் வாய் - முடிவில்லாத செல்வம் வருகின்ற வழிகள்; உட்கொண்டு-அறிந்து.

ஒற்றர் பாசுரம்-ஒற்றர் கூறும் செய்திகள்; உன்னி-ஆராய்ந்து; கழற உட்கொண்டு-படிக்கக் கேட்டு உணர்ந்து; பற்றலார்கள்-பகைவர்கள்; திறை அளிப்பது-கப்பம் செலுத்துவது; கொற்ற முப்படை - வெற்றி தருகின்ற முப்படை; அனிகங்கள்-சேனைகள்.

168. களம் இல்–கள்ளம் இல்லாத; அளியன் ஆகி-பழகுதற்கு எளிமையுடையவன் ஆகி; குறை தவிர்த்து-அவர்களின் குறைகளை நீக்கி; ஆயிடை அகன்று-ஓலக்கத்தை விட்டு அகன்று; விண் தொடு மனை; மணியணிமனை என்று கூட்டுக

169. கொடைக்கும் நின் செலவுக்குமாக உன் வரவைப் பங்கிடுக என்பது கருத்து. ஏமம்-செய்குதி-உயிர்க்குப் பாதுகாப்புச் செய்க; காமம் மிக்குறேல் - காமத்தை மிகுதியாகக் கொள்ளற்க! கவறு-சூது; தூம ஆரழல் - புகையுடைய நெருப்பு; அவர்கடன்-தேவர்களின் கடனை.

குடியும், ஈகையும், சூழ்கல்வி, தலையளி, அஞ்சாப்
படையும், சீர்அருள் மனத்திட்பம், பண்புடை அமைச்சு,
முடிவில் பேரரண், உதவுறு துணையும்,மூ தறிவும்,
அடையும் ஊக்கமும், முயற்சியும் வளர்த்தியால் ஐயா! 170

இரவி முன்குசன் பின்வெள்ளி நடக்கினும், இடபம்
பரிய சிங்கம்மீன் தேள்சனி உறினும், மா பாவர்
மருவுஇ ராசிஒன்று அடையினும், பானுமத் தியமும்,
குருவுக்கு ஏழ்ஒன்றில் பாவர்ஆ யினும்மழை குன்றும். 171

ஆய நாளினில் அறைஉறு நிதியமும் அன்றி,
'மேய வான்மழை மறுத்திடின் விற்பம்'என்று ஈட்டும்
பேயர் தம்மனை நெல்லையும் பெரிதுஎடுத்து, உரிய
தாயை ஒத்துணவு அருளுதி - உயிர்ப்பயிர் தழைப்ப. 172

மொழிந்த தன்மையின் அன்றிநின் முறையது திறம்பின்,
ஒழிந்து நான்மறை அழியுமே. வேள்விகள் ஓயும்.
கழிந்த வான்பெயல் வறக்கும்மெல் ஓதியர் கற்பும்
அழிந்து போம்அது தவிர நன்று இருத்திஎன்று அறைந்தான். 173

மனைவிக்குக் கூறிய ஆறுதல்

கரிய பூங்குழல் மனையவள், இவன்செயல் கண்டுஆங்
கருகு வந்துநின் றழுதலும், களைகணாய் அரசு
புரியும் மைந்தனைப் பெற்றநீ கவல்வதுஏன்? புகலாய்!
இரதி வேள்என உற்றனம் நெடும்பகல் இன்பம். 174

---

170. சூழ்-உணவுப்பண்டம்; தலையளி-குடிகள் மேல் இரக்கம்; பேரரண்-பெரிய அரண்.

171. இரவி சூரியன்; குசன் - செவ்வாய்; இடபம் - ரிஷபராசி; சிங்கம் - சிங்கராசி; மீன் - மீனராசி - தேள் - விருச்சிகராசி; இராசி ஒன்று - முதல் இராசியில்; பானு - சூரியன்; பாவர் - பாவகிரகங்கள்.

172. ஆய நாளினில் - மழை குன்றிய காலத்து; அறை உறுநிதியம் - அரச பொக்கிஷத்தில் உள்ள செல்வம்; விற்பம் என்று - அதிக விலைக்கு விற்போம் என்று ஈட்டும் - பதுக்கி வைத்துள்ள.

173. நான்மறை ஒழிந்து அழியும் என்று கூட்டுக; ஓயும்-அழியும்; கழிந்த - மிக்க; பெயல் - மழை; வறக்கும் - பெய்யாது; மெல் ஓதியர் கற்பும் அழிந்து போம் - மடவார் கற்பும் அழிந்து போகும்; அது தவிர-அத்தீமைகள் வாராரபடி; நன்று இருத்தி - நன்றாக வாழ்வாயாக.

174. மனையவள் - தூலகண்ணன் மனைவி; இவன் - தூலகன்னன். களைகனாய் - உயிர்களுக்குப் புகலிடமாக; கவல்வது என் - கவலைப் படுவது ஏன்?

தணிவி லாத்தனி யின்பம்நீ முன்னியாங்கு உற்றாய்!
இணர்இ ருங்குழால்! என்றும்அற் றேஎன மதிப்பாய்!
துணைய தாகநின் மைந்தன்மாட்டு இருக்கெனத் துணிந்தான்
இணையி லாதபே ராண்டகை ஏகினன் எழுந்தே. 175

**தூலகன்னன் அரசு துறந்து ஏகுதல்**

நெடிய தானமும் கலுழியும் நீண்டபல் வரையும்
கடிதின் நீங்கியே கண்ணுதல் உறைந்தகே தாரம்
ஒடிவில் அன்புடன் தொழுதுபோய்த் திசையெலாம் உயர்ந்து
படியின் மேம்படு பகீரதி நீரிடைப் படிந்தான். 176

**பலங்தகளைத் தரிசித்தல்**

கறந்த பால்முலை புகாதது போன்று,கா சினியில்
இறந்து ளோர்பிற வார்கள்என்று ஏற்றம்ஒன்று இசைப்ப
சிறந்த தாரகப் பிரமத்தை வீகின்றோர் செவியில்
அறைந்து வீடுஅருள் காசியில் அரன்தனைப் பணிந்தான். 177

வேடர் தம்பிரான் மென்றஊன் மிசைந்துவீடு அருளும்
நீடு காளத்தி நிருமலன் தாளிணை வணங்கி,
ஆடும் நுண்ணிடை அம்பிகை முலைத்தழும்பு அணிந்த
ஈடில் காஞ்சிவாழ் இறைவனை வணங்கினன் ஏத்தி. 178

---

இரதிவேள் என - ரதி மன்மதன் போல; நெடும்பகல் இன்பம் உற்றனம் என்று கூட்டுக.

175. முன்னியாங்கு - விரும்பிய படியே; இன்பம் உற்றாய் என்று கூட்டுக. இணர் இருங்குழால் - மலர்க்கொத்து அணிந்த கூந்தலையுடையவளே! என்றும் அற்றே என மதிப்பாய் - இனி எக்காலும் அப்படியே இன்பம் துய்ப்பதாக எண்ணிக் கொள்வாய்! மைந்தன் மாட்டு இருக்க என-மைந்தனிடம் இருப்பாயாக என்று கூறி விட்டு; ஆண்டகை - தூலகன்னன்.

176. தானம் - யானை மதம்; கலுழி-கான்யாறு. பல்வரை-பல மலைகள் - கடிதின் – விரைந்து; கண்ணுதல் - சிவபெருமான்; ஒடிவில் - நீங்காத; பகீரதி - கங்கை,

177. இசைப்ப - சொல்லும்படி; தாரகப் பிரமம் - தாரக மந்திரம்; அது இராம நாமம் என்று சொல்லுவர்; வீகின்றோர்-இறப்பவர்; காசியில் இறப்பவர் காதில் அரன் தாரக மந்திரம் ஓதி வீடு தருவான் என்பது நம்பிக்கை.

178. வேடர் தம்பிரான்–கண்ணப்பர்; மிசைந்து–உண்டு; அம்பிகை முலைத் தழும்பு அணிந்த வரலாறு காஞ்சிப் புராணத்தில் காணலாம். ஈடுஇல் - ஒப்பு இல்லாத.

இருவர் தேடியும் காணொணா இயல்பிற்றாய் நீண்ட
அருணை மாமலை அமலனை அன்பொடும் பரசி,
வருபி றப்புஇலை நினக்குஎனச் சுவேதற்கு வழங்கும்
கருணை வாரிதி முதுகிரி நாதனைக் கண்டான். 179

வேதம்ஆ கமம்பிறவும் பயின்றுபொருள்
மூன்றினையும் வேண்டு றாது;
சாதனமும் அடையாது, சத்திசிவம்
இரண்டும்உயிர் மருங்கிற் சார
ஓதும்முத்தி அஞ்செழுத்தும் உணராது
காணமுத்தி உதவும் தில்லை
நாதன்அடி முடிக்கணிந்து 'முத்திதரல்
வேண்டும்'என நவின்று போற்றி, 180

கள்இருக்கும் மலர்அயன்மால் முதலியவா
னவர்வாழக் கடைநாள் தோணி
நள்இருத்திக் காத்தருளும் காழிமா
நகரம்உறை நாதற் போற்றி,
உள்இருக்கும் அன்பினொடும் அருச்சித்துச்
சடாயுவொடும் உயர்சம் பாதிப்
புள்இருக்கும் வேளூரில் புகுந்துதைய
லுடன்அமர்ந்த புனிதற் போற்றி, 181

மடங்கவ்இரா சியில்பொன்னோன் வரும்பருவ
மாசிமதி மகங்கள் தோறும்
குடைந்துதட நீராடிக் கங்கைபவம்
அகன்றுசெலும் குடந்தை போற்றி

---

179. இருவர்-அரி, அயன்; இயல்பிற்றாய்-தன்மையுடையதாகி; அருணை மாமலை-அண்ணாமலை; பரசி-வழிபட்டு; சுவேதற்கு வழங்கிய வரலாறு பழமலைப் புராணத்தில் உள்ளது. முதுகிரி-விருத்தாசலம்.

180. பொருள் மூன்று - அறம் பொருள் இன்பம்; எவ்வகை முயற்சியும் இன்றிக் கண்டாலே முத்தி தருவது தில்லை என்பது நம்பிக்கை.

181. கடைநாள் - ஊழிக்காலத்தில்; ஊழிப்பிரளயம் வந்தபோது தோணியாகித் தேவர் முதலிய உயிர்களைக் காத்த ஊர் ஆதலால், சீகாழி தோணிபுரம் எனப்பெயர் பெற்றது. சடாயுவும் சம்பாதியும் பூசித்த பதியாதலால் புள்ளிருக்கும் வேளூர் எனப்பெயர் பெற்றது. தோணி நள் - தோணி நடுவில்; நாதற்போற்றி-நாதனைப் போற்றி; புனிதற் போற்றி - புனிதனைப் போற்றி.

நடந்துஅனையாள் ஆண்டுதொறும் துலைமதியில்
நீராட நண்ணும் பொன்னி
யிடம்படுதண் துறைமூதூர் மாயூர
நாதன்அடி இறைஞ்சி ஏத்தி. 182

வரகுணனைத் தொடர்ந்தபழி வாயிலில்நின்
றிடப்பணிக்கும் வரத ரான
கருணைஉருக் கொடைஅனைய மருதப்பர்
இருசரணம் கண்ணுற்று ஏத்தி,
ஒருமதலை உயிர்பொலியத் தண்டதரன்
உயிர்தொலைய உதைக்கும் மூர்த்தி
முருகுலவு மலர்த்தடம்சூழ் கடவூரின்
நாதன்அடி முளரி போற்றி. 183

வள்ளேறு பிறைஎயிற்றுச் சனிநளனை
வருத்தாது வாயில் நிற்கும்
நள்ளாற்று நாயகன்தன் அடிக்கமல
மலரதனை நயந்து போற்றிப்,

182. மடங்கல் இராசி - சிங்கராசி; பொன்னோன் - வியாழன்; பருவம் - ஆண்டு; மாசிமதி - மாசி மாதம்; மகங்கள் தோறும் - மக நட்சத்திரந்தோறும்; சிங்கராசியில் வியாழன் வருவது பன்னிரண்டு ஆண்டுக்கு ஒரு முறையே நிகழும். அப்படி வரும் ஆண்டில் கங்கை நதி கும்பகோணம் வந்து நீராடித் தன் பாவங்களைத் தீர்த்துக் கொள்வாள் என்பது புராணம்.

அனையாள் - அந்தக் கங்கை; துலைமதி - ஐப்பசி மாதம்; பொன்னி-காவிரி; இடம்படு தண் துறைமூதூர் - விரிந்த இடமுடைய தண்ணிய துறையமைந்த பழமையான ஊராகிய; கங்கை நதி ஆண்டு தொறும் ஐப்பசி மாதம் காவிரியில் நீராடும் ஊர் மாயூரம் என்பார்கள்,

183. வரகுணன் பழியை வாயிலில் நின்றிடப் பணித்தது திருவிடைமருதூரில்; மருதப்பர் - இடை மருதூர் இறைவன்; ஒரு மதலை - மார்க்கண்டன்; உயிர் பொலிய - உயிர்வாழும் பொருட்டு; தண்டதரன் - எமன்; முருகு உலவு; மணம் வீசுகின்ற; அடிமுளரி - பாததாமரை; அரன் எமனை உதைத்த ஊர் கடவூர் என்பது வரலாறு.

184, வள்ளேறு பிறை எயிற்றுச்சனி - கூர்மை பொருந்திய பிறை போன்று வளைந்த பற்களையுடைய சனி பகவான்; நளனைப் பற்றிய சனி திருநள்ளாற்றில் விலகியது என்பது வரலாறு; பொள்ளாமுத்து - துளையிடப் படாதமுத்து; அனைய நகை - போன்ற சிரிப்பையுடைய; திருவின் காதலன்-திருமால்; விழியின்

பொள்ளாமுத்து அனையநகைத் திருவின்கா
தலன்விழியின் போதுஅர்ச் சிப்ப
உள்ளாநே மியைஈந்த வீழிமிழ
லைச்சிவன் தாள் உன்னிப் போற்றி, 184

போகிமலர்க் கைக்கொண்டு போகிஅருச்
சிக்கும்நல்ல போகி போல
ஆகியபுற் றிடங்கொண்ட அண்ணல்அடி
யிணைமுடிக்கு ஓர்அலங்கல் ஆக்கி,
யோகமுடன் சாரூபம் உறவேண்டி
நந்திதவம் உஞற்றும் மூதூர்
நாகர்தொழும் ஐயாற்று நாயகன்தன்
அடிக்கமலம் நணுகிப் போற்றி. 185

மருமலர்ப்பைங் குழல்உமையாள் விண்டுவொடு
சிலந்திகரி வணங்கிப் போற்ற
அருள்பெருக ஆறெட்டுச் சதுர்யுகம்
நாவல்உறை அமலற் போற்றி,
ஒருமலர்க்காய் உறையூரை அழித்ததிரி
சிரபுரத்தோன் உகள பாதம்
பரிவினுடன் தொழுதேத்தித், திருவரங்கம்
பணிந்து சென்றான் பாண்டிநாட்டில். 186

---

போது - கண்ணாகிய மலரால்: உள்ளா - நினைந்து; நேமியை ஈந்த - சக்கராயுதம் தந்த; திருவீழி மிழலையில் திருமால் தன் கண்ணையே மலராகச் சாத்திச் சிவனிடம் சக்கரம் பெற்றான் என்பது வரலாறு.

185. போகி - சோலைக்குப்போய்; போகி இந்திரன்; போகிபோல-பாம்பு போல; புற்றில் இருப்பதால் பாம்பு போல என்றார்; புற்றிடம் கொண்ட அண்ணல் - வன்மீக நாதன்; அடிமுடிக்கு ஓர் அலங்கல் ஆக்கி - வணங்கி; சாரூபம்- சிவவடிவம்.

186. விண்டு திருமால்; உமையும் திருமாலும் சிலந்தியும் யானையும் வழிபட்ட தலம் திருவானைக்கா; கரி - யானை; நாவல் - திருவானைக்கா; ஒரு மலரின் பொருட்டு உறையூரை அழித்த வரலாறு செவ்வந்திப் புராணத்தில் உள்ளது. திருவரங்கம் பணிந்தது நூலகன்னனின் சமய சமரசத்தைக் காட்டுகின்றது.

மணம் இருக்கும் கமலமலர் வதனஉமை
தனைமணந்த வடிவக் கோலம்
குணம்இருக்கும் குறுமுனிக்குக் காட்டியிடும்
கொடுங்குன்றிற் குழகற் போற்றிப்,
பணம்இருக்கும் பாந்தள்மிசைத் துயில்வோன்பால்
பிரிந்துற்ற பதுமை சேரத்
துணையிருக்கும் விழியருள்செய் திருப்பத்தூர்
அமலன்அடி தொழுது போற்றி. 187

மருப்பு நகம்ஏயும்களிறு
வணங்குங் கானை நகர்பணிந்து,
விருப்பின் மதுரைப் பதிபுகுந்து
விளையாட்டு அறுபான் நான்குஅயர்ந்தே
அருப்பு முலைஅங் கயற்கண்ணி
அம்மைக்கு ஒருபா லினின்அமர்ந்த
பொருப்பைக் குழைத்துப் புரம்பொடித்த
புனிதன் பாதம் தொழுதனனால். 188

எல்லை அனைத்தும் இலிங்கம்என
எண்ணி ஆவி முதற்கோணேர்
செல்லல் தவிரும் பூவணமாம்
திசையின் மயக்கத் தலம்புகுந்து,
வல்லை நிகரும் முலைச்சசிதன்
மணாளன் முதலோர் தொழுதிறைஞ்சும்
அல்லைப் பொருவுஅங் களத்துஅண்ணல்
அடியை அருச்சித்து அருள்பெற்றான். 189

---

*187.* வதனம்-முகம்; திருமணக்கோலத்தை அகத்தியனுக்குக் காட்டிய இடம் கொடுங்குன்றம். குறுமுனி-அகத்தியன்; பணம்-பாம்புப் படம்; பாந்தள் மிசைத் துயில்வோன்-திருமால்; பாந்தள்-பாம்பு; பதுமை-திருமகள்; திருமாலும் திருமகளும் ஒரு காலத்தில் பிரிந்து, திருப்பத்தூரில் ஒன்றுசேர்ந்தனர் என்பது வரலாறு.

*188.* மருப்பு நகம் ஏயும்-கொம்புகள் உடைய மலை போன்ற (இல்பொருள் உவமை); களிறு-யானை; கானை-காளையார் கோவில்; அறுபான் நான்கு - அறுபத்து நான்கு; விளையாட்டு அயர்ந்து-திருவிளையாடலைச் செய்து; அருப்பு முலை-மலர் அரும்பு போன்ற முலை; அங்கயற்கண்ணி - மீனாட்சியம்மை; ஒரு பாலினின் அமர்ந்த-ஒரு பக்கத்தில் வீற்றிருந்த; பொருப்பைக் குழைத்து-மேருவை வில்லாக வளைத்து; புரம் பொடித்த-முப்புரத்தை எரித்துப் பொடியாக்கிய.

*189.* செல்லல்-துன்பம்; வல்லை நிகரும் முலைச்சி-சூதாடு கருவி போல் குவிந்துள்ள முலையையுடைய இந்திராணி; மணாளன் - இந்திரன்; அல்லைப் பொருவு அங்களம்-இருள்போன்று கருத்த கழுத்து; அண்ணல்-சிவபெருமான்

### தூலகன்னன் வில்வவனம் அடைதல்

கடிஅம் பொழில்சூழ் பூவனத்தை
அகன்று கடிது கீழ்த்திசைபோய்,
வடிவார் தூல கன்னன்விரை
வளங்கூ விளத்தண் வனம்குறுகிப்
பொடியார் மேனி முனிக்கணத்தைப்
போற்றி நடுவண் புகும்போழ்தில்,
அடியார்க் கெளியன் ஆகிஉறை
அருள்வா ரிதியை எதிர்கண்டான். 190

### தூலகன்னன் தவம்

மதிகள் கோடி உதித்தஎன
வளர்த லாற்கண் வழுக்கலுற
அதிரும் நதியாம் கங்கைஅணி
அமலன் அழகை அதிசயித்து,
முதிர்அன்பு உவகை தலைக்கொள்ளப்
பரவி விழிகள் மூகிழ்த்திடவே
ததையும் உரோமம் புளகிப்பச்
சலியாத் தாணு எனநின்றான். 191

### இறைவன் ஆணை

இறைவன் அருளால் ஆண்டுவிண்மீது
எழுந்தது ஒருவாக்கு 'அரசேகேள்!
நறிய கிரணச் சந்திரன்முன்
கிரேதா யுகத்தின் நண்ணிஉடற்
குறைதீர்ந்து எமக்கு வான்தடவும்
கோயில் அமைத்தான் பிரளயத்தில்
அறவும் அழிந்தது அதைமீண்டும்
அமைத்தி!' என்ன அறைந்ததுவே. 192

---

190. கடிஅம் பொழில்-மணம் பொருந்திய அழகிய சோலை; கடிது-விரைந்து; விரை வளர்-மணம் வளருகின்ற; கூவிள வனம்-வானர வீர மதுரை; பொடியார்-திருநீறு அணிந்த; நடுவண்-அந்த வனத்தின் நடுவில்; அருள்வாரிதி-சிவபெருமான்.

191. கண் வழுக் கலுற - கண் பார்வை வழுகிப்போக; தலைக் கொள்ள - அதிகம் உண்டாக; விழிகள் முகிழ்த்திட-கண்கள் மூடிக்கொள்ள; ததையும் - நெருங்கிய; சலியாத் தாணு என-அசையாத தூண்போல.

192. வாக்கு-அசரீரி வாக்கு; நறிய-நல்ல; உடற் குறை-கய நோய்; அறவும்-முழுவதும்; அமைத்தி-அமைப்பாயாக.

**தூலகன்னன் ஆலயம் அமைத்தல்**

எனையும் பொருளாய் நம்பணிசெய்
கென்னத் திருவாக்கு எழுந்ததென
மனதும் மகிழ்ந்து, தான்கொணர்ந்த
மாழை அனைத்தும் ஈந்து,கற்கள்
துனைவிற் கொணர்ந்து சினகரத்தை
முன்போல் புதுக்கித், தொன்னகர்போல்
தனது பெயரால் பட்டினமும்
சமைத்துத் தொண்டின் தலைநின்றான். 193

**தூலகன்னன் செய்த பூசை**

குணபால் ஏகி அருளிருக்கும்
கோதில் சோமன் தடத்தினிலும்
தணியா நீத்த வேகவதி
தனிலும் மூழ்கிப், பூதிதரித்து,
அணிவார் பவத்தை அகழ்ந்தெறியும்
அக்கம் புனைந்து,அஞ் செழுத்துஎண்ணிப்
பணஆ டரவம் மருங்கு அசைத்த
பரமன் திருமுன் போந்தனனால். 194

**இறைவன் வெளிப்படல்**

ஆர்வம் பெருக விதிப்படியே
அண்ணல் அடிகள் பூசைசெய்து,
வார்தங் கியமென் முலைஉமையாள்
மலர்மென் பதமும் அருச்சித்துச்

---

193. பொருளாய் - பொருளாக எண்ணி; மழை - பொன்; துனைவில் - விரைவாக; சினகரத்தை - கோவிலை; தொல்நகர்போல் - சந்திரன் அமைத்த பழைய நகரம்போல; சமைத்து - உண்டாக்கி.

194. குணபால் - கிழக்கே; சோமன் தடம் - சந்திரதீர்த்தம்; தணியா நீத்த வேகவதி - அடங்காத வெள்ளத்தையுடைய வையைநதி; பூதி - திருநீறு; பவத்தை அகழ்ந்தெரியும் - பிறவியைப் பேர்த்து எறிகின்ற; அக்கம் - உருத்திராக்கம்; பண ஆடரவம் - படத்தையுடைய பாம்பு; மருங்கு அசைத்த-இடையில் கட்டி.

195. விதிப்படி - முறைப்படி; வார்தங்கிய - இரவிக்கை அணிந்த; சீர் நின்று இயம்பும் பொழுததனில் - இறைவன் புகழைக் கூறிய போது; வெளிவந்து-வெளியிலே வந்து; எளிவந்து என்றும் பிரிக்கலாம்; எளிவந்து - எளிதாக வந்து; கார்கொள் - கருநிறம்; களம் - கழுத்து.

சீர்நின் றியம்பும் பொழுததனில்
திங்கள் முடியும் மலர்முகமும்
கார்கொள் களமும் திருவடியும்
காண வெளிவந்து எதிர்நின்றான். 195

### தூலகன்னன் துதி

'நீதி வழுவாது அரசுபுரி
நிருப! வேண்டு வனயாவை
ஓது'கென்ன 'உலகமெலாம்
ஒருகோல் ஓச்சிப் புரந்ததனால்
மாது முதல விடயத்தின்
மூழ்கி மூழ்கி மனம்சலித்தேன்.
வேத முதலே! நினதுபதம்
விளைபே ரின்பம் பெறல்வேண்டும்'. 196

### இறைவன் அருள்செய்து மறைதல்

என்ற லோடும் சோமேசன்
இசைப்பான்: 'எமது வில்வவனம்
துன்றித் தவத்தை நிரப்புவையேல்
தருதும் அழியாச் சுகம்என்ன
நன்றால் எனஅஞ் சலிமுகிழ்த்துப்,
பணிந்தான். இருத்தி!' எனநவின்று
பொன்றா வதவின் பயனாகும்
புனித இலிங்கத் திடைமறைந்தான். 197

### தூலகன்னன் தவம் செய்து வீடு பெறல்

அருள்செய் பரிசே வில்வவனம்
அணுகி விடயம் அடக்கிநெஞ்சைப்
பொருவில் ஞான வெறுவெளியிற்
பொருத்திக் காட்ட மதுபோலப்

---

196. நிருப - மன்னனே; ஓதுகென்ன - சொல்லுக என்று; மாது முதல விடயத்தின் - பெண்ணாக முதலிய விஷய சுகங்களில்.

197. துன்றி - நெருங்கி; அழியாச் சுகம் தருதும் - அழியாத இன்பம் தருவோம்; நன்றால் என - நல்லது என்று: அஞ்சலி முகிழ்த்து - கைகூப்பி; இருத்தி என நவின்று - இங்கேயே இரு என்று கூறி; பொன்றா - அழியாத.

பிரிவின் றிலகி அருளாலே
உள்ளம் சமித்து வீடுபெற்றான்
தருவும் மழையும் நாணமுற
உதவும் தடக்கைத் தார்வேந்தன். 198

**பலஸ்ருதி**

இக்கதை யாவர் இயம்பினர் அன்னோர்
நக்கன்ம லர்ப்பதம் நண்ணுவர் மன்னோ.
உக்கிர பாண்டியன் பூசைஉ ஞற்றும்
அக்கதை கேள்என வேஅறை குற்றான். 199

மூன்றாவது தூலகன்னன் சாயுச்சியம் பெற்ற
சருக்கம் முற்றும்.

## சருக்கச் சுருக்கம்

**உக்கிர பாண்டியன் பூசைசெய்ததும் பலராமன் பூசை செய்ததும் உரைத்த சருக்கம்.**

இறைவன் சோமசுந்தரக் கடவுளாக மதுரையை ஆண்ட காலத்தில் உக்கிரனை மகனாகப் பெற்றான். அவனுக்கு முடிசூட்டி, அவன் கையில் செண்டு, வேல், வளை ஆகிய ஆயுதங்களைத் தந்து மறைந்தான்.

உக்கிரன் ஆட்சிக்காலத்தில் வருணன் மதுரையை அழிக்க வந்தான். உக்கிரன் கடல்மேல் வேலை ஏவி வருணனை விரட்டிப் பின் தொடர்ந்தான். வழியில் வில்வவனம் தென் பட்டது. சோமேசனை வணங்கி மதுரையை மீட்டான்.

பின்னொரு காலத்தில் பாண்டிநாட்டில் பஞ்சம் வந்தது. உக்கிரன் வேட்டையாடப் போனபோது, மேகங்கள் மேய்ந்து கொண்டிருப்பதைக் கண்டு அவற்றைப் பிடித்துச் சிறை

---

198. அருள்செய் பரிசு - இறைவன் கூறிய வண்ணம்: விடயம் அடக்கி - ஞான வெறு வெளியில் - ஞான ஆகாசத்தில்; காட்டம் - மரக்கட்டை; உள்ளம் சமித்து - மனம் நிலை நிறுத்தி; தருவும் மழையும் நாணமுற உதவும் தடக்கைத் தார் வேந்தன் - கற்பகதருவும், மேகமும் கொடைக்கு ஒவ்வாமையால் நாண மடையும்படி கொடை உதவுகின்ற தூலகன்னன்.

199. நக்கன் - சிவன்; உஞற்றும் - செய்த; அறைகுற்றான் - சொல்லத் தொடங்கினான்;

யிட்டான். மேகங்களை மீட்க இந்திரன் படையெடுத்தான். உக்கிரன் வளைவீசி இந்திரனை வென்றான். பின்னர் ஒருவேளாளன் பிணைதந்தமையால் மேகங்களை விடுவித்தான்.

பின்னும் ஒருகால் மழை பொய்த்தது. செல்வம் பெறுவதற்காகப் பொன்மலையை அடைந்தான் உக்கிரன். பொன்தர மறுத்த மேருவைச் செண்டினால் அடித்து வென்றான். பின் உக்கிரன் தன் மகனுக்கு முடிசூட்டி சிவன் அடி சேர்ந்தான்.

* * * * *

பலராமன் தீர்த்த யாத்திரை புறப்பட்டு நைம்மிசம் வந்தான். சூதன் எழுந்து வணங்காமை கண்டு அவனைக் கொன்று விட்டான். பின்னர் முனிவர் வேண்டியதால், தர்ப்பையைச் சூதன் ஆக்கினான், சூதனைக்கொன்ற பாவம்தீர வில்வவனம் வந்து இறைவனைப் பூசித்தான். தன் பாவம் தீர்ந்து துவாரகைக்கு மீண்டான்.

## உக்கிர பாண்டியன் பூசை செய்ததும் பலராமன் பூசை செய்ததும் உரைத்த சருக்கம்

**இறைவன் பாண்டியன் ஆனது**

மருவார் உடலின் தசைசுவைத்துப்
புலவு மாறா வடிவேற்கை
உருவ்ார் செழியன் செய்தவத்தால்
உமையாள் அவற்குஓர் மகவாகப்,
பிரியாது உறையும் மயிலைமலைப்
பெம்மான் போந்து மணம்புரிந்து
திருவார் பாண்டி நாட்டினுக்குஓர்
திகிரி உருட்டிக் காத்தனனால். 200

200, மருவார்-பகைவர்; புலவு மாறா-புலால் நாற்றம் நீங்காத; உருவார் செழியன்-அழகு நிரம்பிய பாண்டியன்; ஓர் மகவாக-தடாதகைப் பிராட்டியாக அவதரித்தலால்; போந்து-வந்து; ஓர் திகிரி உருட்டி-செங்கோல் செலுத்தி,—

### உக்கிர பாண்டியன் பிறப்பு

நன்மை தழைப்ப நவைநீங்க
மனுவும் மாலும் நாணமுற
தென்னர் மரபு தனிவிளங்கச்
செங்கோல் செலுத்தி வரும்நாளில்
கன்னல் குதலை உமைவயிற்றில்
கதிர்வேல் முருகன் இவனேஎன்று
உன்னத் திறல்சேர் உக்கிரன்என்று
ஒருபேர் மதலை உதித்தனனால். 201

### உக்கிர பாண்டியனுக்கு இறைவன் படைதருதல்

வண்டு வீழ்ந்து தொடர்யானை
மணவூர்க்கு இறைவன் வரத்துஈன்ற
கண்டு புளிப்ப இனிக்கும்மொழிக்
காந்தி மதியை மணம்புணர்த்திக்
கொண்டல் ஊர்தி வருணன்இகல்
கொள்வர். மேரு செருக்கடையும்
செண்டு வேல்ஆழியின்அடர்த்தி
சிறுவா! எனஅப் படைகொடுத்து. 202

---

201. நவை-குற்றம்; மனு-மனு அரசன்; மால் - காக்கும் கடவுள் ஆகிய திருமால். சிவபெருமானின் செங்கோல் நீதி கண்டு மனுவும், காக்கும் செயல் கண்டு திருமாலும் நாணமுற்றனர் என்க. மனுவினும் சிறந்த நீதியும், திருமாலினும் சிறந்த காப்புத் தொழிலும் மேற்கொண்டான் என்பது கருத்து. கன்னல் குதலை உமை-கரும்பு போன்ற குதலை மொழியுடைய உமாதேவி; உன்ன-எண்ணும்படி; மதலை-மகன்.

202. வண்டு வீழ்ந்து தொடர் யானை - மதநீர் பருகுதற்கு வண்டுகள் விரும்பித் தொடர்கின்ற யானையையுடைய; வரத்து ஈன்ற-வரத்தினால் பெற்ற; கண்டு புளிப்ப இனிக்கும் மொழி - கற்கண்டும் புளிக்கும்படி இனித்த சொற்களையுடைய; மணம் புணர்த்தி-மணம் செய்வித்து.

கொண்டல் ஊர்தி-இந்திரன்; இகல்-பகைமை. இந்திரனும் வருணனும் பகை கொள்வர். மேரு மலை செருக்கடையும். இந்திரனைச் செண்டாலும்: வருணனை வேலாலும்; மேருவை ஆழியாலும் வெல்வாயாக என்று கூறி, சிவபெருமான் உக்கிரபாண்டியனுக்கு, செண்டு, வேல், ஆழியாகிய ஆயுதங்களைக் கொடுத்தான் என்று பொருள் காண்க. செண்டு-ஓர் ஆயுதம்.

### இறைவன் மறைதல்

இமையோர் இறைஞ்சிக் குடந்தம்பட்டு
ஏத்தும் எம்மான் இறைமையும்ஈந்து
அமைஆர் தடந்தோள் இயற்கைமணத்து
ஐம்பால் அம்மென் திதலைமுலை
உமையா ளோடும் கோயில்புக்கு
மறைந்தான், அதன்பின் உக்கிரன் தான்
கமைஆர் பூரு ரவாஎனும்தம்
குலநா யகன்போல் பார்காத்தான். 203

### உக்கிரன் 96 வேள்வி செய்தல்

பிருது மகிபன் எனப்பூவின்
வளங்கள் பெருக்கி நிதிஈட்டிப்
புரவி மகம்நான்கு ஒழிநூறு
புரிந்தா னாக, உளம்பொங்கி
அரசின் இலையிற் புடைஅகன்ற
அம்மென் கோட்டுப் பருமஅல்குற்
குரவு கமழும் குழற்சசிதன்
கொழுநன், வருணன் தனைக்கூவா, 204

### இந்திரன் வருணனிடம் வேண்டல்

உவலை யாக்கைச் சிறுபடைய
தமிழ்நாடு ஆளும் ஒருவேந்தன்
கவனத் துகர மேதமகம்
தொண்ணூற் றாறு கடிதயர்ந்தான்

---

203. குடந்தம்பட்டு - மண்டியிட்டு; எம்மான்-சிவபெருமான்; இறைமையும்-அரசாட்சியும்; அமையார் தடந்தோள் - மூங்கில் போன்ற தோள்கள்; இயற்கை மணத்து ஐம்பால் - இயல்பாகவே மணமுடைய கூந்தல்; உமையார் கூந்தலுக்கு இயல்பாக மணம் உண்டு என்பது நக்கீரன் வரலாற்றால் உணரலாம். அம்மென் திதலைமுலை - அழகிய மெல்லிய பசலை யூர்ந்தமுலை; கமை ஆர்-பொறுமை மிக்க; பூருராவ - பாண்டியரின் குத்லதுமுன்னோன்.

204. பிருதுமகிபன் என - பிருது என்னும் அரசன் போல். பிருது வரலாற்றில் வரும் சிறந்த அரசன். அவன்பெயரின் தொடர்பால் உலகம் பிருதிவி எனப்பட்டது. புரவிமகம்-அசுவமேதயாகம். நான்கு ஒழி நூறு 100 – 4 = 96. புரிந்தானாக - உக்கிர பாண்டியன் செய்தமையால். உளம் பொங்கி - இந்திரன் கோபம் கொண்டு. அரசின் இலை முதல் குழல் வரையுள்ள தொடர்கள் சசி தேவிக்கு அடைகள். சசி - இந்திராணி. கொழுநன்-இந்திரன். கூவா-அழைத்து.

குவளைத் தடங்கண் சசியினொடும்
பொன்னாடு அடையும், குறைநிரப்பின்
அவனை மதுரைப் பதியினுடன்
அழித்துஎம் அரசு தருதி! என்றான். 205

**வருணன் மதுரையை அழிக்கப் புகுதல்**

அருவி மதத்துப் புகர்முகத்து
நாற்கோட்டு அயிரா வணத்துலவும்
தருவின் இனிய நறுந்துணர்ப்பூந்
தாரான் மாற்றம் தலைக்கொண்டு,
விரிதண் கதிர்கால் தரும்குடக் கூன்
பணிலம் உயிர்த்த வெண்முத்தம்
திரையில் தவழ்ந்து கரைசாரும்
கடலுக்கு இறைவன் மிகச்சினந்து. 206

சுருதி இறைகொள் மதுரைநகர்
சுற்றி வளைவ. தனைஉள்ளம்
கருதி னான்அந் நிலைப்புணரி
கனைத்துக் ககனம் உறப்பொங்கித்
திரைகள் போக்கிப் பகைமாண்பு
தெரியாச் சிறியோர் செயல்ஒப்ப
வருதல் புரிந்தது உயிர்க்குயிராம்
மதுரைப் பெருமான் அஃதுஉணர்ந்தான். 207

---

205. உவலையாக்கை - பொய்யான உடல். சிறு படைய - சிறிய ஆயுதங்களையுடைய. ஒரு வேந்தன் - உக்கிரபாண்டியன். கவனத் துரக மேத மகம் - விரைவையுடைய அசுவமேதயாகம். கடிது அயர்ந்தான் - விரைந்து செய்தான். சசியினொடு - இந்திராணியுடன், பொன்னாடு - தேவலோகம். அடையும் - அடைந்து விடுவான். குறை நிரப்பின் - மீதமுள்ள நான்கு யாகங்களும் செய்து விட்டால். குறை நிரப்பின் அடையும் என்று கூட்டுக. எம் அரசு - எனது பொன்னாட்டு ஆட்சியை.

206. அருவிமதம் - அருவி போன்ற மதம். புகர் - புள்ளி. கோடு - தந்தம், அயிராவணம் - இந்திரன் யானை. தரு - கற்பகம். தாரான் - இந்திரன். மாற்றம் - ஆணை. தலைக்கொண்டு – தலைமேற் கொண்டு. தண்கதிர் - நிலவு. கால்தரும் - சொரிகின்ற. குடக்கூன் பணிலம் - குடம் போன்ற கூனமாகிய சங்கு. உயிர்த்த-சொரிந்த. திரையில் - அலையில். கடலுக்கு இறைவன் – வருணன்.

207. சுருதி இறைகொள் - வேதங்கள் குடிகொண்ட, கருதினான் -வருணன் எண்ணினான். அந்நிலை - அந்நிலையே. புணரி - கடலானது. கனைத்து - முழங்கி. ககனம் உறப்பொங்கி - வானத்தளவும் உறும்படி பெருக்கெடுத்து. திரைகள் போக்கி - அலையெழுப்பி. வருணன் மதுரைமேல் வந்ததற்கு. பகைமாண்பு தெரியாச் சிறியோர் செயல் உவமை.

### இறைவன் உக்கிரன் கனவில் கூறியது

சித்தர் உருவாய்க் கனவினில்போய்ச்,
செம்ம லே!இவ் அரைஇரவில்
தத்தும் திரைவா ரிதிமதுரை
தன்னை அழிப்ப நணுகியதால்
வைத்த நெடுவேல் திரித்துஏவிக்
கடலை அடர்த்தி! எனவழங்கி
முத்திக்கு ஒருவித் தாகிஉறை
முதல்வன் ஞானாம் பரம்மறைத்தான். 208

### உக்கிரன் வேல் எறிதல்

துண்ணென்று இருகண் விழித்தெழுந்து,
துன்னார் உயிரைப் பருகிஅன்றி
மண்ணும் தடறு புகுந்தறியா
வடிவேல் எடுத்து வலம்தாங்கிப்,
பண்ணும் இரதம் மீக்கொண்டு
நகரின் புறம்போய்ப் பார்ப்ப,அவண்
நண்ணிற்று அணுக அறைகூவி
நகைத்து நகைவேல் திரித்துஎறிந்தான். 209

ஞானம தடையப் போகம்
அகன்றெனப், புலிங்கம் நண்ண
வான்உயர் கின்ற பஞ்சு
மாமலை தீதல் என்ன

---

208. செம்மலே - உக்கிரபாண்டியனே! அரை இரவில் - பாதிராத்திரியில். தத்தும் திரைவாரிதி – தாவுகின்ற அலைகளையுடைய கடல். அழிப்ப-அழிப்பதற்கு. நணுகியது - அடைந்தது, வேல் திரித்து ஏவி - வேலைச் சுழற்றி வீசி. கடலை அடர்த்தி என – கடலை அடக்குவாயாக என்று. வழங்கி – கூறி. ஞான அம்பரம் - ஞான ஆகாசத்தில்.

209. துண்ணென்று - விரைந்து. துன்னார் - பகைவர். மண்ணும் தடறு- அணி செய்த ஆயுத உறை. பண்ணும் இரதம் - அலங்கரிக்கப் பட்டதேர். மீக்கொண்டு - ஏறி. அவண் நண்ணிற்று அணுக - அவ்விடத்துக் கடல் வந்தது. அவ்வாறு வருதலும். நகைத்து - சிரித்து. நகைவேல் - மின்னுகின்றவேல். திரித்து எறிந்தான் - சுழற்றி வீசினான்.

210. ஞானம தடைய - ஞானம் வந்தவுடன். போகம் அகன்றென - உலகப்பற்று நீங்கியது போல, புலிங்கம் நண்ண - தீப்பொறி வந்தவுடன். பஞ்சு மாமலை தீதல் என்ன - மலைபோன்ற பஞ்சுக் குவியல் எரிந்து போவதுபோல, ஈனர்தம் திசைகள் சேர - அற்பர் வாழும் திசையைச் சேர்தலால். திரு இறுதல் என்ன - செல்வம் அழிவதைப் போல.

மான்அமர் கரனைப் போற்ற
வல்வினை மாய்தல் என்ன
ஈனர்தம் திசைகள் சேரப்
பெருந்திரு இறுதல் என்ன. 210

**கடல் வறந்து ஓடுதல்**

இகலுறு பாம்பு சீற
எலிக்குழாம் இரிதல் ஏய்ப்ப
மிகலுறு ஞானம் சேர
விளிந்திடும் காமம் ஒப்பப்,
பகர்சிவ தருமம் சேரப்
பவம்கெடு மாறு நேர
உருகதிர்ச் செவ்வேல் செல்லக்
கடல்வறந்து ஓடிற்று அன்றே. 211

**உக்கிரன் துரந்து சேறல்**

'வேலையை வேலை தாவில்
விலக்குவார் இல்லை' என்னும்
ஞாலமேல் உரையைக் காய்ந்து
நவையறு வேலை ஏவி,
பாலலோ சனன்வாழ் கூடற்
பதியையும் அழிப்ப எண்ணும்
சால்பிலா மகவான் வெள்கத்
தண்கடல் துரந்து சென்றான். 212

**வில்வவனம் அடைதல்**

மலைஎன மருளு வீங்கு
வனப்புவீற் றிருந்த கொம்மை
முலைஉழுது அலர்த்தும் பைந்தார்ப்
பஞ்சவன் முடுக்கிப் பின்போய்,

---

211. இகல்உறு - பகை கொண்ட. இரிதல் - ஓடுதல். ஏய்ப்ப - போல. விளிந்திடும் - அழிகின்ற. பவம் - பிறவி. உருகதிர்ச் செவ்வேல் - ஒளி உதிர்க்கின்ற செவ்விய வேலாயுதம். வறந்து - சுவறி.

212. வேலையை - கடலை. வேலை-கடல். ஞாலமேல் உரை-பழமொழி. பாலலோசனன் - சிவபெருமான். கூடற்பதி - மதுரை. அழிப்ப - அழிப்பதற்கு. சால்பிலா - பெருந்தன்மையில்லாத. மகவான்வெள்க - இந்திரன் நாணும்படி. கடல் துரந்து - கடலை (வருணனை) விரட்டி.

கலவநன் மயில்கள் ஆடும்
வில்லுவக் கான்செல் காலை,
நிலைபெறு விமானம் தோன்ற
நேசத்தால் பணியச் செல்வான். 213

உக்கிரன் இறைவனை வழிபடல்

பனிமதித் தடத்தின் மூழ்கிப்,
பால்வெண்ணீறு உடம்பிற் சேர்த்திச்
சினகரம் புகுந்து, சத்தி
சிவன்கழல் பணிந்து போற்றிக்
கனியும்அன் புடன்நேர் நின்று,
புலன்வழிக் கபாடம் பூட்டிப்,
புனிதநல் லறிவை ஐயன்
பூங்கழல் துணையில் சேர்த்தான். 214

இறைவன் வெளிப்படல்

முளிதரு என்ன நின்ற
அவன்முனம், மூரி யேற்றின்
நளிமதிச் சடையோன் வந்து
நணுகலும், விழித்து நோக்கிக்
களிசிறந்து 'ஐய! போற்றி!
கனிமொழி பாக போற்றி!
அளியினால் உலகம் காக்கும்
அமலனே போற்றி!' என்றான். 215

---

213. மலைஎன மருள வீங்கி - மலையோ என்று வியக்கும்படி பருத்து. வனப்பு வீற்றிருந்த - அழகு குடியிருந்த. கொம்மை முலை - வட்டமான முலை. உழுது அலர்த்தும் பைந்தர்ப் பஞ்சவன் - (முலைகள்) பதிந்து அலரச் செய்யும் பசிய மலர் மாலை அணிந்த பாண்டியன். முடுக்கி - வருணனை ஓட்டி விட்டு. கலவம் - (மயில்) தோகை. வில்லுவக்கான் - வானர வீரமதுரை. விமானம் - கோயில் விமானம்.

214. பனிமதித்தடம் - குளிர்ந்த சந்திர தீர்த்தம். சினகரம் - கோயில். சத்தி - ஆனந்தவல்லி. புலன் வழிக்கபாடம் பூட்டி - புலன் வழியாகிய கதவைச் சாத்தி. அறிவை கழல் துணையில் சேர்த்தான் என்க. கழல் துணை-இருபாதங்கள்.

215. முளிதரு என்ன - பக்தியினால் அசையாமல் மரம்போல் நின்ற. மூரியேற்றின் - வலிய நந்திவாகனமுடைய. நளிமதிச் சடையோன் - சிவன் நணுகலும் - வருதலும். அளியினால் - கருணையால்.

அத்தனும் வியந்து, 'வேண்டும்
வரம்எவன் அளிப்பம்' என்ன,
மத்தமால் களிற்றான் கூறும்
'மதுரையை அழிப்ப வந்த
நத்துறு கடலை வென்றேன்
மீண்டது நான்பின் போந்தேன்
இத்தலை நிலையம் கண்டு
தொழவந்தேன்' எனலும் ஈசன். 216

இறைவன் உரை

'செந்திருக் கல்வி கேள்வி
நிறைந்திடும் சிறுவ! காட்டில்
புந்தியின் அறியா வண்ணம்
புரிந்ததுஒன்று உண்டால். இங்ஙன்
உந்திய தேரால் வில்வத்து
ஓர்இலை சாய்ந்து மாய்ந்தது.
அந்தஓர் பாவம் நின்னை
அடைந்தது'என்று உரைத்துப் பின்னும், 217

'இத்தலைத் தருமம் பாவம்
எட்டுணை இயற்றி னாலும்
வைத்தவேற் கரத்து மைந்த!
மலைத்துணை யாகும் சித்த
சுத்தியாய் எமையும் எம்மில்
தோன்றிய கானை மேவும்
நித்தர்கள் தமையும் பூசை
செய்திடில் நீங்கும்' என்ன 218

---

216. அத்தன் - அரன். வரம் எவன் - வரம் யாது. மத்தமால் களிற்றான் - உக்கிரபாண்டியன். கூறும் - கூறத் தொடங்கினான். அழிப்ப - அழிக்கும் பொருட்டு. நத்துஉறு கடல் - சங்குகள் பொருந்திய கடல். மீண்டது - கடல் பின்னிட்டது. இத்தலை - இவ்விடத்து. நிலையம் - கோயில்.

217. உந்திய தேரால் - நீ செலுத்திய இரதத்தால்.

218. வைத்தவேற் கரத்து மைந்தன் - உக்கிரபாண்டியன். சுத்தியாய்-தூய்மையுடன். கானை - காளையார் கோவில். நித்தர்கள் - கடவுளர். என்ன-என்று அரன் கூறுதலும்.

உக்கிரன் உரை

ஐய !நின் பூதி ஒன்றே
அலகில்பல் பவங்கள் நீக்கி,
மெய்யுறு கதியில் சேர்க்கும்
எனமறை விளம்பும். நீயே
கையகப் பட்டு நிற்பக்
கண்டுளேற் குளகொல் பாவம்?
மெய்யினில் பூசி என்று
பணித்ததுஒர் விளையாட் டாமால். 219

உக்கிரன் மகவரம் பெறுதல்

'பிதிர்கள்தம் கடன்கள் ஆற்றி
என்பெயர் பேணிப், பின்பார்
வதிபவர் தம்மைக் காத்து,
வகுத்தநன் முறைகோ டாமல்
அதிர்கடல் உலகம் தாங்கும்
மைந்தனை அருள்தி!' என்றான்.
பொதுநடம் புரிகின் றோன்அவ்
வரம்கொடுத்து இலிங்கம் புக்கான். 220

உக்கிரன் பூசைசெய்தல்

ஈசனார் மறைந்த பின்னர்,
இளங்களி வண்டும் தேனும்
மூசுபூந் தாம மார்பன்,
முக்கனி பால்தேன் கன்னல்
வாசமென் மலர்பூண் ஆடை
வருவித்துப் பூசை யாற்றி
நேசமோடு அளவில் லாத
நிதிவிளை நிலமும் ஈந்து. 221

219. பூதி - திருநீறு. அலகில் - கணக்கற்ற. மெய்யுறு கதி - வீடுபேறு. மெய்யினில் பூசி-உண்மையுடன் பூசனை செய்வாயாக. பணித்தது-சொன்னது விளையாட்டுஆம்-விளையாட்டுக்காகச் சொன்னதே ஆகும்.

220. பிதிர்கள் - தென்புலத்தார். பார்வதிபவர்-உலக மக்கள். அருள்தி - கொடுப்பாயாக. பொது நடம்புரிகின்றோன் - அரன்.

221, வண்டு தேன் – வண்டு வகைகள். மூசு - மொய்க்கின்ற. தாம மார்பன் - உக்கிரபாண்டியன். வருவித்து - வரவழைத்து. நிதிவிளை நிலம்-நிதியும் விளை நிலங்களும். ஈந்து - அந்த ஆலயத்துக்கு மானியமாகக் கொடுத்து.

**உக்கிரன் கானை நகர் சேறல்**

திருப்பணி பலசெய்து அம்பொன்
பரிசினர் செங்கை நல்கிக்
குருக்கொள்வெண் பிறைசேர் சென்னிக்
கூத்தனை விடைகொண்டு அப்பால்
அருத்தியின் இரதம் ஏறிக்
கானையின் ஏகி அங்கண்
மருத்தழை வில்வம் சூடும்
வரதரைப் பூசை செய்தான். 222

**கானைநகர் இறைவனுக்குப் பலபொருள் தருதல்**

அன்னவர் தமக்கு வையம்
அளவிலா நிதியம் கைம்மாப்
பன்னக உரிமெல் லாடை
பல்மணி மூசு தாமம்
பொன்அணி நிழல்செய் பிச்சம்
பொன்தசும்பு இன்ன தந்தான்
கல்நவில் திரண்ட திண்தோள்
கன்னிநாடு ஆளும் வேந்தே. 223

**மதுரை மீளுதல்**

மலரொடு சாந்தம் தோயும்
மார்பினில் அணைதற்கு இந்த
முலையினை இடையூறு என்று
முனியும்இல் கிழத்தி சீவன்

---

**222.** பரிசினர் - யாசகர். பரிசினர் செங்கை அம்பொன் நல்கி என்று கூட்டுக. குருக்கொள் - ஒளிகொண்ட. கூத்தனை - சிவபெருமானிடம். அருத்தியின் - விருப்புடன். கானையின் - காளையார் கோவிலுக்கு. மருத்தழை-மணம் தழைகின்ற. வரதர் - சிவபெருமான்.

**223.** அன்னவர் தமக்கு - காளையார் கோவில் இறைவர்களுக்கு, வையம் - விளைநிலம். கைம்மா - யானை. பன்னக உரிமெல் ஆடை - பாம்பின் சட்டை போன்று மெல்லிய ஆடைகள். பல்மணி மூசு தாமம் - நவமணிகளால் செய்யப் பட்ட மாலைகள். பொன் அணி - தங்க நகைகள். பிச்சம் - குடை. பொன் தசும்பு - பொற்குடம், இன்ன - முதலியவை. கல் நவில் - கல்போன்று உறுதி யாகிய. கன்னி நாடு - பாண்டிய நாடு. வேந்து - உக்கிரபாண்டியன்.

**224.** சாந்தம் - சந்தனம். மார்பினில் - கணவன் மார்பில். இடையூறு - தடை. முனியும் - அந்த முலையை வெறுக்கின்ற. இல்கிழத்தி - மனைவி. சீவன் நிலை பெறற்கேயோ - பிரிவினால் நேர்ந்த உயிர்நிலை பெறும் பொருட்டோ? நிமலனை - அரனை. கோநகர் - தலைநகர்: மதுரை.

நிலைபெறற் கேயோ! அன்றி
நிமலனைப் பணிதற் கேயோ!
குலவுதேர் தூண்டித் தூன்தன்
கோநகர் கடிதிற் போனான். 224

மழை மறுத்தது

மந்திர முதலோர் கேட்ப
நிகழ்ந்தமை வழங்கிப், பார்மேல்
இந்திரன் இவனே என்னக்
களிசிறந் திருக்கும் காலம்,
கந்தரம் அருகிப் பாரின்
விளைவுஅஃகக், கருதி நொந்து
சந்தன வரையின் ஏகித்
தமிழ்முனி தன்னைக் கேட்டான். 225

உக்கிரன் இந்திரனை அடைதல்

'திங்கள்நோன்பு இயற்றி அந்தப்
பலத்தினில் சுவர்க்கம் சென்று
புங்கவர்க்கு அரசைக் கேட்பின்
அளிக்குவன் போதி!' என்ன
அங்கவன் அதனை ஆற்றி
வான்மிசை அடைய, ஓர்ந்து
தங்கஓர் தவிசு வேறு
சமைத்தலும் சாராது அங்கண். 226

---

வளியிடைப் போழாத முயக்கு என்னும்படி கணவன் மார்பை இறுக அணை வதற்குப் பருத்த முலைகள் தடை என்று அம்முலைகளை வெறுப்பவள் என்க. அவளின் முலைப் பெருமையும் காதல் ஆழமும் கூறப்பட்டது.

225. முந்திர முதலோர்-அமைச்சர். நிகழ்ந்தமை வழங்கி-அதுகாறும் நடந்த வற்றைக் கூறி. கந்தரம் அருகி-மேகங்கள் குறைந்து; மழை இல்லாமல். விளைவு அஃக - விளைவு குறைந்ததால். சந்தனவரை-பொதிய மலை. தமிழ்முனி-அகத் தியன்.

226. திங்கள் நோன்பு இயற்றி-ஒரு மாதம் தவம் செய்து. அந்தப் பலத்தி னில்-அதன் பலனாக. சுவர்க்கம்-தேவலோகம். புங்கவர்க்கு அரசு - இந்திரன் அளிக்குவன் - மழை தருவான். போதி என்ன - போவாயாக என்று கூறுதலும். (அங்கு) அவன் அதனை ஆற்றி-உக்கிரபாண்டியன் அந்தத் திங்கள் நோன்பு மேற் கொண்டு. வான்மிசை அடைய-தேவலோகம் செல்ல. தங்க-அமர்வதற்கு. ஓர் தவிசு சமைத்தலும்-ஓர் ஆசனம் தருதலும். சாராது-அதில் அமராமல்.

**மதுரை மீண்டது**

உம்பர்கள் மகுட கோடி
உழுதழும்பு இருந்த பொன்தாள்
அம்பர நாத னோடும்
அரியணைச் சென்று வைக,
வெம்பிய உளத்த னாகக்
குறிப்பினால் உணர்ந்து, மீண்டு
வம்பவிழ் தெரியல் வேம்பன்
மதுரைநன் னகரில் வந்தான். 227

**மேகத்தைச் சிறை வைத்தமை**

மற்றொரு ஞான்று வேட்டை
யாடுவான் மலைய வெற்பின்
உற்றிட, மேகம் நான்கும்
ஒருங்குஅவன் மேய நோக்கிக்,
கொற்றவன் அவற்றைப் பற்றிக்
கொடுஞ்சிறை உய்ப்பக், கேளா
'இற்றுஎன இவன்தன் வீரம்
உணர்வென்'என்று இமையோர் வேந்தன். 228

**உக்கிரன்-இந்திரன் போர்**

அனிகமோடு எய்திக் கூடல்
முற்றுறத் தூணி ஆர்த்துக்,
குனிசிலை எடுத்துத் தேர்மேற்
கொண்டுநாற் படையும் சூழ,

---

227. உம்பர்கள்-தேவர்கள். மகுட கோடி-பல முடிகள். உழுதழும்பு - வணங்கும்போது ஏற்பட்ட தழும்பு. அம்பர நாதன்-இந்திரன். நாதனோடும் அரியணைச் சென்று வைக-இந்திரனுடன் சரிசமமாக அவனது அரியணையில் சென்று உக்கிரபாண்டியன் இருந்தமையால். வெம்பிய உளத்தனாக-இந்திரன் வெம்பியதை. வம்பு அவிழ் தெரியல்-மணம் விரிகின்ற.

228. மற்றொரு ஞான்று-வேறொரு நாள். வேட்டையாடுவான் - வேட்டையாட. மலைய வெற்பு-பொதிய மலை. மேகம் நான்கு-இந்திரன் வாகனமாகிய நான்கு வகை மேகங்கள். மேய-மேய்ந்துகொண்டிருப்பதை. கொற்றவன்-உக்கிரபாண்டியன். சிறை உய்ப்ப-சிறையில் வைத்ததால். கேளா-கேட்டு, இற்று என - இத்தகையது என்று. இமையோர் வேந்தன்-இந்திரன்.

229. அனிகமோடு-சேனையுடன். கூடல் முற்றுற-மதுரை முற்றுகைபடையும்படி. தூணி-அம்புக் கூடு. ஆர்த்து-முதுகில் கட்டி. குனிசிலை-வளைந்த வில். தேர்

முனிவுமீ தூரப் போந்தான்.
இருவகைப் படையும் முட்டி
நனிபொருது உடைந்த தாக,
நாகர்கோன் எயிறு தின்னா. 229

காட்டழல் போலப் பொங்கிக்
கருதலார் எதிர்வந் தாலும்
கோட்டிஅம் சிலைஅம்பு ஏவா
மனத்திறற் கூடல் ஆளும்
ஏட்டிணர்த் தாரான் மீதில்
எறிந்தனன் குலிசந் தன்னை.
வாட்டிறல் காத்து வேந்தும்
வளையினைச் சுழற்றி விட்டான். 230

இந்திரன் தோற்று ஓடல்

வச்சிரந் தனையும் தள்ளி
மகுடமும் தள்ளி ஏக,
அச்சமுற்று அமரர் கோமான்
அந்தர நாடு சென்றான்.
நச்சிலை வேற்கை மாறன்
மதுரையின் நணுகி னான்பின்,
உச்சியார்க்கு இறைவன் 'மேகம்
தருதி!' என்று ஓலை விட்டான். 231

---

மேற்கொண்டு–தேரில் ஏறி. நாற்படை–இரதம், குதிரை, யானை, காலாள். படைகள். முனிவு மீ தூர - சினம் மேலெழ. போந்தான்-மதுரைக்கு வந்தான். நனி பொறாது-நன்கு போரிட்டு. உடைந்ததாக-தோற்றுப் போனமையால். நாகர்கோன்-இந்திரன். எயிறுதின்னா-சினத்தால் பல்லைக் கடித்து.

230. காட்டழல் - காட்டுத்தீ. கருதலார்-பகைவர். சிலை கோட்டி அம்பு ஏவா - வில் வளைத்து அம்பு ஏவி. ஏட்டிணர்த் தாரான் -உக்கிர பாண்டியன். குலிசம்-வச்சிராயுதம். வாள் திறல்காத்து - வாள்வலியால்தடுத்து. வளை-ஓர் ஆயுதம்,

231. வச்சிரம்–வச்சிராயுதம். தள்ளி-அழித்து. அமரர் கோமான்-இந்திரன். நச்சு இலை வேல்கை மாறன் - நஞ்சு தோய்ந்த இலைபோன்ற வேல் அணிந்த கையையுடைய உக்கிரபாண்டியன். உச்சியார்க்கு இறைவன்-இந்திரன். மேகம் தருதி-மேகங்களை விடுதலை செய்து தருவாயாக.

### வேளாளன் பிணைதரலால் மேகத்தைச் சிறைவீடு செய்தல்

செழியனும் மறுப்ப நோக்கித்
தேவர்கோ னுடனே நட்டோன்
பொழிமதுக் குவளை மார்பன்
பொருவிலா ஒருவே ளாளன்
'மழைமறாது உதவும். யானே
பிணை'என வழங்கக் கேட்டு,
நிழல் மணி மார்பன் மேகச்
சிறையினை நீக்கல் செய்தான். 232

### வீரபாண்டியன் பிறப்பு

மாரனும் அணங்கு கோல
வடிவெடுத் தணைய எண்ணும்
ஆரமும் வேம்பும் துஞ்சும்
அம்பகட்டு ஆர மார்பின்
காரினை நிகரும் வண்கைக்
கவுரியற்கு ஈசன் சொல்லால்
வீரபாண் டியன்என்று ஓதும்
விறல்கொள்சேய் உதித்திட் டானே. 233

சேயினைக் கண்டும், செவ்வாய்
மழலையந் தீஞ்சொல் கேட்டும்,
தூயசெங் கையி னாலே
துழாவிய அமுதம் உண்டும்,

---

232. செழியன்-உக்கிரபாண்டியன். தேவர்கோனுடன் நட்டோன்-இந்திரனுக்கு நண்பன். மதுக் குவளை மார்பன் - குவளை மாலை அணிந்த மார்பினன். ஒருவேளாளன் - வேளாளர் குடியினன் ஒருவன். மழைமறாது உதவும் - இனி மழையை மறுக்காமல் இம்மேகங்கள் பொழியும். யானே பிணை-அதற்கு யானே பிணையாவேன். வழங்க-சொல்ல. நிழல் மணி - ஒளியுடைய மணி. மார்பன் - உக்கிரபாண்டியன.

233. மாரனும் அணங்கு கோல வடிவெடுத்து அணைய எண்ணும்-மன்மதனும் பெண்ணின் அழகிய வடிவம் கொண்டு தழுவுதற்கு எண்ணுகின்ற (மார்பு). ஆரம்-முத்து மாலை. வேம்பு-வேப்ப மாலை. துஞ்சும்-தங்கிய. அம்ப கட்டு - அழகிய பொலிவுடைய கவுரியற்கு-உக்கிரபாண்டியனுக்கு. ஈசன் சொல்லால்-இறைவன் வரத்தால். சேய்-மகன்.

234. கண்டும் கேட்டும் உண்டும் மோந்தும் தழுவியும் இருந்தனன் என்பதில் ஐம்புல இன்பமும் கூறப்பட்டமை உணரலாம்.

நேயமாய் உச்சி மோந்தும்,
தழுவியும் நிருபன் ஆங்கே
ஏயபே ருவகை பொங்க
இருந்தனன் இருக்கும் நாளில். 234

உக்கிரன் மேருவைச் செண்டால் அடித்தது

மாரிஓர் ஆண்டுஇன் றாகி
உயிர்ப்பயிர் வாடல் நோக்கி,
மேருவின் எய்தித் தன்பால்
வரவுபா ணிப்ப வெள்கி
ஏர்அணி முடிகள் சிந்தச்
செண்டினால் புடைப்ப, எய்தி
வீரனைப் புகழ்ந்து வேண்டும்
வெறுக்கையும் ஈந்தது அன்றே. 235

உக்கிரன் மறைவு

மீண்டுதன் நாட்டின் மேவ,
வேதியர் முதலோர் யார்க்கும்
ஈண்டிய வறுமை தீர
ஈதலும் பசிநோய் தீர்ந்தார்.
ஆண்டகை பின்னும் பன்னாள்
ஆண்டபின், புதல்வன் ஆள
நீண்டதோர் அரசை நல்கிச்
சிவன்அடி நிழலைச் சார்ந்தான். 236

## பலராமன் வரலாறும் பாரதப் போரும்

நிலப்பொறைதீர்த் திடுவதற்காய் வசுதேவன்
வரத்துஉதித்த நிகரில் சீர்த்தி

---

" கண்டுகேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்தொடி கண்ணே உள "
என்ற குறளின் கருத்து வேறொரு வகையாக விளக்கப்பட்டுள்ளது.

235. இன்று ஆகி-இல்லாமல் போய். வரவுபாணிப்ப-வருவதற்குத் தாமதம் செய்தமையால். வெள்கி-நாணமடைந்து. முடிகள்-சிகரங்கள், ஏர் அணி-அழகிய. செண்டினால் - செண்டு என்னும் அயுதத்தால். எய்தி - உக்கிரபாண்டியன் எதிரே மேரு வந்து. வெறுக்கையும்-செல்வம்.

236. ஆண்டகை-உக்கிரபாண்டியன். புதல்வன்-வீரபாண்டியன்,

அலப்படையோன் கதைஉரைப்பாம் துவாபரத்தில்
இந்துகுலம் அதனில் தோன்றும்
பெலத்தசுயோ தனன்தருமன் அவனிகா
ரணமாகப் பெரும்போர் செய்வான்,
விலக்குறுவீ டுமன்முதலோர் சொல்கொள்ளார்
குருபூமி மேவி னாரால். 237

### பலராமன் புண்ணிய நீராடப் போதல்

மாங்குயிலை அனையமொழித் தேவகிபால்
கண்ணனுடன் வந்து தோன்றும்
ஓங்குகுழை ஒன்றுஅணிந்தோன் மருந்தனையான்
இராமன்எனும் உரவுத் தோளான்,
ஆங்குஅதுகண்டு உளம்நொந்து பொறுக்கலனாய்க்
கருமவிளை வதனை யாரே
நீங்கினர்என்று எண்ணுற்றுப் புண்ணியநன்
னீராட நினைந்து சென்றான். 238

### நைம்மிசவனம் அடைதல்

படிந்திடினும் சொல்லிடினும் நினைக்கினும்காண்
கினும்செய்த பாவம் போக்கும்
விடம்கொள்மணி மிடற்றிறைவன் கோடீரத்
தினும் போந்த விமலக் கங்கை
அடைந்துகுடைந்து அதைஅகன்று, தவத்துறையோர்
சவுனகரை ஆதி யான
மடம்தவிரும் முனிவர்உறை நைம்மிசஆ
ரணியத்தின் மன்னி னானே. 239

---

237. நிலப்பொறை - பூமிபாரம்; அலப்படை - கலப்பைஆயுதம். அலப் படையோன் - பலராமன்; இந்துகுலம் - சந்திரவம்சம்; பெலத்த - வலிமை யுடைய; சுயோதனன் - துரியோதனன்; அவனிகாரணமாக - பூமியின் தாயபா கம் காரணமாக; விலக்குறு - போர் செய்யாமல் தடுத்த : போர் செய்வான் - போர் செய்ய; குருபூமி - குருக்ஷேத்திரம்.

238. குழை ஒன்று அணிந்தோன் - பலராமன்; இராமன் - பலராமன். உரவுத் தோளான் - வலிய புயங்களை யுடையவன்; அதுகண்டு - துரியோதன் னும் தருமனும் போர் செய்வது கண்டு.

239. படிந்திடினும் - குளித்தாலும். விடம் - நஞ்சு; மணிமிடற்று இறை வன் - சிவபெருமான்; கோடீரத்தினும் போந்த - சடைமுடியிலிருந்து தோன்றிய குடைந்து - நீராடி; தவத்துறையோர் - தவசிகள்; மடம் - மடமை,

### சூதன் செருக்கு

அலகில்படைக் கடலுடனே மகதன் எதிர்த்
திடும்ஞான்றுஓர் அலத்தால் வென்ற
உலம்அனைய திரள்தோளான், எய்துதலும்
முனிவர் எழுந்துஒருங்கு நின்று
'நிலைபெறுக சிவஞானம் பிறவும்' எனப்
பலவாக நிகழ்த்தல் செய்தே,
இலகுதவி கிடைஇருத்தித், தாமும்இருந்
தனர்சூதன் எழுந்தி லானே. 240

### சூதன் தலையைத் துணித்தல்

சீதரனை 'வருக'எனச் செப்பிடான்
முகமன்உரை செய்ய கில்லான்.
மாதவரும் உரைத்திலர்முற் றிடும்விதியை
யாவரே மாற்ற வல்லார்?
'ஓதிஉ ணர்ந் திடும்செருக்கோ' முனிவர்கள்முன்
னிலைப்பெலமோ! உணர்வோம் என்னாச்
சூதபுரா ணிகன்தலையைச் சினமீக்கொண்
டிடஅலத்தால் துணித்தல் செய்தான். 241

### முனிவர் புலம்பல்

கன்றுஆன் இறப்பக் கதறியது போல் சூதன்
முன்தான் விழுந்தார் முனிவோர்கள் மூச்சவிந்து
பொன்றாது எழுந்தார் அழுதார் புலம்புகின்றார்
இன்றோ புராணம் இறந்துபாடு எய்தியதே. 242

---

240. அலகில் - கணக்கில்லாத; படைக்கடல் - கடல்போன்ற சேனைகள்; அலத்தால் - கலப்பையால்; உலம் அனைய - தூண்போன்ற: திரள்தோளான் - பலராமன்; தவிசிடை - ஆசனத்தில்.

மகதனைக் கலப்பையால் வென்ற வரலாறு பாகவதத்தில் உள்ளது.

241, சீதரன் - திருமால் ஆகிய பலராமன்; அலத்தால் - கலப்பையால்.

242. ஆன் இறப்பக் கன்று கதறியது போல் என்று கூட்டுக. ஆன் - பசு பொன்றாது - இறக்காமல், பாடு எய்தியது - அழிந்தது.

'தன்னை அறிந்த தலைவனே! ஞானமெல்லாம்
மன்னும் சரக்கறையாய் வந்தோய்க்கு இதுபலமோ?
உன்னை இழந்தும் இருக்கின்றோம். உத்தமனே,
என்னப் புலம்பி, இராமனைப் பார்த்து ஈது உரைப்பார். 243

## முனிவர் வேண்டுகோள்

எத்தனையோ நூல்கற்றும் கன்மத்து இருள்மறைப்பப்
புத்திஅறை போகி வழிபாடு பூண்கிலனால்
அத்த! இதுவும் ஒருதவறன்று. அன்புஇகந்து
சித்தம்அழன் றாய்இவன்எம் தேசிகன்என்று ஓராயே. 244

வண்டு படுதுளவ மாலே! உனக்கு அருளால்
கொண்டதொழில் அன்றிக் கொலைநின் தொழில்அன்றே
மண்டலத்தில் ஆருயிரை மாய்த்தல் படர்சடைமேல்
துண்ட மதிஅணிந்தோன் பூண்ட தொழில் அன்றோ. 245

## தருப்பையைச் சூதன் ஆக்குதல்

மூசுற்று இரங்கும் முனிவர்மொழி நோனானாய்
வாசத் தருப்பைஒன்றைச் சூதன் எனவகுத்து
நேசத் துடன்எழுப்ப நீண்டதவச் சூதன்என
மாசற் றெழுமுனிவர் கோஎன்று வாழ்த்தினார் 246

## பலராமன் வினா

இருடிகாள்! நுமக்குஇவன் ஈண்டு வைகியே
அருமைசேர் புராணநூல் அறைவன் என்றுபின்
பொருவரும் இவற்கொன்ற பாவம் போகுமாறு
உறைசெயும்! என்றலும் முனிவர் ஓதுவார்: 247

---

**243.** வந்தோய்க்கு - வந்த உனக்கு. இதுபலமோ - ஞானம் பெற்றதற்குப் பலன் இதுதானோ! இராமனை - பலராமனை.

**244.** கன்மத்துஇருள் - வினையிருள்; அறைபோகி - அழிந்து. வழிபாடு பூண்கிலன் - உன்னை வழிபடாமல் இருந்து விட்டான்: அன்பு இகந்து - அன்பு நீங்கி; அழன்றாய் - சினம் கொண்டாய்; தேசிகன் - ஆசிரியன்; ஓராய் - அறிவாயாக.

**245.** அருளால் கொண்ட தொழில் - காக்கும் தொழில்.

**246.** மூசுற்று - மொய்த்து. இரங்கும் - வருந்துகின்ற. நோனானா-பொறுக்காமல். தருப்பை - அறுகம்புல்.

**247.** இருடிகாள் - முனிவர்களே. வைகி - இருந்து. அறைவன் - சொல்வான் பொருவரும் - ஒப்பில்லாத. இவற்கொன்ற - இவனைக் கொலைசெய்த. உரை செயும் - சொல்லுங்கள்.

### முனிவர் விடை

அல்லல்செய் வினைச்சிமிழ்ப்பு அகன்ற உன்னையும்
ஒல்லைவன் பாவம்வந்து உறுங்கொல்? ஆயிரம்
பல்உயிர் வருக்கமும் பயின்று கோடற்காய்க்
குல்லையந் தாரின்நீ கொண்ட தன்மையே. 248
பாதகம் போக்குறும் அறங்கள் பற்பல
மேதகும் அவற்றினில் விமலன் மெய்யறம்
ஆதலின் அவன்தனை அடைந்து போற்றிடின்
சீதர! இப்பவம் தீர்ந்து போகுமே! 249

### வில்வவனச் சிறப்பு

நடம்புரி சிதம்பர நாதன் தில்லைக்கான்
கடம்பமா வனம்உயர் வேத நல்வனம்
தடம்திகழ் சோதிஆ ரணியம் தம்மினும்
இடம்படு வில்வஆ ரணியம் ஏற்றமால். 250

### பலராமன் வில்வவனம் அடைதல்

இயம்பும்அத் தலத்துஉறை இலிங்கமூர்த்தியை
நயந்துஅருச் சனைசெயின் நணுகும் இப்பவம்
கயந்தனை அடையும்என்று உரைப்பக் காதலின்
வியந்தனன் ஏகிஅத் தலத்தை மேவினான். 251
மாதவர் வானவர் மனிதர் வந்துஉவந்து
ஆதர வுடன்அடி அருச்சித்து ஏத்தியே
போதலை இருவிழி பொருந்த நோக்கினான்
சீதள மதிமருள் உருவச் செம்மலே! 252

---

248. அல்லல் - துன்பம். வினைச்சிமிழ்ப்பு - வினைப்பயன். உறுங்கொல் - சேருமோ? பயின்றுகோடற்காய் - அறவழியைக் கற்றுக்கொள்வதற்காக. குல்லைந் தாரின் நீ - துளவமாலையணிந்தநீ; கொண்ட தன்மை - அவதாரம் செய்ததன்மை. நீ கொண்டதன்மை பல்உயிர் வருக்கமும் பயின்றுகோடற்காய் என்று கூட்டுக.

249. விமலன் மெய்யறம் ஆதலின் - சிவபெருமானே உண்மையான அறம் ஆதலால்; பவம் - பாவம்.

250. தில்லைக்கான்-சிதம்பரம், கடம்பவனம்-மதுரை. வேத வனம் - திருமறைக்காடு. வில்வ ஆரணியம்-வானர வீர மதுரை.

251. கயந்தனை அடையும்-அழியும். கயம்-கூடியம். கூடியம் என்பது தேய்வது எனப் பொருள்படும் வடசொல்.

252. ஏத்திப் போதலை நோக்கினான் என்று கூட்டுக. சீதள மதி மருள் உருவம்-குளிர்ந்த சந்திரன் போன்ற வடிவம். பலராமன் வெள்ளை வடிவினன். ஆதலால் சந்திரன் உவமை கூறப்பட்டது.

### பலராமன் பூசைசெய்தல்

அலைபுனல் வையையின் ஆடி இந்துவின்
மலிபுனல் தடத்தினில் மஞ்னித் தோய்ந்தபின்
குலவுவெண் ணீறுகண் டிகையும் மெய்கொடே
இலகும்அஞ் செழுத்தையும் விதியின் எண்ணினான், 253

### பாவம் தீர்ந்தமை

பவளவார் சடையுடைப் பரமன் முன்புபோய்ப்
புவனம்உண் டவன்விதி நெறியிற் பூசிப்ப
அவனது பாவமும் அகன்றது அந்நிலை
கவலைகெட்டு உவகையங் கடலில் மூழ்கினான். 254

### துவரை மீளுதல்

நகர்வயின் சிலபகல் வைகி நாரணன்
வகிர்மதி புனைந்திடும் வரதன் தாள்தொழா
அகல்வதோ நினையும்என்று அரிதின் நீங்கியே
புகர்அறு துவரையம் பதியிற் போயினான். 255

### பலஸ்ருதியும் தோற்றுவாயும்

இக்கதை படித்தோர் கேட்டோர்
இம்மையின் வாழ்ந்து பின்னர்
செக்கர்அஞ் சடையான் பாதம்
சேர்குவர் என்று கூறி
முக்கணன் அருள்பெற் றன்றி
நினைத்தது முற்றாது என்னாத்
தக்கதோர் இராமன் பூசை
புரிந்திடும் தன்மை சொல்வாம். 256

---

253. அலைபுனல்-அசைகின்ற புனலையுடைய. ஆடி-குளித்து. இந்துவின் தடம்-சந்திர தீர்த்தம். தோய்ந்தபின்-குளித்த பிறகு. மெய்கொடு-உடம்பில் அணிந்து.

254 பவளவார்சடை - பவளம்போன்ற நீண்டசடை : பரமன் - அரன். புவனம் உண்டவன் - பலராமன் ;

255 நகர்வயின் - அவ்வூரிலே ; வைகி - தங்கி ; நாரணன் – பலராமன் : வகிர்மதி - பாதிமதி ; வரதன் - சிவன் ; தாள்தொழா - பாதம்வணங்சி ; நி(ன்)னையும் அகல்வதோ என்று - உன்னையும் பிரிவது]எப்படி என்று ; புகர் - குற்றம். துவரையம்பதி - துவாரகை

256 இம்மையின் – இவ்வுலகில் : செக்கர்அஞ்சடையான் - சிவபெருமான் ; இராமன் - இராமபிரான்.

சருக்கச் சுருக்கம்

## இராமன் கதையும் வானரத்தின் கதையும் உரைத்த சருக்கம்

இராமன் சீதையைப் பிரிந்தபிறகு அகத்தியர் சொற்படி சோமபுரி அடைந்து 'இராவணனைக் கொல்வதற்கு அருள்புரிக' என்று இறைவனை வேண்டினான். இறைவன் அருளிய வரத்தால் சேது அமைத்து இலங்கை அடைந்து அரக்கரைக் கொன்று மூலபலத்தை அழித்து இராவணன் நெஞ்சைப்பிளந்து சீதையை மீட்டான். அயோத்தியில் முடிசூடினான்.

இராம - இராவணப்போர் நடந்தபோது, குரங்குச் சேனைகள் ஒருகால் பசியால் வாடின. பசிதாங்காமல் சோம புரியை அடைந்து இறைவனை வேண்டின. சிவபெருமான் நேரில் தோன்றி தென் கிழக்கிலே ஒரு மதுக்குளம் உண்டாக்கி அருளினான்.

குரங்குகள் அதில் சுரந்த இனிய மதுவைப் பருகிப் பசி தீர்ந்தன.

'நாங்கள் புசித்தமையாலும் மது அளித்தமையாலும் இந் நகருக்கு வானர வீர மதுரை என்று பெயர் உண்டாகுக' என்று வானரங்கள் வேண்டின. இறைவனும் அவ்வாறே வரம் அருளி னான்.

பின்னர் வானரங்கள் இலங்கை சென்று போரிட்டு இராமனுக்கு வெற்றியைத் தந்து, சீதையை மீட்டு, தத்தம் பதி அடைந்தன.

## ஐந்தாவது-இராமன் கதையும் வானரத்தின் கதையும் உரைத்த சருக்கம்

**தயரதன்**

சாந்துசெங் களபம் திமிர்ந்துவெண் தரளத்
தாழ்வடம் அணிந்துஇறு மாந்த
ஏந்தெழில் மடவார் முலைகள்பட்டு அறவும்
கன்றிய மார்பினான் இரதி

காந்தனை அனையான் தயரதன் எனும்பேர்க்
    காவலன் இரவிதன் குலத்தோன்
பூந்தடம் புடைசூழ் அயோத்திநன் னாடு
    புரவுபூண் டிருந்தனன் அன்றே. 257

### நால்வர் மக்கள் பிறப்பும் அவர்க்கு மணமுடித்தலும்

அன்னவன் புதல்வர் இன்றுஎனக் கலைக்கோட்டு
    அண்ணலால் அருமகம் ஆற்றத்
தன்னைநே ரில்லா இராமன்நற் பரதன்
    இலக்குவன் சத்துருக் கனன்என்று
உன்னருந் திறல்சேர் நால்வர்வந் துதித்தார்
    ஒளிர்பிறைக் கொழுந்துபோல் வளர்த்து
மன்னவன் அவருக்கு அருங்கனல் சான்றாய்
    மணவினை முடித்தனன் மாதோ. 258

### இராமன் வனம் புகுதல்

பரதனை அளித்த பாவிஎன் மகன்இப்
    பாரெலாம் புரப்பவும், இராமன்
அரியகான் செலவும் வரம்தரு கெனலும்,
    கொழுநனும் நெஞ்சுளைந்து அயரக்
கருணைஓர் உருவு கொண்டெனத் தோன்றும்
    இராமன்பால் ஆங்குஅவள் கழற
உருவ ஓ டரிக்கண் மனைவியும் தானும்
    இலக்குவ னொடும் வனம் உற்றான் 259

### சீதை பிரிவு

ஆங்குறைந் திடும்நாள் இராமன்நன் மனைவி
    ஆகிய விதேகர்கோன் ஈன்ற
வாங்குவிற் புருவச் சீதையைத் தசக்கி
    ரீவனாம் அரக்கர்கோன் வவ்வி

---

257. திமிர்ந்து - பூசி; சாந்து - சந்தனம்; தரளத்தாழ் வடம் - முத்து மாலை; அறவும் - முழுவதும்; இரதிகாந்தன் - மன்மதன்; இரவி - சூரியன்; பூந்தடம் - பூம்பொய்கைகள்.

258. இன்று என - இல்லைஎன்று; உன்னருந்திறல் - நினைத்தற்கு அரிய வலிமை; அருங்கனல் சான்றாய் - அக்கினி சாட்சியாக.

259. பாவி-கைகேயி. மகன்-பரதன். புரப்பவும்-ஆளவும். கான்-வனம். கொழுநன்-தயரதன். அவள் கழற-கைகேயி சொல்ல. மனைவி-சீதை.

ஓங்கெயில் உடுத்த இலங்கைமா நகரின்
உய்த்தனன் இராமனும் மீட்பான்
தீங்கில்போ ரனுமன் இரவிசேய் முதல
குரங்கினச் சேனையோடு எழுந்தான். 260

### இராமன் திருவிடைமருதூர் அடைதல்

இலங்கையை நோக்கி நடந்துகா விரிநாட்டு
இடைமரு தூரின்வந்து இறுப்ப
நலம்கொள் அந்நகரில் குறுமுனி இருப்பக்
கண்டுதன் குறையினை நவில
அலங்குஇலைச் சூலத்து அண்ணலே பிரமம்
அன்றிவேறு இலைஎன அறிந்தோன்
கலங்கல் நீ என்னா இராவணன் வரவும்
வலிமையும் கழறிஈது உரைப்பான்: 261

### அகத்தியன் உரை

எளியோர் பலருக்கு இடர் இயற்றின்
அவர்கள் வயிற்றின் எரிவு சென்று
விளியா வலியார்க்கு இடர் செய்யப்
புரிந்தே ஒருவன் வீறுஅழிக்கும்
தெளிவாய் ஈசன் செயல் அவனும்
இனையன் நீவெல் லுதல் திண்ணம்
அளிவீழ் தெரியல் திருமார்ப!
சீதை தனையும் அடைதியால். 262

---

260. விதேகர் கோன்-சனகன். தசக்கிரீவன்-இராவணன். வவ்வி-கவர்ந்து. எயில் உடுத்த - மதில் சூழ்ந்த. உய்த்தனன் - சேர்த்தான், மீட்பான்-மீட்கும் பொருட்டு. இரவிசேய்-சுக்கிரீவன். முதல-முதலான.

261. இடைமருதூர்-திருவிடைமருதூர். இறுப்ப-தங்க. குறுமுனி - அகத்தியன். அலங்கு இலைச் சூலத்து அண்ணல்-சிவபெருமான். பிரமம்-முழு முதற் கடவுள். அறிந்தோன்-அகத்தியன். கலங்கல்-கலங்காத. வரவு-வரலாறு. கழறி-சொல்லி.

262. விளியா வலியார்க்கு - மிக்க வலிமையுடையவர்க்கு. இடர் செய்யப் புரிந்து-துன்பம் விளைவிக்க விரும்பி. வீறு அழிக்கும்-வலிமையை அழித்துவிடும். ஈசன் செயலைத் தெளிவாய் என்று கூட்டுக. அவனும் இனையன் - இராவணனும் எளியார் பலருக்கு இடர் இயற்றியவன். அளி வீழ்-வண்டு படிகின்ற. தெரியல் - மாலை. திருமார்பன்-ஸ்ரீராமன்.

இன்று மகர மதிப்பூசம்
இதிற்கா விரிநீர் இவண்படியின்
துன்றும் பெரிய பாதகமும்
தொலையும் என நான் மறைசொல்லும்
வென்றி வேலோய்! நீராடல்
விரும்பி யாமும் இவண்உற்றோம்
உன்தன் துணைவ னொடும்இங்ஙன்
உயர்கா விரிநீர் ஆடுகவே. 263

'சுடுபொன் அனைய நறுந்தோட்டுக்
கொன்றை அணியும் சோமேசன்
அடியார்க்கு எளியன் ஆகிவில்வ
வனத்தின் அமர்ந்தான் ஆங்கவனை
ஓடிவில் பக்தி யுடன்பூசை
உஞற்றின் நினைத்த செயல்முற்றும்
கடிது போதி முனம் யாமும்
வருதும்' என்னக் கழறினான். 264

**அகத்தியன் சொற்படி பாண்டிநாடு அடைதல்**

கடவுட் கற்பின் உலோபாமுத்
திரைதன் கணவன் கழறுதல்கேட்டு,
உடலம் பூரித்து 'உன்அமுத
வாக்கால் உள்ளம் குளிர்ந்தேன்'என்று
அடிவீழ்ந்து இறைஞ்சி விடைகொண்டு,
பொன்னி நதிபுக்கு ஆங்கவன்சொற்
படியே தோய்ந்து,அந் நகர்நீங்கிப்
பாண்டி நாடு தனிற்புகுந்தான். 265

**சோமபுரி அடைதல்**

கங்கைப் பெருக்காற் றினில்தோணி
மணந்த தென்னக் கதிர்விரிக்கும்

---

263. மகர மதிப்பூசம்-தை மாதம் பூச நட்சத்திரம். இவண் - இவ்வூரிலே. படியின்-நீராடினால். துன்றும்-அடைந்த. துணைவன்-இலக்குவன்.

264. தோட்டு-இதழ்களையுடைய. வில்வவனம்-வானர வீர மதுரை. ஓடிவில்-இடையறாத. உஞற்றின்-செய்தால். கடிது போதி-விரைந்து போவாயாக.

265. உலோபா முத்திரை கணவன்-அகத்தியன். பொன்னிநதி-காவிரியாறு. தோய்ந்து-நீராடி. அந் நகர்-திருவிடைமருதூர்.

திங்கட் கொழுந்து புனைமோலிச்
சிவன்வாழ் பதிகள் பலபுகுந்து
தங்கிப் பணிந்து போந்து,சங்கின்
தரளத் துடனே கன்னல்முத்தும்
துங்கக் கழைமுத் தமும்இலங்கும்
வயல்சூழ் சோம புரிசேர்ந்தான். 266

## அகத்தியன் வரவு

திங்கள் உரிஞ்சும் பூங்காவில்
இருந்து சிறுமா முனிஈசன்
இங்கு வருவது என்றுஎன்ன
நெறிபார்த் திருப்பக், குறுமுனியும்
தங்கு மகரமதிக் கொடிற்றில்
தண்கா விரிநீர் தோய்ந்து,சின்னாள்
அங்கு வைகி மகவுதயம்
அதனிற் சோம புரிஅடைந்தான். 267

## சிவபூஜை செய்தல்

சிந்தை மகிழ்வின் இருவோரும்
செழுநீர் வையை ஆடிப்,பின்
இந்துத் தடத்தி னிடைத்தோய்ந்து,
திருநீறு அக்கம் இவை தரித்து,
முந்தைப் பஞ்சாக் கரம் செபித்து,
முதல்வன் முன்போய் விதிமுறையால்
கந்தப் பலம்மா மலர் தூவிப்
பணிந்து துதிகள் கழறினார்! 268

---

266. சிவபெருமான் தலையில் உள்ள கங்கையில் பிறைமதி இருப்பது, கங்கையிலே ஓடம் மிதப்பதைப் போலுள்ளது என்பது கருத்து. மோலி-சடாமுடி. சங்கின் தரளம்-கடல் முத்து. கன்னல் முத்து-கரும்பில் விளையும் முத்து. துங்கம்-உயர்ச்சி. கழைமுத்தம் - மூங்கிலில் விளையும் முத்தம். சோமபுரி-வானர வீர மதுரை.

267. உரிஞ்சும்-தொடுகின்ற; காவில்-சோலையில்; சிறுமாமுனிஈசன்-அகத்தியன். நெறி-வழி: மகரமதி-தைமாதம்; வைகி-தங்கி; மகஉதயம்-மாசிமாதம்; கொடிற்றில்-பூசநட்சத்திரத்தில்.

268. இருவோரும்-அகத்தியனும் இராமனும்; ஆடி-குளித்து; இந்துத்தடம்-சந்திர தீர்த்தம்; தோய்ந்து-நீராடி; அக்கம்-உத்திராக்கம்; கந்தப்பலம்-மணமுடைய பழங்கள்; கழறினார்-சொன்னார்.

### ஈசன் வெளிப்படல்

கதிர்கான்று இலகும் மதிமுகமும்
கருணை நோக்கும் செவ்வாயும்
நதிதாழ் சடையும் கருமிடறும்
நான்கு கரமும் திருவடியும்
மதிஓர் கோடி உதித்ததென
வயங்கும் தேசும் உமைபங்கும்
எதிரே கண்டு தொழவிடைமேல்
ஈசன் இலிங்கத்தினும் வந்தான். 269

### இராமன்உரை

கண்டார் தென்னந் தமிழ்மணக்கும்
கனிவாய் முனியும் பலாச்சுளையின்
விண்ட நறுந்தேன் வயற்பாயும்
அயோத்தி ஆளும் விறல்வேந்தும்.
மண்டும் உவகை மீதூரக்,
கண்கள் பனிப்ப, மயிர்பொடிப்பத்,
தொண்டர் பெருமான் அடிதொழுதான்.
இராமன் இதனைச் சொல்கின்றான். 270

'ஐய ! கமல மலர்வதனத்து
அம்மென் மருங்குல் சானகியை
மையல் உறக்கொண் டிடும்நெஞ்சன்
இலங்கை வேந்தன் வவ்வினான்.
வெய்யன் அவனைக் கொலுமாறு
வேண்டி னேன்,இங் கருள்புரிவாய்!
பைய அரவம் புனைந்தாடும்
பரமா!' என்றுஎன்று இரந்தனனால். 271

---

269. கதிர்கான்று - ஒளிவிட்டு; நோக்கு - கண்; நதி-கங்கை; மிடறு - கழுத்து. தேசு-சுடர்; விடை-நந்தி; இலிங்கத்தினும்-இலிங்கத்தினின்றும்.

270. முனி-அகத்தியன்; வேந்து-இராமன்; மயிர் பொடிப்ப-உடல் புளகம் அடைய. தொண்டர் பெருமான்-சிவபெருமான்.

271. வதனம்-முகம்; அம்மென் மருங்குல்-அழகிய மெல்லிய இடை; பைய-படத்தையுடைய.

### இறைவன் உரை

உலகம் ஈன்றும் கன்னிஎன
    உற்ற உமைபங் கினன்கேளா,
மலர்வாய் திறந்து மனம்குளிர்ந்து
    வயங்க வழங்கும் 'நீ கடலின்
அலகில் வரையால் சேதுஅமைத்து
    அதன்மேல் போகி, இலங்கைபுக்குத்
தொலையா அரக்கர் தமைச்செற்றுத்
    துகள்தீர் சீதை தனைமீட்டு, 272

### இராமன் இலங்கை அடைதல்

'நின்பார் ஏகி முடிகவித்து
    நெடுநாள் அரசு புரிதி' என்று
மின்பாய் சடையோன் மலர்ந்திடலும்
    சிறுமா முனிவன் விடைகொண்டு,
தென்பால் நடந்து வேலையிற்போய்ச்
    சேது இயற்றி அதன்மீதே
அன்பார் சேனை யுடன் ஏகி
    அடையார் இலங்கை முற்றினான். 273

### இராவணன் தோல்வி

அதுகண்டு, இரத கசதுரகம்
    காலா ளுடனே இந்திரன்முன்
முதுகு கொடுப்பக் கணைபொழிந்தோன்
    முன்வந்து ஏற்றே அறைகூவக்,
கதுமென்று இராமன் அவனுடனே
    பொருது கவசம் தூணிவில்தேர்

---

272. கேளா-கேட்டு; வழங்கும்-சொல்லத் தொடங்கினான்; அலகு இல் வரையால் - கணக்கில்லாத மலைகளால்; சேது - அணை; போகி-சென்று; செற்று - கொன்று; துகள்தீர்-குற்றம் தீர்ந்த.

273. நின் பார்-அயோத்தி. முடிகவித்து-முடிசூடி. மின்பாய் இடை-உமை. மின்பாய் சடையோன்-அரன். சிறுமா முனிவன் விடை கொண்டு - அகத்தியனிடம் இராமன் விடைபெற்று. வேலையில்-கடலில். அடையார்-பகைவர். முற்றினான்-முற்றுகையிட்டான்.

சிதையாத் திறல்சேர் முடியினையும்
சிதைப்ப, ஓடிப் பதிசேர்ந்தான். 274
வெம்பி முதல்வன் தான்எய்தி
வில்லும் தேரும் அழிந்தகன்றான்.
கும்ப கருணன், அதிகாயன்
எய்தி யமன்ஊர் குறுகினார்.
தும்பை சூடி இராவணிவந்து
எதிர்ப்ப, இளவல் தொலைத்திட்டான்.
நம்பி ஒருவன், மூலபலம்
நணுக நூழி லாட்டயர்ந்தான். 275

## இராவண வதம்

கயிலை எடுத்த அதிரேக
வலியன் அழன்று சீறிஎதிர்ந்து
அயில்கப் பணம்தண்டு எழுச்சூலம்
ஆழி உலக்கை முசுண்டிஅம்பு
வயிரப் படைவாள் மழுப்பிறவும்
வழங்க, அவைஎல் லாம்துணித்துக்
குயிலைப் பொருவும் இன்மொழியை
நினைத்த நெஞ்சைக் குறைத்திட்டான். 276

## இராமன் முடிசூடி அரசாளுதல்

சோம புரியில் வாழ் ஈசன்
அருளை நினைந்து துதிகூறி
வாமம் இறைகொள் சானகியை
மீட்டு மானம் வரஏறித்,
தாம மார்பன் பரதன்எதிர்
சார அயோத்தி தனிற்சென்று
நாம வேலான் முடிசூடி
ஒருகோல் ஓச்சி நன்கிருந்தான். 277

---

274. கசம்-யானை. துரகம்-குதிரை. பொழிந்தோன்-இராவணன். கதுமென்று-விரைந்து. கிதையா-சிதைத்து. பதி-ஊர்.

275. முதல்வன்-இராவணன்; இராவணி-இந்திரசித்தன்; இளவல்-இலக்குவன்; நம்பி-இராமன்; நூழிலாட்டு அயர்ந்தான்-கொலை செய்தான்.

276. அதிரேகம்-அதிசயமான; வலியன்-இராவணன்; இன்மொழி-சீதை.

227. சோமபுரி - வானரவீர மதுரை. வாமம் இறைகொள் - மணவறையில் இராமனுக்கு இடப் பக்கத்தில் வீற்றிருந்த எதிர் சார - எதிர் கொள்ள. நாம வேலான் – இராமன்.

**தோற்றுவாய்**

பாலாழி மிசைமன்னு துயில்நீங்கி
நாடாள வருபைந்துழாய்
மாலாம்இ ராமன்செ யும்பூசை,
நன்காய்வ குத்தாம் இனித்
தோலாது விருதிட்ட அனுமானை
முதலாம்கு ரக்கின்தொகை
மேலேறு பசியால்வ ருந்திக்,கள்
மடுஉற்ற விதம் ஓதுவாம்: 278

**வானரச் சேனையின் பசி**

பிறர்கொண்ட மனையார்த மைப்பெற்ற
தாய்என்று பெரிதெண்ணும்அவ்
அறமேவுஇ ராமன்,சி னந்தேஇ
லங்கைக்கண் அமர்செய்யும்நாள்,
மறம்ஆர்கு ரக்கின்பெ ருஞ்சேனை
பசியுற்று மிகவாடியே
கறைதோயும் மணிகண்டன் வாழ்சோம
புரிமீது கடிதுற்றவே. 279

**வில்வவனம் வந்து இறைவனைப் பூசித்தது**

பொடிபூசும் உருவத்துஇ ராமன்சொல்
லால்வந்து புகுகீசகம்,
படியோர்கள் அழியாத பதம்எய்த
வருவையை பனிவெண் மதித்
தடம்ஆடி உயர்கோவி லிற்சென்று
துதியோடு தனையேஉணர்
அடியார்கள் உளம்உற்ற சோமேசன்
அடிமீதில் அர்ச்சித்தவே ! 280

---

278. பாலாழிமிசை-திருப்பாற்கடலில்; துழாய் மாலாம்இராமன்-திருமால் ஆகிய இராமன். நன்காய்-நன்றாக. வகுத்தாம்-சொன்னோம். தோலாது-தோல்வியடையாமல். விருதிட்ட-வெற்றிபெற்ற. தொகை-கூட்டம். கள்மடு-கள்ளின் கிணறு.

279. அறம்மேவு-அறத்தை விரும்பிய; அமர்-போர். மறம்ஆர்-வலிமை நிரம்பிய, கண்டன்-அரன். கடிதுற்ற-விரைந்து அடைந்தன,

280. பொடி - திருநீறு. கீசகம் - குரங்கு படியோர்கள் - உலகத்தோர். பதம் - வீடுபேறு. மதித்தடம் ஆடி - சந்திரதீர்த்தத்தில் நீராடி.

### வானரங்களின் துதி

வார்ஏறும்இ ளங்கொங்கை அயிராணி
மகிழ்கூறும் வரைமார்பினார்,
பார்ஆளும் மனுவேந்தர் பாதாளம்
ஆள்கின்ற பணிவேந்தர் மற்று
யாரேனும் வாழ்வுற்றது உனை நன்கு
பூசித்த இயல்பு ஆதலால்,
ஏர்ஆம்நின் அருள்நோக்கம் எம்பாலும்
வைத்து இன்னல் தீராய்!என. 281

### இறைவன் பார்ப்பான் உருவில் வெளிப்படல்

உரைத்தன தெரிந்து,ஓர் பார்ப்பான்
உருவமாய் இலிங்கம் நின்று
தரைத்தலம் போந்து, இ ராமன்
தானையை இனிது நோக்கி
'வருத்,திடும் புசியைத் தீர்த்தும்
வரு,கென அங்கித் திக்கின்
அருத்தியோடு ஏகி, மிக்க
அருளொடும் தரையைப் பார்த்தான். 282

### மதுவின் மடு உண்டாதல்

பூமியைப் பார்த்த லோடும்
மதுமடு ஒன்று பூப்ப,
'ஆம்இது நுமக்கு மாந்தி
அடுபசி அகற்றும்' என்னாக்
காமனை எரித்த நம்பி
மறைதலும், களித்து நோக்கித்
தேமவே கத்துட் சென்று
தெவிட்டிட உண்ட அன்றே! 283

---

281. அயிராணி - இந்திராணி. மார்பினார் - இந்திரர்கள். பணிவேந்தர் - பாம்பு அரசர்கள், ஏர் ஆம் - அழகாகிய.

282. இலிங்கம் நின்று-இலிங்கத்தினின்று. தானை-படை வீரர். தீர்த்தும்-தீர்ப்போம். அங்கித்திக்கு-தென்கிழக்கு. அருத்தியோடு-விருப்பத்துடன்.

283. மது மடு-கள்ளின் கிணறு. பூப்ப-உண்டாக. மாந்தி-குடித்து. அகற்றும்-அகற்றுங்கள். என்னா-என்று. காமனை எரித்த நம்பி-சோமேசன். உண்ட - உண்டன.

### குரங்குகள் மதுஉன்டு மகிழ்தல்

எண்ணிலாச் சேனை துய்த்தும்,
எட்டுணை யெனினும் குன்றாது-
அண்ணல்வீட் டின்பம் போல-
இருத்தலும் அதனை நோக்கிப்
பண்அமை மகதி யாழைப்
பழிக்கும்அம் தீஞ்சொற் செவ்வாய்ப்
பெண்ஒரு பாகன் ஆடல்
வியந்தன பெரிதும் மாதோ! 284

### வானரங்களின் உரை

உடற்றுவெம் பசிநோய் நீங்க,
உவகைமீ தூரத், தீந்தேன்
மடுத்தனை அகன்று பாடி
மல்லரின் உழிதந்து எற்றி,
நடித்துஉறத் தாவி ஓடி
நகைத்து,வெண் மதிஒண் கண்ணிச்
சடைத்தலைப் பெம்மான் வைகும்
சினகரம் சார்ந்து கூறும். 285

குடைஎடுத்து ஏந்தும் செங்கண்
குறியதாட் குறட்டு முன்னம்
மடைமடு உதவிக் காத்த
வண்ணம்போல் எமக்கும் ஐய!
கடிமது மடுத்தந்து ஆண்டாய்!
இதற்குஒரு கைம்மாறு உண்டோ?
அடியர்துன் புற்றால் தீர்த்தல்
நாயன்மார் கடனே ஆமால். 286

---

284. துய்த்தும். உண்டபின்னும், எட்டுணை எனினும்-சிறிதும். அண்ணல்-சோமேசன், பண்அமை-இசைஅமைந்த, மகதியாழ்-ஒருவகை யாழ். பெண்-உமை. பாகன்-சோமேசன். ஆடல்-திருவிளையாடல். வியந்தன-வியந்துபோற்றின.

285. தீந்தேன்மடு தனை-கள்ளின்கிணற்றை. மல்லரின்-மல்போர் வீரர் போல. எற்றி - ஒன்றை ஒன்று மோதி. வெண்மதி ஒண்கண்ணி - சந்திரனாகிய தலைமாலை. பெம்மான்-சோமேசன். சினகரம் - கோவில். கூறும் - சொல்லத் தொடங்கின.

286. குறட்கு - குண்டோதரன் என்னும் பூதத்துக்கு. மடை மடு-சோற்றுக் குழி. மது மடு-கள்ளின் குழி. நாயன்மார்-ஆண்டைகள்.

### இறைவனிடம் விடைகொண்டு மீளுதல்

காதலொடும் உனைப்பூசை புரிந்தனம்யாம்.
அதனாலும் கவினும் இங்ஙன்
தீதறுநன் மதுஅளித்தாய் அதனாலும்,
இருவகையும் திகழ இந்த
மாதலத்துக்கு ஒருபெயர்வா னரவீர
மதுரைஎன வழங்கல் வேண்டும்.
வேதமுதல் வாஎன்ன அதற்குஇசைய
விடைகொண்டு மீண்டு பின்னர். 287

### சீதையை மீட்டுத் தம்ஊர் அடைதல்

கோயிலினைச் சூழ்போத வில்வநறுந்
தருஅன்றிக் கூறும் வேறு
சேயசினை மரப்பதுக்கை அகழ்ந்தெறிந்து,ஓர்
குரோசம்மட்டும் சிறப்பச் செய்து,
மாயவன்தன் அடிக்கமலம் கண்டுதொழு
தெழுந்துஅரக்கர் குலத்தை மாய்த்துப்
போய்உறைசீ தையைமீட்டு,அங் கவன்அனுக்கை
கொண்டுபதி புகுந்த மாதோ! 288

### பலஸ்ருதி

இந்தக் கதைகேட் குநர்அன் பின் இசைத்து ளோர்கள்,
புந்திக் குள்விளைந் தனயாவையும் பொற்பின் எய்தி,
அந்திப் பிறைகொன் றைஅணிந்திடும் அண்ணல்பாதம்
வந்தித் துவணங் கிநன்முத்தியில் மன்னு வாரே! 289

ஐந்தாவது இராமன் கதையும் வானரத்தின் கதையும்
உரைத்த சருக்கம் முற்றும்.
ஆகத் திருவிருத்தம் 291

---

287. கவினும் இங்ஙன் - அழகு தருகின்ற இவ்விடத்து. மாதலத்துக்கு - பெருமையுடைய இத்தலத்துக்கு. இசைய-அரன் இசைந்தமையால்.

288. சூழ்போத - சுற்றும். தரு - மரம். சேயசினை மரப்பதுக்கை-நீண்ட கிளைகளையுடைய மரத்தூறுகள். அகழ்ந்தெறித்து. பறித்தெறிந்து. குரோசம்-கூப்பிடுதூரம். மாயவன் - இராமன். அனுக்கை கொண்டு - விடைகொண்டு. பதி - தம் ஊர். புகுந்த - புகுந்தன.

289. இசைத்துள்ளோர்கள் - சொன்னவர். புந்திக்குள் விளைந்தன-மனத்தில் எண்ணியவை. பொற்பின் அழகுற. அண்ணல் - சோமேசன்.

## சருக்கச் சுருக்கம்

### 6. சிவபுண்ணியம் உரைத்த சருக்கம்

உமாதேவிக்குச் சிவபெருமான் பசு முதலியவற்றின் பெருமைகளை விரிவாகப் பேசினான்.

பசு, திருநீறு, உருத்திராக்கம், வில்வமரம், பஞ்சாட்சரம், சிவதருமம் ஆகியவை மிக இன்றியமையாதவை. இவற்றைப் பூசிப்பதால், அணிவதால், சாத்துவதால், ஓதுவதால், செய்வ தால் பல பயன்களை அடையலாம்.

தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே என்று சிவபெருமான் கூறிக்கொண்டிருந்தான்.

அப்போது திருமால் சிவனைக் காண வந்தார். சிவ பெருமான் ஒரு திருவிளையாடல் செய்ய நினைந்தான். உமை யின் கைக்கடகம் மறைந்துபோயிற்று. உமை திருமாலின் முகத்தைப் பார்த்தாள். திருமால் உடனே ஒரு கடகத்தைப் படைத்து உமைக்கு அளித்தான்.

மீண்டும் கடகம் மறைந்தது. திருமால் மீண்டும் தந்தார். இவ்வாறே சிலமுறை நடந்தது.

இதனால் மகிழ்ந்த உமாதேவி, திருமாலை நோக்கி, "கடகத்தைமீண்டும் மீண்டும் அளித்தமையால் உனக்குத் தியாக வினோதன் என்று பெயர் விளங்கட்டும்" என்று கூறினாள். "உனக்கு இனிப் பாடகவல்லி எனப் பெயர் நிலவட்டும்" என்று திருமாலும் உமையை நோக்கிக் கூறினான்.

திருமால் விடைகொண்டு சென்றபிறகு இறைவன் வில்வ வனத்தில் தன் ஆலயத்துக்குத் தெற்கே ஓர் ஆலயம் திருமா லுக்கு அமைத்தான்.

சோமபுரி மக்கள் புதிதாகத் தோன்றிய ஆலயம்கண்டு மகிழ்ந்தனர். பாண்டியன் இச்செய்தி அறிந்து, திருமால் அடியார்களை வரவழைத்துச் செல்வமும் கிராமமும் வழங்கி ஆலயப் பூசை முறைப்படி நடக்க ஏற்பாடு செய்தான்.

திருமாலும் பூசனை ஏற்று அடியார் வினைமாற்றி வரம் தந்து கொண்டு விளங்குகின்றார்.

## 6. சிவபுண்ணியம் உரைத்த சருக்கம்

### வாயுவின் உரை

இன்னம்ஒரு கதை,மதவேள் மாய முன்னம்
எயில்மூன்றும் இளநகைசெய்து எரித்த பெம்மான்
கன்னலின்பா கினில்அமுதம் தேன்பால் கண்டு
கலந்தனைய அம்தீஞ்சொல் கன்னி கேட்பப்
பன்னியதுஅவ் வகைநின்க்குப் பகர்வென் என்னப்
பலபுலன்கள் வழிமாற்றிப் பரமன் பாதம்
முன்னியநன் மனப்பிருகு அதனை இன்னே
மொழிதி! எனக் காற்றிறைவன் மொழித லுற்றான். 290

### பசுவின் வரலாறு

பண்டொருநாள் வில்வவனத்து ஓர்பால் எம்மான்
பரையொடும்வே டரின்இருப்பப் பரைதான் நோக்கித்
திண்திறலோய்! பசுவினொடு திருநீறு அக்கம்
திருவிருக்கம் ஐந்தெழுத்து நினது தன்மம்
தொண்டரது பெருமைஇவை சொல்லு கென்னச்
சொற்றிடுவென் நிறுத்தமுறை பசுவின் தோற்றம்
வண்டுஇமிர்பூங் குழலாய்கேள்! அமுதம் செய்யாள்
மதியினொடும் பாற்கடலில் வந்தது அன்றே. 291

தூயநந்தை பத்திரைவண் சுரபி மிக்க
சுசீலைவிறற் சுமநைஎன வருக்கம் ஐந்தாம்
ஏயநிறம் முறையே பொன் காரி வெள்ளை
இயல்தூமம் அரத்தநிறம் என்ப தேவர்

---

290. மதவேள் - மன்மதன். எயில் மூன்று - முப்புரம், பெம்மான் - அரன். கன்னலின் - கரும்பின். கன்னி - உமை. பன்னியது - சொன்னது. அவ்வகை-இந்தப் படியே. முன்னிய - நினைத்த. இன்னே - இப்பொழுதே. காற்றிறைவன் - வாயு பகவான்.

291. வில்வவனம் - வானரவீரமதுரை. பரை - உமை, வேடரின்-வேடர் போல. விருக்கம் - வில்வமரம். நினது தன்மம் - சிவதருமம். சொற்றிடுவேன் - சொல்வேன். நிறுத்தமுறை - வரிசைப்படி. பசுவின் தோற்றம்-பசுவின் பிறப்பு, அமுதம் செய்யாள் மதியினொடு - அமுதோடும், திருமகளோடும், சந்திரனோடும். திருமால் கடல் கடைந்த போது அமுது முதலியவை தோன்றின என்பது புராண வரலாறு.

ஆயும்மறை முனிவோர்கள் தமக்கும் இன்றி
அமையாது கோமயம்நீர் தயிர்பால் நெய்யும்
தீயுறுபொன் போன்றஉரோ சனையு மாகச்
செப்பியஆ றும்புனிதம் சிறந்த வாமே. 292

மறைநாலும் அங்கமும்அங் கிவற்றி னின்றும்
வந்தனவே கருமருப்பின் மூலம் வேதன்
கறையணற்பாம்பு அறிதுயில்கூர் மாலும் வாழ்வர்
கருதரிய தீர்த்தமெலாம் நுதியில் சேரும்
இறையும்அக லாதுசிர நடுவில் யாமே
இருக்கின்றோம் மத்தகத்தில் நிருதி வைகும்
அறையும்இரு விழியினில்இந்து இரவி சேரும்
அமர்வர்பரிப் பெயர்த்தேவர் செவியின் அன்றே. 293

தந்தமதின் மருத்துவர்உற் றிடுவர் நாவில்
தனிவருணன் உறும்இயக்கர் கபோலம் சார்வர்
உந்தியில்பூ மகள்உறும்நீ வயிற்றின் வாழ்வை
உறும்கழுத்துஇந் திரன்முலையில் ஆழி சேரும்
வந்திடும்முக் காரத்தில் வாணி நற்கோ
மயத்தில்இலக் குமிநீரில் கங்கை வைகும்
நந்தலுறு குளம்பினில்கந் தருவர் வாழ்வர்
நாடியினில் உருத்திரர்கள் நண்ணு வாரே. 294

வித்தகநற் பிதிர்கள்உறை வார்பிறப்பின்
மேவுவர்வான் முனிக்கணங்கள் உரோமந் தன்னில்
இத்தகைய வாம்பசுவின் கணம்செல் போழ்தில்
எழும்துகள்கள் படநிற்பின் கங்கைக்கு ஏகிப்

---

292. நந்தை, பத்திரை, சுரபி, சுசீலை, சுமநை ஆகிய ஐந்தும் பசுவின் வகைகள். பொன், காரி, வெள்ளை. தூமம், அரத்தம் இவை முறையே அவற்றின் நிறம். பொன் - மஞ்சள் நிறம், காரி - கருப்பு. தூமம் - புகைநிறம். அரத்த நிறம் - சிவப்பு வண்ணம், கோமயம் - சாணி. நீர் - கோசலம்; மூத்திரம், உரோசனை - கோரோசனை. சிறந்தவாம் - சிறந்தவையாகும்,

293. அங்கம் - வேதாங்கம் ஆறு. இவற்றினின்றும் - இந்தப் பசுக்களினின்றும். கருமமருப்பின் மூலம் - கரிய கொம்புகளின் அடிப்பாகம். நுதியில்-கொம்பின் நுனியில். யாம் - அரன், இந்து இரவி - சூரிய சந்திரர்கள். பரிப்பெயர்த்தேவர் - அசுவினி தேவர்கள்; தேரில் ஒரு வகையினர்.

294. தந்தமதின் - பல்லில், மருத்துவர் - தேவரில் ஒரு வகையினர். கபோலம் கன்னம், உந்தி - மார்புச்சுழி. நீ - உமாதேவி. கழுத்து இந்திரன் உறும் என்று மாற்றுக, முலை - பால் மடி. ஆழி - சக்கரம். முக்காரம் - வாயால் எழுப்பும் ஒலி. கோமயம் - சாணி. நீர் - கோசலம். நாடி - உயிர்நாடி.

பத்தியுடன் விதிவழாது ஆடி மீண்ட
பலன்வரும்பச் சறுகுஅருத்திப் பரிந்து காத்தோர்
உத்தமமாம் மேலுலகிற்கு அணித்தாய் வைகும்
ஒளிபெறுகோ லோகத்தின் உறைகு வாரே. 295

## திருநீறு செய்யும் முறை

கோமயத்தை அழலிடையிட்டு எடுத்து வைத்துக்
கொள்வதுவே திருநீறாம் விரியைக் கூறின்
நாமகள்பா டலின்அடங்கா நலத்த மின்னே!
நண்ணியிடும் ஈருவாப் பதினான்கு எட்டில்
தோமகலும் கதிர்மதியைப் பாம்பிரண்டும்
தொடுநாளில் வைகறையில் துயிலை நீக்கி
ஏமமுறு சைவன்மிக மவுனி யாகி
ஏகிஆன் அடைகொட்டில் இறுத்துப் போற்றி. 296

வருணநான் கினுக்கும் வெண்மை செம்மை பொன்மை
கருமைஎன முறையேஆம் இவற்றின் வண்ணம்
மருவுகன்று கிழவுவந்தி சில்நோய் கோடல்
வாலாமை வரல்கூழை சரம்கன்று ஈனல்
குருடுபிறப் பறிந்தகற்றி நன்மை யாலே
கோமயத்தைப் பலாசுமரை இலைகைக் கொண்டு
பரவுமனு வுடனேநல் உண்டை செய்தல்
பார்த்துலத்தல் அனல்வைத்தல் எடுத்தல் பண்பே. 297

உத்தமநீறு இதுவாகும் கானிற் சென்றுஆங்
குலர்ந்தகோம யம்எடுத்துக் கோநீர் பெய்து
சுத்தியுடன் குழைத்துஅனல்வைத்து எடுத்த நீற்றைச்
சொல்லுவர்மத் திமமாகத் தாபம் என்னும்

---

295. பசுவின் கணம் - பசுக்கூட்டம். துகள் - தூசி. விதிவழாது-முறைப் படி - நீராடி, பச்சறுகு அருத்தி - பசிய அறுகம் புல்லை ஊட்டி. அணித்தாய் - அருகில். கோலோகம் - சுவர்க்க உலகங்களில் ஒன்று.

296. கோமயம் - சாணி. மின் - உமை. வைகறை - அதிகாலை. ஆன் அடைகொட்டில் - மாட்டுக் கொட்டில். ஈருஉவா-பௌர்ணமி, அமாவாசை. பதினான்கு - சதுர்த்தசி, எட்டு - அட்டமி. கதிர்மதியைப் பாம்பிரண்டும் தொடும் நாள் - சூரிய சந்திரகிரகண நாள்கள்.

297. வருணம் நான்கு - பசுவகைகள் நான்கு. வண்ணம் - நிறம். பலாசு இலை, (தா)மரை இலை என்று கூட்டுக. மனுவுடன் - மந்திரத்துடன்,

கொத்தழலில் படுசாம்பர் ஆனைந்தாலே
குழைத்து அனலிற் படுத்துஎடுத்தல் அதமமாகும்
வைத்திடு ... ... ... ... பூதி
மன்னுறக்கட் டியகயறு பிரமனாமே. 298

## திருநீறு இடும் இடங்கள்

இவ்வகைய பூதிகுழைத்து இடுதற் கான
இடம்இரண்டு தலையினொடு நெற்றி யாகும்
வெவ்வினைதீர்த் திடுபதினாறு, எட்டு,ஐந்து ஆகும்.
விளம்புஇவற்றில் சிறந்திடுவ பதினாறு, எட்டாம்
செவ்வியலர் பதினாறு தானம் கூறின்,
சிரம்,நெற்றி, மருமம்,உந்தி, இரண்டு சானு,
நவ்விவிழி யாய்!இருதோள், முழங்கை, முன்கை,
நல்லமுதுகு, இருவிலா, கண்டம் ஆமே. 299

எட்டிடம்நற் சிரம்,நெற்றி, மார்பு, தொப்புள்,
இருதோள்,வென் கழுத்து,இவையாம் ஈறில் வேதர்
கட்டெழில்மன் னவர்,வணிகர், சதுரர் என்னக்
கழறவரும் நான்குவகை வருணத் தார்க்கு
மட்டுநிதம் ஒன்றுஒன்றோ டரையும், பின்னர்
வழங்கும் இரண்டு இரண்டரையாம் அள்ளிவாயின்
அட்டிடுபூ தியிற் சிறிதும் சிந்திடாமல்
அண்ணாந்து வெண்பூதி அணிதல் நன்றே. 300

## திருநீறு இடும்முறை

ஆனதொரு தற்சனியில் யாம்உறைவோம்
மத்திமையில் அளிகள் மூசாத்
தேனுறையும் மலர்க்கமலத் தேவுறைவன்
ஆமிகையில் தென்றல் தேர்கொள்

---

298. மன்னுறக் கட்டிய கயிறு. பிரமனாமே. ஆனைந்தால - கோமயம் நீர் தயிர் பால் நெய் ஆகிய ஐந்தினால்.

299. மருமம் - மார்பு. உந்தி - நாபி. சானு - ? விலா - விலாப்பக்கம். கண்டம் - கழுத்து. விபூதி அணியும் பதினாறு இடங்கள் கூறப்பட்டுள்ளன. இருதோள் இருமுழங்கை இரு முன்கை என்று கூட்டுக.

300. ஈறில்வேதர் - அழிவில்லாத அந்தணர். சதுரர் - நான்காம் வருணத் தார். வென் - முதுகு.

வேனிலஞ்செல் வனைஉயிர்த்தோன் மேவுவன்'ஆ
தலினால்அவ் விரல்மூன் றாலும்
ஈனமறச் சிவமனுவால் நெற்றிமிசை
இடக்கரம்சேர்த்து இடுதல் வேண்டும். 301

ஆறுவிரல் நீளம்நால் விரல்அகலம்
இடநெற்றிக்கு அளவ தாகும்
வீறுயரும் மார்பினுக்கும் இருதோட்கும்
அவ்வகையே விளம்ப லாகும்.
கூறியமற் றிடத்தில்ஒரு விரல்அளவை
இடல்விதியாம். குழைத்தி டாது
நீறுபுனைந் திடும்காலம் முகம்கழுவல்
உணல்முதலாம் நெறியி னாமே. 302

**திருநீற்றின் பெருமை**

'ஆகமம்சொல் விதிப்படியே பூதிஅணிந்
தவர்கள்கா தரத்தை நீங்கிப்
பாகுஅடுசொல் திதலைமுலை மனைவிமக்கள்
கிளைஞரொடும் பாரில் வாழ்ந்து,
மாகபுரக் கோன்அமரர் ஏத்தெடுத்து
மலர்பொழிய மானத்து எய்தி,
யோகினர்க்கும் அடைவரிய நமதுலகத்து
எஞ்ஞான்றும் உறுவர் அன்றே. 303

நீராட இயலாதேல் சிவநாமம்
சொற்றதற்குபின், நீற்றைக் கைக்கொண்டு
ஏர்ஆரும் தலைமுதலாய்ச் சானுமட்டும்
தைவருதல் ஏற்ற மாகும்.

---

301. தற்சனி - சுட்டு விரல். மத்திமை - நடுவிரல். ஆமிகை - மோதிர விரல். யாம் - அரன். கமலத்தேவு - பிரமன். வேனிலஞ் செல்வனை உயிர்த்தோன் - திருமால், சிவமனு - சிவமந்திரம்.

302. அவ்வகை - ஆறுவிரல் நீளமும் நால்விரல் அகலமும். மற்றிடத்தில்- பிற இடங்களில்; அவை இச்சருக்கம் 10, 11 ஆவது பாடல்களில் கூறப்பட்டுள்ளன.

303. விதி - முறை. பூதி - திருநீறு. காதரம் – அச்சம். கிளைஞர் – உறவினர். மாகபுரம் - இந்திர லோகம். மாகபுரக்கோன் - இந்திரன். ஏத்தெடுத்து - போற்றி. மானத்து எய்தி - விமானத்தில் ஏறி. யோகினர் - தவசிகள். அடைவரிய - பெறுதற்கு அரிய. நமதுலகம் - சிவலோகம். உறுவர் - அடைவார்கள்.

ஆரேனும் தாமஒருகால் நீறாடின்
இருவினைவிட் டகன்று வாழ்வர்
சீராக நிதம்புரிந்தால், அவர்வடிவே
நமதுருவாம் செப்பில் மன்னோ. 304

ஒருக்கால்எட் டுணையான் நீறு அணிந்தாலும்,
ஆங்கவரே உம்பர் ஆவார்
இருக்குஆதி நூல்ஓதல், சுபகன்மம்
ஓயாமல் இயற்றல் முற்றிப்,
பெருக்காறு தடம்தோய்ந்து நியமமொடு
பூதிஅணி பெரியோர் தம்மைச்
செருக்காலே நிந்தைசொல்வோர் குண்டகராம்
அவர் நரகம் திளைப்பர் அன்றே 305

பூதிஅணி யாதவரே புலையர்களாம்
அவர்முகமே புறங்கா டாகும்
யாதும்அவ ருடன்பேசில் அஞ்செழுத்தை
நூறுதரம் இயம்பல் வேண்டும்
தீதறுவெண் பொடியணியின் அண்ணாந்து
புனையாமல் சிந்தி னார்கள்
ஆதுலராய் இங்கும்இருந்து அங்கும்நர
கந்தனிலே அழுந்து வாரே 306

**அக்கமணியின் வரலாறு**

பூதியின் தன்மை ஈது
புகலுவம் அக்கத் தன்மை
ஓதும்நம் வலக்க ணின்றும்
உறைத்தன துளிஈ ராறு

---

304, சானு-புயம்; தைவருதல்-தடவுதல்; நீறுஆடின்-விபூதி அணிந்தால்; நிதம் புரிந்தால்-நாடோறும் நீறு அணிந்தால்.

305. எட்டுணையான்-எவ்வளவாகிலும்; உம்பர்-தேவர்கள்; இருக்குஆதி-வேதங்கள் முதலிய; தடம்-குளம்; குண்டகர்-தீயவர்.

306. புறங்காடு-சுடுகாடு; ஆதுலராய்-வறியவராகி.

மேதகும் இடக்க ணின்று
 வீழ்ந்தன துளிபன் னாறு
சோதியாம் அழற்க ணின்று
 துளித்தன துளிஓர் பத்தே 307

ஆகிய முப்பான் எட்டும்
 அத்துணைச் சாதி யாகிப்
போகபூ மியினில் முன்னே
 பொலிவுற முளைத்து நீண்டு
சாகைகள் போக்கிக் காய்த்துத்
 திரும்வித்தே அக்க மாகும்
தேகமீது அணிந்தோர் தாமே
 சிறந்தநம் தொண்டர் ஆவார். 308

**அக்கமணியின் பெருமை**

ஒருமுகம் முதல வாக
 உயர்பதி னான்கு மட்டும்
மருவுற அணிந்தால் முன்செய்
 மறையவர் பசுக்கள் மின்னார்
நரர்கருப் பணிகொல் பாவம்
 பிறவும் போய் நன்மைமுற்றிப்
பெருமகம் முடித்த பேறு
 பெற்றுநம் உலகில் சேர்வார் 309

சிரம்திகழ் தரஓர் நாற்பான்
 செவியிரண் டினுக்குஈ ராறு
கரங்களில் இருபா னான்கு
 கவின்செய்தோள் களுக்கு நாலெட்டு

---

307. அக்கத்தன்மை-உருத்திராக்கத்தின் இயல்பு; உறைத்தன-துளித்தன: பன்னாறு-பதினாறு: அழற்கண்-நெற்றிக்கண்.

308. முப்பான் எட்டு-(12+16+10) முப்பத்துஎட்டு; அத்துணைச் சாதி: முப்பத்து எட்டுச்சாதி; சாகை-கிளைகள்.

309. ஒருமுகம்-ஒருமுகமுடைய அக்கமணி; பதினான்கு-பதினான்கு முகமுடையது; முன்செய் பாவம் என்று கூட்டுக; பெருமகம்-பெரிய வேள்விகள்-முடித்தபேறு-செய்த பயன்; கரு-கருப்பம்; பாணி-பாம்பு.

உரந்தனில் ஒருநூற் றெட்டுக்
கண்டத்தில் ஒருநா லெட்டாய்
அரும்பெறல் மணியை ஐம்பாற்கு
இரண்டொழித்து அணிதல் வேண்டும் 310

இம்முறை அணிந்தோர் வேத
விதிப்படி இவுளி வேள்வி
அம்ம !ஒன்று ஆற்றும் பேற்றை
அடைவர்வெண் படிகம் துப்புச்
செம்மைசெய் பொன்னிற் சேர்த்துச்
சிறப்புடன் அணிவா ராகின்
கைம்மலை உரிவை போர்த்த
நமதுமாக் கயிலை சேர்வார் 311

ஒன்றுஐந்து பன்னொன்று ஈரேழ்
முகத்தைவைத்து உவந்துஅர்ச் சிக்கின்
நன்றுவீற் றிருப்பர் அக்கம்
இன்றிநல் தவங்கள் வேள்வி
மன்றசெய் திடினும் முற்றா
வான்மணி சிரத்தில் வைகத்
துன்றுநீர் படியின் கங்கை
தோய்ந்ததே ஆகும் மாதே. 312

சீருறு மணிகைப் பூண்டு
மனுவினைச் செபித்தல் செய்யின்
ஓர்உருக் கோடி ஆகும்
தீவினைக்கு ஒருவ ரேனும்

---

310. நாற்பான்-நாற்பது. இருடானான்கு-இருபத்து நான்கு. நாலெட்டு முப்பத்து இரண்டு.

311. இவுளிவேள்வி-அசுவமேத யாகம். வெண்படிகம்-பளிங்குக்கல். துப்பு-பவளம். நமது-சிவபெருமானது.

312. முகத்தை-முகமுடைய அக்கமணியை. மன்ற-மிகுதியாக. முற்றா-பலன் இல்லை. வான்மணி-அக்கமணி. நீர்படியின்-நீராடினால். தோய்ந்தது-நீராடியது.

பாரின்ஓர் மணியைப் பூணின்
நமதுவான் பதம்பெற்று உய்வர்.
ஓரின்ஆ யிரம்பூண் டோர்கள்
பேற்றினை உரைக்லாமே! 313

இத்தகு மணிகள் தம்மை
இகழ்ந்துளர் எவர்கள் அன்னோர்
கொத்துடைப் பாவர் ஆகி
நிரயமாம் குழியில் வீழ்வர்
முத்தக முளரி அன்ன
முகிழ்முலை இலவச் செவ்வாய்ச்
சத்தியே! அக்கத் தன்மை
இதுவில்வத் தன்மை சொல்வாம். 314

**வில்வத்தின் வரலாறு**

கற்பகத் தருவை யாதிக்
கணிப்பில்பா தவங்கள் தம்மின்
பொற்புறும் வில்வம் மேலாம்
கோமயம் பூத்த லாலே
அற்பொடு வடமீன் போற்றும்
கற்பருங் கலமாய் உள்ள
உற்பல விழியின் செய்யாள்
அதனிடை உவந்து வாழ்வாள். 315

ஆதலால் அதனை யாரும்
அருந்திரு விருக்கம் என்பர்.
வேதன்அம் மரத்தின் மூலம்
வீற்றிருந் திடுவன் மாலோன்

---

*313.* மணி-அக்கமணி. கைப்பூண்டு-கையில் கொண்டு. மனு-மந்திரம். ஓர் உருகோடி யாகும்-ஒருமுறை சொன்னதே கோடிமுறை சொன்னதற்கு ஒப்பாகும். தீவினைக்கு ஒருவன்-மிகமிகப் பாவியானவன். பூணின்-பூண்டால். வான்பதம்-சிவலோகம். உய்வர்-வாழ்வடைவர். ஆயிரம்-ஆயிரம் அக்கமணிகள். உரைக்கலாமே-சொல்லமுடியுமோ?

*314.* இத்தகு-இத்தகைய புகழ்கொண்ட. மணிகள்-அக்கமணிகள். பாவர்-பாவிகள். நிரயம்-நரகம். வில்வத் தன்மை-வில்லமரத்தின் இயல்பு. முத்தக முதல் செவ்வாய் வரை உள்ள தொடர் உமைக்கு அடைமொழிகள்.

*315.* தரு-மரம். ஆதி-முதலிய. கணிப்புஇல்-கணக்கில்லாத. பாதவங்கள்-மரங்கள். வடமீன்-அருந்ததி. செய்யாள்-திருமகள். வடமீன் முதல் விழியின் வரையுள்ள தொடர் திருமகளுக்கு அடைமொழிகள்.

காதலித்து அதனின் நாப்பண்
உறைகுவன் களிப்பின் யாம்அப்
பாதவ நுனியின் மீது
பரிந்துவீற் றிருத்தும் அன்றே. 316

தளம்ஒன் றினில்மூ விலையும்இச்சை
கிரியை ஞான சத்திஎன்பர்
வளமார் குழைத்த வில்வத்தின்
அடியின் மூன்று தினம்மருவி
அளியி னோடும் மாதாஎன்று
அணுகித் துயில்நீத்து உறையுமவர்,
களியில் இயற்றும் பவம்அனைத்தும்
கழிந்து கயிலை காண்குவரால். 317

பக்கம் அதனில் ஒன்றுஎட்டுப்
பதினான் குறவும் திதிபாதம்
தக்க சோம வாரம்உயர்
...... தள்ளி நன்றா
மிக்க நாளின் இரவிஉச்சி
மேவா முன்னம் விரைந்தெடுத்துப்
பொக்கம் மருவாப் பத்தியொடும்
எம்மைப் பூசித் திடல்வேண்டும். 318

**வில்வத்தின் சிறப்பு**

ஐந்து தழலி னிடைநின்று
தவங்கள் புரிந்தும் அவனிவலம்
வந்தும் நதியின் நீர்படிந்தும்
தானம் பலவும் வழங்கல்செய்தும்

---

316. திருவிருக்கம்-மேலான மரம்; மூலம்-அடிமரம்; மாலோன்-திருமால்: நாப்பண்-நடுமரம்; யாம்-அரன்; பாதவம்-மரம்; நுனியில்-நுனி மரத்தில் வீற்றிருத்தும்-அமர்ந்திருப்போம்.

317. குழைத்த - தழைகளையுடைய; மாதா என்று-தாய் என்று எண்ணி; துயில்நீத்து உறையுமவர்-தூங்காமல் இருப்பவர்; களியில்-செருக்கால்; பவம்-பாவங்கள்.

318. பக்கமதனில் என்று-பிரதமை: எட்டு-அட்டமி; பதினான்கு-சதுர்த்தசி; சோம வாரம்-திங்கட்கிழமை; இரவி உச்சி மேவா முன்னம்-மத்தியான்னத்துக்கு முன்பு; பொக்கம்-பொய்ம்மை; எம்மை-அரனை.

319, ஐந்து தழல்-பஞ்சாக்கினி; நீர் படிந்து-நீராடி; பைந்தாள்-பசிய அடி மரம் உடைய.

சிந்தை தளர்வோர் பெறும்பேற்றிற்,
கோடி மடங்கு பயன்சேர்வர்
பைந்தாள் வில்வ இலைஎமக்குப்
பரிவிற் சாத்தும் புண்ணியரே. 319

மடங்கல் சுருங்கல் முதலாய
மாசு வில்வந் தனக்கில்லை
தடங்கை யதனால் மிகவும்வில்வம்
எடுத்து நமக்குச் சாத்துமவர்,
படம்கொள் அவரம் சுமந்தபுவி
பரித்துப் பின்னர் மேலையுலகு
இடங்கள் தோறும் சென்றுஇன்பம்
நுகர்ந்துஅப் பால்வீடு எய்துவரால். 320

**ஐந்தெழுத்தின் சிறப்பு**

கூவிளத்தின் பெருமைதனைச் சிறிதுரைத்தேம்.
ஐந்தெழுத்தின் கொள்கை தன்னைப்
பாவிளவெங் களியானைக் கோடுகொண்ட
பண்ணவனும் பதுமக் கோவில்
தேவும்அறி யார்எனைநீ வினவுதலால்
இன்றுனக்குத் தெரிக்கின் றோம்கேள்!
மாவடுநேர்ந்து அருள்சுரக்கும் மைத்தவிழி!
யாய்!என்று வழங்க லுற்றான். 321

அஞ்செழுத்தே நமதுருவாம் எழுகோடி
மனுவினுக்கும் ஆதி யாகும்.
செஞ்செவே ... ... ...
வெனயாரும் செப்ப நின்ற

---

320. மாசு-குற்றங்கள்; படம்கொள் அரவம்-ஆதிசேடன்; புவி பரித்து-பூமியை அரசாண்டு: மேலையுலகு-சுவர்க்கம்; இன்பம் நுகர்ந்து-இன்பம் அனுபவித்து; வீடு-சிவபதவி.

321. கூவிளம்-வில்வம்; கொள்கை-பெருமை; பாவு இள வெங்களி யானை - பரவிய இளமையுடைய வெவ்விய செருக்குடைய குவலயா பீடம் என்னும் யானை; கோடுகொண்ட-கொம்பை முறித்த; பண்ணவன்-திருமால்; பதுமக்கோவில் தேவு-பிரமன்; தெரிக்கின்றோம்-தெரிவிக்கின்றோம்; மாவடு நேர்ந்து-மாவின் வடுவைப் போன்று; மைத்த-கருமையான; மைதீட்டிய.

நெஞ்சினிடை வேறொன்றும் நினைக்கிலராய்ச்
சிவமுன்னால் நிகழ்த்தி னாரேல்
மஞ்சுஅனைய மணிவண்ணன் நான்முகன்போல்
ஆயவரை மதிக்க லாமே! 322

'அன்னவரை எதிர்காணின், அவர்நிழல்மேற்
படஅணுகின், யாவ ரேனும்,
பன்னுமவர் கொடும்பாவம் வல்விரைந்து
வெருண்டோடும், பவஞ்சம் பொய்என்று
உன்னிஅரு னால்துவரத் துறந்துகான்
சென்றுதவம் உஞற்று வோரின்,
மன்னுபஞ்சாக் கரம்ஓதி மனையறம்செய்
திடுமவரே அதிக மாவார். 323

செம்புஇரத குளிகைஉறக் களிம்புஅகன்று
செம்பொன்னாய்த் திகழு மாப்போல்,
நம்பிஉளத்து அஞ்செழுத்தை அழுத்தினரேல்
பொய்த்தமலம் நணுகாது ஓடப்
பைம்புயல்இல் லாமதிப்போல் விளங்கிடுவர்
நாடொறும்மெய்ப் பரிசி னாலே
இம்பரினும் உம்பரினும் ஐந்தெழுத்தைச்
செப்பின்,இவண் கைலை சேர்வர். 324

சிவசிவஎன்று உரைத்திடுவோர் யாவர்ஆ
யினும் ஆக! முன்னம் செய்த
பவம்அனைத்தும் அழற்பொறிசேர் பஞ்சுமலை
எனநூறும் பயம்மீ தூர

---

322. மனுவினுக்கும்-மந்திரங்களுக்கும்; சிவ முன்னால் - சிவத்துக்கு முன்பு நின்று; நிகழ்த்தினாரேல்-சொன்னால்; மஞ்சு அனைய-மேகம் போன்ற; மணி வண்ணன்–திருமால்; ஆயவரை-அவர்களை; மதிக்கலாம்-நினைக்கலாம்.

323. அன்னவரை-பஞ்சாக்கரம் ஓதுபவரை; பன்னும் அவர்-சொல்லப்பட்ட அவர்களது; பவஞ்சம்-பிரபஞ்சம், உலகம்; உன்னி-நினைந்து; துவரத் துறந்து-முற்றும் துறந்து; கான்-காடு; உஞற்றுவோரின்-செய்பவரைக் காட்டிலும். மனையறம் செய்திடுமவர்-இல்லறத்தார்.

324. இரத குளிகை - இரசவாத குளிகை. செம்பில் இரசவாத குளிகை-செம்பில் இரசவாத குளிகை சேர்ந்தால் அதன் களிம்பு நீங்கிப் பொன் ஆகும். நம்பி - நம்பிக்கை கொண்டு. பைம்புயல் இல்லாமதி போல் - மேகம் மறைக்காத சந்திரன் போ-ல். விளங்கிடுவர் - ஒளிபெற்று விளங்குவர். இம்பர் - இவ்வுலகம். உம்பர் - மேலுலகம்

அவர்களிடத்து யமனும்உறான் முற்கணக்கும்
கீறியிடும். அவர்கள் மீண்டும்
புவனியிடைப் பிறவார்கள் அழியாத
சாரூபம் பொருந்தி வாழ்வார். 325

கையினிடை வெண்ணெயுற நெய்க்குஅலைவார்
எனவினையின் கட்டு நீக்கும்
மெய்யுறும்ஐந் தெழுத்துஇருப்பப் பிறதேடி
அறிவில்லோர் வீணே மாய்வர்.
உய்யுமவர் இதைநவின்று வீடுறுவர்.
ஐந்தெழுத்தின் உண்மை ஈது.
தையல்இனி நமதுதன்மப் பெருமையினைக்
கேள் !என்று சாற்ற லுற்றான் 326

**சிவதருமப் பெருமை**

எண்ணுறுகீழ் உலகுஉருவ முளைத்தநமை
யும்உனையும் இறைஞ்சக் கோவில்
நண்ணுவம்என்று எழுந்தோர்கள், புரவிமகப்
பேறுஉருவர் நடந்து போந்து
மண்ணின்மிசை உடல்தோயச் சன்னிதிமுன்
வணங்கிநந்தி மருங்கு நின்றே
உள்நெகிழ்ந்து தெரிசித்தோர், தீவினைபோய்க்
கயிலையினில் உற்று வாழ்வர். 327

,நந்தவனம் செய்துநறு மலர்எடுத்து
மாலைசெய்து நல்கி னோர்கள்,
கய்தநறு நெய்யதனால் பலதீபம்
வைத்திடுவோர், கலன்கள் ஆடை

---

325. பவம் - பாவங்கள். அழற்பொறி-தீப்பொறி. நூறும்-அழியும். பயம் மீதூர-அச்சம் மேலெழ. உறான்-வரமாட்டான். முற்கணக்கும் கீறியிடும்-இவர்கள் செய்த பாவக்கணக்கும் கிழித்துப் போடுவான். சாரூபம்-சிவவடிவம்.

326. என-போல. உய்யுமவர்-பிழைத்துப்போகுபவர்கள். இதை-ஐந்தெழுத்தை. தையல்-உமையே. நமது தன்மம்-சிவதன்மம்.

327. எண்ணுறு - (ஏழு என்று) எண்ணப்பட்ட. கீழ் உலகு உருவ - பாதல உலகங்களை ஊடுருவும்படி. முளைத்த-சுயம்புவாக முளைத்த. நமையும் உனையும்-சிவனையும் உமையையும். இறைஞ்ச-வணங்குவதற்கு. புரவிமகம் - அசுவமேதயாகம். பேறு-பயன். மண்ணின்மிசை உடல்தோய-தரையிலே உடம்பு படும்படி. நந்தி மருங்கு-நந்திவாகனத்தின் அருகில்.

சிந்தைமகிழ்ந்து அளித்திடுவோர், இம்மையினும்
பெருவாழ்வில் திளைத்துக் கன்ம
பந்தம்அறுத்து ஆனாத, பேரின்பக்
கடலகத்திற் படிகு வாரே. 328

மஞ்சனநீர் எடுத்துஆட்டப் பொற்குடங்கள்
கலசங்கள் மணித்தூ பக்கால்
அஞ்சடுக்கு முதலாய தீபத்தட்டு
இவைஅளித்தோர், அளவில் லாத்
செஞ்செவிமின் னார்திதலை முலைக்கண்ஒரு
மார்புஅழுந்தச் சேர்ந்து வாழ்ந்து
வஞ்சமிசை நசைஒழிய வானேறி
நமதுலகம் மன்னி வாழ்வார். 329

அழகுதுயில் அரவல்குல் ஆயிழையார்
பலரைநிதி அளித்து வாங்கி
வழுவுதபப் பயிற்றுவித்துச் சன்னிதிமுன்
நடம்புரிய வழங்கி னோர்கள்,
புழையுடைய பிணர்நெடுங்கைக் கடாம்செறியும்
களிற்றுஅரசாய்ப் பொற்பு வாய்ந்த
ஒழுகுஒளிய தரளநகை மகளிர்இள
நலம்மாந்தி உறைகு வாரே. 330

மருக்கமழ்தும் பையின்மலர்கொண்டு ஆயிரநா
மம்கூறி மதிவா ரத்தில்
அருச்சனைசெய் வித்தோர்கள், பலகற்பம்
கயிலைமலை யதனில் வாழ்வார்.

---

328. கந்தம்-மணமுள்ள; கலன்கள்-அணிகலன்கள்; திளைத்து-அனுபவித்து: கன்மபந்தம்-வினைப்பாசம்; ஆனாத-நீங்காத; படிகுவார்-திளைப்பார்கள்.

329. வஞ்சமிசை-ப்ரபஞ்சமீது; ப்ரபஞ்சம் என்ற சொல் வஞ்சம் என மருவி வந்தது. நசைஒழிய-விருப்பம் நீங்கி. நமதுலகம்-சிவலோகம்.

330. அழகுதுயில்-அழகுதங்கிய. ஆயிழையார்-பெண்கள். வழுவுதப-குற்றம் கெடும்படி, புழை-துளை. பிணர்-சொரசொரப்புடைய. கடாம்-மதம். களிற்று அரசாய்-அயிராவத யானையையுடைய இந்திரனாகி. ஒழுகுஒளிய-சுடர் ஒழுகுகின்ற. தரளநகை-முத்துப் போன்ற பற்களையுடைய இளநலம் மாந்தி-அழகினை அனுபவித்து.

உருக்கிளரும் பாலமுதம் நிவேதிப்போர்,
அவிழ்ஒன்றுக்கு உகம்ஒன் றாகத்
திருத்தகுவெண் கயிலைமலை யதின்உற்று
நிறைபோகம் திளைத்து வாழ்வார். 331

மண்டபங்கள் மதிஉரிஞ்சும் கோபுரங்கள்
பிறபணிகள் வயங்கச் செய்யும்
தொண்டர்கள்பால் புனிற்றிளங்கன் றினைத்தொடரும்
ஆஎன்னத் தொடர்கு வோரும்
அண்டர்களும் வியப்புறத்தேர் இனிதியற்றித்
திருவிழா ஆற்றி னோரும்,
கொண்டபசு நிலம்பிறவும் கொடுத்தோரும்,
நம்கணத்தில் கூடு வாரே. 332

மஞ்சனநீர் அமுதுஆதி நுரைஆடை
மணிக்கலன்கள் வாசத் தூபம்
செஞ்சுடர்பல் மலர்வில்வம் ஆதியால்
பூசைசெய்தோர், செய்வித் தோர்கள்,
நெஞ்சுஉவப்ப இப்பரிசே யாம்மகிழப்
பூசைசெய்யும் நேசத் தோர்கள்,
அஞ்சலறத் தீவினைபோய் இகபரம்சா
ரூபமுத்தி அடைவிற் சேர்வார். 333

தன்நிகர்இல் நமதுபெயர் தமைமொழிந்தோர்,
நமதுகதை சாற்றக் கேட்டோர்,
உன்னிநிதம் நமைத்துதித்தோர், ஒழியாத
நமதுபதத்து உற்று வாழ்வார்,

---

331. பரு-மணம். மதிவாரம்-திங்கட்கிழமை. பலகற்பம்-பலஊழிக்காலம். பாலமுதம்-பாற்சோறு. அவிழ் ஒன்றுக்கு-ஒரு பருக்கைக்கு, உகம் ஒன்றாக-ஓர் உக காலமாக.

332. மதி உரிஞ்சும்-திங்களைத் தொடுகின்ற. பணிகள்-திருப்பணிகள். ஆ-பசு. நம்கணம்-சிவகணம்

333. சுடர்-விளக்கு. இப்பரிசே-இந்தவண்ணமே. அஞ்சல் அற-அச்சம் நீங்க.

334. நமது பெயர்தமை - சிவநாமங்களை. நமது பதம் - சிவபதம். நமது பேரறத்தின் வீறு-சிவதருமத்தின் பெருமை. மாதே-உமையே. பன்ன என்பது முதல் பயிற்றும் என்பது வரை உமைக்கு அடை மொழிகள்,

இன்னும்அளப் பிலநமது பேரறத்தின்
வீறு முற்றும் இயம்பொ ணாதால்,
பன்னஅருங் கலமாம்கற், பருந்ததிக்கும்
பெருங்கற்புப் பயிற்றும் மாதே! 334

## தொண்டர்கள் பெருமை

புகலுவம் தொண்டர்தம் பெருமை பூமியின்
இகபரம் வீடுமூன்று யாரும் வேண்டுவ.
அகமகிழ்ந்து யாம்அவை அளித்தல் செய்குவம்
நிகர்இல்பத் தியின்எமை நினைத்துப் போற்றினே. 335

அந்தமெய்ப் பத்தியை அளிக்கும் பண்பினார்
புந்திவைத்து எமைநனி போற்றும் தொண்டர்கள்
சந்ததம் நீறுதாழ் வடம்பஞ் சாக்கரம்
உய்ந்திட அமையும்என்று உறுதி கொண்டுளார். 336

இனமலர் கொண்டுஎனை அருச்சித்து ஏத்துவார்
சினகரம் வலம்கொடு தெரிசிப் பார்,எமை
நினைகிலர் எவர்அவர் நட்பு நீக்குவார்
அனையவ ரேநிர வதிக பத்தியார். 337

இவர்பொருள் ஈவதை அன்றி, எம்பொருள்
கவர்வுறார்; நம்இயல் கழறு போதெலாம்
தவஉடல் விம்முவார்; இரக்கம் சார்குவார்
அவர்கள்தா மேநிர வதிக பத்தியார். 338

---

335. இகபரம்-இம்மை மறுமையின்பங்கள். யாரும் வேண்டுவ- எல்லோரும் விரும்புவன. போற்றின்-போற்றினால்.

336. புந்தி வைத்து - மனத்தில் வைத்து. நீறு - விபூதி. தாழ்வடம்- உருத்தி ராட்சமணிமாலை. உய்ந்திட - வீடுபேறு பெறுவதற்கு. அமையும் - சாதனம் ஆகும்.

337. இனகரம் – கோவில். நினைகிலர் - பாவிகள். நிரவதிகம் - அளவு கடந்த.

338. இவர் பொருள் - இவர்களது பொருளை. ஈவதை அன்றி-சிவனுக்குத் தருவதல்லாமல். எம்பொருள் கவர்வுறார் - சிவன் சொத்தை அபகரிக்க மாட்டார்கள். நம் இயல் - சிவனது பண்புகள். உடல்தவ விம்முவார் என்று கூட்டுக. தவவிம்முவார் - மிகவும் பூரிப்பார். நிரவதிகம் - அளவு கடந்த.

'திங்கள்நோன்பு ஆதிநம் விரதம் செய்குவார்'
இங்கவை செயும்அடி யாருக்கு இன்புறத்
தங்கிய ஏவல்செய்து இயல்பில் தாழ்ந்துள்ளோர்,
துங்கமாம் போகமும் வீடும் துன்னுவார். 339

சாதியின் இழிந்துளோர் ஒழுக்கம் தாழ்ந்துளோர்
ஏதமாம் உறுப்பினர் எனினும் எம்முடைப்
பூதிசா தனவழி போற்றி னார்எனின்
மேதகு தேவரின் வைத்தல் வேண்டுமே. 340

'அடியார்தம் பெருமைஈது அனைத்தும் ஓதினேம்.
மடவரால்!' எனச்சிவன் வழங்க, எம்மைஆள்
கடவுள்மாக் கற்புடைக் கவுரி கேட்டுஉளத்து
இடையறா மகிழ்ச்சியை எய்தி னாள்அரோ. 341

## பிருகுவின் வினாவும் வாயுவின் உரையும்

முனிவநீ உணர்திஎன்று உரைப்ப மூதுணர்
அனகனும் வியந்தனன். ஐய! ஆங்கனம்
பினும்நிகழ்ந் திடுசெயல் பேசு வாய்'எனத்
தனைநிக ரில்லதோர் அனிலன் சாற்றுவான். 342

## திருமால் வரவு

விமலையோடு ஈசன்இக் கதைவி ளம்புழிக்,
குமரிவண்டு அறைதரும் கொன்றை சூடிய
அமலனைத் தொழுவதற்கு ஆழி மாயவன்
இமையவ ரோடும்அத் தலத்தின் எய்தினான் 343

---

339. திங்கள் நோன்பு - சாந்திராயண விரதம். ஆதி - முதலிய. அவை செயும் - அவ்விரதங்களை மேற்கொள்ளும். இயல்பில் தாழ்ந்துளோர் - பண்பினால் பணிவுடைமையுடையோர். துங்கம் - உயர்வு. துன்னுவார்-சேர்வார்,

340. ஏதமாம் உறுப்பினர் - உடல் ஊனமுற்றவர். பூதிசாதன வழி - திருநீறு பூசும் மார்க்கம். தேவரின் வைத்தல் வேண்டும் - வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்.

341. மடவரால் – உமையே! வழங்க - சொல்ல. கவுரி - உமை.

342. முனிவ - பிருகுவே! முதுணர் அனகன் - பிருகு முனிவன். அனிலன் - வாயுதேவன்.

343. விமலை - உமை. விளம்புழி - சொல்லும் போது. குமரி வண்டு - பருவ வண்டுகள். அறைதரு - இசைபாடுகின்ற. அமலன் - அரன். மாயவன் - திருமால். இமையவரோடு - தேவர்களுடன்.

### இருடிகள் எதிர்கொளல்

கருமுகி லுழைப்பல கமலம் பூத்தெனத்
திருவுரு எய்திய செம்மல் எய்தலும்,
வருபிறப்பு ஒழிந்திட முயலும் வான்தவ
இருடிகள் யாவரும் எதிர்ந்து போற்றினார். 344

கொண்டல்வந் தனஎனக் குழுமிக், கூத்தரின்
வண்டுஅமர் சோலைவாய் மயில்கள் ஆடின.
அண்டர்ஊர் சேர்வதற்கு ஏணி யாய்உறை
திண்திறற் கோபுர முன்னர்ச் சேர்ந்தனன். 345

### திருமால் சிவன்பால் அடைதல்

வாசம்ஆர் நறவுகொப் பளிக்கும் வண்துழாய்
ஈசன்உட் புகுந்துநின்று இலிங்க மூர்த்தியை
மாசிலா அன்பொடும் வணங்கி ஏத்தியே
நேசமாய் வனத்துறும் நிமலன் பாற்சென்றான். 346

### திருமால் சிவனைப் போற்றுதல்

சங்குசக் கரம்வில்வாள் தண்டம் தாங்கிய
பங்கயச் செங்கணான் வருதல் பார்த்தலும்,
'அங்கணன் வருக'என்று அறைந்த காலையில்,
பொங்கிய உவப்பொடும் வணங்கிப் போற்றுவான். 347

---

344. கருமுகி லுழை - கரிய மேகத்தின்கண். செம்மல் - திருமால். வான் தவ இருடிகள் - பெரிய தவமுனிவர்கள்.

345. கொண்டல்-மேகம். குழுமி-கூடி. கூத்தரின்-கூத்தர் போல. சோலைவாய்-சோலையில். மேகம் வந்தால் மயில்கள் ஆடுவது இயல்பு. கருநிறமுடைய திருமாலை மேகம் எனக் கருதி மயில்கள் ஆடின. அண்டர் ஊர்-தேவர் உலகம். கோபுரம் வானுலகம் செல்வதற்கு அமைத்த ஏணி போல் உயர்ந்து உள்ளது என்க.

346. நறவு-தேன். கொப்பளிக்கும் - ஒழுக்குகின்ற. துழாய் ஈசன் - துளவ மாலையணிந்த திருமால். உட்புகுந்து-கோவிலினுள்ளே புகுந்து. வனத்துறும் நிமலன்-வில்வவனத்து அரன்.

347. சங்கு சக்கரம் வில் வாள் தண்டம்-பஞ்சாயுதங்கள்; பங்கயச் செங்கணான்-திருமால்; அங்கணன்-அரன்.

தொகைஉயிர் மலம்அறத் தோற்று வித்துப்,பின்
இகபர போகத்தை ஈந்து துய்ப்பித்துத்,
தகுவினை ஒப்புறச் சார்ந்து காத்தி! நின்
புகழையான் எங்ஙனம் புகல வல்லெனே ! 348

'துடைத்தலே நின்செயல் எனச்சொல் லாவணம்,
படைத்தலும் காத்தலும் பரியும் மார்க்கண்டன்
இடத்துறக் காட்டிஈறு இயற்றி லாய் ! நின்சீர்
விடைக்கொடி யாய்!எவ்வன் விளம்ப வல்லெனே ! 349

'அருள்ஒரு வடிவெடுத் தனைய ஐயனே !
உரைசெயும் துதியும்நீ ! ஓது வானும்நீ !
மருவிய துதிபெறு வானும் நீ ! உன்றன்
பெருமையை எங்ஙன்யான் பேச வல்லெனே !' 350

### திருமாலுக்கு வில்வவனச் சிறப்பு உரைத்தல்

என்றுமுன் பரசலும், 'இசைத்த இத்துதி
நன்றுஉளம் மகிழ்ந்தனம். இதனை நானிலத்து
ஒன்றிய விருப்பினோடு உரைத்து ளோர்கள்தாம்
பொன்றல்இல் லாப்பெரும் போகம் துய்ப்பரால். 351

'முருகுஅலர் முள்அரை முளரி வைகிய
திருவொடு கவுத்துவம் திகழும் மார்ப! இத்
தரையுள எண்ணிலாத் தலங்கள் தம்மினும்
அருமையாம் இத்தலம். அறிதி நீ'என்றான். 352

---

348. தொகை உயிர்-கூட்டமாகிய உயிர்கள். மலம்-மூன்று வகை மலங்கள். வித்து-அறிவைத்தந்து. துய்ப்பித்து-அனுபவிக்கச்செய்து. வினை ஒப்புறச் சார்ந்துகாத்தி - இருவினை ஒப்பு (மலபரி பாகம்) உண்டாக்கிக் காப்பாற்று கின்றாய்!

349, துடைத்தல்- அழித்தல். பரியும்-அன்பு செய்கின்ற; ஈறு இயற்றிலாய்-அழிவைச் செய்தாயில்லை அழியாமல் காப்பாற்றினாய். விடைக் கொடியாய்-சிவபெருமானே. நின்சீர் எவ்வன் விளம்ப வல்லேன் என்று கூட்டுக.

350. ஓதுவான்-துதியை ஓதுகின்றவன்.

351. பரசலும்-துதி செய்ததால். ஒன்றிய-பொருந்திய; பொன்றல் இல்லா-அழியாத. இதனை-இந்தத் துதியை.

352. முருகு அலர்-மணம் அரும்புகின்ற; முள்ளரை-முள்ளையுடையதண்டு. முளரி வைகிய திரு-தாமரையில் வீற்றுள்ள இலக்குமி; இத்தலம் அருமையாம் என்று கூட்டுக.

### உமையவள் கடகம் மறைதல்

பைத்தபாம் பினில்அறி துயில்செய் பண்ணவன்
'இத்தலை இருப்பென்'என்று இசைந்த காலையில்,
அத்தனும் உமையவள் அணிகொள் பாதத்தில்
வைத்திடு கடகத்தை மறைத்தல் செய்தனன். 353

### திருமால் கடகம் தருதல்

அடியவர் குறைதவிர்த்து ஆளத் தோன்றிய
மடவரல் நகையொடு மாலைப் பார்த்தலும்,
கடகம்ஒன்று அக்கணம் சமைத்துக் கண்ணுதல்
இடம்உறும் உமையவட்கு ஈந்திட் டான்அரோ. 354

### மீண்டும் மறைதலும் திருமால் தருதலும்

காளம்உண்டு அமரரைக் காத்த கண்ணுதல்
மீளவும் கடகத்தை மறைப்ப, வெந்திறல்
ஆள்அரி ஆகியே கனகன் ஆருயிர்
மாளவே பிளந்தவன் மறித்தும் ஈந்தனன். 355

### தியாக வினோதன் என்ற பெயர்

'வயாவுறாது எழில்மலர் வாய்த்த இந்திரை
குயாசலம் பொருததோட் கொண்ட லே!நினைத்
தியாகமா வினோதன்என்று எவரும் செப்புக!
தயாவொடும் இப்பெயர் சாற்றி னேம்'என்றான். 356

---

353. பைத்த-படத்தையுடைய பாம்பினில்-ஆதிசேடன் மேல்; பண்ணவன்-திருமால். அத்தன்-அரன். அணிகொள்-அழகிய, கடகம்-கை வளையல்.

354. மடவரல்-உமை; மாலை-திருமாலினை; சமைத்து-செய்து; கண்ணுதல் இடம் உறு-சிவபெருமானுக்கு இடப்பாகம் தங்கிய ஈந்தவன் திருமால்.

355. காளம்-விஷம்; கண்ணுதல்-அரன்; மிளவும்-மீண்டும்: மறைப்ப-மறைத்தலால்; ஆள் அரி-நரசிங்கம்; கனகன்-இரணியன்; பிளந்தவன்-திருமால்; மறித்தும்-மீண்டும்.

356. வயாவுறாது-சோர்வுறாமல்; இந்திரை-திருமகள்; குயாசலம் பொருத தோள்-முலைமலைகள் அழுந்திய தோள்கள்; கொண்டல்-திருமால்; தியாகமா வினோதன் – கொடையையே பொழுதுபோக்காக உடையவன்; தயாவொடும் - அருளுடன்.

### பாடகவல்லி என்ற பெயர்

பங்கய மலரினைப் பழிக்கும் வாண்முகக்
கொங்குலாம் மலர்க்குழற் கவுரி கூறலும்,
அம்கதிர் ஆழியன் ஆர்வ மோடு'உமை
மங்கைநீ பாடக வல்லி ஆ'கென்றான். 357

### திருமால் விடை பெறல்

நிறைதரும் அவுணர்மாப் படைகள் நேரில்வெஞ்
சிறையினால் புடைத்துமென் சருகில் சிந்தியும்
கறுவறாச் சீற்றம்ஆர் கலுழப் பாகனும்,
இறைவன்முன் தொழுதுஎழீஇ விடைகொண்டு ஏகினான். 358

### திருமாலுக்கு ஆலயம் சிவன் சமைத்தல்

சினக ரத்துக்கு அடுத்ததென் பாலதாய்ப்
புனைது ழாய்முகில் பொற்புடன் வைகினான்.
தனிவி சும்புஉறை தேவர்தம் தச்சனால்
அனையற்கு ஆலயம் ஆயிடை ஆக்கினான். 359

### பாண்டியன் வருதல்

நகர்உ ளார்கண்டு அதிசயம் நண்ணியே
தகும்மெய் அன்பொடு தாழ்ந்து பராயினார்.
புகலக் கேட்டுஉயர் பாண்டியன் போந்துறாச்,
சகம்அ ளித்தவன் தாள்தொழுது ஏத்தினான். 360

---

357. பங்கய மலர்-தாமரை மலர்; கொங்கு உலாம்-மணம் வீசுகின்ற; கவுரி-உமை; அம்கதிர் ஆழியன்-திருமால்; நீ பாடகவல்லி ஆக-நீ பாடகவல்லி என்னும் நாமம் பெறுவாயாக. பாடகவல்லி என்ற பெயர் பிற்காலத்தில் மக்கள் பெயராக வழங்கியுள்ளது. நெல்லை மன்னன் பராந்தகமாறன் மனைவி பெயர் பாடகவல்லி என்று சீவலமாறன் கதை பேசுகிறது.

358. அவணர்மாப் படைகள் - அசுரரின் பெருஞ்சேனைகள்; நேரில்-நேர்ப் பட்டால்; வெஞ்சிறையினால் புடைத்து - வெவ்விய சிறகுகளால் மோதி; மென் சருகில் சிந்தியும் - மெல்லிய சருகு போல் சிந்திய பின்னும்; கறுவு அறா - பகை மாறாத; சீற்றம் ஆர்-சினம் மிகுந்த; கலுழப் பாகன்-கருட வாகனன், திருமால்; இறைவன்-அரன்; எழிஇ-எழுந்து.

359. சினகரம்-கோவில்; தென் பாலதாய்-தென்திசையிலே; புனைதுழாய் முகில்-திருமால்; பொற்புடன்-அழகுடன்; வைகினான்-தங்கினான்; விசும்பு - வானம்; தேவர் தம் தச்சன்-விசுவகர்மா; அனையற்கு-திருமாலுக்கு; ஆயிடை - அவ்விடத்தில்.

360. பராயினார் - வணங்கினார்; போந்துறா - சென்று. சகம் அளித்த வன் - திருமால்.

### பாண்டியன் பூசனைக்கு வழி வகுத்தல்

பாச டைத்துள வம்புனை பண்ணவன்
நேசர் தம்மை வருவித்து, நீள்நிதி
மாசி லாத கிராமம் வழங்கியே
பூசை நாளும் புரிந்திடச் செய்வித்தான். 361

### திருமால் வில்வவனத்து அமர்தல்

ஆற்று பூசனை கொண்டுஅடி யார்வினை
மாற்றி நற்கதி ஈந்து வயங்கினான்
ஏற்ற மாற்றலர் எல்லைஇல் ஆவியைக்
கூற்றுக்கு ஈயும் பரிதிகொள் கொண்டலே. 362

### நூற்பயன்

இன்ன நற்கதை அன்பின் இசைத்துளோர்,
மன்ன நெஞ்சின் மகிழ்வுடன் கேட்டவர்,
பன்ன ருஞ்சிறப்பு எய்துவர், பாரினும்
பொன்னின் நாட்டினும் என்னப் புகன்றனன். 363

ஆறாவது சிவபுண்ணியம் உரைத்த சருக்கம்
முற்றும்.

சருக்கச் சுருக்கம்

## 7. வாதவூர் அடிகள் பூசைச் சருக்கம்

வாதவூரில் பிறந்த மணிவாசகர் பாண்டியனுக்கு அமைச்சர் ஆனார். பாண்டியன் ஏவலால் குதிரை வாங்குவதற்குப் பொருளுடன் புறப்பட்டார். இறைவன் பெருந்துறையில் குருவாகி வந்து ஆட்கொண்டமையால், பொருளை இறைவன் திருப்பணிக்குச் செலவு செய்துவிட்டார். பாண்டியன் இதை அறிந்து அவரை அழைத்து ஒறுத்தான். அதனால் வருந்திய மணிவாசகர் இறைவனை வேண்டினார். இறைவன் நரியைப் பரியாக்கித் திருவிளையாடல் செய்தான்.

361. பண்ணவன் நேசர் திருமால் அடியார்; வருவித்து-வரவழைத்து; நீள் நிதி கிராமம் வழங்கி நிதியமும் - கிராமங்களும் மானியமாகத் தந்து.

362. ஏற்ற மாற்றலர் - போரிட்ட பகைவர். ஆவியைக் கூற்றுக்கு ஈயும் - உயிரைக் கொல்லும். பிரிதி - சக்கரம். கொண்டல் - திருமால்.

363. கேட்டவர் பாரினும் பொன்னின் நாட்டினும் சிறப்பு எய்துவர் என்று கூட்டுக; பன்னரும் - சொல்லுதற்கு அரிய.

மணிவாசகரின் பெருமை அறிந்த மன்னன் அவரை மீண்டும் அமைச்சராக இருக்கும்படி வேண்டினான். அவர் அப்பதவியை வெறுத்துப் பெருந்துறை சென்று தங்கினார். பின்னர் உத்தரகோசமங்கை முதலிய தலங்களைத் தரிசித்துக் கொண்டு, தில்லை வந்து புத்தரைவாதில் வென்று பின்னர் கருப்புர விளக்கந்தன்னை ஒத்து உடல் கரையத் தில்லை உமாபதி அடிக்கீழ்ச் சார்ந்தார்.

## ஏழாவது - வாதவூர் அடிகள் பூசைச் சருக்கம்

### வாயுவின் உரை

முழுதுணர் முனிவன் கேட்டு
மகிழ்ந்துஒன்று மொழிந்தான்: 'ஐய!
அழகுடைச் சோம தீர்த்தம்
ஆடினோர் பலனி யாதால்?
ஒழுகிய வையை தோய்ந்தோர்
பலனியாது? உரைப்பாய்!' என்ன
விழுமிய திறல்சேர் வாயுப்
பண்ணவன் விளம்பும் மன்னோ. 364

### தீர்த்தச் சிறப்பு

'படைத்துஅளித்து உயிரைச் சின்னாள்
இளைப்பறத் துடைத்தல் பண்ணும்
கடுத்திகழ் மிடற்றின் எந்தை
கண்ணுதற் சாமி கோவிற்கு
அடுத்தவை யையினும் சோமன்
தடத்தினும் ஒருகால் ஆடின்,
கிடைத்திடும் இருபத் தைந்து
கிரிச்சர விரதப் பேறே! 365

---

364. முனிவன் - பிருகு; ஆடினோர் - குளித்தவர்; பலன்+யாது என்பது பலனியாது என இலக்கண விதிப்படி வந்தது; தோய்ந்தோர் - குளித்தவர் விழுமிய - சிறந்த;வாயுப்பண்ணவன் - வாயுபகவான்.

365. கடுதிகழ்மிடறு - நஞ்சு தங்கிய கழுத்து; கண்ணுதற்சாமி - சிவன்; சோமன்தடம் - சந்திரதீர்த்தம்; ஆடின் - குளித்தால்; இருபத்தைந்து கிரிச்சர விரதப்பேறு கிடைத்திடும் என்று கூட்டுக.

'விதிப்படி நாள்மூன்று ஆடி
வெண்பொடி பூசி, மூன்றாம்
திதிப்பிறை அணிந்தான் தன்னைத்
தெரிசித்தோர் சேரும் பேறு
மதித்திடற்கு அரிய தாகும்
விசியினால் மாக மாதம்
உதித்தநாள் கிராணத்து ஆடின்,
பரிமகப் பேறுஉண் டாமே!' 366

## வாதவூர்

என்றனன் பின்னும் சொல்வான்
இசைதிசை செல்ல வீடு
சென்றிடும் வாத வூரர்
கதையினைத் தெரித்தும் கேட்டி!
குன்றல்இல் குழகன் வாழும்
கூடற்கு வடகீழ்ப் பாலின்
ஒன்றிடும் மாடம் ஓங்கும்
ஒருதிரு வாத வூரே. 367

## வாதவூர் சிறப்பு

நறவுகால் இணர்ப்பூஞ் சோலை
உடுத்தஅந் நகரில் வாழும்
மறையவர் குலத்தில் வந்தோர்;
விஞ்சைஈ ரேழும் வல்லோர்;
பொறுமைநல் லொழுக்கம் ஆற்றல்
பொற்பினில் இணையில் லாதோர்
அறிவினில் உலகம் தாங்கும்
பஃறலை அனந்தன் நேர்வார். 368

---

366. விதிப்படி-ஆகம முறைப்படி; ஆடி-குளித்து; வெண்பொடி-திருநீறு; மூன்றாம் திதி-திரிதியை நாளில்; பிறை அணிந்தான்-சிவபெருமான்; கிராணம்-கிரகண நாள்; பரிமகம்-அசுவமேதயாகம்.

367. இசை திசை செல்ல-பல திசைகளிலும் புகழ் பரவ; வாதவூரர்-மாணிக்கவாசகர்; தெரித்தும்-சொல்கின்றோம்; குழகன்-அரன்; வாதவூர் வடகீழ்ப் பாலின் ஒன்றிடும் என்று கூட்டுக; ஒன்றிடும்-பொருந்தும்.

368. நறவுகால் - தேன் ஒழுகுகின்ற. இணர் - பூங்கொத்து. உடுத்த - சூழ்ந்த. அந்நகர் - வாதவூர். விஞ்சை ஈரேழு - பதினான்கு வித்தைகள். பல்+தலை=பஃறலை ஆனது. அனந்தன் - ஆதிசேடன். ஆயிரம் நாவையுடைமையால் ஆதிசேடனை; அறிவிற் சிறந்தவன் என்பது இலக்கிய மரபு.

சிதைவிலா உயிர்கள் தாமே
பலஎன்றும் செறிந்த பாசம்
தனையும்அவ் உயிரை நெற்குத்
தவிடுபோல் சார்ந்த தென்றும்
அதனைநீ டருளி னாலே
அகற்றிநற் கதியை ஈவோன்
பதிஎன்றும் அவனே கூடற்
பரன்என்றும் உணர்ந்த நீரார். 369

## பாண்டியன் வாதவூரர் பெருமை அறிதல்

சிறுவிலைக் காலந் தன்னில்
விலக்குறு தீய நாளில்
பறவையும் தட்பப் போகி
இரப்பினும் பண்பின் ஈந்து
வறியவர் வறுமை தீர்க்கும்
மதுரைவாழ் பாண்டி மன்னன்,
அறைதரு தக்கோர் தம்மால்
அனையவர் நிலைமை தேர்ந்தான். 370

## வாதவூரர் அமைச்சர் ஆதல்

தன்னுழை வைகும் சான்றோர்
தமைவிடுத்து அழைத்து நோக்கி,
மன்னவன் உவந்து மேலாம்
மந்திரத் தலைமை நல்கித்

---

369. பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள் உண்மை இப்பாட்டலிற் கூறப் பட்டுள்ளது. உயிர்கள் - பசு. அந்த உயிர்களைப் பாசமானது நெல்லைத் தவிடு சார்வது போல் சார்ந்திருக்கும். அந்தப் பாசத்தை நீக்கி உயிரை முத்தி சேர்ப்பவனே பதி என்னும் இறைவன். அந்த இறைவனே மதுரையில் கோயில் கொண்டுள்ள சோம சுந்தரக் கடவுள். கூடல் - மதுரை.

370. சிறு விலைக்காலம்-பஞ்சம் வந்த காலம். விலக்குறு தீயநாள்-பயணம் செய்யக்கூடாது என்று விதிக்கப்பட்ட தீய நாளில், பறவையும் தட்பப்போகி இரப்பினும் - பறவையும் தீய சகுனம் காட்டித் தடுக்கும்போது சென்று யாசித் தாலும். பண்பின் ஈந்து - இல்லையென்னாமல் தந்து. அனையவர் - வாதவூரர். நிலைமை தேர்ந்தான் - பெருமையை அறிந்தான்.

371. தன்னுழைவைகும் - தன்னிடமுள்ள. விடுத்து-அனுப்பி. மன்னவன் - பாண்டியன். மந்திரத் தலைமை - முதலமைச்சுப் பதவி. தென்னவன் பிரம ராயன் என்பது மணிவாசகருக்குப் பாண்டியன் தந்த பட்டம். பூபதி தொழில் - அரசகாரியம். மேற்கொண்டார் - ஏற்றுக் கொண்டார்.

தென்னவன் பிரம ராயன்
    எனஒரு நாமம் செப்பிப்
பொன்அணி ஆடை நல்கப்
    பூபதி தொழில்மேற் கொண்டார். 371

கொடையினும் இன்சொல் லானும்
    குடிகளை ஓம்பிப் பைங்கூழ்
வடுவறப் பெருக்கித் தேவரல்
    மக்களால் இடையூறு எய்தின்
தடையறு சந்தி யானும்
    சாமம்வே றாக்கல் தானம்
படையெடுத்து ஒறுத்தல் என்னும்
    நான்கினும் பாது காத்தும், 372

அறிவொடு சீலம் காலம்
    மூன்றினும் மூப்புற்று அன்பின்
நிறைபவர் தம்மோடு எண்ணி
    நெடுநீர்மை மடிமை தூங்கல்
மறவி நான்கு இன்றி நன்மை
    மாண்புகழ் பயப்ப தாக
உறுதியின் அரசன் கூறும்
    கருமங்கள் உவப்பச் செய்து. 373

நிருபர்கோன் விழைப நெஞ்சில்
    தான்விழை யாது நீத்து
அருகுறுங் காலை உற்றும்
    அகலும்போது அகன்று போயும்

---

372. ஓம்பி-பாதுகாத்து. பைங்கூழ் பெருக்கி-பயிர்களை வளர்த்து, உணவுப் பண்டம் பெருக்கி. வடுவற-குற்றம் நீங்கும்படி: தேவால்-தெய்வத்தால்; இடையூறு எய்தின்-தீங்கு ஏற்பட்டால்; தடையறு-தடையற்ற. சாம பேத தான தண்டம் என்னும் நான்கு வகை உபாயங்களும் கூறப்பட்டுள்ளன. சந்தி-உடன்பாடு; தம்மின் வேறு ஆக்கல்- பேதம். படையெடுத்து ஒறுத்தல்-தண்டம்.

373. அறிவில் மூப்புறுதல் – அறிவு முதிர்தல். சீலத்தில் மூப்புறுதல் - ஒழுக்கத்தில் சிறத்தல்; காலத்தில் மூப்புறுதல் - வயது முதிர்தல். அன்பின் நிறைபவர்-சான்றோர்கள்; ''நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும் கெடுநீரார் காமக் கலன்'' என்ற குறளின் கருத்து இப்பாடலில் வந்துள்ளது. நெடுநீர்மை-தாமதம்; மடிமை - சோம்பல்; மறவி - மறதி; பயப்பதாக - வரும்படி.

374. நிருபர்கோன் - பாண்டியன். விழைய - விரும்பும் பொருள். விழையாது - விரும்பாமல். நீத்து - விலக்கி.

மருவிய வேற்றோர் சொற்குப்
புறம்கொடா வண்ணம் வேட்ப
வருமொழி உரைத்தும் வாறும்
வையமும் மதிக்க உற்றார். 374

### வாதவூரர் இறையுணர்வு பெறுதல்

ஊழினில் பெரிய யாவை
அஃதுஉற வேறா ஒன்று
சூழினும் முன்னா வந்து
தோன்றும்என்று உயர்நூல் சொல்லச்
சூழ்வுறா தவர்க்கு நாலாம்
சத்தினி பாதம் தோன்ற
வீழ்வுறும் உயிரை நோக்கி
மிகவும்நொந்து இதனை ஓர்ந்தார். 375

நிலையிலா ஆக்கை செல்வம்
இளமையை நிலைஎன்று எண்ணி
அலைகுவது என்கொண்டு ? அந்தோ !
யானும்இவ் அழியும் வாழ்வில்
குலவிவை கிடுவென் கொல்லோ
கோதறும் ஈசன் பாதத்து
இலகிஇன் புறுவென் என்னா
வெறுத்தனர் இகத்தின் போகம். 376

ஞானதே சிகன்என்று எய்தும்
எனத்தினம் கோயில் நண்ணிக்
கூனல்அம் பிறைசேர் சென்னிக்
கூத்தனை வழிபட்டு ஏத்தி

---

375. 'ஊழிற்பெருவலி யாவுள மற்றொன்று சூழினும் தான் முந்துறும்' என்ற குறள் முன் இரண்டடிகளில் இடம்பெற்றுள்ளது. சொல்ல-சொல்லியதை. சூழ்வுறாதவர் - அந்த முயற்சியில் ஈடுபடாதவர். வீழ்வுறும் உயிர் - அழிந்து போகும் உயிர்.

376. நிலையிலா ஆக்கை, நிலையிலா செல்வம், நிலையிலா இளமை என்று கூட்டுக. ஆக்கை - உடம்பு. அலைகுவது என் கொண்டு - அலைவது ஏன்? குலவிவைகிடுவென் கொல்லோ - பொருந்தி வாழ்வேனோ? ஈசன் பாதத்து - இறைவன் திருவடிகளில்.

மாநிலத்து அரசன் செய்தி
மனத்திடைச் செயிர்த்தோர் ஆகி
ஈனமில் புறத்துச் செய்துஆங்
கிருந்தனர் இருக்கும் நாளில், 377

## பாண்டியன் குதிரை கொண்டுவா என்றமை

'சங்குஅகடு உளைந்து வாய்த்த
தண்முத்தம் இமையா நின்ற
பொங்கொலி பரவும் வேலைப்
புறத்தினில் பரியின் பொம்மல்
தங்கின மாற்று' கென்ன
மாறன்முன் மற்றோர் சாற்ற
'அங்குஅவை கொடுவா' என்ன
அமைச்சர்மாட்டு அரசன் சொன்னான். 378

## இறைவன் குருவடிவாக எழுந்தருளல்

பணித்தன புரிவேன் ஏன்ன
இசைத்தலும் பரிவு கூர்ந்து
கணக்கறு செம்பொன் நல்கிக்
காவலன் ஏவ மேலாம்
குணத்தினர் குணபாற் சென்றார்.
இதுநிற்கச் சூழ்வித் திங்கள்
தணப்புறா வேணி அண்ணல்
புரிந்தமை சாற்ற லுற்றாம். 379

---

377. •ஞானதேசிகன் - ஆசிரியன். என்று எய்தும் - என்றைக்குக் கிடைப்பான். கூத்தன் - இறைவன். மாநிலத்து அரசன் செய்தி - பாண்டியனது காரியங்கள். மனத்திடைச் செயிர்த்தோர் ஆகி - மனத்தால் வெறுத்து. புறத்துச் செய்து - வெளிக்குச் செய்து கொண்டு.

378. சங்கு அகடு உளைந்து வாய்த்த - சங்குகள் வயிறு வருந்திச் சொரிந்த. இமையா நின்ற - ஒளி விரிக்கின்ற. வேலைப் புறத்தினில் - கடல் அருகே. பரியின் பொம்மல் தங்கின - குதிரைக் கூட்டம் உள்ளன. மாற்றுக என்ன - வாங்கிக் கொள்க என்று. மாறன் முன் - பாண்டியனிடம். சாற்ற - சொல்லியதால். அவை கொடுவா என்ன - அக்குதிரைகளை வாங்கிக் கொண்டு வா என்று. அமைச்சர் மாட்டு - மணிவாசகரிடம்.

379. பணித்தன - ஏவியபடி. இசைத்தலும் - மணிவாசகர் கூறியவுடன். காவலன் ஏவ - பாண்டியன் அனுப்பியதால். மேலாம் குணத்தினர் - மணிவாசகர். குணபால் - கிழக்கு. அண்ணல் - சிவபெருமான். புரிந்தமை - செய்த செயலை. தணப்புறா - நீங்காத. வேணி - சடை.

மயில்எருத்து உறழும் மேனி
    மாயவன் மலரோன் பாச
இயல்கெட முருக்கும் மூர்த்தி
    ஏழைபங் காளன் எந்தை
கயிலைவாழ் ஈசன் இன்னோர்க்கு
    அருள்வது கருதித் தற்சூழ்
நயன்உறு கணங்கள் தம்மை
    மனித்தரின் நணுக ஏவி. 380

அங்குநின்று எழுந்து ஞான
    குருஎன ஆகிப் போந்து
பங்கய வாவி சூழும்
    பெருந்துறை புகுந்து பாங்கர்த்
தங்கிய சோலை நாப்பண்
    குருந்தடி சார்ந்து தொண்டர்
துங்கஆ கமநூல் கேட்பச்
    சொல்லிவீற் றிருந்தான் மன்னோ. 381

## ஆகம ஓசையை வாதவூரர் கேட்டல்

சோமனை அணிந்த நம்பன்
    செயல்இது வாக முன்சொல்
தாமரை மார்பின் வாத
    வூரர் வந்து அவ்ஊர் சார்ந்தார்
மாமதி வல்ல தொண்டர்
    வழங்கும்ஆ கமம் என்று ஓதும்
நாமமால் ஓதை அன்னோர்
    செவியுற நடந்தது அன்றே. 382

---

380. மயில் எருத்து உறழும் மேனி - மயிலின் கழுத்தைப் போன்ற கருநிற முடைய திருமேனி; பாச இயல் - பாசத்தின் தன்மை; முருக்கும் - அழிக்கின்ற; ஏழை பங்காளன் - உமா தேவியை இடப்பாகம் வைத்தவன்; இன்னோர்க்கு - மணிவாசகர்க்கு; தற்சூழ் - தன்னைச் சூழ்ந்துள்ள; கணங்கள் தம்மை - சிவ கணங்களை; மனித்தரின் நணுக - மனிதர்களைப் போல் வரும்படி.

381. அங்குநின்று - கயிலையில் இருந்து; போந்து-வந்து; பங்கய வாவி- தாமரைக் குளம்; பாங்கர்த்தங்கிய - அருகிலுள்ள; சோலை நாப்பண்-சோலை நடுவில்: குருந்தடி - குருந்த மரத்தின் அடியில்.

382. சோமனை - சந்திரனை; நம்பன் - இறைவன்; முன் செயல் – முன்பு சொல்லப்பட்ட; தாமரை மார்பு-அந்தணர்க்குத் தாமரை மலர் உரியது என்பது

**வாதவூரர் வினாவும் இறைவன் விடையும்**

ஓதுகின்ற ஒன்றுஒழிஆ யிரவர்அவை உற்றவர்க்கு
நாதனைநெஞ் சினில்வணங்கி மந்திரியார் நயந்து'நும்கைத்
தீதறுநூற் பெயர்யாது' செப்புகெனச் 'சிவஞான
போதம்'என உரைத்துஅதற்குப் பொருளும்விருப்
புறச்சொன்னார். 383

**வாதவூரர் உரை**

தண்ணெனும்இன் மொழியினொடு தாழ்வடம்வெண்
ணீற்றுஒளிசேர்
புண்ணியநல் திருவடிவும் பொற்பினையும் உறநோக்கி
'அண்ணல்இவ ரேநமைஇங் காட்கொள்ள வந்தனர்'என்று
உள்நிறையும் பேரன்பால் பணிந்தெழுந்துஅங் குரை
செய்வார். 384

'மருக்கமழும் குழல்மடவா ரவர்மோக வலைப்பட்டுத்
திருக்குஅறும்நல் அறிவின்றி இதம்சுகிதம் செய்துஇன்னும்
கருக்குழியில் வீழாமல் காத்தருள்கை கடன்'என்றே
உருக்கமுடன் 'ஆவிபொருள் உடல்மூன்றும் உனது'
என்றார் 385

**இறைவன் உபதேசம்**

அருட்கடலும் அதற்குஇசைந்தே அருளுதும்என்று அடியர்
அமைத்து
இருத்திஎனும் திருக்கோயில் எய்திஅரை இரவின்கண்
பொருத்தமுடன் தென்முகமாய்த் தனியிருப்பப் புனிதமுடன்
விருப்புறுபூ சனைஇயற்றி வேதியரும் முன்இருந்தார். 386

---

மரபு; நாம மால் ஓதை - மிகப் பெரிய ஒலி; அன்னோர் செவியுற - மணிவாசகரின் காது கேட்கும்படி; நடந்தது - கேட்டது.

383. ஒன்று ஒழி ஆயிரயிர் அவை - 999 பேர் கொண்ட சபை; நாதனை- இறைவனை. மந்திரியார் - மணிவாசகர். நும்கை - நுமது கையிலுள்ள, சிவஞான போதம் என உரைத்து - இந்நூல் சிவஞான போதம் என்று கூறி.

384. தாழ்வடம் - உருத்திராட்ச மணி மாலை. பொற்பு - அழகு. உற நோக்கி - நன்கு நோக்கி.

385. மரு - மணம். மடவார்அவர் - பெண்கள். திருக்கு - கேடு. இதம் சுகிதம் – நன்மை தீமை. கருக்குழி - பிறவி

386. அருட்கடல்-இறைவன். அடியர் அமைத்து இருத்தி எனும் கோயில்– அடியவர் கட்டி இதில் இருப்பாயாக என்று (இறைவனை) வைத்த கோயில். வேதியர் - மணிவாசகர்.

மீனம்எனப் பார்த்துஆமை எனநினைந்து விறற்கோழி
தான்எனவே அருச்சித்துச் சடத்துவரும் தொடக்கு அகற்றி
ஞானமது சிவத்தினிடை நண்ணும்வகை அருள்கூர்ந்து
தேன்இமிர்தா மரைத்தாரார்க்கு அஞ்செழுத்தும் செப்பினான்.
387

அப்பொழுதே பவம்அகன்று பசுகரணம் ஆனவெல்லாம்
செப்புசிவ கரணமதாய்த் திகழஎழுந்து 'அடியேன்தன்
பொய்ப்பிறவி தனைஒழிக்கப் புண்ணியநின் திருப்பாதம்
இப்புவியி னிடைத்தோய வருவதே' எனக்கசிந்தார். 388

## இறைவன் உரை

அண்டர்கள்பூ மழைபொழிந்தார் அருக்கனும்கீழ்க் கடல்
தோன்றத்
தொண்டருடன் வேறிருந்து சொல்லுவான் 'எம்கருணை
கொண்டுவினை புரிந்துபல உடல்எடுத்து யாம்கொடுப்ப
மண்டுறுபோ கம்பொசித்துச் சுபாசுபங்கள் மருவினையால்'
389

'மெய்யுறஎப் பொழுதும்உனை என்னில் வைத்து
வேறாகாது என்னிடத்தில் மேவு வாய்'என்று
அயன்உரை செயப்பருகு வார்போல் நோக்கி
அடிவணங்கி அழியாத பதம்தந் தாய்க்குச்

---

387. மீனம் எனப்பார்த்து - மீனானது தன் முட்டைகளை இடைவிடாது பார்ப்பதுபோல் பார்த்து; ஆமை என நினைந்து - ஆமை உறுப்புக்களைச் செயல் படாமல் உள்ளடக்குவது போல் மனத்தை அடக்கி நினைத்து. கோழி என அருச்சித்து - கிடைப்பன அனைத்தும் தனக்கெனக் கொள்ளாமல் குஞ்சுகட்கே தருவது போல், அனைத்தும் இறைவனுக்கே சமர்ப்பித்து; தேன் இமிர் தாமரைத் தாரார் - மணிவாசகர்; ஆமை என நினைந்து என்பதனுடன் ''காமருவும் புனல் கரையில் கரு உயிர்த்துச் சேய்மை உறும் ஆமை தன் பார்ப்பைக் கருதின் அன்றி அது வளராதே'' என்ற தணிகைக் கலம்பக அடிகளை இணைத்துப் பார்க்கலாம்.

388. பவம் - பாவம். பசுகரணம் - உயிருக்கு உரிய கரணங்கள் எல்லாம். சிவகரணமதாய் – சிவகரணங்களாகி. கரணம் - மனம் முதலியன.

389. அருக்கன் – சூரியன். தொண்டர் - மணிவாசகர்; பொசித்து – அனுபவித்து; சுபாசுபங்கள் - இன்ப துன்பங்கள்,

390. மெய்யுற - உண்மையாக. அய்யன் - இறைவன்; தந்தாய்க்கு - தந்த உனக்கு; வைப்பம் - நின்பால் வைப்பேன். ஆதுலர் - எளியவர்.

செய்யுறுகைம் மாறுஉண்டே அதற்குஒப் பென்று
சேர்வதுண்டேல் செயல்ஆகும்' என்னச் செப்பிக்
'கையுறுபொன் வைப்பம்நுந்தம் பணிக்கும் நின்பால்
கருதிவரும் ஆதுலர்க்கும் அளிக்க' என்றார். 390

## வாதவூரர் செயலைப் பாண்டியன் அறிதல்

தம்பெருமான் சொன்னபடி செய்து வைக
வினையமெலாம் அரசன்பால் ஒற்றர் சாற்ற
நிம்பனும்அந் நிலைச்சினந்துஒர் முடங்கல் தீட்டி
நிற்கும்உழை யரைநோக்கி 'நீர்போய் ஈந்து
பைம்புனல்போல் எம்பொருளைப் பாவிப் பானைப்
பற்றிஇவண் கொடுவருக' என்ன ஓத
வெம்பியவர் ஆங்கெய்தி ஓலை நீட்ட
மெய்த்தொண்டர் சிவன்தாளில் மேவிச் சென்றார்.
391

## இறைவன் ஆறுதல் மொழி

'இன்றுவா னரவீர மதுரைக்கு எய்தி
இருந்துபரி தனைவருவித்து ஈதும் நீபோய்
மன்றஆ வணிமூலம் வரும்என்று ஓது
மன்னனுக்கு' என்று உரைசெய்ய மலர்ந்தார் நெஞ்சம்
அன்றுசிவன் எழுந்துவான் வழிய தாக
அம்புலியூர் நிகர்ஆய புலியூர்க்கு ஏகக்
கொன்றைமுடித் தவன்சேறல் கண்டு நெஞ்சம்
குழைந்துபராய் வழிஇவரும் கூடச்சொன்னார். 392

---

391. தம்பெருமான் - இறைவன். வினையம் - நடந்தவை. அரசன் பால் - பாண்டியனிடம்; நிம்பன் - பாண்டியன்; முடங்கல் - கடிதம்; தீட்டி - எழுதி. உழையர் - ஏவலர்; புனல்போல் - நீரைப்போல்; பாவிப்பான் - செலவு செய்தவன்; மணிவாசகர்: வெம்பியவர் - ஏவலர்; மெய்த்தொண்டர் – மணிவாசகர்.

392. பரி - குதிரை. வருவித்து - வரவழைத்து. ஈதும் - தருவோம். ஆவணி மூலம் வரும் - ஆவணி மாதம் மூல நாளில் வரும். நெஞ்சம் மலர்ந்தார் - மனம் மகிழ்ந்தார். அம்புலியூர் - அழகிய சிதம்பரம். கொன்றை முடித்தவன் - இறைவன். பராய் - வணங்கி. இவரும் - மணிவாசகரும்.

## இறைவனுடன் மணிவாசகர் வானர மதுரை அடைதல்

கானமும் கழனியும் கடந்து வல்லைபோய்
வானர மதுரையின் அருகு வந்துழித்
தேன்அலர் கொன்றையஞ் செல்வன் முந்துசென்று
ஆனதோர் இலிங்கத்தின் அமர்திட் டான்அரோ. 393

## வையைநதி

கன்னலும் பலவும்நீள் கமுகும் வாழையும்
செந்நெலும் சூதமும் சேர்ந்த தண்பணை
இன்னிசை அளிமுரல் இணர்கொள் காஒரீஇத்,
தந்நிகர் இல்லவர் வையை சார்ந்தனர். 394

சந்தமும் மலர்களும் சங்கும் முத்தமும்
உந்தியே திரைகரை யுற்று மீளுவ
நந்தல்இல் கையுறை கொடுத்து, நம்பியை
'வந்திடு' கெனக்கரத்து அழைத்தல் மானுமே. 395

ஆயநீர் வையையின் ஆடி வைகுழி,
மேயினர் அடியார்கள். அவர்க்கு மேதகத்
தூயவாம் சிறப்பளித்து, அவர்கள் சூழ்வர
ஏயதோர் சந்திரத் தடத்தில் எய்தினார். 396

---

393. வந்துழி - வந்தபோது. செல்வன் - இறைவன்.

394. கன்னல் - கரும்பு. சூதம் – மாமரம். பணை - வயல். அளிமுரல்- வண்டுகள் பாடுகின்ற. இணர் - பூங்கொத்து. காஒரீஇ - சோலைகளை நீங்கி. தந்நிகர் இல்லவர் - இறைவனும் மணிவாசகரும்.

395. சந்தம் - சந்தனம், உந்தி - தள்ளி. திரை - அலைகள். கையுறை- காணிக்கை. நம்பியை - மணிவாசகரை. வந்திடுகென - வருக வருக என்று. கரத்து அழைத்தல் மானும் - கையால் அழைப்பதைப் போன்றன. வையை நதியின் அலைகள் சந்தனம் முதலியவற்றை வீசிக் கரையைத் தொட்டு மீளுவது, காணிக்கை செலுத்தி நம்பியை வருக எனக் கையால் அழைப்பதைப் போன்றிருந்தது.

396. ஆடி வைகுழி - நீராடியிருந்த பொழுது; அடியார்கள் மேயினர் என்க; மேயினர் - அடைந்தனர்; சந்திரத்தடம் - சந்திர தீர்த்தம்.

கஞ்சநாள் மலர்மிசைக் கவின்கொண்டு ஓங்குபால்
அஞ்சம்வீற் றிருப்பது தடம்என் ஆயிழை,
வஞ்சம்இல் மந்திரி அயில வள்ளத்தில்
எஞ்சல்இல் அமுதம்வைத்து ஏந்தல் போலுமே! 397

செய்யதா மரைமலர் அருகு தேம்பொதி
ஐயபைங் குவளைபூத் திடுவது அம்கலுழ்
பையுடைப் பாம்பணி பரனும் பாங்குறை
தையலும் விளங்கிடும் தன்மை போலுமே! 398

**ஆலயம் அடைதல்**

ஆயதோர் தடத்தினில் ஆடி, நீற்றொடு
தூயகண் டிகைஅணிந்து, அன்று சூரன்முன்
நேயவிச் சுவஉரு வெடுத்து நின்றிடும்
சேயென உயரிய சிகரிக்கு ஏகினார் 399

**இறைவனைப் போற்றுதல்**

போகுயர் கோபுரம் வணங்கி உட்புகுந்து,
ஆகம விதிப்படி உழுவல் அன்பொடு
சோகம தகற்றிடும் சோம நாதனைப்
பாகம்வாழ் உமையினைப் பணிந்து வேண்டுவார். 400

---

397. கஞ்சநாள் மலர் - தாமரையின் புதிய மலர்; கவின் - அழகு; பால் அஞ்சம் - வெள்ளை அன்னம்; தடம்என் ஆயிழை - பொய்கை ஆகிய பெண்; மந்திரி அயில - மணிவாசகர் உண்ணுவதற்கு; வள்ளத்தில் - வட்டிலில்; தாமரையில் அன்னம் வீற்றிருப்பது மணிவாசகர் அருந்துவதற்காகப் பொய்கை என்னும் பெண் வட்டிலில் அமுதம் ஏந்துவது போல் இருந்தது.

398. தாமரை அருகு குவளை மலர்வது சிவனும் பார்வதியும் கூடியிருப்பது போல் தோன்றும். தாமரையின் செந்நிறம் சிவனுக்கும் குவளையின் கருமை உமைக்கும் உவமை. தேம்பொதி - தேன் பொதிந்த; ஐய - அழகிய; அம்கலுழ்-அழகு மிக்க; பை - படம்; தையல் - உமை.

399. கண்டிகை – உருத்திராட்சமணி; சிகரி - கோபுரம்; சூரபதுமன் முன்பு முருகன் எடுத்த விசுவரூபம் போல் உயர்ந்து தோன்றுவது சிகரி என்க; சேய் - முருகன்.

400. பாகம்வாழ் - சிவன் இடப்பாகம் வாழ்கின்ற; சோமநாதன் - இறைவன்.

‘பொருட்படுத்து என்னுழைப் புகுந்து போதம்ஈந்து,
உருட்படு சகட்டினில் உழலும் சென்மமாம்
மருட்கெடுத்து ஆண்டனை! வரத! நின்னுடை
அருட்பெரும் பெருமைக்குஒர் அளவுண் டாகுமோ? 401

‘வாம்பரி ஆவணி மதியின் எய்துறும்
வேம்ப!என்று உரைத்துயான் மேவு கின்றனென்.
காம்புஉறழ் தோள்உமை கணவ! அற்றைநாள்
ஏம்பலில் புரவிஈந்து என்னைக் காத்தியால்!’ 402

### இறைவன் உருவிலியாய் உரைத்தது

என்றசொல் திருச்செவிக்கு ஏறும் முன்னமே
மன்றினில் உறைகுவான் வான வாக்கினால்,
‘இன்றுநீ போதி! யாம் புரவி ஈதும்வேறு
ஒன்றும்நீ கவலலை!’ என்ன ஓதினான். 403

### மணிவாசகரின் பரவசநிலை

கேட்ட போழ்தினில், அற்புத நீரராய்க் கிளர்ந்த
வாட்டம் தீர்தர மயிர்ப்புறம் பொடித்திடக் கண்ணீர்
ஓட்டம் கற்றிட உள்ளம்நெக் குருகிடப் பணிந்தார்
வீட்டை யேபொருள் எனநினைத்து உலகினை வெறுத்தோர். 404

---

401. பொருட்படுத்து - அடியேனைப் பொருளாக எண்ணி; போதம் - ஞானம்; உருட்படு சகட்டினில் - சக்கரம் பொருந்திய வண்டி போல; மருள் - மயக்கம்.

402. வாம்பரி-வாவுகின்ற குதிரைகள்; ஆவணி மதியின் - ஆவணி மாதத்தில்; எய் துறும் - வந்து சேரும்; வேம்ப - பாண்டியனே! காம்பு உறழ்தோள்- பசிய மூங்கில் போன்ற தோள்களையுடைய; அற்றை நாள் - ஆவணி மூலநாளில்; ஏம்பல் இல் - சோர்வு இல்லாத; புரவி - குதிரைகள்.

403. செவிக்கு ஏறு முன்னர் - கேட்குமுன்பே. மன்றினில் உறைகுவான் - இறைவன்; வானவாக்கினால் – அசரீரி வாக்கினால்; புரவி ஈதும் - குதிரை தருவோம்; கவலலை - வருந்தாதே.

404. அற்புத நீரராய் - அதிசயப்பட்டவராய்; தீர்தர - தீர்தலால்; மயிர்ப் புறம் பொடித்திட - உடல் புளகமடைய; கண்ணீர் ஓட்டம் கற்றிட - கண்ணீரானது தொடர்ந்து ஓட; வெறுத்தோர் - மணிவாசகர்.

**மணிவாசகர் மதுரை அடைதல்**

துதிகள் பற்பல கூறினர். தொகையிலா நிதியம்
பதிகள் சிற்சில நல்கினர். பாண்டியன் உறையும்
மதுரை எய்துற விடைகொடு வழக்கொடு நடந்தார்
குதிரை கொள்ளவந் தான்அருள் கொண்டிடும் குருசில். 405

**பாண்டியனின் உரை**

பொருவிலா துஉயிர் புரந்திடும் பூவண நர்தற்
பரவி ஏகியே பாண்டியற் காண்டலும், அனையான்
'புரவி தந்தனை! மந்தணம் புகுந்தன. உனைப்போல்
நிருப காரியம் செய்பவர் யார்?' என நிகழ்த்த, 406

**மணிவாசகர் இறைவன்முன் அடைதல்**

வாத வூரரும் 'ஆவணி மூலத்தின் வரும்'என்று
ஓத உள்மகிழ்ந்து அளவளாய் வரிசைகள் உதவ,
வேத பாரகர் மனையிடை மேவினர். வழிநாள்
பூத நாயகன் திருமுன்பு போய்ஒன்று புகல்வார். 407

'தொலைவில் லாதகற்பு ஓர்உருக் கொண்டெனத் தோன்றும்
மலைம கட்குஒரு பங்கினை அளித்தருள் வள்ளால்!
குலவு சீர்ப்புவிக் கோவுழைப் புரவிவந் துறும்என்று
இலகு சோமசுந் தரன்திரு மொழிப்படி இசைத்தேன். 408

---

405. தொகையிலா - கணக்கில்லாத; நிதியம் பதிகள் - நிதியமும் கிராமங்களும்; எய்துற - அடைவதற்கு; விடைகொடு - இறைவனிடம் விடைகொண்டு; குதிரை கொள்ள வந்தான் - இறைவன்! குருசில்-மணிவாசகர்.

406. நாதற்பரவி - நாதனை வணங்கி; பாண்டியற் காண்டலும் - பாண்டியனைக் கண்டவுடன்; அனையான் - பாண்டியன். மந்தணம் - கொட்டில்; நிருப காரியம் - அரச காரியம்; நிகழ்த்த - சொல்ல; அரசன் மாணிக்கவாசகரை நோக்கி இகழ்ச்சிக் குறிப்புத் தோன்ற 'புரவி தந்தனை மந்தணம் புகுந்தன உனைப்போல் நிருப காரியம் செய்பவர் யார்'' என்று கூறினான். நீ ஏவற்படி புரவி கொணரவில்லை என்பது கருத்து.

407. வாதவூரர் குதிரைகள் ஆவணி மூலநாளில் வரும் என்றார். அவர் சொல்லில் நம்பிக்கை கொண்ட அரசன் வரிசைகள் உதவினான்: அளவளாய் - உரையாடி; வரிசைகள் - பரிசுகள்; வேதபாரகர் - மணிவாசகர்; பூதநாயகன் - இறைவன்; திருமுன்பு - சன்னிதியில்.

408. தொலைவில்லாத - அழியாத; மலைமகட்கு - உமையவளுக்கு: புவிக்கோவுழை - பாண்டியனிடம்.

### இறைவன் வேதியன்போல் வந்து கூறுதல்

'அம்மொ ழித்திறம் பிழையுறா வண்ணம்நீ அருள்வாய்!
செம்ம லே!'எனச் செப்பலர் வேதியன் போல்வந்து
எம்முள் வேற்றுமை இன்றுநா மேஅவர். உமக்கும்
உம்மை நற்கதி யுள்ளது மொழிவது கேண்மோ! 409

### இறைவன் அடையாளம் கூறி மறைதல்

'அன்ன வன்திருக் கோயிலை அடுத்தமேல் பாலில்
துன்னும் நம்முடைக் கடம்பும்வெஞ் சூலமும் விடையும்'
என்ன ஓதியே, 'பரிகளும் வரும்'என இசைத்துத்,
தன்னை நேரிலான் கோயிலிற் சார்ந்தனன்; மறைந்தான். 410

### வாதவூரர் அமைதி கூர்ந்திருத்தல்

சாகை ஆர்மறை மொழிதரு ஞானமே தானாம்
தோகை பாகனை வணங்கியே மனையிடைத் துன்னி
வாகை வென்றிவேல் மன்னவன் கருமத்தில் வதிந்தார்-
மோகம் கோபம்வெங் காமம்தீர் வாதவூர் முனிவர். 411

### பாண்டியன் சினம்

பரிகள் எய்தும்என்று இசைத்திடும் பகற்குமுற் பகலில்
ஒருவன் கூறிய குறளைகேட்டு, ஒற்றரால் யாண்டும்
துருவி வாசிஇன் றாகஅன் னோன்மொழி துணிந்து
விரைசெய் வேம்பனும் உழையரைப் பார்த்துஒன்று விளம்பும். 412

---

409. வேதியன் போல் வந்து-அந்தணர் போல இறைவன் வந்து. எம்முள் சோமேசனாகிய எனக்கும் சோம சுந்தரக் கடவுளுக்கும். வேற்றுமை இன்று - பேதம் இல்லை, நாமே அவர் - சோமேசனே-சோம சுந்தரன். உம்மை-மறுமையில்.

410. அன்னவன் திருக்கோயில் - மதுரை சோமசுந்தரக் கடவுளின் கோயில். நம்முடைக் கடம்பும் சூலமும் விடையும் துன்னும் என்று கூட்டுக. துன்னும் - பொருந்தியிருக்கும். பரிகளும் - குதிரைகளும். தன்னை நேரிலான்-சோமேசன்.

411. சாகைஆர்மறை - சாகைகளோடு கூடிய வேதங்கள். சாகை - வேதப் பகுதிகள். மொழிதரு - சொல்லுகின்ற. தோகை பாகன் - சோமேசன். துன்னி-சென்று. மன்னவன் கருமத்தில் வதிந்தார்-பாண்டியன் காரியங்களைச் செய்து கொண்டு இருந்தார். முனிவர்-மணிவாசகர்.

412. பகற்கு முற் பகலில் - ஆவணி மூலத்துக்கு முதல் நாள். ஒருவன்-குறளை கூறுபவன். ஒற்றரால் யாண்டும் துருவி - ஒற்றரைக் கொண்டு எங்கும்

**வாதவூரரை ஒறுத்தல்**

'வாத ஊரனைத் தண்டித்துப் பரிகொள வாங்கும்
நீதில் பொன்னினை அறவுசெய் தளிக்'கெனச் செப்பக்,
காது சீற்றத்தர் கொண்டுபோய் நுதலினில் கல்வைத்து
ஏதம் செய்தனர். கலுழ்ந்தனர்; அந்தணர் இசைப்பார்: 413

**வாதவூரர் முறையீடு**

கருணைக்கு ஒருகொள் கலமே! எம்மோர்
　　களைகண் ணே!மேவும்
எரியிற் கொடியார் இவுளி வாங்குஎன்று
　　என்பால் ஈந்திட்ட
பொருளைத் தருகென்று உலவாப் புன்கண்
　　புரிகின் றனர்அந்தோ!
வெருவுற் றனென்என் குருவே! பரிதந்து
　　என்னை மீட்பாயே! 414

'மதுரா புரிவாழ் ஈசா! சோம
　　புரியின் மன்னுற்ற
கதிர்ஆர் மதியின் கயநோய் தீர்த்த
　　கவினிச் செம்மாந்த
முதிரா முலைபங் கினனே! முறையோ?
　　இயல்போ? முதிர்பானு
எதிரே நிறுவி நுதல்கல் ஏற்ற
　　இரங்காது இருந்தீரே!' 415

---

தேடி. வாசி இன்றாக - குதிரைகள் காணப்படாமையால். அன்னோன் மொழி துணிந்து-குறளை கூறியவன் சொல்லை நம்பி. விரைசெய் வேம்பன்-பாண்டியன். உழையரை - ஏவலரை.

413. பரிகொள - குதிரை வாங்குவதற்கு. வாங்கும்-பெற்றுக் கொண்ட. காதுசிற்றத்தர் - ஏவலர். துதலினில் கல் வைத்து - நெற்றியில் கல்லை ஏற்றி ஏதம்-துன்பம். அந்தணர் கலுழ்ந்தனர் இசைப்பார் - மணிவாசகர் அழுது சொல்லுவார்.

414. கொள்கலமே - இருப்பிடம். களைகண் - புகலிடம். எரியிற் கொடியார் - நெருப்பினும் கொடியவர். இவுளி - குதிரை. உலவாப் புன்கண்-ஓயாத துன்பம், வெருவுற்றனென் - அஞ்சினேன். பரிதந்து - குதிரைகளைத் தந்து.

415. சோமபுரி - வானர மதுரை. மதியின் கயநோய் - சந்திரனின் உடல் தேயும் பிணி. தீர்த்த என்ற எச்சம் பங்கினனே என்பதோடு இயையும். கவினி-அழகுற்று. செம்மாந்த - பூரித்த. முதிராமுலை - உமாதேவி. பங்கினன் - இறைவன். பானு எதிரே நிறுவி - சூரியன் எதிரே நிறுத்தி. நுதல்கல் ஏற்ற - என் நெற்றியில் கல்லை ஏற்றுவதைக் கண்டும்.

### நரியைப் பரி செய்தமை

அரிய தவம்செய்து உறும்ஓர் ஆணின்
குழவி அழல்கேட்ட
உரிய தாய்போல் இவ்வாறு இரங்கல்
உயர்சோ மேசன்தன்
பெரிய செவியில் கேளா வான்வாழ்
பிறங்கும் அமரர்க்கூய்,
நரியைப் பரிபோல் செய்கென்று அருள,
நன்கென்று அவைசெய்தார் 416

### இறைவன் பரிகளுடன் மதுரை வரல்

கானில் வாழ்நரி பரிக ளாய்உறல்
கண்டு 'சேவகர் ஆகிநீர்,
மான அப்பரி ஏறும்' என்றுஒரு
வண்மை ஆரியன் ஆகியே,
தானும் ஓர்புர வியின்மி சைக்கொடு
மதுரை மாநகர் சார,அக்
கோனும் அன்பரை அருக ழைத்துஉயர்
முகம னும்பல கூறினான். 417

### குதிரைகள் பந்தியில் சேர்த்தல்

இஞ்சி யின்புறம் எய்த வந்திடும்
இவுளி யின்திரள் நோக்கியே,
நெஞ்சுஉ வப்பொடு பந்தி சேர்த்துஉயர்
கோயில் எய்தினன் நிமலனும்

---

416. உறும் - பெற்ற. குழவி - குழந்தை. அழல் - அழுகை. கேளா - அழுகை. கேளா - கேட்டு. குழவி அழல் கேட்டதாய் போல் அருள என்று கூட்டுக. அமரர்க்கூய் - தேவர்களைக் கூவி அழைத்து. அருள - அருளிச் செய்தலும். அவை செய்தார் – தேவர்கள் நரியைக் குதிரைகள் ஆக்கினர்.

417. கானில் - காட்டில்; சேவகர் - குதிரைப் பாகர்; நீர்-தேவர்களாகிய நீங்கள்; ஏறும் - ஏறுங்கள்; ஆரியன் - தலைவன்; சார - சார்ந்தபோது; அக்கோனும் - பாண்டியனும்; அன்பரை - மணிவாசகரை.

418. இஞ்சியின் புறம் – மதிலின் புறம்; இவுளியின் திரள் - குதிரைக் கூட்டம்: பந்தி - குதிரைகட்டும் இடங்கள். கோயில் - அரண்மனை: நிமலன் - சோமேசன்; பஞ்சவன் விடை கொண்டு - பாண்டியனிடம் விடை பெற்று; சசிபதியின் நண்ணினன் - சோமபுரியாகிய வானர மதுரையை அடைந்தான்; அன்பர் - மணிவாசகர்; மஞ்சு துஞ்சிய மாடம் - மேகம் தங்கிய. அதாவது வானம் அளாவிய மாடவிடு. இரவிமேல்கடல் எய்தினான் - பகல் போய் இரவு வந்தது.

பஞ்ச வன்விடை கொண்டு தன்சசி
பதியின் நண்ணினன் அன்பரும்
மஞ்சு துஞ்சிய மாடம் எய்தினர்
இரவி மேல்கடல் மன்னினான் 418

**பரி நரியானதால் மீண்டும் மணிவாசகரை ஒறுத்தலும் வையையின் கரை உடைதலும்**

இரவி னிற்பரி நரிகள் ஆகின்
எயில்க டந்துவ னம்புக
அரசன் அன்பரை நலிவு செய்ய,அ
தற்குஇ ரங்கிஎம் ஈசனும்
'வருக வையையின் நீர்'எ னக்கரை
புரள வந்திட, மன்னர்கோன்
'உரவு நீரைஅ டைத்தும்' என்றுஉயர்
குடிஞை யின்கரை உற்றனன் 419

**இறைவன் பிரம்படி படுதல்**

குடிகள் யாவும்வ ரைந்துஇ வற்குஇது
என்று பற்பல கூறுசெய்து,
அடைமின் என்னஓர் பிட்டு விற்றிடும்
வந்தி யானவள் ஆளதாய்
விடையின் அண்ணல்பு குந்து வேலைசெ
யாது வேந்தரின் வைகவே,
வடுவில் மேனியில் வேத்தி ரங்கொடு
மாறன் வன்பொடு வீசினான். 420

---

419. எயில் - மதில்; அன்பரை - மணிவாசகரை; நலிவு செய்ய-தண்டிக்க; அடைத்தும் - அடைப்போம்; குடிஞை - ஆறு.

420. வரைந்து - அளவு செய்து; இவற்கு இது - இவனுக்கு இந்த அளவு; கூறு - பிரிவு; அடைமின் - கரையை அடையுங்கள்; வந்தி - ஒரு கிழவி; ஆளதாய் - கூலியாளாக; விடையின் அண்ணல்-இறைவன்; வேந்தரின்-அரசர்போல். வைக - இருக்க; வடுவில் - குற்றமில்லாத; வேத்திரம் - பிரம்பு; மாறன்-பாண்டியன்; வன்பொடு - வன்மையுடன்.

### இறைவன் உருவிலியாய் உரைத்தமை

மட்டி லாதச ராச ரங்களின்
　　மழுவ லான்அருள் மெய்அடி
பட்ட போது,அயன் அறிவு றாமுடி
　　பதிய ஏற்றிஓர் கூடைமண்
கொட்டி, 'நீற்பொருள் என்று நின்பொருள்
　　கொண்ட னம்எம தன்பரை
விட்டொ ழிந்திடு' கென்ம றைந்துவி
　　சும்பின் வாணியின் ஏகினான். 421

### அரசன் பிழை உணர்ந்து மணிவாசகரை வேண்டுதல்

இனைய வாசகம் அரசு தன்செவி
　　ஏற வேபயம் ஏறியே,
நனைபி லிற்றிய கொன்றை சூடிய
　　நாத னார்அருள் போதனார்
முனம்அ டைந்து,ப ணிந்தெ ழுந்து'அறி
　　யாதுஇ ழைத்திடும் மூரிவெவ்
வினைம னம்கொளல் ! அரச செய்கஇஞ்
　　ஞாலம் ! என்றுவி ளம்பினான். 422

### மணிவாசகர் அமைச்சுப்பதவி துறந்து பெருந்துறை அடைதல்

வேண்டலென் ஒன்றும், வென்றிப்
　　பெருந்துறை மேவும் வண்ணம்
ஆண்டுஎனை ஏவு கென்ன
　　அரசனும் நொந்தா னாகப்,

---

421. சர அசரங்கள் - தாமர ஜங்கமங்கள். மழுவலான் அருள் மெய் அடி - இறைவன் அருள் மேனியில் பட்ட அடி. அயன் அறிவுறாமுடி பதிய - பிரமனாலும் அறிய முடியாத தலையில் பதியும்படி. ஓர் கூடைமண் ஏற்றிக் கொட்டி - ஒரு கூடை மண்ணை ஏற்றிக்கரையில் கொட்டி. விசும்பின் வாணியின் - அசரீரி வாக்கினால். விட்டொழிந்திடுகென - விட்டு விடுக என்று கூறி.

422. அரசு-பாண்டியன். தனைபிலிற்றிய-தேன் சொரிகின்ற. நாதனார் - இறைவன். போதனார் - மணிவாசகர். மூரிவெவ்வினை - வலியதீவினை. மனம் கொளல் - மனத்தில் கொள்ளாதீர்கள்.

பாண்டியன் விடைகொண்டு ஏகிப்
பரமனைப் பணிந்து போற்றிப்
பூண்டஅந் நகரை நீங்கிப்
பெருந்துறை நகரம் புக்கான். 423

வரவுபார்த் திருந்த வண்ணம்
பரமனை வணங்கி அன்பின்
பரவினர் இனைய நாள்கள்
சிலசெலப் பரமன் ஓர்நாள்,
'கருமம்உண்டு இருத்தி' என்னக்
கரந்தனன் அடியா ரோடும்.
அரனது செயலை உன்னி
இரங்கிஅங்கு உறைந்து சின்னாள். 424

## தில்லையில் உமாபதி அடி சேர்தல்

உத்தர கோச மங்கை
யூர்முதல் தலங்கள் எல்லாம்
அத்தனைக் கண்டு போற்றி,
அம்பல மதனில் புக்குப்,
புத்தரை வாதில் வென்று,
கருப்புர விளக்கந் தன்னை
ஒத்துஉடல் கரையத் தில்லை
உமாபதி அடிக்கீழ்ச் சார்ந்தார். 425

---

423. ஆண்டு - அவ்விடத்துக்கு. ஏவுகென்ன - அனுப்புங்கள் என்று கூற. நொந்தானாக - அவர் பிரிவுக்கு வருந்தினனாக. பாண்டியன் விடை கொண்டு - பாண்டியனது இசைவு பெற்று பரமனை - இறைவனை

424. பரவினர் - வணங்கினர். இனைய நாள்கள் சிலசெல - இப்படியே சில நாள்கள் சென்ற பிறகு. பரமன் - இறைவன். கருமம் உண்டு இருத்தி என்ன - உனக்கு இவ்வுலகில் இன்னும் காரியங்கள் உண்டு ஆதலால் இன்னும் சிலநாள் இருப்பாயாக என்று கூறி. கரந்தனன் - மறைந்தான். அங்குச் சின்னாள் உறைந்து என்று கூட்டுக.

425. அத்தனை - இறைவனை. அம்பலம் - சிதம்பரம், கருப்புர விளக்கம் கரைவதுபோல் உடல் தானே கரைந்து இறைவன் அடி சேர்ந்தார் என்க.

**நூற்பயன்**

இனையநற் காதை யாவர்
இயம்பினர், இனிதென் றோர்கள்,
கனைதிரை சுருட்டும் தெண்ணீர்க்
கடலுடுத்து ஓங்கும் பாரில்
மனம்உவப் புறவே வாழ்ந்து,
சுவர்க்கத்தின் வதிந்து, பின்னர்ப்
புனைதரு கங்கை வேணிப்
புனிதன் வாழ் கயிலை சேர்வார். 426

ஏழாவது வாதவூரடிகள் பூசைசெய்த சருக்கம் முற்றும்.

சருக்கச் சுருக்கம்

## 8. ஆனந்தன் முத்தி பெற்ற சருக்கம்

காஞ்சிபுரத்தில் ஆனந்தன் என ஒரு மறையோன் இருந்தான். அவன் மனைவி சுந்தரி. பேரழகி. இருவரும் சிவராத்திரி விரதம் மேற்கொண்டனர். ஒரு விரதத்தின்போது இரவில் ஆனந்தன் காமநோய் கொண்டு சுந்தரியுடன் கூடினான். அதனால் அவர்களைக் குட்டநோய் பற்றியது.

நோய் தீர்வதற்காகப் புண்ணியநதிகள் ஆடிக்கொண்டு தில்லைநகர் வந்தனர், அங்கு உரோமச முனிவர் அறிவுரைப்படி சோமபுரி அடைந்து, சந்திர தடத்தில் நீராடி இறைவனை வழிபட்டு நோய்தீர்ந்தனர்.

பின்பு அங்கேயே தங்கித் தவம் செய்து உடலைவிட்டு ஞான வானில் பகல்தீபம் போல் பொருந்தி இன்பம் உற்றனர்.

எட்டாவது ஆனந்தன் முத்தி பெற்ற சருக்கம்

**வாயுவின் உரை**

பிருகு முனியே! விண்அமரர்
சித்தர் பிறைவாள் எயிற்றுஅசுரர்
மருமென் மலர்தூய் வீழ்ந்திறைஞ்சிக்
குடர்தம் பட்டுவலம் வந்துஆங்கு

426. கனைதிரை முதல் ஓங்கும் வரை பாருக்கு அடைகள். பாரில்-உலகில். வதிந்து - வாழ்ந்து.

அரிய மறையால் துதிகூறி
வரம்பெற்று அகன்றார் அளவில்லோர்
பெருகும் அவரை உரைக்கரிதாம்.
பேசு கின்றேன் ஒருகதைகேள். 427

**ஆனந்தன்**

அடியிற் பழுத்த பலாக்கனியை
அழகார் இளங்கன் றினைத்தேடிப்
படரும் எருமை மிதித்துஉழக்க,
இழிதேன் ஆலி பாய்பணைசூழ்
நெடிய காஞ்சி வளம்பதியின்
மறையோன் ஒருவன்; நிகர்அகன்ற
வடிவோன்; விஞ்சைத் துறைபோய
மதியோன்; பெயர்ஆ னந்தன்என்போன். 428

**சுந்தரியின் அழகு - கூந்தல்**

கடைகு ழன்று கவர்வின்றி யேமணம்
உடைய ஆகிய கந்தமெல் ஓதிதான்,
தடம்நி றைந்திடும் சைவல மும்புகல்
நெடிய கூந்தற் கமுகும் நிகர்க்குமே! 429

**நுதலும் செவியும்**

திரள்சி ரம்கரி மத்தகம் செப்புமூ
விரல்அ கன்று திகழ்ந்திடு மென்னுதல்,
முரியும் பாதி மதிமுக மாமதியே
மருவும் அம்செவி வள்ளையை நேருமே! 430

---

427. பிறைவாள் எயிற்று - பிறைமதி போன்று ஒளியுடைய பற்களையுடைய. மரு - மணம். குட்நந்தம்பட்டு - மண்டியிட்டு; உரைக்க அரிதாம். சொல்வதற்கு இயலாது.

428. உழக்க - நசுக்க. இழிதேன் ஆலி - ஒழுகுகின்ற தேன் துளிகள். பணை - வயல். நிகர் அகன்ற வடிவோன் - மிக்க அழகுடையவன். விஞ்சைத் துறைபோய மதியோன் - கலைகளை முழுவதும் கற்ற அறிவினன்.

429. ஓதி - கூந்தல். கடை. குழன்றிருத்தல், கவர்வு இன்றியிருத்தல், மணம் உடைமை ஆகியன கூந்தலுக்குச் சிறப்புக்கள். தடம் - பொய்கை. சைவலம் - பாசி. கூந்தற்கமுகு - ஒரு வகைக் கமுகமரம். நீர்ப்பாசியும் கூந்தற் கமுகும் மாதர் கூந்தலுக்கு உவமை கூறுவது மரபு.

430. சிரம் கரி மத்தகம் நேரும். மென்னுதல் பாதிமதி நேரும். செவி வள்ளையை நேரும் என்று கூட்டுக. கரி மத்தகம் - யானையின் மத்தகம். நுதல்-

### விழி

பாலின் வெண்மை கடையிற் பரந்து,அரி
சால நாப்பண் கருமைசெய் தண்விழிக்கு,
ஆலம் காலன் அடுகணை காதுவாள்
வேலை ஒப்புமை கூறல் விழுமிதோ? 431

### பல்லும் இதழும்

ஆர்ந்து கோமளம் ஆகும்வெண் பற்குஇணை,
வார்ந்த முல்லையை முத்தை வகுக்கலாம்.
தேர்ந்த நாவலர், சேந்து திரள்இதழ்க்கு
ஓர்ந்து துப்பை இணைஎன்று உரைப்பரே. 432

### கன்னமும் மூக்கும்

அலங்க லம்பைங் குழல்அம் கவுட்குஇணை
இலங்கு வாசக்கண் ணாடிஉண் டேல்உண்டாம்
துலங்கி எண்மலர் ஒத்துஅமை துண்டத்தை
நலம்கொள் சண்பகம் என்பார்கள் நாவலோர். 433

### முகமும் கழுத்தும்

வட்டம் ஆகி மணத்திடும் வாண்முகம்
நெட்டி தழ்க்கம லத்தை நிகர்க்குமால்,
மட்டு நால்விர லில்வரை மூன்றுசேர்
கட்டெ ழிற்கழுத் துக்கு இணை பூகமே! 434

---

நெற்றி - மாதரின் நெற்றி மூன்று விரல் அகலம் இருப்பது அழகு. முரியும் - வளைந்த. வள்ளை என்பது ஒரு வகைக் கொடி.

431. கடையில் - கடைசியில். அரி - செவ்வரி. நாப்பண் - நடுவிலே. மாதர் விழிகள் கடைசியில் பால் போன்ற வெண்மை பரவி, செவ்வரி மிக்கு, நடுவிலே கருமை பெற்று இருக்கும். கண்ணுக்கு. ஆலம் (நஞ்சு), காலன், கணை, வாள், வேல் இவற்றை உவமை கூறுதல் சிறப்பாகுமா? என்பது திரண்ட பொருள். விழுமிது - சிறப்பு.

432. கோமளம் - அழகு; பற்கு - பற்களுக்கு. வகுக்கலாம் - சொல்லலாம்; சேந்து - சிவந்து; ஓர்ந்து - ஆராய்ந்து; துப்பை – பவளத்தை.

433. அலங்கல் அம்பைங்குழல் - சுந்தரியினது; வாசம் பொருந்திய கண்ணாடி உண்டேல் கவுட்கு இணை உண்டாம். கவுள் - கன்னம். எண்மலர் ஒத்து அமைதுண்டம் - எள்ளின்பூ போன்று அமைந்த மூக்கு. எட்பூவும் சண்பகமும் மூக்குக்கு உவமை கூறுவது மரபு.

434. நெட்டிதழ் - நீண்ட இதழ் உடைய; கமலம் - தாமரைமலர்; மட்டு - அளவு; கழுத்து நால்விரல் நீளமும் அதில் மூன்று வரைகளும் இருப்பது அழகு; பூகம் - கமுகு; அது கழுத்துக்கு இணையாகும்.

### கொங்கைகள்

அரும்பி யேதிரண்டு ஓங்கி அணிந்துஉற
நெருங்கு கொங்கைக்கு இணைஇள நீர்வரை
விரும்பு தாமரை கொங்கை விளம்பிடின்,
பொருந்து றாமுற் றுவமைஇல் போலியே. 435

### கை-வயிறு-இடை

நரம்பு எலும்பு மயிர்அகன் றேநலம்
பொருந்து கைக்கு,எவை ஒப்புப் புகல்வதே!
விரும்பும் மெல்வயிறு ஆலிலை போலுமால்
இருந்த தையல் இடைக்கு இணை நூல் அரோ. 436

### அல்குல்

ஏந்து கோடுயர்ந்து, இன்னெழில் மென்மயிர்
சார்ந்து, தூய அமுதம் ததும்பியே,
மாந்தர் கண்கள் மனம்கவர் அல்குலைத்
தேந்தண் தாமரை என்பது செவ்விதே! 437

### துடையும் பாதமும்

ஒன்றொ டொன்று பொருந்தி உரோமங்கள்
துன்றி டாத துடைக்கு இணைவாழையே
குன்ற லேமிக லின்றிக் குழைந்ததாட்கு,
என்றும் அம்புயம் அன்றிஒப்பு இல்லையே! 438

---

435. கொங்கைக்கு - முலைக்கு; இளநீரும் வரையும் இணையாகும்; வரை - மலை; தாமரை மலரை உவமை என்று கூறினால் பொருந்தாது; அப்படிக் கூறுவது முற்றுவமை இல்லாத உவமைப் போலியே யாகும்; தாமரை கொங்கை - தாமரை மொட்டை.

436. நரம்பு, எலும்பு மேல் தெரியாமலும் உரோமம் இல்லாமலும் இருப்பது மாதர் கைக்கு அழகு; கைக்கு எவை ஒப்புப் புகல்வது - கைகளுக்குக் கூற உவமை இல்லை என்றபடி.

438. பொருந்தி - ஒப்பாகி. துடைக்கு வாழை இணை. தாட்கு - பாதங்களுக்கு. அம்புயம் - தாமரை மலர்.

### மூவரும் மயங்கும் அழகு

அன்ன வூர்தி அரிஅரன் மூவர்இக்
கன்னி அல்குல் வயிறு கதிர்முலை
என்ன வைகலின், தாமரை ஆலிலை
மன்னும் மாமலை வைகினர் போலுமே. 439

### சிவராத்திரி விரதம் இருத்தல்

இத்தகுபே ரெழில்வாய்ந்த சுந்தரிஎன்
பவளை அன்னோன் எரிசான்றுஆகக்
கைத்தலம்பற் றுறமதனும் அணங்கும்என
கலவியினில் களிக்கும் நாளில்,
புத்திமுத்தி அருள்விரத நாயகமாம்
சிவராத்திரிப் புனித நோன்பு
பத்தியுடன் இருவோரும் இயற்றிஅரன்
மேல்அன்பு பழுத்திட் டாரே! 440

### ஆனந்தனின் விரத உரை

நியமமுடன் இவ்வாறு நோன்புஇயற்றி
இல்லறத்தின் நெறிவ ழாமல்
இயல்பொடும்நீ ணாள்கழிப்பப் பின்பொருதிங்
களின்விரதம் இருந்துஇ ராவில்
துயில்புரியாது ஆனந்தன் விரகம்உற்றுச்
சுந்தரிபால் சொல்வான்: 'மின்னே!
மயல்பெரிது; பெரிதுஆற்ற வருந்தி'னென்நின்
இதழ்கனியை வழங்கு' கென்றான். 441

---

439. அன்னவூர்தி - பிரமன். என்ன வைகலின் - ஒத்து இருப்பதனால். இந்தக் கன்னியின் அல்குல்போல இருப்பதால் பிரமன் தாமரை மலரில் வாழ்ந்தான். இவளின் வயிறுபோல இருப்பதால் அரி ஆலிலையில் வாழ்ந்தான்; இவளின் முலைபோல இருப்பதால் அரன் கைலை மலையில் வாழ்ந்தான். இயல்பாக மூவரும் தாமரை, ஆலிலை, மலையில் இருப்பதற்கு வேறொரு காரணம் கூறியதால் இது தற்குறிப்பேற்ற அணி எனப்படும். கவிக் கற்பனையின் உச்சப் பகுதி இது.

440. எரிசான்று ஆக – அக்கினி சாட்சியாக. மதனும் அணங்கும் என - மன்மதன் இரதி போல. விரதநாயகம் - விரதங்களுக்கெல்லாம் தலைமை வாய்ந்தது. பரவி – வணங்கி.

441. நியமம் - முறை. வழாமல் - வழுவாமல். நீணாள் - நெடுங்காலமாக. திங்களின் - மாதத்தில். துயில் புரியாது - தூங்காமல். விரகம் - காமம். மயல் பெரிது - என் ஆசை மிகப்பெரியது. ஆற்ற வருந்தினென் - மிகவும் வருந்தினேன். இதழ்க்கனி - கொவ்வைக் கனிபோன்ற இதழ்.

**சுந்தரியின் மறுப்பும் ஆனந்தனின் துயரமும்**

'அணையவரு கென்றுஎனைநீ கைம்மிகுந்த்
காமத்தால் அண்ணும் நோன்பில்
புணர்வதுவெம் பாவமதாம் ஆனமையால்
தகாது.மிகு புந்தி யுள்ள
கணவன்இரந் திடமறுத்தல் அறம்அன்றுஎன்று
அறிந்தும்இது கருதிச் சொற்றேன்.
துணைவ!'எனக் கூறிடவும், அவளைமுன்கை
பற்றிமிகத் துயரம் உற்றான் 442

**இருவரும் தவறு செய்தனர்**

அழகுடையோர் முகம்நோக்கின் அம்கலுழும்
மின்னார்நெஞ்சு அழலின் இட்ட
இழுதுஎனவே உருகும்என்பர் இளமைந்தர்
கட்கும்அனைத்து இவள்முன் நின்று
கொழுநன்இரந்து உரைத்திடவும் உருகாளோ!
இசைந்தனள்அக் கொம்பர் அன்ன
மழலைஇளங் குயில்மொழியாள் தன்னொடுபஞ்
சணையின்மிசை மன்னி னானே 443

கைத்தொடியும் காற்சிலம்பும் ஓலமிடக்,
கவின்கொள்முலை கரத்தில் மூழ்கப்,
புத்தமுதம் உற்றிருந்து நிதம்பம்கான்
றிட,முகத்தின் வேர்வை பூப்பப்,
பைத்தகுமல் அவிழஇள நலம்உண்டு
செம்மாப்ப மயில்அம் சாயல்
முத்தநகை அமுதனைய மழலைமொழி
மனைஅவளும் முறுவல் பூத்தாள் 444

---

442. கைம்மிகுந்த - வரம்பு மீறிய. அண்ணும் - மேற்கொண்ட. புணர்வது - கலவி. இரந்திட - யாசிக்கும்போது. அறம் அன்று - தருமம் அல்ல.

443. நோக்கின் - பார்தால். அம்கழலும் - அழகு ஒழுகுகின்ற; மின்னார் - பெண்கள். இழுது - வெண்ணெய். மைந்தர்கள் - வாலிபர்கள். அனைத்து - அவ்வண்ணமேயாம். கொழுநன் - கணவன். கொம்பர் அன்ன - பூங்கொடி போன்ற.

444. கலவியின் இயல்பு இப்பாடலில் விளக்கம் பெறுகிறது.

## தவறு செய்ததால் குட்டநோய் அடைதல்

காமநேர்ப் தணிந்ததற்பின், 'என்செய்தோம்!'
எனக்கலங்கிக் 'கமழும் கொன்றைத்
தாமனே! பொருத்தி!எனத் துயிலுற்றார்
இப்பால்அப் பாவம் சார்ந்து
தீமையாய்க் குட்டநோய் கொண்டுகைகால்
குறைந்ததனைத் தீர்ப்பான், கங்கை
நாமநீர் நதிசுரசு வதிகோதா
வரியாதி நண்ணி ஆடி. 445

## தில்லை அடைதல்

விரதவகை பலஆற்றிச் சோடசதா
னம்புரிந்து விமலன் மேவும்
அரியதலம் பலபணிந்தும் தீர்கிலராய்
அம்புலியும் பாம்பும் போற்ற
மருவுசதி யுடன்மேவி வானவன்வாழ்
தில்லைநகர் வந்து காதல்
பெருகஅவன் அடிவணங்கி வைகினர்சின்
னாள்அங்குப் பிணியில் தீர்வார், 446

## உரோமச முனிவனைக் காணல்.

கடவுளுடை அருளாலே சிவகங்கை
வாவிஉயர் கரையின் உற்ற
நெடியஉரோ மசமுனியைக் கண்டுபணிந்து
அவர்குறையை நிகழ்த்த அன்னோன்
பொடிஉதவி மிகஇரங்கி இந்நோவால்
மிக மெலிந்தீர் போலும் இந்தக்
கொடியவினை அகலும்வகை கூறுதும் நீர்
கேண்மின்எனக் கூறு கின்றான். 447

---

445. கொன்றைத்தாமன் - இறைவன்; பொறுத்தி - மன்னிப்பாயாக துயிலுற்றார்- உறங்கி விட்டனர்; தீர்ப்பான் - தீர்ப்பதற்காக.

446. சோடசதானம் – பதினாறு வகை தானங்கள். விமலன் - இறைவன். அம்புலி - வியாக்கிரபாத முனிவர். பாம்பு-பதஞ்சலி முனிவர். சதி-உமாதேவி. வானவன் - இறைவன். வைகினர் - வாழ்ந்தனர்.

447. வாவி - குளம். அவர் - ஆனந்தன், சுந்தரி. அன்னோன்-உரோமச முனி. பொடி - திருநீறு.

### உரோமசன் உரை

வழுதிமுறை கோடாமல் அரசுசெயும்
வளநாட்டில் வையைச் சார்பில்
ஒழுகுஒளிமின் னார்முகம்போல் செவ்வியதா
மரைமலரும் ஓடை பொய்கை
விழுமணிகள் தெளித்தனநீர் வாவிபுடை
சூழ்சோம புரியின் மேவி
நிழல்மதியின் தடம்ஆடி அவ்இறைவற்
போற்றின்இந்நோய் நீங்கிப் போமே. 448

அத்தலத்துக்கு ஒப்பான ஒருதலமும்
அம்புலிகொண் டாடும் தீர்த்தம்
ஒத்திடும்ஓர் தீர்த்தமும்அத் தலத்தில்உறை
இலிங்கத்துக்கு ஒப்பாய்ப் புத்தி
முத்திதரும் இலிங்கமும்ஓர் மூவுலகத்
தினும்இல்லை மொழிந்தேன் என்றான்
சுத்தமுறு சடைஅணிந்து பூதிஅக்கம்
புனைந்துசிவன் தோற்றம் போல்வான் 449

### ஆனந்தன் ஞானம் கூறுதி எனல்

என்றசொல் செவியி னூடே
இனியதெள் ளமுதம் போலச்
சென்றிட லோடும் வெந்நோய்
தீர்ந்தவர் போலு ஆனார்
துன்றும்ஆ னந்தன் பின்னும்
சொற்றனன் - 'பிறவி நோயும்
இன்றுஎனச் சகல ஞானம்
இயம்புதி அடிகள்!' என்றே. 450

---

448. வழுதி-பாண்டியன், முறைகோடாமல்-நெறி வழுவாமல். வையைச் சார்பில் - வையை நதிக் கரையில். மின்னார் ஒளி ஒழுகு முகம் என்று கூட்டுக. விழுமணிகள் தெளிந்தனநீர்-சிறந்த நவமணிகளைத் தெளித்து வைத்தாற் போன்ற நீரையுடைய. சோமபுரி-மானாமதுரை. நிழல்மதி - ஒளியுடைய சந்திரன். மதியின் தடம் - சந்திர தீர்த்தம், ஆடி - நீராடி. இறைவன் போற்றின் - இறைவனை வணங்கினால்.

449. அம்புலி - சந்திரன். பூதி - திருநீறு. அக்கம் - உருத்திராக்கம்,

450, பிறவி நோயும் இன்று என - பிறவிப் பிணியும் தீர்ந்து போனது என்னும் படியாக. இயம்புதி - சொல்வாயாக. அடிகள் - சுவாமிகளே! என்று சொற்றனன் என்க.

### உரோமசன் அறவுரை

ஆணவ மயக்கி னாலே
    அருவினை ஈட்டி எண்இல்
வீண்உடல் எடுத்து நின்றன்
    வினைவழி யூட்டி உற்ற
தாணுவை மறந்து பொய்யை
    மெய்யெனக் கருதிச் சாதல்
பூணும்அப் பிறப்பில் யாது
    சிவகன்மம் புரிந்தாய் கொல்லோ! 451

அன்னதால் முதன்மைச் சாதி
    ஆகிய பிறப்பில் தோன்றி
மன்னினை! வினைஒப் புற்று
    வந்தநல் அருளால் மன்ற
உன்னைநீ உணர்ந்து பாசம்
    ஒழிந்துஅரு ளுடன்ஒன் றாகித்
தன்னுறு சிவத்தைச் சாரச்
    சாற்றுவென் கேட்டி என்று. 452

### சைவசித்தாந்த உண்மை

கருணையின் ஈசன் தந்த
    மறைப்பொருள் கழறு கிற்பான்
பெரியஅந் நூல்கள் யாரும்
    யாவையும் பேசு கின்ற
அரியமுப் பதார்த்தம் ஆகும்
    அன்னவை பிரமம் ஒன்று;
மருவிய சீவன் ஒன்று;
    மன்னிய பாசம் ஒன்றே. 453

---

451. தாணுவை - இறைவன், சாதல் பூணும் - இறக்கின்ற.

452. அன்னதால் - முற்பிறவியல் சிவதருமம் செய்தமையால். மன்னினை - வாழ்கின்றாய். வினை ஒப்பு - நல்வினை தீவினை ஆகிய இரண்டும் நீங்கிச் சமநிலையாவது. வினை ஒப்பே வீட்டுக்கு வழி என்பர். மறை - நன்றாக. கேட்டி - கேட்பாயாக.

453. முப்பதார்த்தம் என்பன பிரமம், சீவன், பாசம். என்ற மூன்றுமாம் இவை பதி, பசு, பாசம் எனவும் படும். இப்பாடல் முதல் சைவசித்தாந்தத் தத்துவங்கள் கூறப்படுகின்றன.

உலகுஇயல் பாகும் நீசொல்
உயர்சிவன் வேண்டா என்னின்
அலைவளர் ஆழி சூழும்
அகிலஅண் டங்கள் தாமும்
நிலைபெறச் சேர மாட்டா;
நிகழ்த்துமண் கடாதி ஆகா.
இலகுறு குலாலன் போல
இயற்றுவோன் ஒருவன் வேண்டும். 454

அப்பதி இயல்பு கூறின்
சச்சிதா னந்தம் ஆகிச்
செப்பில நித்தம் ஆகிச்
செறிந்தபூ ரணம தாகி
ஒப்புறும் உயிர்கட்கு எல்லாம்
உணர்வதாய் அசலம் ஆகித்
தப்பறும் ஒளிய தாகிக்
குணம்குறி இன்றிச் சாரும், 455

அன்னநற் சிவந்தான் சத்தி
யுடன்கூடிச் சகளம் ஆகித்
தன்னருள் ஆட லாக
மலர்தொடர் சாரும் சீவர்

---

454. உலகு இயல்பு ஆகும் நீ சொல்-சிவன் வேண்டா என்பது நாத்திகனின் வாசம். உலகமானது தானே தோன்றியது. அதை உண்டாக்க ஒரு கடவுள் வேண்டியதில்லை என்பது அதன் கருத்து. அண்டங்கள் நிலை பெறச் சேர மாட்டா - படைக்க ஒருவன் இல்லையாகின் அண்டங்கள் தாமே உண்டாக மாட்டா. மண்கடாதி ஆகா - மண்ணானது தானாகவே குடம் முதலிய பாத்திரங்கள் ஆகமாட்டா. அவற்றைச் செய்யக் குலாலன் வேண்டும். அதைப்போல உலகைப் படைக்கவும் ஒருவன் வேண்டும்.

455. அப் பதி - முன்னே பிரமம் என்று கூறப்பட்ட பதி. இயல்பு - தன்மை, சச்சிதானந்தம் - சத், சித், ஆனந்தம் என்பன. நித்தம் - நித்தியம், பூரணம்-நிறைவு. உணர்வதாய் - உணர்வு ஆகி. உணர்வு என்பது. உணர்வது என வந்தது. அசலம்-அசையாத பொருள். தப்புஅறும் - குற்றம்இல்லாத. குணம் குறி இன்றிச் சாரும்-குணங்களும் உருவமும் இல்லாமல் இருக்கும்.

456. சகளம் - உருவம். அருளாடல் - திருவிளையாடல். மலத்தொடர் சாரும் சீவர் - மும்மலத் தொடர்பு கொண்ட உயிர்கள். உன்னரு - நினைத்தற்கு அரிய. சேர்வான் - சேரும் பொருட்டு. உடல் கரணம் தோன்றப் புவனங்கள். ஈயும் - உயிர்கள்மேல் இரங்கி தனு, கரண, புவன, போகங்களை இறைவன் தருவான். இவ்விரு பாடல்களில் பதியின் இலக்கணம் கூறப்பட்டது.

உன்னரு முத்தி சேர்வான்
மலம்வினை ஒழியும் வண்ணம்
மின்உடல் கரணம் தோன்றப்
புவனங்கள் ஈயும் அன்றே. 456

இருவினை ஒத்த போழ்தில்
ஈறுஇல்தன் சத்தி சேரக்
குருவின்மேல் இச்சை கூரும்
கூரவே அணுக்க ரிற்போய்
மருவுயிர்க் குயிர தாயும்
மானிட் வடிவ தாயும்
திருமலி தீக்கை செய்து
முத்தியிற் சேர்க்கும் அன்றே. 457

இருமலத்து அழுந்து சீவன்
எண்இன்றி நித்தம் ஆகி
அருவினைத் தன்மைக்கு ஈடாம்
உடல்சிவன் அருளால் மன்னிப்
பொருவில்அவ் உடம்பே தானாய்ப்
போகங்கள் பொசித்துப் போக்கு
வரவறத் தீக்கை பெற்று
முத்தியின் வைகும் மாதோ. 458

பாசமூ வகைய தாகும்
பகரும்ஆ ணவந்தான் ஒன்று.
பேசிய மாயை ஒன்று
பிறங்கிய கன்மம் ஒன்றாம்.

---

457. இருவினை ஒத்தபோழ்தில் - இருவினை ஒப்பு என்ற மலபரிபாகம் வந்த காலத்து. ஈறுஇல் - முடிவில்லாத. தன்சக்தி - இறைவன் தனது சக்தி. இச்சை கூடும் - ஆசை உண்டாகும். கூரவே - ஆசையுண்டானால். அணுக்கரில் போய் - அப்படிப் பக்குவப்பட்ட சீவரின் அருகிலே போய். தீக்கை செய்து - தீட்சை பண்ணி.

458. இருமலம் - ஆணவமலம் கன்மமலம். எண் இன்றி - சீவன்கள் கணக்கற்றனவாய். நித்தம் ஆகி - அழிவற்றனவாய். பொருவில் - ஒப்பற்ற. போக்கு வரவு அற - இறப்பும் பிறப்பும் அறும்படி. தீக்கை - குருவின் பால் தீட்சை. இப்பாடலில் உயிரின் இலக்கணம் கூறப்பட்டது.

459. தழலை மூடும்பொடி - நெருப்பை மூடிய சாம்பல். மூசும்-நெருங்கும்.

ஆசிலாத் தழலை மூடும்
　　பொடிஎன அறிவை மன்னி
மூசும்ஆ ணவந்தான். மாயை
　　முழுதும்தத் துவம தாகும். 459

உடலினுக்கு ஏது வாகி
　　உற்பத்தி நாசம் செய்தே
அடையும்நாற் சாதி யாவும்
　　போகம்முன் றாயும் நண்ணும்
திடமுறு கன்மம் இங்கு
　　மூவகைச் செறியும் பாசம்
கடவுள்தன் அருளி னாலே
　　உயிரினில் கழன்று போமால். 460

## உயிருக்கே மலம் இறைவனுக்கு இல்லை

இத்திறம் என்ப சீவர்க்கு
　　இயைந்திடும் மலந்தான் மேலாய்
நித்தமாய் உயிரை நீங்கா
　　நிமலனுக்கு உண்டே என்னின்,
வைத்திடும் நீரின் உப்பு
　　வறுங்கடற்கு இல்லை போலக்
கொத்துறும் உயிர்க்கே அன்றி
　　ஈசன்பால் குறுகி டாவே. 461

## ஆன்மா யாது

உற்றிடும் உன்னை நீதான்
　　உணரக்கேள் உடல்நீ என்பை!
சற்றும்நித் திரையில் ஒன்றும்
　　காண்கிலை, தடக்கை கோல்கொண்டு

---

460. ஏதுவாகி - காரணம் ஆகி. உற்பத்திநாசம் - பிறப்பு இறப்பு - கன்மம் மூவகை-சஞ்சிதம், பிராரத்தம், ஆகாமியம்.

இப்பாடல்களால் பாசத்தின் இயல்பு கூறப்பட்டது.

461. மேலாய் - உயிர்க்குமேலாக. நித்தமாய் - நிலையானதாய். உயிரின் நீங்கா-உயிரை விட்டு நீங்கமாட்டா. நிமலனுக்கு உண்டே என்னின்-இறைவனுக்கு இந்த மூன்று மலங்களும் உண்டோ என்றால். நீரின் உப்பு வறுங் கடற்கு இல்லை போல - நீரிலுள்ள உப்பு நீரற்ற கடலின்கண் இல்லை. அது போல.

எற்றிடில் அறியும் என்பை!
    சவமதாய்க் கட்டை ஏறின்
பற்றுதீச் சுடவும் திண்ணென்று
    உணர்ந்திடாப் பரிசது என்னே! 462

ஆதலால் அன்னத் தால்உண்
    டாகிய உடல்நீ அல்லை
ஓதும்ஐம் பொறிநீ என்பை!
    உறக்கத்தின் அறியா ஆகும்
ஈதலால் ஒன்றொன் றாக
    அறியும்ஒன் றினைமற் றொன்று
போதமுற்று அறியா ஆகும்
    ஆதலால் பொறிநீ அன்றால். 463

கரணம்நீ என்பை! ஒன்றைக்
    கருதிநிச் சயித்துப் பற்றி
உரமுற எழுந்து நான்காய்ப்
    பிரிவதால் இவைநீ அல்லை
மருவிய பிராணன் நீயாய்
    வழங்குவை உறக்கந் தன்னில்
அரியபொன் நின்பால் உற்றால்
    பயம்நசை அணுகாது என்னே! 464

---

462. உன்னை யார் என்று உணரக் கேட்பாயாக; உடல்நீ என்பை-இந்த உட்லே நான் என்பாய்! உடலே நீயானால் உறக்கத்தில் நீ அறியாமல் இருக்கின்றாயே! கோல் கொண்டு எற்றிடின் அறியும் என்பை-தடி கொண்டு அடித்தால் இந்த உடல் அறிகிறது என்பாய்! உயிர் போனபிறகு கட்டை ஏறினால் தீச்சுடும் போதும் தெரியாதிருக்கும் தன்மை என்னே; உடலே நீ அன்று என்பது சான்றுடன் விளக்கப்படுகின்றது.

463. பொறி நீ என்பை - ஐம்பொறிகளே ஆன்மா என்பாய்! உறக்கத்தின் அறியா ஆகும் - பொறிகளே ஆன்மா ஆனால் அவை உறங்கும்போது உணர்வின்றி அடங்கும். ஒவ்வொன்றாக அறியும் - அப்பொறிகள் ஒன்று ஒன்றாகத் தமக்குரிய புலன்களையே அறியும். அதாவது உடல் ஸ்பரிசத்தையும் வாய் சுவையையும் கண் ஒளியையும் மூக்கு மணத்தையும் செவி ஒலியையும் மட்டுமே அறியும். ஒன்றினை மற்றொன்று போதமுற்று அறியா ஆகும் - ஒரு பொறி இன்னொரு பொறிக்கு உரிய புலனை அறிவுற்று உணரமாட்டா. ஆதலால் நீ பொறி அல்ல.

464. கரணம் - மனம்; கரணம் ஒன்றைக் கருதும்போது மனம் ஆகும்; நிச்சயிக்கும்போது புத்தியாகும்; பற்றும்போது சித்தம் ஆகும்; செயல்படும் போது அகங்காரம் ஆகும்; இப்படிக் கரணமானது நான்காகப் பிரிவதால் அக்கரணம் நீ அன்று.

புலனொழி வதனா லன்பை
    பூபதி யிதுவே யாகிற்
பலபுல னீங்கா வாகில்
    வாயுவென் பகர்வா யென்னி
லுலவுறு முடற்குக் காவ
    லாவிது மின்றே லுற்ற
மலநுகர் நாய்தான் செத்த
    பிணமென்று மன்னித் தின்னும். 465

அங்கதால் வாயு நீஅன்று
    அறைந்தஇங் அனைத்தும் இன்றேல்
இங்கென்னைக் காட்டு கென்னில்
    இவற்றது தன்மை எல்லாம்
தங்கிவே றாகிக் காணும்
    அறிவுநீ ஆகும் ஈது
கங்கையான் அருளால் அன்றி
    யாவர்க்கும் காணொ ணாதே! 466

இப்பொழுது உணர்த்தி நின்ற
    ஈசன்தன் ஞானம் மன்னிச்
செப்பும்நின் இச்சா ஞானச்
    செய்திகள் அடங்க ஆங்கே

---

பிராணன் நீயாய் வழங்குவை-பிராணனே நீ என்று கூறுவாய்! பிராணனே நீ என்று கூறுவாய்! பிராணனே நீயானால் உறக்கத்தில் பொன் உன்னிடம் சேருமாயின், அதன் பயனையோ விருப்பத்தையோ நீ உணர்வதில்லை. ஆதலால் நீ பிராணனும் அன்று.

465. இப்பாடலின் திருந்திய வடிவம் விளங்காததால் பொருள் புரியவில்லை. வாயுவே ஆன்மா அன்று என்பதற்குரிய காரணம் விளக்கப்பட்டுள்ளது போலும்!

466. அங்கு அதால் - அதனால். இவ்வனைத்தும் இன்றேல் - மேலே சொன்ன உடல், பொறி, கரணம், பிராணன், வாயு ஆகிய அனைத்துமே ஆன்மா இல்லையாயின். எனைக்காட்டுக என்னில்–ஆன்மாதான் யாது என்று காட்டுக என்றால். இவற்றது தன்மை எல்லாம் தங்கி - மேலே சொன்ன உடல் முதலியவற்றின் இயல்பு முழுவதும் பெற்று. வேறு ஆகிக் காணும் அறிவுநீ-அவற்றினின்று வேறாகத் தோன்றும் அறிவே ஆன்மா. கங்கையான் - சிவன்.

467. ஈசன்தன் ஞானம் - பதி ஞானம். நின் இச்சாஞானச்செய்திகள் - பசு ஞானத்தால் வரும் செயல்கள். அடங்க - ஒடுங்கிப்போனால். அதனுடன் - அந்தச் சிவத்துடன்.

தப்பறு சிவந்தான் தோன்றும்.
அதனுடன் கலந்து நிற்றல்
ஒப்பறு வீட தாகும்
உண்மைஈது உரைத்து ளேமால். 467

**உரோமசன் விடைதருதல்**

என்றலும் மகிழ்ச்சி பூப்ப
இறைஞ்சினன். எழுந்து போற்றி
நின்றனன். அவனை நோக்கி
நீவிர்போய்ப் பாண்டி நாடு
துன்றிவெண் திங்கள் ஊர்வாழ்
சோமசுந் தரனைப் போற்றி
ஒன்றிய கருணை பெற்றே
உறுபிணி ஒழிமின் என்றான். 468

விடைகொடு திரும்பிச் சிற்றம்
பலத்துஅன்பால் மேவி நோயுற்று
அடைவுறும் எமக்கு நீக்கும்
அருமருந் ததுவும் ஈந்து
வடுவறப் புரிந்தாய். எந்தாய்
வான்துணை இதன்மேல் உண்டோ
கடையனேன் வேண்டும் பேறுஎன்று
உரைத்து உளம் கரையப் போற்றி. 469

**காழி முதலிய பதிகளை அடைதல்**

வலங்கொடு தொழுது மீண்டு
காழிமா நகரம் மன்னி
இலங்கிய கங்கை வேணி
ஈசனைப் பணிந்து போற்றி
நலம்கிளர் திருப்பத் தூரும்
கானையும் நண்ணிப் போற்றித்
துலங்குநூல் மார்பன் வையை
நாட்டிடைத் துன்றும் காலை 470

---

468. நீவிர் - நீயும் உன் மனைவியும். துன்றி - அடைந்து. திங்கள் ஊர் - சோமபுரி; வானரமதுரை. உறுபிணி - குட்டநோய்.

470. காழி - சீகாழி. கானை - காளையார்கோயில். வையை நாடு - பாண்டியநாடு.

### வில்வவனம் காணுதல்

மாமரக் கொம்பு தோறும்
    மந்திகள் விசையிற் பாயக்
காமர்மென் பழங்கள் சிந்தக்
    கண்டுஉயர் வாளை தாவ
ஆமைசேற்று ஒளிக்கும் செந்நெல்
    தண்பணை மருதம் சூழ்ந்த
சோமமா புரியின் மன்னும்
    சிகரிமூன்று எதிரே கண்டார். 471

### தீர்த்தமாடுதல்

அக்கணம் பணிந்து போற்றி
    அதிர்திரை வையை நண்ணித்
தக்கமென் பலவு வாழை
    தனிச்சுவை, தருமா என்னும்
முக்கனி மதுஅ ளாவி
    முழுவதும் செழுந்தேன் என்னப்
புக்கநீ ராடி ஏகிச்
    சந்திரன் தடத்தில் போந்தார். 472

குளித்திடும் கடவுட் கற்பின்
    கொம்பனார் முகத்தை நோக்கிக்
களித்துவெள் ளன்னம் அம்தா
    மரைஎனக் கருதிச் சாரத்
துளிப்புயல் வறந்த ஞான்றும்
    நீர்அறாச் சோமன் வாவி
திளைத்தனர். விதியி னோடும்
    சேர்த்தனர் உடம்பிற் பூதி. 473

---

471. கொம்பு-கிளை. மந்திகள்-குரங்குகள், காமர்-அழகிய. தண்பணை மருதம் - வயல்கள். சோமபுரி - மானாமதுரை.

472. முக்கனிமது - முக்கனியின் சாறு. சந்திரன் தடம் - சந்திரன் தீர்த்தம்.

473. கொம்பனார் – மகளிர். அம்தாமரை என - அழகிய தாமரை மலர் என்று. துளிப்புயல் – மழை. வறந்த ஞான்றும்-பெய்யாமல் போன காலத்தும், நீர் அறா - தண்ணீர் வற்றாத. சோமன் வாவி-சந்திர தீர்த்தம். திளைத்தனர்- நீராடினர். விதியினோடு - முறைப்படி. பூதி உடம்பில் சேர்த்தனர் - திருநீறு உடலில் பூசினர்.

### ஆலயத்துட் புகுதல்

அக்கமா மணிகள் பூண்டு
அஞ்செழுத்து எண்ணிப் போந்து
மைக்கருங் களத்தன் கோயில்
சிகரியை வணங்கி உட்போய்
மிக்கபே ரன்பி னோடும்
விதிமுறை வணக்கம் செய்து
நெக்குநெக் குருகி நெஞ்சம்
குழைந்திட நின்று போற்றி. 474

### குட்டநோய் தீர்தல்

பன்முறை வலமாய் வந்து
பணிந்துமீண்டு அருகில் வைகும்
நன்மைசேர் வில்வக் கானில்
நண்ணினர் இருந்தார் அன்றே
துன்னிய முடைகொள் புண்சார்
குட்டநோய் தொலைந்து நீங்க
முன்னவன் கருணை செய்தான்
தீர்ந்தது முதிர்ந்த நோயே. 475

கன்னல்வில் வேளும் அன்னான்
காதலி தனையும் நேராய்
முன்னையிற் சிறந்து நித்தம்
இம்முறை முளரி யோனும்
பன்னக சயனத் தோனும்
காணொணாப் படிவத்து அண்ணல்
பொன்னடிக் கமலப் போது
போற்றினர் இருந்தார் இப்பால். 476

---

474. மைக்கருங்களத்தன் - சோமேசன். சிகரி - கோபுரம்.

475. வில்வக் கான் - கூவிள வனம். முடை - தீ நாற்றம். முன்னவன் - இறைவன்,

476. கன்னல்வில் வேள் - மன்மதன். காதலி - இரதிதேவி. நேராய் - ஒப்பாக. முளரியோன் - பிரமன். பன்னக சயனத்தோன் - திருமால். படிவம் - வடிவம். அண்ணல் - சிவபெருமான் பொன்அடிக் கமலப்போது - தாமரை மலர் போன்ற பாதங்கள்,

**ஆனந்தன் சுந்தரி தவம்**

உரைத்திடு கருணை தானே
உருவமாம் உரோம சன்தான்
விரித்திடும் ஞானந் தன்னை
விடாதுஉளத்து உறுதி கொண்டு
கருத்தினில் நிகழ்வ தெல்லாம்
கண்ணுதல் செயல்என்று உன்னிப்
புரைப்புற விருத்தி நீக்கி
நிவிர்த்தியில் நெஞ்சம் போக்கி. 477

**ஞானவான் அடைதல்**

அரியதோர் சமாதி நண்ணிக்
கடைமுறை அதனில் தம்பால்
வருபிரா ரத்த மான
உடல்விட்டு ஞான வானிற்
பொருவரு பகல்தீ பம்போல்
பொருந்தினர் இன்பம் உற்றார்
குருவருள் பெற்று ளோருக்கு
உறுதுஎன் குறிக்கின் அம்மா ! 478

**நூற்பயன்**

இத்தி ருக்கதை
பத்தி யால்மொழி
புத்தி யுள்ளவர்
முத்தி சேர்வரே. 479

எட்டாவது ஆனந்தன் முத்திபெற்ற சருக்கம் முற்றும்.

(ஆகத் திருவிருத்தம். 481)

---

477. நிகழ்வது எல்லாம் கண்ணுதல் செயல் என்று கருத்தினில் உன்னி என்று கூட்டுக. புரைப்புற விருத்திநீக்கி - குற்றம் உண்டாகின்ற புறச் செயல்கள் நீக்கி. நிவிர்த்தி - செயலின்மையில். நெஞ்சம் போக்கி - மனத்தை வைத்து.

478. கடை முறை அதனில் - கடைசியில். பிராரத்தம் ஆன - பிராரத்த வினையால் வந்த. உடல் விட்டு - உடலை உதறி. ஞானவானில் - ஞானமாகிய ஆகாயத்தில். இறுதியடி வேற்றுப்பொருள் வைப்பு அணி.

சருக்கச் சுருக்கம்

## 9. அற்சனைச் சருக்கம்

வாயு பகவான் கூறிய வில்வவனச் சிறப்பினைக் கேட்ட பிருகு முனிவன், உடனே சோம இலிங்கத்தைப் பூசை செய்யச் செல்வதற்கு விடைதருக என்று விடைகொண்டு புறப்பட்டான்.

வில்வவனம் அடைந்து சந்திரன் தடத்திற்படிந்து முறைப் படி பூசனை புரிந்து "மதிலகிர் கொம்பு தும்பை மலர் மத்தம் வேய்ந்தவள வேணி ஐய சரணம்" என்று துதி செய்து அங்கேயே தவம் செய்துகொண்டு வாழ்ந்தான்.

### ஒன்பதாவது அற்சனைச் சருக்கம்

#### முனிவர் உரை

என்று பிருகு முனிகேட்ப
இசைத்தான் வாயு எனச்சூதன்
கன்று குணிலாக் கனிஉகுத்த
காயா மேனி மால்அறியா
மன்றற்க டுக்கை துயல்வரும்தோள்
வரன்நோன் பாதம் மனத்திருத்தி
நன்றாங் குறையும் முனிவரரும்
தெருளு மாறு நவின்றனனால். 480

முனிவர் யாரும் குதுகலத்தின்
மூழ்கிச் சோம இலிங்கத்தை
மனதால் உமையோடு அருச்சித்து
வணங்கி மறையால் வாழ்த்திஅன்பால்
தனிமா மறையை நான்காக
வகுத்தோன் சீடன் தன்முகம்பார்த்து
உனைநே ராக உயிர்க்குறுதி
உரைப்பார் உலகில் யார்உளரே. 481

480. மால் - திருமால்; வரன் - சிவன்; துயல் வரும் - அசைகின்ற. தெருளு மாறு - தெளிவடையுமாறு.

481. மறையை நான்காக வகுத்தோன் - வியாழன்; சீடன் - சூதமுனிவன்; இறுதி அடி முனிவர் பேச்சு.

### சூதன் உரை

என்ன மொழிந்து பின்னும்இஃது
இசைப்பப் பிருகு முனிராசன்
அன்ன கதைகேட்டு அதன்பின்னர்
என்செய் தனன்ஈங்கு அறைகென்னச்
சொன்ன மொழிகேட்டு உளம்களித்துச்
சூத முனிவன் முனிவரர்காள்
இன்னம் ஒருநற் காதையினை
உரைத்தும் கேண்மின் எனச்சாற்றும். 482

### வாயு பிருகுவுக்குச் சொன்னது

பன்னும் கதையால் ஆனந்தம்
பழுத்துச் சோம இலிங்கத்தை
இன்னே போந்து பூசைசெய
விடையே தருக எனஇசைத்தான்.
மின்னும் தரள வடம்தாங்கி
வெற்போடு இகலி வீங்குமுலைக்
கன்னற் குதலை அஞ்சனை தன்
கணவன் இதுகேட்டு இதுகழறும். 483

### வாயுவிடம் விடைபெற்றுப் பிருகுசெல்லுதல்

பெரிதும் மகிழ்ந்தே மிகமுனைந்து
பேரா தரத்தின் முற்பவத்தில்
அருமை பெறுநல் வினை புரிந்தோர்க்கு
அலால்அப் பூசை செயல்ஆகா.
புரைதீர் தவமும் நல்லறமும்
புரிந்த வாற்றால் இவைபுகன்றாய்!
உரைசெய் வண்ணம் சேறிஎன
உரைப்ப விடைகொண்டு அவன்உற்றான். 484

---

482. சாற்றும் - சூதமுனிவன் சொல்லத் தொடங்கினான்.

483. விடை தருக என இசைத்தவன் - பிருகுமுனி; அஞ்சனை தன் கணவன்– வாயு பகவான்; அஞ்சனை - அனுமனுக்குத்தாய்; மின்னும் என்பது தொடங்கி குதலை வரை அஞ்சனைக்கு அடைமொழி.

484. முற்பவம் - முன் பிறப்பு. புரைதீர் - குற்றமற்ற. சேறி என - செல்லுக என்று, அவன் - பிருகு முனிவன்.

### பிருகு வில்வவனம் அடைந்து தீர்த்தம் படிதல்

புளின மீதும் சிறைச்செங்கால்
அன்னம் புகுந்து வெயில்காயும்
துளிகொள் வையை நதிநன்னீர்
தோய்ந்து போகி முகில்நேரும்
அளிசேர் குழலார் குடக்கொங்கைக்
களபம் கரைத்த துறையனைத்தும்
ஒளிசேர் வாள்நித் திலம்இமைக்கும்
சோமன் தடத்தின் உழைப்படிந்து. 485

### பிருகு பூசை செய்தல்

இலிங்கம் ஓர்ஐந் தின்பால
இலிங்கம் எனவே ஆதிமறைக்
குலங்கள் கூறும் கோபுரத்தை
வணங்கிக் குவித்த கரத்தினனாய்
நலம்கொள் சோம சுந்தரனை
நணுகி விதியால் ஐந்தமுதம்
பலம்கொள் பால்தேன் தெங்கிளநீர்
நன்னீர் இவற்றால் பரிந்துஆட்டி. 486

ஆடை புனைந்து சந்தனம்பூ
அலங்கல் சாத்திப் பூண்அணிந்து
நீடு தூபம் பலதீபம்
வளைத்துக் கரத்தின் நிறையஎடுத்து
ஏடு படுதே மலர்வில்வம்
அருச்சித்து எழுதா மறைகள்இன்னும்
தேடி அறியா அச்சுதனாம்
சிவனை வணங்கித் துதிமொழிவான். 487

---

485. புளினம் - மணல்மேடு. தோய்ந்து - நீராடி. போகி - மேலே சென்று, முகில்நேரும் - மேகம்போன்று கருத்த. களபம் - சந்தனக் குழம்பு. துறை - படித்துறை. நித்திலம் – முத்துக்கள். இமைக்கும் - ஒளிவிடும். சோமன் தடம் - சந்திர தீர்த்தம்.

486. மறைகள் ஆலயக் கோபுரத்தை பஞ்ச இலிங்கங்களுள் ஒன்றாகக் கூறும். விதியால் - முறைப்படி. ஐந்தமுதம் - பஞ்சகவ்வியம்; பால்,தயிர்.நெய், கோசலம், கோமயம் என்பன. ஆட்டி - குளிப்பாட்டி.

487. அலங்கல் - மாலை. பூண் – ஆபரணம். ஏடுபடு – இதழ் பொருந்திய. எழுதாமறை - வேதம். அச்சுதனாம் சிவன் - அழிவு அடையாத சிவபெருமான், அச்சுதன் என்பது அழிவில்லாதவன் எனப் பொருள்படும் சொல்.

## பிருகுவின் துதி

மதி வகிர்கொம்பை தும்பை
மலர்மத்தம் வேய்ந்த
வளவேணி ஐய சரணம்
சதி யுடன்மன்றி லேறி
உமைஅம்மை காண
நடனம்செய் சாமி சரணம்
இத யமுன்மீதி ருத்தும்
அடியார்க்கு மிக்க
கதிஈயும் ஈச சரணம்
நதி யிலுயர்ந்த வையை
நதிமேவு சோம
நகர்மன்னும் நம்ப சரணம். 488

செந் தமிழ்நாடு காவல்
செயமுன்னம் மாறன்
உருஎய்து செல்வ சரணம்
சந் திரதேவன் உற்ற
கயநோய்அ கற்றி
நலம்ஈந்த சம்பு சரணம்
அந் தமில்கூற்றை வென்று
மார்க்கண்டன் உய்ய
அருள்செய்த நாத சரணம்
இந் துசெய் ஊரின் என்றும்
அடியாரை ஆள
உறைகின்ற எந்தை சரணம். 489

---

488. மதி வகிர் - பாதிச் சந்திரன். மத்தம் - ஊமத்த மலர். வேய்ந்த - அணிந்த. வேணி - சடை, சதி - தாளம். இதயமுன்மீது இருத்தும் - மனத்தின் மீது இருத்துகின்ற. கதி - வீடுபேறு,

489. காவல் செய - அரசாள. மாறன் உருஎய்து - பாண்டியன் வடிவம் கொண்ட. சந்திரதேவன் - சந்திரன். கய நோய் - உடல் தேயும் பிணி. சம்பு - சிவன். அந்தம்இல் கூற்று - அழிவில்லாத எமன். இந்துசெய் ஊர் - சோமபுரி; வானர வீர மதுரை.

அடி முடிதேடி மாயன்
அயன்முன்தி ரிந்தும்
அறியாத மூர்த்தி சரணம்
பொடி அணிகின்ற பத்தி
அடியாரை வீடு
புகுவிக்கும் வள்ளல் சரணம்
நடை பயில்பாலன் உண்ண
உயர்பாலின் வாரி
யதுநல்கும் நாத சரணம்
மடை யினில்நந்து லாவி
மணிஈனும் இந்து
நகர்மன்னும் அண்ணல் சரணம். 490

**பிருகு வில்வவனத்தில் உறைதல்**

என்ன மொழிந்து பின்னரும்வீழ்ந்
திறைஞ்சி எம்மான் அருள்பெற்றுப்
பொன்னை உயிர்த்தோன் வில்வவனம்
புகுந்து முனிவ ருடன்ஒன்றாய்க்
கன்னல் மொழியாள் சுகவல்லி
யுடனே உறைந்த கண்ணுதலை
உன்னி அரிய தவம்உஞற்றி
அகலாது ஆங்கண் உறைந்தனனால். 491

**புராணச் சுருக்கம்**

தேமலர் வில்வக் கானின்
சிறப்பும்வெங் கயநோய் கொண்ட
சோமனை அந்நோய் தீர்த்துச்
சுகத்தினில் இருத்து மாறும்

---

490. மாயன் - திருமால். அயன் - பிரமன். மூர்த்தி-வடிவம் உடையவன். பொடி – திருநீறு. பாலன் - உபமன்யு. பாலின்வாரி-பாற்கடல், மடையினில்-நீர் மடையில். நந்து உலாவி மணிஈனும் - சங்குகள் திரிந்து முத்துக்களைச் சொரிகின்ற; இந்துநகர் - சோமபுரி; வானரவீரமதுரை,

491. எம்மான் – சிவன். பொன்னை உயிர்த்தோன் - பிருகு முனிவன், சுகவல்லி - வில்வவனத்து உமையின் பெயர்; கண்ணுதலை – சிவபெருமானை.

492. வில்வக்கான் - வில்வவனம்; கயநோய்-உடல் தேயும் பிணி; சோமன் - சந்திரன்; காமனை அனைய - மன்மதன் போன்ற: பூமன் – உலக மன்னன்; உக்கிரன் - உக்கிரபாண்டியன்.

காமனை அனைய தூல
கன்னனைக் காத்த வாறும்
பூமன்உக் கிரன்தான் வந்து
பூசனை புரிந்த வாறும். 492

அத்தின புரியைத் தன்கை
அலத்தினால் அடியோடு ஈர்த்த
வித்தகன் உரோணி மைந்தன்
வெள்வளை மருளும் மேனி
உத்தமன் பெலஇ ராமன்
உற்றுஅவண் அருச்சித்து ஏத்தி
நித்தன்நற் கருணை போற்றிப்
பவத்தினை நீத்த வாறும். 493

கற்புடைச் சனகி காந்தன்
ஆகிய கல்செய் திண்தோள்
பொற்புறும் இராமன் வந்து
பூசனை புரிந்த வாறும்
மற்புய வான ரங்கள்
பசிப்பிணி வருத்தப் போந்துஆங்கு
அற்பினில் அருச்சித்து ஏத்த
மதுத்தடம் அளித்த வாறும். 494

பவம் எனும் பிணியை நீக்கும்
அருமருந் தென்னப் பாருட்
சிவதரு மத்தைச் செய்த
வாதவூர்ச் செம்மல் வந்து

493. அலம் - கலப்பை; பலராமன் ஆயுதம்; பலராமன் அத்தின புரியைக் கலப்பையால் ஈர்த்த வரலாறு பாகவதத்தில் உள்ளது. உரோணி - பலராமனின் தாய். வெள்வளை மருளும் மேனி - வெண் சங்கு போன்ற நிறத்தை உடைய திரு உடல். பெல இராமன் - பலராமன். நித்தன் – சிவன்.

494. காந்தன் - கணவன், கல்செய்திண்தோள் - மலை போன்ற திண்ணிய தோள். பொற்புறும் - அழகிய. மற்புய - வலிய புயங்களையுடைய. அற்பினில்- அன்புடன். மதுத்தடம் - கள்ளின் குளம்.

495. பவம் - பிறவி. வாதவூர்ச் செம்மல் - மணிவாசகர். கொண்டு-ஏற்றுக் கொண்டு. தவல் அறும் - அழிவு அற்ற, கதியை - வீடுபேறு.

குவலயம் புகழப் பூசை
புரிந்திடக் கொண்டு வேண்டும்
தவலறும் கதியை ஈந்து உள்
ஒளியினைத் தந்த வாறும். 495

குட்டநோய் தவிர்ந்துஆ னந்தன்
வீட்டினைக் கூடு மாறும்
நெட்டிதழ்க் கமல வீட்டின்
உறைதரு நிமலன் ஈன்ற
உள்தெளி பிருகு சென்று
பூசனை உஞற்று மாறும்
மட்டிலாத் தவத்தீர் உள்ள
மகிழ்வுற வழங்கி னேமால். 496

என்று வசிட்டன் குலவிளக்காம்
எம்மான் விஞ்சை பொழிமேகம்
குன்றம் அனைய பெருந்தவத்தோன்
கோதில் குணத்தோன், போற்றிவன
மன்றல் துளவம் அணிமாயன்
கலையாம் வியாத மாமுனிவன்
தன்தாள் வணங்கும் சூதமுனி
முனிவர் தமக்குச் சாற்றினான். 497

## முனிவர் மகிழ்ச்சி

நீலப் பெயர்க்கல் தோய்சிறிய
கலிங்கம் நிலவ மருங்குஅசைக்கும்
சீலத் தவர்கள் சோமபுரிச்
சிவன்தன் ஆடல் கேட்டுமனம்

---

496. வீட்டினை – சிவபதவி. நிமலன் - பிரமன். பிருகுமுனி பிரமன் புதல்வன். உள்தெளி - உள்ளம் தெளிந்த பூசனை உஞற்றுதல் - பூசை செய்தல், வழங்கினோம் - சொல்லினோம்.

497. எம்மான், மேகம், தவத்தோன், குணத்தோன், வியாத முனிவன் தாள் வணங்கும் சூதமுனி சாற்றினான் என்று கூட்டுக.

சாலக் குளிர்ந்து நன்றானது
உள்ளம் மிகவும் எனச்சாற்றி
ஞாலத்து உயர்ந்த நைம்மிசமாம்
வனத்தில் யாரும் நன்கிருந்தார். 498

### நூற்பயன்

இக்கதை நினைத்தலோடும்
இசைத்தலோடு எழுதினோர்கள்
மிக்கமெய் அன்பிற் கேட்டோர்
மெத்தவே வியந்துளோர்கள்
மக்களும் தகவும் மல்கி
மண்ணின்மேல் வாழ்ந்து பின்னர்ச்
செக்கர்அஞ் சடைஎம் அண்ணல்
திருவடி நிழலிற் சேர்வார். 499

### வாழ்த்து

இந்துநன் னகரம் வாழி
எந்தைசோ மேசன் வாழி
வந்துஅளி முரல்பூங் கோதை
ஆனந்த வல்லி வாழி
ஐந்தரு அனைய வண்கை
யதுகுல மருது பூபன்
மைந்தர்கள் கிளைகள் சார்ந்தோர்
தம்மொடு வாழி வாழி. 500

அர்ச்சனை சருக்கம் முற்றும்.

வானர வீரமதுரைப் புராணம் முற்றும்.
ஸ்ரீசோமநாயகர் ஆனந்தவல்லியம்மன்பாதார
விந்தமேதுணை.

சிவசகாயம்

---

498. கல்தோய் சிறியகலிங்கம் - காவிஉடை. மருங்கு அசைக்கும்-இடையில் உடுத்திய. சிலத்தவர்கள் - முனிவர்கள். ஆடல்-திருவிளையாடல், சாலக் குளிர்ந்து - மிகவும் குளிர்ந்து.

499. தகவு - புகழ், அண்ணல் - சிவபெருமான்.

500. இந்துநகரம் - சோமபுரி; மானாமதுரை. சோமேசன், ஆனந்தவல்லி- அந்நகரில் உள்ள இறைவன் இறைவி பெயர்கள். ஐந்தரு அனைய - கற்பகம் போன்ற.

'வானவீர மதுரைப் புராணம்

# பாடல் முதற்குறிப்பு அகராதி


| | | | |
|---|---|---|---|
| அக்கணம் | 472 | அரிய தவம் | 416 |
| அக்கமாமணிகள் | 474 | அரியதோர் | 478 |
| அக்கினிட்டோமம் | 35 | அருட்கடலும் | 386 |
| அங்கண் அகன்று | 155 | அருந்தவ | 97 |
| அங்கண் ஆடவீர் | 22 | அரும்பியே | 435 |
| அங்கதால் | 466 | அருவாகி | 141 |
| அங்குநின்று | 381 | அருவிமதத்து | 206 |
| அஞ்செழுத்தே | 322 | அருள் ஒரு | 350 |
| அடிமுடி | 490 | அருள் செய் | 198 |
| அடியவர் குறை | 354 | அலகில் | 240 |
| அடியார் தம் | 341 | அலங்கலம் பைங்குழல் | 433 |
| அடியிற் பழுத்த | 428 | அலரி வானவன் | 43 |
| அடையலர் | 15 | அலைபுனல் | 253 |
| அணிகிளர் | 75 | அல்லல்செய் | 248 |
| அணிபெறப் | 120 | அழகுடையோர் | 443 |
| அணைய வருகென்று | 442 | அழிகுதுயில் | 330 |
| அண்டர்கள் | 389 | அறிவொடு | 373 |
| அதிபாவம் | 103 | அறுதொழிலோர் | 12 |
| அதுகண்டு | 274 | அனிகமோடு | 229 |
| அத்தலத்துக்கு | 449 | அனைவரிற் | 70 |
| அத்தனும் | 216 | அனையவர் | 99 |
| அத்தின புரியை | 493 | அனையவன் | 29 |
| அந்தணர் | 33 | அன்னதால் | 452 |
| அந்தமெய்ப் | 336 | அன்ன நற் | 456 |
| அந்நிலையே | 132 | அன்ன நாட்டினில் | 21 |
| அப்பதி இயல்பு | 455 | அன்னவரை | 323 |
| அப்பொழுதே | 388 | அன்னவர் | 223 |
| அம்மொழித் | 409 | அன்னவன் இருக்கை | 28 |
| அரனது | 34 | அன்னவன் திருக் | 410 |
| அரன் பொருளை | 104 | அன்னவன் புதல்வர் | 258 |

| | | | |
|---|---|---|---|
| அன்னவூர்தி | 439 | இந்தக்கதை | 289 |
| ஆகமம் சொல் | 303 | இந்து நன்னகரம் | 500 |
| ஆகியமுப்பான் | 308 | இப்பொழுது | 467 |
| ஆங்குறைந்திடும் | 260 | இமையோர் | 203 |
| ஆடை புனைந்து | 487 | இம்முறை | 311 |
| ஆணவமயக் | 451 | இயம்பும் | 251 |
| ஆதலால் அதனை | 316 | இரவிமதி | 101 |
| ஆதலால் அவள் | 81 | இரவிமுன் | 171 |
| ஆதலால் அன்னத் | 463 | இரவிவேலையின் | 165 |
| ஆயதோர் | 399 | இரவினிற் | 419 |
| ஆயநாளினில் | 172 | இருடிகாள் | 247 |
| ஆயநீர் | 396 | இருமலத்து | 458 |
| ஆர்ந்து கோமளம் | 432 | இருவர் | 179 |
| ஆர்வம் பெருக | 195 | இருவினை | 457 |
| ஆவாழிடமே | 113 | இலங்கையை | 261 |
| ஆறில் ஒன்றினில் | 166 | இலிங்கம் | 486 |
| ஆறுவிரல் | 302 | இல்லவளை | 111 |
| ஆற்றுபூசனை | 362 | இவர்பொருள் | 338 |
| ஆனதொரு | 301 | இவ்வகைய | 299 |
| இகலுறு | 211 | இறையோன் | 115 |
| இக்கதை நினைத்த | 499 | இறைவன் | 192 |
| இக்கதை படித்தோர் | 256 | இனமலர் | 337 |
| இக்கதை யாவர் | 199 | இனியமாற்றம் | 23 |
| இங்கிவர் தம்மில் | 78 | இனையநற்காதை | 426 |
| இசைத்திடும் | 82 | இனையவாசகம் | 422 |
| இஞ்சியன் புறம் | 418 | இனையவும் | 105 |
| இடபமதியில் | 152 | இன்று மகர | 263 |
| இடையறாது | 18 | இன்று வானர | 392 |
| இணர்எரியின் | 100 | இன்னகதையை | 156 |
| இத்தகு பேரெழில் | 440 | இன்ன நகரின் | 46 |
| இத்தகுமணிகள் | 314 | இன்ன நற்கதை | 363 |
| இத்தலைத் | 218 | இன்னமா தலத்தில் | 68 |
| இத்திருக்கதை | 479 | இன்னனம் | 76 |
| இத்திறம் என்ப | 461 | இன்னம் ஒரு | 290 |
| இத்திறம் புலம்பி | 95 | இன்னும் பலரால் | 147 |

| | | | |
|---|---|---|---|
| ஈசனார் | 221 | என்றனன் | 367 |
| ஈசனும் | 96 | என்று அறியின் | 157 |
| உடலினுக்கு | 460 | என்று துதிப்ப | 143 |
| உடலுறு தேய்வு | 93 | என்று பிருகு | 480 |
| உடற்றுவெம் | 285 | என்று முன் | 351 |
| உத்தம நீறு | 298 | என்று வசிட்டன் | 497 |
| உத்தர கோச | 425 | என்று வணங்கி | 130 |
| உம்பர்கள் | 227 | என்றேன்று | 163 |
| உருவம் | 39 | என்றே புலம்பி | 87 |
| உரைத்தன | 282 | என்னமொழிந்து பின்னரும் | 491 |
| உரைத்திடு | 477 | | |
| உலகம் ஈன்றும் | 272 | என்னமொழிந்து பின்னும் | 482 |
| உலகு இயல்பாகும் | 454 | | |
| உவலையாக்கை | 205 | ஏடவிழும் | 158 |
| உழையரைக் | 134 | ஏந்துகோடு | 437 |
| உற்றிடும் உன்னை | 462 | ஏனவும் புரிந்து | 74 |
| ஊழினில் | 375 | ஏனை நெல்லினை | 20 |
| எங்கணும் | 25 | ஏனையதலத்தினில் | 65 |
| எட்டிடம் | 300 | ஐந்து தழலினிடை | 319 |
| எண்ணிலாச்சேனை | 284 | ஐய கமல | 271 |
| எண்ணிலாமணி | 42 | ஐயநின் | 219 |
| எண்ணிறந்த | 139 | ஒருக்கால் | 305 |
| எண்ணுறுகீழ் | 327 | ஒருதலம் | 124 |
| எத்தனையோ | 244 | ஒருமுகம் | 309 |
| எந்தப் பொருளை | 83 | ஒலி கிளர்ந்து | 64 |
| எம் குடியில் | 55 | ஒல்லையில் | 126 |
| எல்லையனைத்தும் | 189 | ஒற்றர் பாசுரம் | 167 |
| எளியோர் | 262 | ஒன்று ஐந்து | 312 |
| எள்ளிட | 7 | ஒன்றோடொன்று | 438 |
| என வருந்தி | 133 | ஓதுகின்ற | 383 |
| எனையும் | 193 | ஓதும் ஐயைந்தின் | 9 |
| என்ற சொல்செவியி | 450 | ஓதுவம் | 109 |
| என்ற சொல்திருச் | 403 | ஓர் ஏழுலகம் | 151 |
| என்ற லோடும் | 197 | கங்கைப் | 266 |
| என்றலும் | 468 | கஞ்சநாள்மலர் | 397 |

கடவுட் கற்பின் 265
கடவுளுடை 447
கடி அம்பொழில் 190
கடிய வெவ்வுரை 24
கடைகுழன்று 429
கண்டனனே 131
கண்டார் 270
கண்ணுதல் 71
கதிர்கான்று 269
கயமேவும் 116
கயிலை எடுத்த 276
கரணம்நீ 464
கரிமருப்பொடு 17
கரியபூங்குழல் 174
கருணைக்கு 414
கருணையின் 453
கருமுகிலுழை 344
கரும்பிலா 73
கரும்பு இதாம் 19
களம் இல்காவலர் 168
கள் இருக்கும் 181
கறந்தபால் 177
கற்பகத்தருவை 315
கற்புடைச்சனகி 494
கற்புடைய 110
கன்றுஆன் 242
க்னனலும் 394
கன்னல்வில் 476
காட்டழல் 230
காதலொடும் 287
காமநூல் 77
காமநோய் 445
காலன் சினந்தே 117
காவலவன் 84
காளம்உண்டு 355
கானமும் 393
கானில் வாழ்நர் 417
குடிகள் யாவும் 420
குடியும் ஈகை 170
குடைஎடுத்து 286
குட்டநோய் 496
குணத்தினுக்கு 49
குணபால் ஏகி 194
குணபால் ஒழுகும் 40
கும்ப கருணன் 275
குலம் கல்வி 108
குலம் பெரியோர் 13
குளித்திடும் 473
கூவிளத்தின் 321
கூனல்வன் 31
கேட்டபோழ்தினில் 404
கைத்தொடியும் 444
கையினிடை 326
கொடையினும் 372
கொண்டல் 345
கோமயத்தை 296
கோயிலினை 288
சங்கு அகடு 378
சங்கு சக்கரம் 347
சண்பகமலர் 80
சந்தமும் 395
சமணர்களை 8
சாகைஆர் 411
சாதியின் 340
சாந்திராயணம் 66
சாந்து செங்களபம் 257
சாபப்பிணியால் 145
சிதைவிலா 369
சித்தர் 208
சிந்தை 268

| | |
|---|---|
| சிரம்திகழ் | 310 |
| சிவசிவ என்று | 325 |
| சிவந்தனில் | 69 |
| சிவன்அடியார் | 107 |
| சிறியவர் அறியார் | 90 |
| சிறுவிலை | 370 |
| சிறையுற்ற | 118 |
| சினகரத்து | 359 |
| சீதரனை | 241 |
| சீருறு | 313 |
| சுடுபொன் | 264 |
| சுருதி | 207 |
| செந்தமிழ் | 489 |
| செந்திருக்கல்வி | 217 |
| செம்பு இரத | 324 |
| செய்ய தாமரை | 398 |
| செழியனும் | 232 |
| சேமம்போன்று | 169 |
| சேயினை | 224 |
| சோமபுரி | 277 |
| சோமனை | 382 |
| ஞான தேசிகன் | 377 |
| ஞானமதடைய | 210 |
| தணிவிலாத் | 175 |
| தண்ணெனும் | 384 |
| தந்தைதாய் சரணம் | 88 |
| தந்தைதாய் மனைவி | 162 |
| தந்தமதின் | 294 |
| தம்பெருமான் | 391 |
| தலமீதில் | 112 |
| தவமுனிவன் | 54 |
| தளம் ஒன்றினில் | 317 |
| தன் நிகர்இல் | 334 |
| தன்பேர் | 154 |
| தன்னுழை | 371 |
| தன்னை அறிந்த | 243 |
| தாமரை | 98 |
| தாரணிக்கு | 57 |
| தாருகன் | 129 |
| திங்கள் உரிஞ்சும் | 267 |
| திங்கள் நோன்புஆதி | 339 |
| திங்கள் நோன்புஇயற்றி | 226 |
| திரள் சிரம்கரி | 430 |
| திருப்பணி | 222 |
| திரைமுழங்கு | 135 |
| துடைத்தலே | 349 |
| துண்ணென்று | 209 |
| துதிகள் | 405 |
| துலங்குதயிர் | 137 |
| துவர்இதழ் | 79 |
| தூய நந்தை | 292 |
| தேமலர் | 492 |
| தொகை உயிர் | 348 |
| தொலைவில் | 408 |
| நகர் உளார் | 360 |
| நகர் வயின் | 255 |
| நடம்புரி | 250 |
| நந்தவனம் | 328 |
| நரம்பு | 436 |
| நல்தேயம் | 56 |
| நல்லோர் | 150 |
| நறவுகால் | 368 |
| நனையார் | 37 |
| நன்மை | 201 |
| நன்றிசேர் | 52 |
| நித்திய கன்மம் | 159 |
| நியமமுடன் | 441 |
| நிருபர்கோன் | 374 |
| நிலப்பொறை | 237 |
| நிலயம் | 146 |

| | |
|---|---|
| நிலையிலா | 376 |
| நிறைதரும் | 358 |
| நிறைமலர் | 121 |
| நினது பாதத்தின் | 153 |
| நின்பார் | 273 |
| நீதிபுரி | 10 |
| நீதிவழுவாது | 196 |
| நீராட | 304 |
| நீலப்பெயர்க்கல் | 498 |
| நீறு கண்டிகை | 48 |
| நெடியதானமும் | 176 |
| பக்கம் அதனில் | 318 |
| பக்தி தங்கிய | 164 |
| பக்தியின் | 122 |
| பங்கய மலரினைப் | 357 |
| பச்சொளி | 60 |
| பஞ்சவன் | 125 |
| படல உறுப்பு | 14 |
| படிந்திடினும் | 239 |
| படைத்து அளித்து | 365 |
| பணித்தன | 379 |
| பண்டொருநாள் | 291 |
| பரதனை அளித்த | 259 |
| பரவினர் | 50 |
| பரிகள் எய்தும் | 412 |
| பலவீமாவின் | 36 |
| பவம் எனும் | 495 |
| பவளக்கிளை | 41 |
| பவளமொர் சடையுடை | 254 |
| பனிமதித் | 214 |
| பன்முறை | 475 |
| பன்னும் கதை | 483 |
| பாசடைத் | 361 |
| பாச மூவகை | 459 |
| பாட்டுச்சுரும்பர் | 30 |
| பாதகம் | 249 |
| பாலாழி | 278 |
| பாலின் வெண்மை | 431 |
| பால் நந்து | 4 |
| பிதிர்கள்தம் | 220 |
| பிரமம் நற் | 51 |
| பிருகு முனியே | 427 |
| பிருதுமகிபன் | 204 |
| பிள்ளையுடன் | 86 |
| பிறர் கொண்ட | 279 |
| புகலுவம் | 3?5 |
| புலனொழி | 465 |
| புளின மீது | 485 |
| புறச்சமயத்தவர் | 142 |
| பூசை செய்யும் | 149 |
| பூதியை அணியாதவரே | 306 |
| பூதியின் தன்மை | 307 |
| பூரணை | 6 |
| பூமியை | 283 |
| பெண்களும் | 94 |
| பெரிதும் மகிழ்ந்தே | 484 |
| பைத்த பாம்பினில் | 353 |
| பொடி பூசும் | 280 |
| பொருட் படுத்து | 401 |
| பொருவரு | 27 |
| பொருவிலாது | 406 |
| பொன் விழுது | 140 |
| பொன்னிமுன் | 128 |
| யோகி மலர் | 185 |
| போகுயர் | 400 |
| மஞ்சன நீர் அமுது | 333 |
| மஞ்சனநீர் எடுத்து | 329 |
| மதிகள் கோடி | 191 |
| மதி கொலாம் | 91 |
| மடங்கல் இராசி | 182 |

| | | | |
|---|---|---|---|
| மடங்கல் சுருங்கல் | 320 | மற்றொரு | 232 |
| மடவார்கள் | 114 | மனையவர் | 119 |
| மட்டிலாத | 421 | மாங்குயிலை | 238 |
| மணம் இருக்கும் | 187 | மாதவர் | 252 |
| மண்டபங்கள் | 332 | மாமரக் கொம்பு | 471 |
| மதிவகிர் | 488 | மாமரம் | 61 |
| மதுராபுரி | 415 | மாமறையின் | 3 |
| மந்திர | 225 | மாமேவும் | 1 |
| மயில்எருத்து | 380 | மாரனும் | 233 |
| மருக்கமழும் | 87 | மாரி ஓர் ஆண்டு | 235 |
| மருக்கமழ் | 331 | மாலவன் | 160 |
| மருநிறைந்திடும் | 47 | மாற்றுயர் | 138 |
| மருப்புநகம் | 188 | மீண்டு | 236 |
| மருமலர் | 186 | மீனம் | 387 |
| மருவார் | 200 | முந்து | 136 |
| மலங்கெடுத்து | 72 | முருகார் | 5 |
| மலரொடு | 224 | முருதஅலர் | 352 |
| மலர்தலை | 123 | முழுதுணர் | 364 |
| மலையென | 213 | முழுமதியம் | 2 |
| மல்லல் | 16 | முளிதருஎன்ன | 215 |
| மல்லிகை | 62 | முனிவர்கள் | 63 |
| மழவிடை | 45 | முனிவநீ | 342 |
| மறைநாலும் | 293 | முனிவர் யாரும் | 481 |
| மறையவரை | 106 | மூக்கின் | 144 |


—★—

